FB Postings of Pattabi

MAY - JUNE 2025



R. Pattabiraman

FB Postings of May – June 2025

May FB Postings 2025

may 1

அனைவருக்கும் மே தின நல்வாழ்த்துகள்

சாதிவாரி கணக்கெடுப்பு

மே தினம் தொழிலாளர்களின் போராட்ட எழுச்சி தினமாக அனுசரிக்கப்பட்டு வருகிறது. சிகாகோ தியாகிகள் அனார்க்கிச பின்புலத்தைச் சார்ந்தவர்கள். அனார்க்கிஸ்ட் சிந்தனை மார்க்சியத்துடனும் முரண்பட்டு நின்ற ஒன்று. ஆனாலும் மே தின தியாகத்தை, மே தின சரித மாண்பை உலகம் முழுதும் ஆங்காங்கே உள்ள கம்யூனிஸ்ட்கள் எடுத்துச் சென்றனர். தோழர் எங்கெல்ஸ் முன்கை எடுத்தார். சோசலிச நாடுகள் இதை பெரும் கொண்டாட்டமாக மாற்றின. இந்தியாவிலும் கம்யூனிஸ்ட்கள் மே தின முன்னெடுப்புகளுக்கு முன்னோடியாக இன்றளவும் இருந்து வருகின்றனர். மே தின சபதம் என இன்றும் எடுக்கப்பட்டு வருகிறது. கம்யூனிஸ்ட் அல்லாத கட்சிகளும் வாழ்த்து சொல்லுதல், விடுமுறை அளித்தல், சில நல அறிவிப்புகளை செய்தல் போன்றவற்றை செய்யலாயினர்.

பாட்டாளி வர்க்க ஆட்சி என புரட்சி வழியில் ஆட்சியை உருவாக்கி சோதனை செய்த சோவியத், செய்து வருகிற சீனா, கியுபா, வியத்நாம், வடகொரியா தங்கள் நாடுகளில் வளத்தை வருமானத்தை வாழ்க்கை வசதி மேம்பாட்டை, ‘வர்க்க வாரி கணக்கெடுப்பு’ என ஏதேனும் செய்து சரி செய்தார்களா எனத் தெரியவில்லை. புரட்சிக்கு பின்னரான தங்கள் ‘அரசியல் பொருளாதார சமூக அறவியல் நெறி’ கட்டுமான முயற்சிகளில் அவர்கள் எந்த அளவு வெற்றி பெற்றார்கள் என்பது இந்தியாவில் போதுமான விவாதமாகவில்லை. பொதுவாக அங்கெல்லாம் முன்னேற்றம், சுபிட்ச வாழ்வு, சமூக பதட்டமின்மை வந்ததாக பேசப்பட்டதுண்டு. ஆனால் அங்கும் பிரச்சனைகள் இல்லாமல் இல்லை.

இந்தியாவில் சாதிகள் என்கிற யதார்த்தம், சாதிவாரி கணக்கெடுப்பு என்ற அறிவிப்பை செய்ய வைத்துள்ளது. பாஜக உட்பட அனைத்து இந்திய அரசியல் கட்சிகளும் சமூக நீதி கட்சிகளே என்கிற தோற்ற சுற்று முழுமையாகியுள்ளது. இதில் எவ்வளவு சதம் எவர் நேர்மையானவர் என்ற விவாதம் தொடரலாம். மத்திய அரசாங்கம் சாதிவாரி கணக்கெடுப்பு நடத்த இசைந்துள்ளது.

டெல்லி தேர்தலின் போது 8 வது சம்பளக் கமிஷன், பீகாரை குறி வைத்து சாதி கணக்கெடுப்பா என்ற கேள்விகள் வராமல் இல்லை. மக்கள் தொகை கணக்கெடுப்புடன் சாதிவாரி கணக்கெடுப்பும் என சொல்லிவிட்டனர். நடைமுறையாகும் உத்தரவு வந்தபின், அதில் உள்ள ஷரத்துகள் விவாதப் பொருளாகலாம்.

இந்தியா சாதிகளின் மகாசம்மேளனமாக இருந்து வருகிறது. இதில் சாதிகள் அல்லது சாதியில் பிறந்த தனி நபர்கள் active passive role என நிலைப்பாடுகள் இருக்கவும் எடுக்கவும் செய்கின்றனர். நாம என்ன சாதி பார்த்தா பழகுகிறோம்- நம்ம அமைப்பெல்லாம் சாதிக்கு அப்பாற்பட்டது, இவர் அவர் என்ன சாதினு கூடத் தெரியாது என்கிற அன்றாட உரையாடல்களும் காதில் விழும் சமூகமாகவும் இருந்து வருகிறோம். இந்த உரையாடலின் நேர்மையை அவரவர் மனசாட்சிதான் சரிபார்த்துக்கொள்ளும்.

பாரம்பரிய சமூக நீதி கட்சிகளைத் தொடர்ந்து, கம்யூனிஸ்ட் கட்சிகள், காங்கிரஸ், பாஜக என அனைவரும் சாதிவாரி கணக்கெடுப்பு என்கிற கருத்தொற்றுமையை எட்டியுள்ளனர். இந்தியாவின் அடிப்படை அலகு (யூனிட்) சாதி என்கிற புரிதல் பலப்பட்டுள்ளது. அரசியல் அதிகார பீடங்கள், அரசாங்க அதிகார வர்க்க இடங்கள், போலீஸ், நீதி மன்றம், இராணுவத்தின் பல தட்டுகள், இன்னும் தொழில்கள், கல்விக் கூடங்கள், மார்க்கெட் , அரசியல் கட்சி தட்டுக்கள் , வங்கி கணக்குகள், காப்பீடுகள் என அனைத்திலும் இந்த சாதி யூனிட் எப்படியுள்ளது , எவருக்கான இடமாக உள்ளது என இந்திய சமூகம் குறித்த புரிதலை டேட்டாக்கள் மூலம் எதிர்கொள்ளப் போகிறோமா எனத் தெரியவில்லை.

சாதிவாரி கணக்கெடுப்பின் aims and objects , scope and dimensions என்பதில் கட்சிகளிடையே கருத்தொற்றுமை இருக்கிறதா எனவும் தெரியவில்லை. சாதிவாரி கணக்கெடுப்பு எப்படி இருக்கவேண்டும் என அரசாங்கத்திடம் சொல்ல, இந்தியா கூட்டணி சார்பாக ஒரே 'மெமரண்டம்' என திட்டமிடுவார்களா எனத் தெரியவில்லை.

அரசாங்கம் , ஒவ்வொரு கட்சியும் - இன்னும் விரும்பக்கூடிய எவரும் தங்கள் கருத்துக்களை தரலாம் என கேட்குமா எனவும் தெரியவில்லை. நாடாளுமன்ற நிலைக்குழு விவாத வழியில் கருத்தொற்றுமை ஏதேனும் எட்டப்படுமா எனவும் ஊகிக்க முடியவில்லை.

நிலப்பகிர்வு- தொழில்களின் பகிர்வு- அரசியல் அதிகார பகிர்வு- கல்வி நிலை, வேலை பகிர்வு- அனைத்திற்கும் மேலாக வருமான பகிர்வு என்பது தான் ஒரு சமுகத்தின்/ நாட்டின் ஏற்றத்தாழ்வுகளை படம் பிடிக்கும் கண்ணாடி.

விடுதலை இந்தியாவின் 75 ஆண்டுகளில் மேற்கூறிய இன்னும் தேவைப்படுகிற பகிர்வுகள் எப்படி நடந்துள்ளன, எங்கே குவிந்தன, எவரவர் ஆட்சியின் போது எப்பக்கம் எச்சாதிகள் நோக்கி இந்த குவிதல்கள் நடந்தறின என்கிற true picture நமக்கு கிடைக்குமா எனத் தெரியவில்லை. இந்த டேட்டா ஆய்வு பெரும் 'கான்வாசைக்' கொண்ட ஒன்றுதான். அதற்கான அரசியல் நெஞ்சுரம் கட்சிகளுக்கு, தனி நபர்களுக்கு இருந்தால்தான் அது சாத்தியமாகும்.

விளைநிலங்கள், தோப்பு துரவுகள் போன்ற நிலம் சார்ந்த சொத்து பத்து பதிவுகளின் போது , பதிவாளர் அலுவலகத்தில் எச்சாதிக்காரரர் விற்கிறார் எச்சாதிக்காரருக்கு என்கிற டேட்டா இருப்பதில்லை. நிலச் சொத்துக்கள் எச்சாதிக்காரர்களிடம் எவ்வளவு இருக்கிறது- அதன் வருவாய் மற்றும் கடன் பொறுப்புகள் என்ன என்கிற விவரம் மாவட்டவாரியாக இருக்கிறதா எனத் தெரியவில்லை.

இதே போல் தொழில்களில் கார்ப்பரேட் தொடங்கி கம்பெனிகள் ஆலைகள், சிறு குறு தொழிகள் லைசென்ஸ்களில் சாதி கேட்கப்பட்டு பதிவாகியுள்ளதா எனத் தெரியவில்லை. எச்சாதிக்காரரர் எந்த தொழிலில் எந்த படித்தட்டில் இருக்கிறார் என்கிற டேட்டா உருவாக்கத்தை செய்ய இயலுமா எனத் தெரியவில்லை.

அரசாங்க வேலைகளில், கல்வியில் , சட்ட அவைகளில் இட ஒதுக்கீடு என்கிற அம்சத்தை ஓரளவிற்கு இந்திய சமுகம் பழகிக்கொண்டு வருகிறது. சாதிவாரி கணக்கெடுப்பால் இந்த ஒதுக்கீட்டில் விரிவாக்கம், தேவைப்படுகிற சில மாற்றங்கள் (அரசியல் தேவைக்கேற்பவும் கூட) வரலாம்.

இதுவரை சட்டமன்றங்களில் , பட்டியல் சமுக மக்களுக்கான ஒதுக்கீடே இருக்கிறது. பெண்களுக்கான ஒதுக்கீட்டை 'சென்சஸ்' என்பதுடன் கட்டிபோட்டுள்ளனர். பெண்கள் வந்தாலும் சாதி வராமல் போகாது,

வரும். பெண்களின் தூய்மை பெயரில்தான் சாதியே காப்பற்றப்பட்டு வருகிறது.

கல்வி வேலைவாய்ப்புகளில் பிற்படுத்தப்பட்ட சமுகத்தினர் பெற்றுள்ள இட ஒதுக்கீட்டு விழுக்காடு என்பது சட்ட அவைகளுக்கும் விரிவாக்கப்படுமா (அக்கோரிக்கை பலமாக இல்லை) என ஊகிக்க முடியவில்லை. சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்களில் கடந்த 75 ஆண்டுகளில் எச்சாதியினர் எவ்வளவு விழுக்காடு இடங்களை எடுத்துக்கொண்டனர் என்கிற டேட்டா வெளிப்படுமாயின், இதில் மாற்றம் தேவையா இல்லையா எனப் புரிந்து கொள்ளலாம்.

RTI வந்த போது , கட்சிகள் தங்களுக்கு அது பொருந்தாது என மூடிக்கொண்டதைக் கண்டோம். சாதிவாரி கணக்கெடுப்பை கட்சிகள் தங்கள் அமைப்பில் மேற்கொள்ளுமா எனத் தெரியவில்லை. தங்களின் உறுப்பினர்களில் சாதிவாரியாக, பல்வேறு தட்டு பொறுப்புகளில் சாதிவாரியாக என்கிற டேட்டா எடுப்பார்களா எனத்தெரியவில்லை. கட்சி உறுப்பினர் விண்ணப்பங்களில் சாதி என்கிற இடம் இருப்பதாக தெரியவில்லை. நாட்டில் நிலவும் சட்டரீதியான இட ஒதுக்கீட்டு முறையை அதிகாரபூர்வமாக, அமைப்பு விதிகளில் கட்சிகள் இடம் பெற செய்ததாக தெரியவில்லை. சில கட்சிகள் அமைப்பு விதிகளில் 'டோக்கனிசமாக' இந்த ஏற்பாட்டை பட்டியல் சமுகத்திற்கு செய்துள்ளன.

மாநில வாரியாக SC ST BC பிற சாதிகள் பட்டியல் , நிர்வாகப் படுத்தப்பட்டு இருக்கலாம். ஏனெனில் அரசாங்கம் தான் இந்த பட்டியலில் இன்ன இன்ன சாதிகள் என உத்தரவை அவ்வப்போது update செய்கின்றனர். சாதிகளும் எங்களை இந்தப் பட்டியலில் சேர்க்கவும் எனக் கோரிக்கைகள் வைக்கின்றன. மத்திய அரசாங்க பட்டியலும் மாநில பட்டியலும் ஒன்றையொன்று validate செய்ய வேண்டிய அவசியம் இருக்கலாம்.

எவ்வளவு சாதிகள் - 3000, 4000 அல்லது 5000க்குள் என எவ்வளவு உபசாதிகளாக பிரிந்தாலும் அடங்கி விடலாம். சாதிவாரி கணக்கெடுப்பு அறிவிப்பு தன் சாலையை முழுமையாக கடக்க பல மாதங்கள் ஆகலாம். இந்த மாதங்களில் சாதிகள் தங்கள் தங்கள் எண்ணிக்கை என்பதற்கான ஆயத்த முஸ்தீபுகளை தீவிரமாக்கலாம். வாழ்வா சாவா என அரங்கு கூட்டங்களில் பேசிக்கொள்ளலாம்.

சாதிபாரா திருமணங்களை செய்தோர் நிலை ஊனமாகமல் இருக்கவேண்டும். அவர்கள் குடும்பங்கள் தாங்கள் என்ன சாதியில்

இருந்தால் நல்லது என முடிவு செய்து கொள்ள வேண்டி வரலாம். தனியார் நிறுவனங்களில் ஒதுக்கீடு என்கிற விவாதம் வலுப்பெறலாம். இதில் அயல்நாட்டு நிறுவனங்களுக்கு விலக்குண்டா என்ற கேள்வி எழலாம். Too far ஆக யோசிக்க முடியாது. பாலம் வரும்போது கடக்கலாம் என ஒத்திப்போடலாமா?

சாதி ஏற்றத்தாழ்வுகளை களைந்திட , ஏழ்மை நீங்க, வறுமை ஒழிய, வேலையின்மை போக்க, ஊழல் ஒழிய , அதிகாரம் பரவலாக, வருவாய் ஏற்றத்தாழ்வு நீங்கிட சாதிவாரி கணக்கெடுப்பு உதவும் என நம்பிக்கையிருந்தால் நற்பேறு. இல்லை , அரசியலுக்கு உதவப்போகும் கணக்கு என சுருங்கி நின்று போகும் என்றால் , இதற்கான முயற்சிகள் வீணாகும்.

சாதி ஒழிப்பு - சாதிகளற்ற புதிய இந்திய கட்டுமானம் என்பது பெரும் idealism இலட்சியக் கனவு. நடைமுறையில் ஊர்ந்தேனும் சாதி ஏற்றத்தாழ்வுகளை , அரசியல் பொருளாதார சமூக நிலைகளில் குறைத்தல் என்பது நோக்கி இந்திய சமூகம் நாளடைவில் நகரலாம்.

சமுகத்தில் சாதி இருப்பது என்பது அவரவர் மனங்களில் இருப்பதால் தான் என்கிற சுய புரிதல் மெதுவாகவாவது வரவேண்டியுள்ளது.

சாதிவாரி கணக்கெடுப்பு சாதி வேரில் வெந்நீரை ஊற்றுமா, இல்லை அழுத்தமாக வேர்களை கெட்டிப்படுத்துமா - காலம் தான் பதில் சொல்ல வேண்டும்.

மே தின நல்வாழ்த்துகள்!

1-5-2025

may 4

மத்திய தொழிலாளர் அமைச்சகத்தின் ஆண்டறிக்கை 2024-25 யை , இணையத்தில் புரட்டிக்கொண்டிருந்தேன். வழக்கம் போல அறிக்கையே. ஆங்காங்கே சில புள்ளிவிவரங்கள் மேலதிக வகையில் சேர்க்கப்பட்டிருக்கும். 25 இயல்கள்- 295 பக்க அறிக்கை. அவரவர் ஆர்வம் உள்ள பகுதியை படித்து, பெறும் அனுபவத்தின்படி சரி பார்த்துக்கொள்ளலாம். விமர்சிக்கலாம்.

மத்திய தொழிற்சங்க தலைவர்கள் முழுமையாக படித்திருக்கக்கூடும். அதில் சொல்லப்பட்டவைகளின் சரி தவற்றை அவர்கள் தங்கள் விமர்சனத்துடன் அணிகளுக்கு எடுத்துச் செல்லக்கூடும்.

வருகிற மே 20 ல் தொழிற்சங்கள் ஒன்றுபட்டு கொடுத்துள்ள வேலை நிறுத்த அறைகூவலில் 'லேபர் கோடு' திரும்பப் பெறவேண்டும் என்பது மிக முக்கிய கோரிக்கைகளில் ஒன்று. அரசாங்க ஆண்டறிக்கை , லேபர் கோடு குறித்த அரசாங்க நடவடிக்கைகள் குறித்து கொஞ்சம் பேசியுள்ளது. மாநில அரசாங்கங்கள் செய்தவை என்ன என்பதும் சொல்லப்பட்டுள்ளது.

லேபர் என்பது மத்திய மாநில பொதுப் பட்டியலில் உள்ளது. எனவே மத்திய மற்றும் மாநில அரசாங்கங்கள் லேபர் கோடு தொடர்பான விதிகளை அறிவிக்கையாக செய்திட வேண்டும். டிசம்பர் 2024 படி இந்த status எவ்வாறுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

The code on Wages 2019 பொறுத்தவரை தமிழ்நாடு, பாண்டிச்சேரி, கர்நாடகா, கேரளா, தெலங்கானா, பஞ்சாப் உட்பட 34 மாநிலங்கள்/ யூனியன் பிரதேசங்கள் நகல் விதிகளை வெளியிட்டுள்ளனர். மே வ பட்டியலில் இல்லை

Industrial Relations Code 2020 யை 32 மாநிலங்கள்- பிரதேசங்கள் வெளியிட்டுள்ளனர்.

Social security code 2020 யை 32 மாநிலங்களும்

Occupational Safety 2020 யை 33 மாநிலங்களும் வெளியிட்டுள்ளன

மாநிலங்கள் வெளியிட்டவை, மத்திய அரசு வெளியிட்ட 'கோடு' இரண்டிற்கும் இடையிலான சிற்சில இடைவெளிகள் குறித்த விவாதங்கள் உரிய பிரதிநிதிகளுடன் ஆகஸ்ட்- அக்டோபர் 2024

காலத்தில் 6 முறை வட்டார அமர்வுகளாக நடத்தப்பட்டுள்ளது. இது குறித்து ஆண்டறிக்கை செய்துள்ள பதிவு

"In the aforesaid meetings States/ UTs agreed to fill the gaps/ divergences in their respective draft rules.

The 7 States/ UTs which have not pre published their rules in respect of one or more labour codes also agreed to frame their respective rules under labour codes and pre publish the same…

States / UTs also agreed to modify their rules in case of divergences so as to align them with central rules"

இந்த குறிப்பிற்கு எந்த மாநில அரசிடமிருந்தும் மறுப்பு வந்திருக்கிறதா எனத் தெரியவில்லை. இருந்தால் கருத்தொற்றுமை வந்ததாக ஏற்கமுடியாது. மறுப்பு ஏதும் இல்லையெனில் லேபர் கோடு குறித்து மத்திய மாநில அரசாங்கங்களுக்கு இடையே 'கருத்தொற்றுமை' ஏற்பட்டுள்ளதாக , மேற்கண்ட குறிப்பு சொல்வதாக புரிந்து கொள்ளலாம். முதலாளித்து வளர்ச்சிப் பாதை என்பதில் சமுக நீதி சிந்தனைகள் குறுக்கே வருவதில்லை என்கிற புரிதலையும் இணைத்துப் பார்த்துக்கொள்ளலாம்.

லேபர் கோடுகளை திரும்பப்பெற வலியுறுத்தி , தொழிற்சங்கங்களின் தேசிய கன்வென்ஷன் அறிக்கை மார்ச் 18, 2025ல் கீழ்கண்ட புரிதலை முன் வைத்துள்ளது.

"…this government has become (here CG) furiously over active in implementing the Labour Codes, which is a comprehensive blue print of imposing conditions of virtual slavery on the working people as a whole. These codes would snatch from them almost all rights and entitlements of workers at their work places relating to defined working conditions including working hours, minimum wages, social security etc

and also their collective rights of unionisation, recognition, collective bargaining, agitations/ struggles including right to strike etc being sought to be snatched away..vindictive punitive measures against any collective dissents by the workers"

தொழிற்சங்கங்கள் தாங்கள் மோசமானதாக கருதும் இடங்களை (narrowing down the area of differences or apprehensions) இங்கு ஓரளவிற்கு நெருக்கமாக கொண்டுவந்துள்ளன.

முற்றிலுமாக கார்ப்பரேட்களுக்கும் முதலாளிகளுக்கும் தொழிலாளர்களை அடிமையாக்கும் blue print என்பதை சற்று அதீத மதிப்பீடாக எடுத்துக்கொண்டாலும்,தொழிற்சங்கங்கள்

சுட்டிக்காட்டும் சில ஷ்ரத்துகளின் பாரதூர எதிர்மறை அம்சங்களை அரசாங்கம் தொடர்ந்து அமர்ந்து பேசி சரி செய்திருக்க வேண்டும்.

மாநில அரசாங்கங்களுடன் பலமுறை அமரும் மத்திய தொழிலாளர் அமைச்சகம் தனித்தனியாகவோ, சேர்ந்தோ மத்திய தொழிற்சங்கங்கள் எழுப்பி வரும் அய்யங்கள்/ கவலைகள்/ அச்சங்கள்/ விமர்சனங்களை காதுகொடுத்து கேட்டிருக்க வேண்டும். ஆங்காங்கே மாநில அரசாங்களும் தொழிலாளர் தலைவர்களுடன் விவாதித்து, அச்சத்தைப் போகும் வகையில் கருத்தொற்றுமைக் கொணர உதவியிருக்க வேண்டும்.

தொடர்ந்த விவாதங்களைவெளிப்படையான மினிட்ஸ்களாக பொதுவெளியில் வைத்திருக்க வேண்டும். மாநிலங்கள் ஒவ்வொன்றும் என்ன எழுப்பின, மத்திய அரசின் பதில் என்ன- ஏற்பு எப்படி என்பது குறித்த வெளிப்படை மினிட்ஸ்களை மத்திய மாநில அரசாங்கங்கள் வெளியிட்டிருக்க வேண்டும்.

தொழிற்சங்கங்களின் தரப்பிலிருந்தும் தொடர்ந்த பேச்சு வார்த்தைக்கான விழைவு , எதிர்ப்பது என்பதுடன் இல்லாமல் , தீர்வு நோக்கி ஓரடியானலும் என்கிற முனைப்பு சற்று அதிகமாக இருக்கலாம் எனத் தோன்றுகிறது.

மே 20, அரசாங்கத்தின் கொள்கைகள் மீதான குற்றப்பத்திரிகை மற்றும் விமர்சனம் - அதிருப்தியை வெளிப்படுத்த நாடு தழுவிய வேலைநிறுத்தம் என்பதாக அமையும்.

கடந்த 30 ஆண்டுகளுக்கு மேலாக நாடு தழுவிய அனைத்து தொழிற்சங்கங்களின் சார்பிலான ‘ஒரு நாள் வேலை நிறுத்தங்கள்’ ஆண்டுதோறும் நடந்தேறியுள்ளன. தொழிலாளர் வேலை நிறுத்தங்கள் வீணாவதில்லை என்கிற நம்பிக்கை அங்கு தொழிற்படுவதுண்டு. நாட்டு மக்களிடையே பல belief systems உண்டு. தொழிற்சங்களுக்கான belief system என்பதும் உண்டு. அது அவசியமானதும் கூட.

கடந்த 30 ஆண்டுகளில் அவ்வப்போது 12 அம்சம் - 15 - 17 அம்சம் (எண்ணிக்கை நான் சொல்வது நினைவிலிருந்து தவறாக கூட இருக்கலாம்) என கோரிக்கைப் பட்டியல்- அவற்றிற்கான விளக்க குறிப்புகளுடன் வேலை நிறுத்தங்கள் - அவ்வப்போது இருந்த / இருக்கிற அரசாங்களுக்கு எதிராக நடந்தேறியுள்ளன . இந்த கோரிக்கைகள் எந்த அளவு , எந்த அரசாங்கக் காலத்தில் தொழிலாளர் அல்லது அரசியல் நிர்ப்பந்தத்தால் தீர்வை எட்டின என்கிற accountability யும் கூடுதலாக தொழிற்சங்கங்களால் வைக்கப்பட்டு , தொழிலாளர்களிடம் எடுத்துச்

செல்லப்பட்டால், அது கூடுதல் உத்வேகத்தை வேலை நிறுத்தக் காலத்தில் தரும்.

நாங்கள் எங்கள் அனுபவங்களை சரி பார்த்துக்கொள்ள/ தயவு தாட்சண்யமின்றி வேலை நிறுத்தம் எங்கு எந்த அடர்த்தியுடன் நடந்தது என்பதை தொழிலாளர் தரப்பு/ நிர்வாக தரப்பு என இரு பகுதியிலிருந்தும் திரட்டி தொழிற்சங்க இதழ்களில் வெளியிட்டு வந்தோம். எவ்வளவு தோழர்களுக்கு வேலை நிறுத்த ஊதியம் பிடிக்கப்பட்டது என்கிற உண்மை விவரத்தை எந்த மிகைப்படுத்தலும் இல்லாமல் அப்படியே வெளியிட்டும் வந்தோம். பலம் பலவீனம் அறிய ஓரளவிற்கு இந்த நடைமுறை உதவியது.

மே 20 வேலை நிறுத்தம் தொழிற்சங்கம் வைத்துள்ள கோரிக்கைகள் நோக்கி தொடர் பேச்சுவார்த்தை தீர்வு என்கிற திசையில் நகர நல்வாழ்த்துகள்!

4-5-2025

may 5

டிஜிட்டல் யுகமும் மார்க்சும்

(Marx In the age of Digital Capitalism edited by Christian Fuchs and Vincent Mosco)

எலக்ட்ரானிக் யுகத்தில் மார்க்சை பேச முடியுமா என்கிற பொருளில் ஏராள அறிஞர் பெருமக்கள் எழுதிய பல கட்டுரைகளின் தொகுப்புத்தான் இந்நூல். 'டிஜிட்டல் முதலாளித்துவ காலத்தில் மார்க்ஸ்' வந்து 10 ஆண்டுகள் ஆகிவிட்டது.

மார்க்ஸ் என்றாலே, முதலாளித்துவத்தை அக்கு அக்காக கழற்றி, அதன் இயங்கியல் குறித்த விமர்சனத்தை வைத்தவர் என்கிற பொதுப்புரிதல் இருக்கும். இந்நூலில் கட்டுரை ஆசிரியர்கள் - இணையம் குறித்த மார்க்சிய வாசிப்புகள், டிஜிட்டல் மார்க்ஸ், மீடியா அதன் அரசியல் பொருளாதாரம், தகவலை வர்த்தகமயமாக்கல், தகவல் காலத்தின் இருண்ட பகுதிகள், கிளவுட் மார்க்ஸ் என பல சுவையான தலைப்புகளில் உரையாடியுள்ளனர். நூல் அளவில் சற்று பெரிய 560 பக்கங்கள் கொண்டது.

பேரா கிறிஸ்டியன் போக்ஸ் தகவல் மற்றும் ஊடகத்துறை ஆய்வாளர். மன்த்லி ரிவ்யூ வில் எழுதி வருபவர். டிஜிட்டல் உலகில் மார்க்ஸ் குறித்து தொடர்ந்து எழுதுபவர். கனடா பேரா வின்செட் மஸ்கோ 'தகவலும் சமூகமும்' என்கிற துறை சார்ந்து ஆய்வுகளை செய்து வருகிறார்.

புரட்சிகர மார்க்சிய இயக்கங்கள் தங்களுக்கான தலைமைக் கேள்வியாக சொத்து யாரிடம் குவிகிறது - எப்படி மேலாண்மை செய்யப்படுகிறது என்பதை வைப்பர். அதைப் பொறுத்தே அவர்களின் பாட்டாளிவர்க்க செயல்திட்டம் கட்டப்படுகிறது.

இந்த டிஜிட்டல் உலகிற்கு மார்க்ஸ் பொருத்தமற்று போய்விட்டாரா என்ற கேள்வி பல மார்க்சியரை மண்டை குடைய வைக்கும் கேள்வி. பொருளாதார நெருக்கடிகளை முதலாளித்துவ உலகம், இந்த உலகமயமாதல் சூழலிலும் உணர்கின்றவரை மார்க்ஸ் எப்படி காணாமல் போவார் என்ற கேள்வியை மார்க்சிய சிறந்த அறிஞர்கள், ஈகிள்டன் போன்றவர்கள் பதில் கேள்வியாக்கி தங்கள் ஆய்வுகளைத் தருகின்றனர்.

கம்யூனிசம் என்பதை எப்போதோ கண்ணுக்கு தெரியா வெகுதொலைவுக்கால லட்சியம் எனக் கருதாதீர். உங்கள் கண் முன் நடக்கக்கூடிய அனைத்து அநீதி, அதல பாதாள வேறுபாடுகளுக்கு

எதிராக நடைபெறும் அனைத்துப் போராட்டங்களிலும், கம்யூனிச கனவு விசிறி நிற்கிறது என இவர்கள் பேசுகின்றனர்.

நீங்கள் 'முகநூல், ட்விட்டர், யு ட்யூப்' என்பதில் மட்டும் இவற்றை தேடாமல், உலகில் பல்வேறு சதுக்கங்களில் பேரளவாக நடக்கும் மக்கள் எழுச்சிகளில், சொத்தற்றவர் போராட்டங்களில் அதைப் பார்க்க முடியும் என்கிற நம்பிக்கையை இந்த மார்க்சிய அறிஞர்கள் விதைக்கின்றனர்.

மார்க்சிடம் 'ஜேர்னலிசம்' என ஒன்றை கற்க வாய்ப்பில்லையா எனக் கேட்டும் ஆய்வுகள் நடப்பதாக இந்நூல் சொல்கிறது. நமது ஊடகவியல் ஆய்வில் மார்க்ஸ் எனும் பத்திரிகையாளர் உதவ மாட்டாரா என்கிற ஆய்வை இவர்கள் சொல்கின்றனர். மார்க்ஸ் தன் காலத்தில் மீடியா-தகவல் என்பதை எப்படி உள் வாங்கினார் என்பதை அறிந்து, அதன் இன்றைக்கான பொருத்தப்பாட்டை ஆய்வு செய்யக் கூடாதா என்ற கேள்வியையும், 'டிஜிட்டல் மார்க்ஸ்' ஆய்வாளர்கள் எழுப்புகின்றனர்.

மார்க்சியத்தின் இயக்கவியல் தத்துவ பார்வை செல்வாக்கில் இயங்கும் தகவல்- ஊடகத்துறையை கணக்கில் கொண்டு ஆய்வை செய்ய சிலர் முற்பட்டுள்ளனர். இன்று பரபரப்பாகியுள்ள சமூக ஊடகத்துறையை மார்க்சிய அறிதல் பார்வை கொண்டு அளக்க முடியுமா என்ற கேள்வியும் அவர்கள் ஆய்வில் இடம் பெறுகிறது என்கின்றனர்.

தாமஸ் பிக்கட்டியின் 2014 காபிடல் நூலை கிறிஸ்டியன் போக்ஸ் வரவேற்றாலும், பிக்கெட்டி 'மார்க்ஸ் குறித்த' தவறான புரிதல்களும் கொண்டவராக இருக்கிறார்- பிக்கெட்டியின் காபிடலை 21ஆம் நூற்றாண்டின் மூலதனம் என்றெல்லாம் உயர்த்துவதை கிறிஸ்டியன் போக்ஸ் ஏற்கவில்லை.

மார்க்சியப்படி தகவல் என்பதற்கான கோட்பாட்டை (Theory of communication) எப்படி உருவாக்குவது- அதை எதில் நிறுத்திப் பார்ப்பது எனச் சொல்ல வரும்போது- அதனை - முதலாளித்துவத்துடன் உள்ள தொடர்பென்ன என்பதில் பார்க்க வேண்டும் என போக்ஸ் முன் வைக்கிறார். இந்த தகவல் நுட்ப காலத்தில் எப்படியான உற்பத்தி, எவை சந்தைமயமாகின்றன எனவும் மார்க்சியர் பார்க்கவேண்டும் என்கிறார் போக்ஸ். அவரின் கீழ்கண்ட ஆங்கிலவரி புரிதலுக்கு உதவலாம்

Communication has always been embedded into structures of inequality in class societies .

இந்த தகவல் தொழில்நுட்ப, சமூக ஊடக செயல்பாட்டு டிஜிட்டல் காலம் சமூகத்தில் பொருளாதார வேறுபாடுகளை சாய்த்து, அசமத்துவ நோக்கத்தை சிறிதாவது குறைத்துள்ளதா- இனியாவது குறைக்கும் என்கிற நம்பிக்கைப் பாதையை அது காட்டுகிறதா என்கிற பொருட்பட கேள்வியை இந்நூல் வைப்பதாக நான் புரிந் து கொள்கிறேன்.

ஊடகத்துறையில் எப்படி மூலதனப் பெருக்கம் நடந்து வருகிறது- அவை எவரின் இலாபக் கிடங்கை நோக்கி நகர்கின்றன. ஊடகத்தை கட்டுப்படுத்தும் மூலதனம் குறித்த ஆய்வென்ன என்ற கேள்விகளை நாம் நேரிட வேண்டியுள்ளது.

ஊடக மூலதனம் என்பதுடன் அது உற்பத்தி செய்யும் ;ஊதியத்திற்கான அறிவுத்துறை' ஊடக ஊழியர்கள் பற்றிய ஆய்வும் இதில் உள்ளடங்க வேண்டியுள்ளது. இந்த மீடியாக்கள் எந்த இசங்களை- எந்த கோட்பாடுகளை சுமந்து ஊர்வலம் வருகின்றன- carrier of what ideology என்ற மிக முக்கிய கேள்வியையும் போக்ஸ் பார்க்கச் சொல்கிறார்.

டெரி ஈகிள்டன் மார்க்சின் மீதான 10 காழ்ப்புணர்வுகளை- பாரபட்ச பார்வைகளை சற்று தொகுத்து அவை ஏன் தவறானவை, மார்க்ஸ் ஏன் சரியானவர் என தன் 2011 நூலில் எழுதினார் என்பதை போக்ஸ் காணச் சொல்கிறார். போக்ஸ் கூட மார்க்ஸ் மீது பலரும் சுமத்தும் சில பாரபட்ச கேள்விகளை எழுப்பி பதில் சொல்ல முனைகிறார். மார்க்ஸ் 19ஆம் நூற்றாண்டவர்- காலவதியானவர், மார்க்சியம் என்றாலே வன்முறை ஆயுத வழிதான்- படுகொலைகள், சோசலிச சமூகம் என்பதெல்லாம் மனோராஜ்ய கற்பனையே, மார்க்சியம் நிர்ணயவாதமே- பார்முலா போன்று சமூக மாற்றத்தை ஒன்றுக்குப்பின் ஒன்று என அது சொல்கிறது, அதேபோல் அனைத்தையும் பொருளாதார அடிப்படை என்கிற குறுக்கல்வாதம் செய்கிறது, சமுகத்தை வர்க்க வழியாகவே அது விளக்கப் பார்க்கிறது, மார்க்சியத்திடம் எந்த அறநெறியையும் எதிர்பார்க்க முடியாது- இலக்கை அடைய எப்படி வேண்டுமானாலும் என அது சொல்லித்தருகிறது- சோசலிச பாட்டாளி சர்வாதிகாரம் பேசி அது ஜனநாயகத்தை அலட்சியம் செய்கிறது- இப்படியான வழக்கமான பாரபட்சம் கொண்ட காழ்ப்புணர்வு ஏச்சுக்களை வைத்து , மார்க்சியத்தை பொது நீரோட்டத்திலிருந்து மீடியாக்கள் அலட்சியம் செய்வதை போக்ஸ் போன்றவர் இந்நூல் வழி விமர்சிக்கின்றனர்.

ஆந்த்ரஸ் விட்டல் மிக முக்கிய கருத்தாக்கம் ஒன்றை இதில் முன் எடுக்கிறார். அதாவது 'தகவல்களை பகிர்ந்தளிப்பது' என்பதை

முதலாளித்துவம் கட்டுக்குள் வைத்து செயல்படுவதை அவர் சொல்கிறார். Capitalist class controls the means of information distribution.

ஜென்ஸ் ஸ்கோர்ட்டர் இன்டெர்நெட் காலம் உராய்வற்ற முதலாளித்துவத்திற்கு சாதகமாக நிற்பதாக சொல்கிறார்- frictionless capitalism.

எரான் பிஷர் இரு கருத்தாங்களை விவாதத்திற்கு முன்னெடுக்கிறார். ஒன்று audience commodification on facebook, மற்றொன்று audience alienation- they cannot control the content production என்பதை பிஷர் பேசுகிறார்.

டல் யோங் ஜின் என்பார் கலாச்சார ஏகாதிபத்தியம் என்பது விவாதிக்கப்பட வேண்டிய ஒன்று என முன்மொழிகிறார்.

மரிசால் சாண்ட்வால் ஆப்பிள் ஐபோன் மற்றும் சீனக் கம்பெனிகளில் தொழிலாளர்களின் மிக மோசமான சுரண்டல் தீவிரமாக வெளிக்கொணரப்படவேண்டும் என வற்புறுத்துகிறார்.

மஸ்கோவின் ஆய்வில் political economy of cloud computing and big data- how state surveillance and threat to labour knowledge போன்ற காரணிகள் விவாதிக்கப்பட வேண்டும் எனப் பேசுகிறார்.

இந்நூலில் மிகக் குறுகிய பகுதியை ஒற்றை வரி செய்திகளாகவே தரப் பார்த்துள்ளேன். இந்நூலை நன்கு வாசித்தவர் எவரேனும் என்னைவிட மிகச் சிறப்பாக எடுத்து விளக்கியிருக்க முடியும். ஓர் அறிமுகம் என்ற அளவில் இந்த கட்டுரையை எடுத்துக்கொள்ள வேண்டுகிறேன்.

டிஜிட்டல் உலகில் மார்க்ஸ் நேரம் ஒதுக்கி நன்கு கற்க வேண்டிய பொருள். என் போதாமையை இதில் நான் உணராமல் இல்லை.

5-5-2025

may 7

கடவுளும் குஷ்வந்த் சிங்கும்

புகழ்வாய்ந்த எழுத்தாளர் குஷ்வந்த் சிங் , இறை- சமயம்- வழிபாட்டுக்கூடங்கள்- புனித நூல்கள்- பக்தி இலக்கியங்கள்- குருமார்கள் என ஏராள அம்சங்களில் தன் பார்வையை அனுபவத்தை விரித்து பேசியுள்ளார். ஆதிகிரந்தம், குரான் போன்ற நூல்களின் இலக்கிய அழகையும் பேசியுள்ளார். மதமும் ஒழுக்கமும் என்பது குறித்தும் விவாதித்துள்ளார்.

கடவுள் உண்டா இல்லையா என்ற கேள்விக்கு அவர் ‘எனக்குத் தெரியாது’ என விடையளிப்பதே உகந்தது எனக் கருதினார். அறியொணாவாதிகள் பட்டியலில் அவரை வைக்கலாம். மறைநூல்களில் நல்ல தேர்ச்சியும் உள்வாங்குதலும் கொண்டவராக குஷ்வந்த் இருந்தார். சீக்கியர்களின் வரலாற்றை எழுதியவரும் கூட.

ஆலயங்களில் குருத்வாராக்களில் உடலை பணிந்து தரையில் அதிக நேரம் மூக்கழுந்த வழிபடுபவர்கள் சற்று கூடுதல் பாவ மன்னிப்பு கேட்பார்கள் போலிருக்கிறது என்கிற கேலி தொனி அவரிடத்தில் உண்டு.

எனக்கே எனக்கான என் தனித்த மதம் ஒன்று இருந்தால் நல்லது. அதைத்தேடவே விழைகிறேன் என்றவர் குஷ்வந்த். இந்தியா சுதந்திரம் பெற்ற ஆகஸ்ட் 15, 1947ல் தான் வேறு ஒரு சுதந்திர பிரகடனம் செய்துகொண்டதாக சொன்னவர் சிங்.

Freedom from conformist religion- I am an agnostic.

யூதமதம், கிறிஸ்துவம், இஸ்லாம் போன்றவை ‘லீனியர் ‘ (அதாவது தொடக்கம், மத்தி, முடிவு எனப் பார்த்தல்) என்றால், இந்து, புத்தம்,ஜைன, சீக்கியம் என்பன Hindic view that is cyclical view of life என சுருங்க புரிய வைத்தார் சிங்.

மனிதன் நல்லவனாக இருக்க கண்டிப்பாக சமயம் அவ்வளவு அவசியமில்லை எனக் கருதியவர் சிங். அவர் இப்படி எழுதினார்.

One can be a saintly person without believing in God and a detestable villain believing Him. In my personalised religion, there is no God .

அசிம்பாடி என்பாரின் அற்புத தெறிப்பு ஒன்றை சிங் காட்டுவார்.

என் வாழ்க்கையின் ஆரம்பம் எது , முடிவென்ன நான் அறியேன். அறிந்ததெல்லாம் மத்தியில் நடந்ததையே..

What I have heard is only the middle

I know not its beginning, I know not its end

புனித குருமார்களை தீர்க்கதரிசிகளை , வரலாற்றின் ஒரு கட்டத்தில் எழுந்து மக்களை ஈர்க்க நல்வழிப்படுத்த உழைத்தவர்கள் என புரிந்துகொண்டால் போதும். அதற்கு மேல் புனிதமென ஏதும் நான் ஏற்றுவதில்லை என்றார் சிங் .

புனித நூல்களை இலக்கியமாக பார்க்கிறேன். இலக்கிய அந்தஸ்து எனப் பார்த்தால் , காளிதாசர், ஹபிஸ், ஷேக்ஸ்பிரியர், கதே, டால்ஸ்டாய், தாகூர், இக்பால், பைஸ் போன்றோர் மேம்பட்ட இலக்கியங்களை நமக்கு தந்து சென்றுள்ளதாக சிங் உணர்ந்தார்.

புரியாமல் மந்திர உச்சாடனம் போல புனித நூலிலிருந்து பாடிக்கொண்டிருப்பவர்களை குருநானக் மூளையற்றவர் என விமர்சித்தாராம். குருநானக் வரிகளை சிங் தந்தார்.

They have no comprehension, no brains in their heads

Who do not bother the meanings of words

O Nanak such are real donkeys

Who vaunt their pride without having done any good

புனித நூல்களின் உச்சாடனத்திற்கு மட்டுமல்ல , அர்த்தமறியாமலேயே அல்லது உள்வாங்காமலேயே எதையும் கதைக்கும் எவருக்கும் இதை பொருத்திப் பார்த்துக்கொள்ளலாம்.

கடவுள், தீர்க்கதரிசி, புனித நூல், வழிபாடு, இறை வழிபாட்டுத்தலம் என்கிற 5 தூண்களிலேயே அனைத்து மதங்களும் நிற்கின்றன. ஆனால் மதம் ‘சிஸ்டம்’ என்கிற வகையில் நமக்கு தோல்வியையே தந்ததாக சிங் மதிப்பிடுகிறார்.

நீங்கள் புனிதக் கூடங்களை உடைத்தால் செய்துவிட்டு போவீர்..ஆனால் மனித இதயத்தை மட்டும் உடைத்துவிடாதீர் என்கிற புல்லே ஷா சூபி கவிதையை சிங் காட்டுகிறார்.

No religious system is known to have escaped the cancer of intolerance என்கிற புரிதலை சிங் தருகிறார்.

ஏன் இப்படி மீடியாக்கள், டிவி சானல்கள் அனைத்தும் சமயம் சார்ந்த ஒலிபரப்புகளில் போட்டியிடுகின்றனவோ என விமர்சித்தவர் சிங்.

Preaching religion over official media is against the spirit of secularism என்று எழுதியவர் சிங். இன்று அவர் இருந்து ஆட்சியாளர்களை, பிரதமர் செயல்பாடுகளை பார்த்திருந்தால் மனம் வெம்மி புழுங்கியிருப்பார். ஏன் இப்படியான 'காமிக்குகள்' என எழுதியிருக்கக்கூடும்.

எனது மதம் உழைப்பை கொண்டாடும் ஒன்றாக இருக்கட்டும் - நெறி அதன் மரபாகட்டும் என்றார் சிங். Work ethic - rest is forbidden என்ற அளவிற்கு அவர் எழுதியிருந்தார்.

அனைத்து பழமையான மதங்களும் சுற்று சூழல் விழிப்புடனே பேசியிருக்கின்றன. அதை எடுத்து விதந்து பேசுகிற மரபை நாம் உருவாக்க வேண்டும் என்றார் சிங். 'நல்ல வாழ்க்கையே நல்ல சமயம்' என்றார் சிங். அமெரிக்காவின் எல்லா வீலர் வில்காக்ஸ் வரிகளை சுட்டிக்காட்டினார்.

So many gods, so many creeds, so many paths that wind and wind

When the art of being kind is all that the sad world needs

அதே நேரத்தில் நாம் நம் குழந்தைகளுக்கு 'அகிம்சா பரமோ தர்மா' (non violence) என்பதை, நிஷ்காம சேவா (selfless service) என்பதை சமயங்களிலிருந்து எடுத்து சொல்லித்தர வேண்டும் என்கிறார் சிங். ஷேக்ஸ்பியரின் ஹாம்லட் வரி ஒன்றையும் To thine own self be true என்று நாம் சுயத்திற்கு நேர்மையாக இருத்தலைக் கற்போம் என்கிறார்.

அனைத்திற்கும் மேலாக உண்மை. உண்மையை உரைக்க தனித்த மூளை என ஏதும் தேவையில்லை. நன்னடத்தை போதும் என்றார் சிங்.

ஏராளம் எழுதி குவித்துள்ள குஷ்வந்த் சிங் அவர்களின் 'இறை குறித்த' சிந்தனையின் சில துளிகளை இங்கு காட்டியுள்ளேன். ஆர்வம் உள்ளோர் மேலதிகமாக அறிய 'Agnostic Khushwant' நூலைப் பார்க்கலாம்.

7-5-2025

may 9

மே 7 , 2025 முதல் அதிகாரபூர்வ இராணுவ சத்தங்கள்- அதன் அளவை அதிகரித்துக்கொண்டே…

இரு நாடுகளின் எல்லையோர மக்களின் இயல்பு வாழ்க்கை, உயிர் உடைமைகள் , அவர்களின் தவறு ஏதுமில்லாமலேயே பெரும் பாதிப்புற்கு உள்ளாகியிருக்கக்கூடும். ஆயிரக்கணக்கான அம்மக்கள் என்ன செய்தார்கள்..ஏன் அவர்கள் வாழ்க்கை பணயமாக வேண்டும்? போரின் இயல்பே அப்படிதானோ? ஆயுதத்திற்கு ஆன்மா உண்டா?

எவர் உயிரும் எதன் பெயரில் போவதும்- தேசப்பெருமித உஷ்ணமாகயிருந்தாலும் கூட- மனதை பிசைகின்ற வலியைத் தருகிறது. பெயர் வேறாக, உடை வேறாக , தோற்றம் வேறாக , இறை வேறாக இருந்தாலும் உள்ளுறை உயிரின் வெளித்தோற்றங்களே இவை. வெளித்தோற்றக் காரணிகளுக்கு உயிர் பலிகள் நியாயமாகுமா என்கிற கேள்வி தொந்தரவு செய்கிறது.

இராணுவ உடை தரித்த இந்திய இளைஞர்கள் தங்கள் வீடுகளின் குடும்ப பாசம், ஊர் உறவுகளைக் கொண்டவர்களே. எவரின் இழப்பும் சொல்லொணாத் துயரை குடும்பத்திற்கு தரும். தியாகம் சல்யூட் என ஓரிரு நாட்கள் ஊர் கொண்டாடிவிட்டு ஓய்ந்துவிடும். குடும்பம் பல ஆண்டுகளுக்கு இழப்பு நினைவின் சுமையை , வலியை வைத்துக்கொள்ள நேரும்.

போர் சூழல் பதட்டத்தால் பொருளாதாரம் பாழ்பட்டு நிற்கும். அறிவிக்கப்படாத எமர்ஜென்சி, உஷ்ணம் கூடினால் அதிகாரபூர்வமாக சொல்லப்படலாம். பொருளாதார கார்ப்பரேட் கேப்டன்கள் அரசியல் தலைமைக்கு/ தலைமைகளுக்கு இணைந்து நின்று , அமைதியில் தான் வளர்ச்சி என்பதை எடுத்துச் சொல்வது நலம்.

இரு நாட்டு இராணுவ தலைமைக்கும் போர் என்றால் தங்கள் சக்தியை எவ்வளவு விரயமாக்க வேண்டி வரும் எனத் தெரியும். ஏற்கனவே ‘இராணுவ பட்ஜெட் ‘ வீங்கி நிற்கும் நாட்டில், கோடிக்கணக்கான ரூபாய்களை கொடுத்து வாங்கி வைத்துள்ள தளவாடங்களின் அழிவு இழப்பு - பொருளாதாரரீதியாகவும், மனோரீதியாகவும், பயிற்சி மிகுந்த வீரர்கள் இழப்பு வகையிலும் பின் விளைவுகளை உருவாக்கும்.

இராணுவத்தலைமை அரசியல் தலைமைக்கு உண்மையை அவ்வப்போது எடுத்துச் சொல்லக்கூடியவர்களாகவே இருப்பர். அப்படி இருப்பது நல்லதும் கூட. எந்த அம்சத்திலும் best results with least expenditure

of energy என்பது பாலபாடம். இதையெல்லாம் உயர் பொறுப்புகளில் உள்ளவர் பல மடங்கு விழிப்புடன் அறிந்தவர்களாகவே இருப்பர். அரசியல் தலைமையால் பெயரிட முடியுமே தவிர, போர் முனையில் செயல்படுத்தும் முழு பொறுப்பும் இராணுவத் தலைமையிடம் தான். காவு போகும் ஒவ்வொரு உயிரும் வாழ்க்கை குறித்து ஏராள கனவுகள் கொண்டவையே. ஒவ்வொரு தளவாட அழிவிலும், நாட்டு மக்களின் நல வாழ்வு பட்ஜெட் கோடிக்கணக்கில் குறைக்கப்படவேண்டிய நிலை உருவாகலாம். ஜனநாயக போராட்டங்களை சில காலம் மூடிட வேண்டிய நிலை கூட உருவாகக்கூடும்.

மே 8 ல் அழைக்கப்பட்ட அனைத்து கட்சி கூட்டத்தில் , நாட்டின் அரசியல் தலைமை என்கிற வகையில் பிரதமர் பங்கேற்பு இருந்திருந்தால், அது நம்பிக்கையை ஒற்றுமையை கூடுதலாக வலுப்படுத்தியிருக்கும். பிரதமர் பெரும் மன அழுத்தத்தில் , பொறுப்பின் காரணமாக இருக்கக்கூடும். பணிச்சுமையும் அதிகமாக இருந்திருக்கக்கூடும். முழு கூட்டத்தில் அவரால் உட்கார முடியாத சூழல் கூட இருந்திருக்கக்கூடும். ஆனாலும் எட்டிப்பார்த்துவிட்டு, பணிச் சுமையை சுட்டிக்காட்டிவிட்டு, அனைவரின் ஒற்றுமையை வேண்டி கேட்டுவிட்டு , வணக்கம் ஒன்றை போட்டு விட்டு சென்றிருக்கலாமே எனத் தோன்றுகிறது.

எதிர்கட்சிகள் எதிர்பார்ப்பு எப்படியாக இருந்தாலும் , அரசாங்கத்திற்கு ஆதரவாக உடன் நிற்பது என்கிற பொது நிலையையே அவர்கள் எடுக்க வேண்டியிருக்கும். அது அவர்களுக்கு உகந்ததும் கூட.

வலிமை கொண்ட அமெரிக்கா, சீனா இன்னும் மேற்கு வீட்டோ நாடுகள் எவ்வளவு தூரம் அறம் சார்ந்து பேசுவார்கள் என புரிந்துகொள்ள முடியவில்லை. பொருதும் மனநிலையில் உள்ள இந்திய பாகிஸ்தான் இரு நாடுகளின் அரசியல் மற்றும் ராணுவத் தலைமையின் அறப் பயிற்சி, மற்றும் மானுட மேன்மை என்கிற நல்லெண்ணத்தில் தான் விரைவான தீர்வைக் கொணரமுடியும்.

தீவிரவாதிகள் தங்களின் பயங்கரவாத பழி உணர்வை விடுதலையாக பாவிக்கும் போது, விடுதலை அடைந்த நாடுகளின் மக்கள் பெரும் பாதிப்புக்கு உள்ளாவதை ஏன் தீவிர ஆயுதமேந்திகள் உணர்வதில்லை எனக் கேட்கக் தோன்றுகிறது.

குறைந்த சேதாரத்தில், போதும் நிறுத்திக்கொள்வோம் என்கிற maturity இரு பக்கத்திலும் தொழிற்பட்டால் நல்லது. குரங்கு அப்பம் பங்கிட்ட

கதைக்கு அனுமதித்து விடாமல், போர் சூழலில் பதட்டத் தணிப்பை கொணரமாட்டார்களா என மனம் ஏங்குகிறது.

எனக்கு தெரியாத விஷயங்கள் இதில் ஏராளம் ஏராளம் இருக்கும் . முடிவெடுக்கும் இடத்தில் இருப்பவர்க்கே முழுமையான picture தெரியும். அவர்களால் தான் நிலைமைகளை தீவிரப்படுத்தவோ, கட்டுக்குள் கொணரவோ இயலும். அரசியல் தலைமை மீது பாரத்தை போட்டுவிட்டு, அமைதி வராதா என ஏங்கக்கூடிய கோடானுகோடி பேரில் ஒருவனாக, தொலைக்காட்சி வாண வேடிக்கை, ‘ஸ்டார் வாரை ’ பார்த்துக்கொண்டே, மன திருப்திக்கு எழுதிப் பார்க்கும் நிலையில்…

பாதிக்கப்பட்ட இந்தியா பாகிஸ்தான் அப்பாவி மக்கள் என் நினைவிலும் சில நொடிகள் …இதுவும் கடந்து போகும் போல..

9-5-2025

may 11 2025

‘மார்க்ஸ் -மார்க்சியர் - இந்தியாவில் தாக்கம்’ குறித்து அவ்வப்போது கடந்த சில மாதங்களில் சிறு சிறு குறிப்புகளை முகநூலில் தந்து வந்துள்ளேன்.

இடுகைகளை முழுமையாக சேர்த்து தொகுத்து வைத்துக்கொள்ள முடியாமல் போனது. கடந்த 15 ஆண்டுகளாக எழுதி வந்த இணையதளமும் , பிப்ரவரி 4, 2025 அன்று முடிவிற்கு வந்தது. ஏறத்தாழ இணைய தளத்தில் 600 கட்டுரைகளாகவது இருந்திருக்கும். சேமித்திருந்த சில கட்டுரைகள் நீங்கலாக மற்றவை போயே போயின.

முகநூலில் எடுக்க முடிந்த சில இடுகைகளை , இப்போது தொகுத்தாலே ஏ4 பிடிஎப் மின் வடிவத்தில் 200 பக்கங்களுக்கு மேல் வரலாம். முயற்சிக்கலாம் என்கிற ஆசை.

இதை செய்ய ஆரம்பித்தபோது, பிரிட்டனின் சமுக இயல் அறிஞர் பீட்டர் வோர்ஸ்லியின் Marx and Marxism நினைவிற்கு வந்தது. அதன் அற்புத தமிழாக்கத்தை புகழ் வாய்ந்த பிரமிள் ‘ மார்க்ஸூம் மார்க்ஸீயமும்’ எனச் செய்தார். அந்த நூலை வாசித்து 25 ஆண்டுகள் ஆகியிருக்கலாம். ஏதாவது குறிப்பெடுத்து திருவாரூரிலேயே பறக்க விட்டுவிட்டேனா , நினைவில் இல்லை.

தற்போது மீண்டும் வோர்ஸ்லியை பார்த்ததால் இப்பதிவு..

வோர்ஸ்லி ஆங்கில நூல் 1982ல் வந்தது. பிரமிள்,இலங்கை விடுதலை இயக்கத்தவர்க்காக 1985 லேயே மொழிபெயர்க்க ஆரம்பித்தாலும்,எழுத்தாளர்களுக்கே ஏற்படக்கூடிய அவஸ்தைகள், தடைகளைக் கடந்து, கால சுப்பிரமணியம் முயற்சியால் 1999ல் வெளிவந்தது.

வழக்கமான அந்த காலத்தில் கிடைத்த பல மார்க்சிய நூல்களின் மொழிபெயர்ப்பு நடையிலிருந்து, சற்று இலகு நடையில் வோர்ஸ்லி நூலை பிரமிள் தந்திருப்பார். மார்க்ஸ் குறித்த மதிப்பிடல்களை சற்று விமர்சனபூர்வ நோக்கில் பார்த்து, அதேநேரத்தில் மார்க்சின் பங்களிப்பை அறிமுகப்படுத்த முயற்சித்த நூல் என இதைச் சொல்லலாம்.

இயல்களை பிரமிள் தலைப்பிடும் போது மூல நூலில் இயல்தலைப்பு ஆங்கிலத்தில் இருந்ததையும் சேர்த்தே தந்திருப்பார்.

Introduction, Materials and Synthesis, The Model of Capitalism- British political Economy, Social Evolution, Socialism Ideal and Reality, Marxism Sociology and Utopia என்கிற இயல் தலைப்புகளை பிரமிள்

மார்க்சியத்தின் சரித்திரச் சுவடுகள், சாதனங்களும் சமான விருத்திகளும், முதலாளித்துவ மாடல் பிரிட்டிஷ் அரசியல் பொருளாதாரம், சமூகப் பரிணாமம், சோசலிசம் லட்சியார்த்தமும் யதார்த்தமும், மார்க்ஸீயம் சமுகவியலும் யூட்டோப்பிய பூரண அரசும் என்று கொடுத்திருப்பார்.

மார்க்சியத்தை முழுமையாக ஆராதிப்பவர்களிடம் அகப்பட்டுக்கொள்ளாமலும், வெறும் தூஷணை செய்பவர்களிடம் சிக்கி விடாமலும், கம்பி மேல் நடப்பதை போன்று சமூகவியல் புரிதலில் பிரதியை வோர்ஸ்லி முடைந்திருப்பார்.

மார்க்சியத்தை ஏற்றவர்கள் எந்த அம்சத்திற்கு அழுத்தம் கொடுத்தனர், எப்படி பயன்படுத்த விழைந்தனர் என்கிற கேள்வியை ஆசிரியர் எழுப்பி பதில் தேடப்பார்த்திருப்பார். அதை சித்தாந்தமாகவே செய்து கொண்டிருப்பவர்கள், காணப்படும் இடைவெளிகளை வெளிப்படுத்தி அதை நிராகரிப்பவர்கள் என்கிற இரு சாரார் குறித்தும் எச்சரிக்கையுணர்வு கொண்டிருப்பார் வோர்ஸ்லி.

ஸ்டாலின் மாவோ காலத்திற்கு பின்னர் உலகப் பொது மார்க்சியம்- ஒரு இடத்திலிருந்து கட்டளைகள் என்பதெல்லாம் நின்று போயின. அந்த அந்த தேச மார்க்சியர் சுயாதீனமாக தங்கள் ஊருக்கான மார்க்சிய புரிதல்களை சொல்லும் சுதந்திரம் உருவானது. சில இடங்களில் ‘தேசிய வைதீக மார்க்சியம்’ உருவாகவும் இது இடம் கொடுத்தது. கொரிய அனுபவத்தை இங்கு வோர்ஸ்லி சொல்வார். லெனின் மாவோ போன்றவர் பெரும் ரட்சகர்கள் நிலைக்கு உயர்த்தப்பட்ட நிலையையும் சொல்வார்.

மார்க்சியம் இன்றளவும் முதலாளித்துவ நிலபிரபுத்துவ சுரண்டல்களுக்கு எதிராக குரல் கொடுக்கும் , அதன் நம்பகத்தன்மையால் ஜீவித்து நீதியின் குரலாக நின்று வருகிறது என்பதை வோர்ஸ்லி பெரிதாக அங்கீகரித்திருப்பார்.

மார்க்சின் அத்துனை எழுத்துக்களையும் கேள்விக்கு அப்பாற்பட்டவையாக்கி, எல்லா பிரச்சனைக்கும் அதில் தீர்வுண்டு- அனைத்து கேள்விகளுக்கும் பதில் உண்டு என்கிற பேச்சுக்களை சகித்துக்கொள்ள வேண்டியதில்லை என்பது வோர்ஸ்லியின் நிலைப்பாடு.

மார்க்சின் எழுத்துக்களை உபரி மதிப்பு உட்பட - இந்நூலில் மிகச் சுருக்கமாக வோர்ஸ்லி அறிமுகம் செய்திருப்பார். பொருளாதார நிர்ணயவாதம் போன்ற தோற்றத்தை அவரது எழுத்து ஏற்படுத்தியதை ஏங்கெல்ஸ் ஏற்றார் என்பதையும் வோர்ஸ்லி சொல்கிறார். எல்லா சமூகங்களுக்கும் பொருந்தக்கூடிய ஒரே மாடல் என ஏதும் இருக்க முடியாது என்கிற பார்வை வோர்ஸ்லியிடம் இருந்தது. மார்க்சின் மூலதன நூலை அவரின் மாபெரும் அறிவு சாதனை என வோர்ஸ்லி ஏற்கத்தவறவில்லை. ஆனால் அதற்கு இணையான சமூக இயல் சாதனையை அவர் ஏற்படுத்தவில்லை என வோர்ஸ்லி மதிப்பிட்டார்.

மார்க்ஸின் எழுத்துக்கள் அவரிடமிருந்து ஏராள எழுத்துக்களை தொடர்ந்து உற்பத்தி செய்திடும் ஆற்றல் கொண்டதாகவும் இருக்கிறது என்பதை அழுத்தமாக ஏற்கவும் செய்கிறார் வோர்ஸ்லி. மார்க்சிற்கு பிந்திய மார்க்சியம் என்பதிலும் அவர் தன்னை கவனப்படுத்திக்கொண்டார்.

மார்க்சின் அரசியல் விஞ்ஞானம், சமூகத்தின் சகல அம்சங்களையும் உள்ள்டக்கிய விஞ்ஞானமாக - சமூகவியலாக ஆகாமல் நின்றதாக சமூகவியல் அறிஞராக வோர்ஸ்லி மதிப்பிடுகிறார். உற்பத்தி தளத்தில் சுரண்டல் என்பதை மட்டும் பார்க்காமல், ஒத்துழைப்பு என்பது குறித்தும் பார்க்க வேண்டியுள்ளது என்றார் வோர்ஸ்லி. அரசுகள் வெறும் வன்முறை பயமுறுத்தலில் மட்டும் இருப்பதில்லை. ஆளப்படுபவர்களின் ஏற்பை பெற்றே நிலைக்கிறது என்கிற கிராம்சியின் பங்களிப்பையும் அவர் சொல்கிறார். தொழிலாளி வர்க்கம் பூர்ஷ்வா வாழ்க்கை முறையில் உள்ளிழுக்கப்படுவதை மார்க்ஸ் தன் காலத்திலேயே இங்கிலாந்தில் கண்டார் என்பதையும் வோர்ஸ்லி நினைவுபடுத்துகிறார்

சோசலிசம் தானாக எங்கும் வந்துவிடாது. தடுப்பதும் மனித முயற்சிதான். அதைக் கொணர விரும்பி செயல்படுவதும் மனித முயற்சி தான். வரவழைக்க முடியும் என்கிற நம்பிக்கை வெற்றி பெறலாம்- தோல்வியிலும் முடியலாம் என்பதை சோவியத் அனுபவம் நிறுவியது. சீனா தான் விழையும் சோசலிச கட்டுமானத்திலும் ஏராள பிரச்சனைகளை சந்திக்க வேண்டியுள்ளது. அது நீண்டகால வேலை என்பதை சீனா ஏற்றுள்ளது. இவற்றை உலகமெங்கும் மார்க்சிய கட்சிகள் புரிந்துள்ளன.

உலக முழுதும் தொழிலாளர்களை வேறுபடுத்தும் அம்சங்களும் இருக்கின்றன. உழைக்கும் வர்க்கம் கலாச்சாரரீதியாக ஓர் படித்தான

ஒன்றல்ல. வேலைத் தளங்களில் கூட தொழில் வித்தியாசம், திறன், வேலை நிரந்தரம் என வேறுபாடுகளை உணர்கின்றனர். இந்தியாவில் கூடுதலாக சாதி உள்ளது. தொழிற்சங்க வழியே மட்டும் அவர்களை புரட்சிகரமாக்கிவிட முடியாது என்பதை லெனின்- ஏன் காட்ஸ்கி கூட, ஏற்றார் என்கிறார் வோர்ஸ்லி.

பொருளாதாரத்திற்கும் , அதற்கு புறம்பான சமூக அம்சங்களுக்குமிடையிலான உறவைப் பற்றி , மார்க்சை தாண்டி போக வேண்டிய தேவையை வோர்ஸ்லி உணர்வதாக புரிந்துகொள்ளலாம். சமூக வளர்ச்சி படிநிலை நியதிகளை மாற்றவே முடியாத இரும்பு நியதிகள் போன்ற தோற்றத்தை மார்க்சை விட எங்கெல்ஸ் எழுத்துக்கள் கொடுத்துவிட்டன என்கிற பொதுவான விமர்சனமும் உண்டு. அப்படி நேரடியாக அவர்கள் எங்கும் சொல்லவில்லை என்ற கருத்தை வேறு சில ஆய்வாளர்கள் போலவே வோர்ஸ்லியும் ஏற்றார். ஸ்டாலின் காலத்து பார்முலாக்கள் அப்படி புரிதலை கொடுத்தன எனவும் அவர் மதிப்பிட்டார்.

எங்கெல்ஸ் காலத்தில் வளர்ந்த எட்வர்ட் பெர்ன்ஸ்டைன் போன்றோர் முதலாளித்துவத்தின் வீழ்ச்சி என்பதோ , வர்க்க திரட்சி என்பதோ நடந்தே தீரும் எனக் கருத வேண்டியதில்லை எனப் பேசியதையும் காண்கிறோம். அவர் ரிவிஷனிஸ்ட் ஆக பார்க்கப்பட்டதும் உண்டு. சோசியல் ஜனநாயகம் என்பதே , வாக்குரிமை அரசியலில் வளர்ந்தோங்கும் என பெர்ன்ஸ்டைன் கணித்தது ஓரளவிற்கு சரியானது போலவே தோன்றுகிறது.

மார்க்ஸ் லெனின் தொழிலாளர் ஆட்சி எனப் பேசியபோது, அராஜகவாதி சிந்தனையாளர்கள் கட்சித் தலைமையின் ‘சிறு குழு ஆட்சியாகவே’ அது அமையும் என எச்சரித்ததும் உண்டு. சோவியத் சீன அனுபவங்கள் உருவானது கட்சித் தலைமை சிறு குழு ஆட்சி என்பதே எனக் காட்டாமல் இல்லை. நாளடைவில் அரசு உதிரும் என்பதற்கு பதில் , வலிமையான மய்யப்படுத்தப்பட்ட அரசு கட்டுமானம் என்பதையே பார்க்க முடிந்தது. சீனாவில் அரசு எப்படி , உலகச் சூழலில் உதிரும் என்கிற கேள்வி அங்கு முக்கியமாக இருக்கவே செய்யும். பலப்படுத்தவே அவர்கள் முனைவதையும் காண்கிறோம்.

“ சோசலிசத்தின் கீழ் அரசை உறுதியாக்க உறுதியாக்க, அது லிபரல் முதலாளித்துவ சமூகத்தை விட , எதேச்சதிகாரமான சமூகத்திற்கே இட்டுச் செல்லும் என பகுனின் பேசியது தீர்க்கதரிசனமானது” என வோர்ஸ்லி பதிவிட்டுள்ளார்.

ராபர்ட்டோ மிஷல்ஸ் எழுதிய அரசியல் கட்சிகள் நூலை வோர்ஸ்லி சுட்டிக்காட்டுகிறார். எல்லா அமைப்புகளிலும் அங்கத்தினர் குரலுக்கு மிகக் குறைந்த space ஏ கிடைத்தது. கட்டமைப்பு என்றால் அது சிறு குழு ஆட்சியாகவே முடியும் என ராபர்ட்டோ 1911ல் எழுதியதாக வோர்ஸ்லி தெரிவிக்கிறார். ஸ்டாலின் ஆட்சி ஜனநாயகத்தை மத்தியத்துவம் எப்படி தோற்கடித்தது என்பதற்கு உதாரணமானது என அவர் காட்டுகிறார். பூரண அதிகாரத்துவத்திற்கான போட்டியாக சற்று பயங்கரவாதமாக கூட இருந்த மதிப்பீட்டை வோர்ஸ்லியிடம் காணமுடிகிறது.

மார்ட்டோவ் லெனின் தோழமையும் வேறுபாடும் சோவியத் கட்சி வரலாற்றில் அபூர்வமாக பேசப்படுபவை. மார்ட்டோவ் மென்ஸ்விக்காகி காணாமல் போனார். பிளக்கானோவ் மென்ஸ்விக் ஆனாலும் கூட, லெனின் ஆட்சி காலத்தில் காணடிக்கப்படவில்லை. 1903ல் மார்ட்டோவ் பேசியதை அநேகமாக உலக கம்யூனிஸ்ட் வெகுஜன கட்சிகள் பின்பற்றுவதைக் காண்கிறோம்

கட்சிக்கொள்கையுடன் உடன்படுகிற எவரையும் கட்சியில் சேர்த்து வெகுஜன கட்சியாக்க வேண்டும் என்றார் அன்று மார்ட்டோவ். அன்று புரட்சிகர கட்சி என்கிற லெனின் பார்வையில் மார்ட்டோவ் கருத்து ஏற்கப்படாமல் போனது என்பது அவர்களின் வரலாறு.

உழைப்பும் பணிவும் கொண்ட மக்களையையே எங்கும் ஆளும் வர்க்கம் விரும்புகிறது என்கிற செய்தி இந்நூலில் கிடைக்கலாம்.

வோர்ஸ்லியின் நூல் இப்படி பல சிந்தனைகளை கிளறக்கூடிய நூலாக இருப்பதை உணர முடிந்தது.

11-5-2025

may 12

படேலின் 150 ஆம் ஆண்டு அவரைப்போலவே அமைதியாக சத்தமில்லாமல் நகர்ந்து கொண்டிருக்கிறது. ஏறத்தாழ 25 ஆண்டுகள் அவர் காங்கிரஸ் அமைப்பை தன் முழு கட்டுக்குள் வைத்திருந்தார் எனச் சொல்லலாம். வெளிப்படையாக ‘வெட்டு ஒன்று துண்டு இரண்டு’ எனப் பேசி அமைப்பு முறைகளில் கறார் தன்மையை கையாண்டவர். அவரை மீறி, காந்தி சொன்னால் ஒழிய, எவரும் எந்த பொறுப்பிற்கும் வந்துவிட முடியாது.

கொஞ்சமாக அவசியமானதைப் பேசுவது, பொதுவாக வாய் திறக்காமல் அழுத்தமாக அமைதியுடன் இருப்பது என்கிற பெரும் பயிற்சி படேலிடம் தொழிற்பட்டது. அதனால் நல்ல அமைப்பு பலன்களை பெற முடிந்ததையும் அவர் உணர்ந்தார். போலித் தன்மை, வெறும் வாயளப்புகள், கட்டித்தழுவுதல், அன்பாக இருப்பது போல் நடித்தல், தேனொழுக உதட்டிலிருந்து பேசுதல் போன்ற எதையும் அவர் செய்யாமல் இருந்தார். இக் குணங்களால் அவருக்கு ஆத்மார்த்த நண்பர்கள் வெகு சிலராயினர்.

காந்தியுடனோ அல்லது பெரும்பாலும் தன் மனதுடனோ மட்டுமே உரையாடல் நடத்துபவராக இருந்தார். மகன் மகளிடம் கூட தாராள பாசத்தைக் காட்டியதில்லை. அவர்கள் குறித்த கவலை இல்லாமல் இல்லை.

கறார் தன்மையால் , அபத்தமான பேச்சு -உதவா செயல் என அவர் நினைத்தால் விழுந்து பிடுங்கிவிடும் குணமுண்டு எனப் பார்க்கப்பட்டார் படேல். அவர் sharp comments களிலிருந்து காந்தி, நேரு, சுபாஷ், ராஜாஜி உட்பட எவரும் தப்பியதில்லை.

படேலை மிக அணுக்கமாகப் பார்த்தார் காந்தி. வேலை ஒன்றை அவரிடம் கொடுத்துவிட்டால், அதை குறித்து எந்தக் கவலையும் தனக்கில்லை என்கிற சுகமான நினைவு காந்திக்கு உண்டு. படேலின் வெப்பம் அவ்வப்போது நேருவை சுட்டாலும், நேரு காந்தியிடமே பெரும்பாலும் வடிகாலை தேடிக்கொண்டார். நேரடி மோதல் சந்தர்ப்பங்களை இருவரும் குறைக்கவே விரும்பினர்.

சோசலிஸ்ட்களுடன் கடுமையாக படேல் மோதவேண்டியிருந்தது. சோசலிஸ்ட்களும் படேலை மோசமாக பார்த்தனர். படேலே எப்போதாவது தான் வேடிக்கையாக பேசுவார். வேடிக்கை பேச்சுக்கள் கூட பெரும் வருத்தத்தை தந்ததால், படேல் மேலும் மனதை மூடிக்கொள்ளலானார்.

1935ல் ஒருமுறை பிரபா- ஜெயப்பிரகாஷ் திருமணம் குறித்து வார்தாவில் படேல் வேடிக்கையாக ‘கமெண்ட்’ கொடுத்தது ஜேபி காதுக்குப் போய், ஜேபி அதை மிகவும் ‘சீரியஸ்’ ஆக எடுத்துக்கொண்டு விளாசித்தள்ளினார். மிக அமைதியாக, வேடிக்கை விபரீதமாக ஆகிவிட்டதே என அன்பு தழும்ப, மன்னிப்பு மன்னிப்பு, என்னை மன்னித்து விடுங்கள் என மிகவும் தயந்து ஜேபிக்கு கடிதம் எழுதினார் படேல். பிரபாவின் அப்பா என் சகோதரர். பிரபா என் மகள் போன்றவர் என அதில் அவர் உள் பாசத்தை வெளிப்படுத்தினார்.

மூத்த சகோதரன் விதல் , வல்லப்பாயை எப்போதும் கிண்டல் செய்து , பொது இடங்களில் கூட சற்று சிறுமைப்படுத்துவது போல் பேசுவார். அண்ணன் என்கிற அக்கால மரியாதை குறையாமல் படேல் , எதிர்த்து பேசாமல், சிறுமைகளை உள்வாங்கி கடந்து போய்விடுவார். விதலின் இறுதிக்காலம் வியன்னாவில் கடந்தது. நோய்வாய்ப்பட்ட விதலுக்கு பணிவிடை செய்பவராக அங்கிருந்த நேதாஜி இருந்தார். படேலோ இந்திய சிறையில். அவர் வியன்னாவிற்கு எழுதிய எக்கடிதமும் அரசாங்கத்தால் விதலுக்கு அனுப்பப்படவில்லை. படேல் தன்னை உதாசீனம் செய்கிறான் எனக் கருதி, கோபமடைந்த விதல்பாய் தன் பிற சகோதரர்களின் குழந்தைகளுக்கும், நேதாஜிக்கும், பொது தர்ம காரியங்களுக்கும் உயில் எழுதி வைத்தார். படேலின் மகள் மனிபென்னுக்கோ மகன் தயாபாய்க்கோ எதையும் தரவில்லை. படேல் தன் பாரிஸ்டர் அனுமதி கடிதத்தையே , விதல்பாய் தன் பெயரில் போய் படிக்க விட்டு கொடுத்தவர். விதல் குடும்பத்தை சுமந்தவர். விதல் உயிலால், நேதாஜியும் படேலும் நீதிமன்றத்தில் மோதிக்கொள்ளும் நிலையும் உருவானது. தொடர்ந்து அவர்கள் இருவரின் உறவும் கசப்பானது.

ஹரிபுரா மாநாட்டை ரூ 5000 செலவில் முடிப்பாயா என காந்தி படேலிடம் கேட்டார். படேல் விதேல் நினைவாக விதேல்பாய் நகரையே அழகுபட அக்கிராமத்தில் நிர்மாணித்தார். நேதாஜி தலைவர் என்பதால் அவருக்கான ரம்மியமான சூழல் நிறை வசதியை செய்துகொடுத்தார். காந்தி உட்பட அனைவருக்கும் குடில்கள் அமைத்தார். 1938ல் 5 லட்சம் செலவில் , அதுவரை எவரும் காணாத அளவிலான பெரும் ஏற்பாடுகளை செய்திருந்தார். பால் தயிர் நெய் என்பதற்காக 500க்கும் மேற்பட்ட பசுக்கள் பராமரிக்கப்பட்டன.சாலை அமைத்தல் தொடங்கி தந்தி அலுவலகம் , மருத்துவ மனை வரை அனைத்து வசதிகளும் செய்யப்பட்டன. புதிய நகரை தாகூரின்

தோழர்கள் உதவியுடன் அழகுற அமைத்தார் படேல். நேரு என்ன படேலின் ரம்மியம் என வியந்தார்.

நேரு காங்கிரஸ் தலைவராக வந்து, தான் 8 மாதமே இருந்ததால் மீண்டு ஓராண்டு வாய்ப்பு எனக் கேட்டபோது படேல் அதை நியாயமில்லை எனக் கருதினார். நேருவை சுற்றி எப்போதும் பெண்கள் இருப்பர் என்கிற பொது பேச்சு அப்போதுண்டு. சரோஜினி நாயுடு கூட ஒருமுறை கேலியாக பேசியுள்ளார். அப்பா நேரு , உன் குல்லாவை கழற்றி உன் வழுக்கையை கொஞ்சம் காண்பித்துவிடு, பிறகு பெண்கள் ஓடிவிடுவார்கள் என்று. நேருவிற்கு சரோஜினி மீது வாஞ்சையும் மதிப்பும் உண்டு. வேறு எவரும் அப்படி சொல்லியிருக்க முடியாது. படேல் நெருங்கிய நண்பரிடம், என்னய்யா நேரு தன் ஒரு மணமேடையிலேயே பல பெண்களை மணமுடித்துவிடுவார் போலிருக்கே என , அவர் தலைவர் பதவி விருப்பத்தை விமர்சித்தார்.

சோசலிஸ்ட்கள் படேலின் ‘நாக்கை’ தாங்காமல் காந்தியிடம் போய் புகார்கள் தருவதுண்டு. வெறும் பேச்சு பேசறவங்க எதற்கு காங்கிரஸ் செயற்குழுவில்- விவாதம் என்கிற பெயரில் செயல்படவே விடாதவர்கள் என்கிற எண்ணம் படேலுக்கு. அடுத்த வேலை சுதந்திரம் பற்றியதாக இருக்க அவர் விழைந்தார். உடோபிய பேச்சாக சோசலிசம் பேசியவர்களை அவர் பார்த்தார். என்ன வேலை செய்தீர்கள், ஏதாவது,எதற்கு இந்த பேச்சு என சாடுவார். மினு மசானி படேலை தாங்க முடியாமல் காந்தியிடம் போய் மூக்கால் அழுதார். அப்போது காந்தி சொன்ன வாக்கியங்கள் படேல் குணத்தை கச்சிதமாக சித்தரித்தன

“ Minu, Sardar has nothing in his heart against you. His tongue is thorny, his bark is worse than his bite”

ஹரிபுராவில் காந்தி சக தோழர்களிடத்தில் இதையும் அழுத்தமாக தெரிவித்தார்

“ Sardar and I are close to each other, we are as one, we work alike and we think alike”

காந்தி - படேல்- மகாதேவ தேசாய் மூவரும் எரவாடா சிறையில் சேர்ந்திருந்த மாதங்களில் அவர்களிடம் இருந்த கேலி கிண்டல் மகிழ்ச்சிக்கு அளவேயில்லை என்பதை மகாதேவ் டைரி சொல்லும். லூட்டி கட்டி அடித்துள்ளனர். இறுக்கமான படேல் அச்சிறைவாசத்தில், தன் நோய் நொடி, மகன் மகள் அனைத்தையும் மறந்து வாய்விட்டு சிரித்த 16 மாதங்கள் எனலாம்.

காந்தி படேல் நகைச்சுவைக்கு இப்படி உதாரணங்கள் உண்டு. பத்திரிகையாளர் ஒருவர் காந்திக்கு உங்க காலத்தில் போய் நாங்க வாழவேண்டியிருக்கெ என ரொம்ப அலுத்துக்கொண்டு கடிதம் எழுதியிருந்தார். என்ன பதில் எழுதலாம் என காந்தி கேட்க, அவனுக்கு பிடிக்கவில்லை என்றால் கொஞ்சம் விஷம் குடித்து சாகச் சொல்லலாம் என்றது படேல் நாக்கு. காந்தி எனக்கு விஷம் கொடுக்க சொல்லுங்க என்றார். ஏன் விடாது பாவம் அடுத்த ஜென்மத்தில் துரத்தவா. உங்களுக்கு அவன் விஷம் கொடுத்து நீங்க சாக, அவன் சிறைக்கு போய் மரணதண்டனை பெற்று உங்க பின்னாடியே வந்து அடுத்த ஜென்மத்திலும் வதைக்கவா எனக் கேட்க மூவரும் பெரும் சிரிப்பை வெளிப்படுத்தினர்.

சோடா உப்பு கொஞ்சம் சேர்த்து காந்தி சாப்பிடுவதை படேல் பார்த்தவர். பிரச்சனையின் போது என்ன செய்யலாம் என காந்தி கேட்க, கொஞ்சம் சோடா எல்லாம் சரியாகும் என படேல் சொல்ல மூவரும் சிரிப்பர். இப்படி சுவையாக ஏராள சிரிப்பு வெடிகளை கொளுத்தி மன நிம்மதியை படேல் தந்ததை காந்தி சீனிவாச சாஸ்திரிக்கு எழுதியுள்ளார்

Sardar is with me. His jokes make me laugh until I can laugh no more, not once but several times a day- no depression …

காந்தியிடம் வேறுபாடு இருந்தால் பளிச்சென சொல்லிவிடுவார் படேல். இறுதி முடிவை காந்தியிடம் விட்டுவிடுவார். ஏற்று உறுதியாக பின் தொடர்வார்.

காந்தி படேல் உறவு சகோதரத் தன்மை என்றால் , காந்தி நேரு தந்தை மகனாக இருந்ததெனலாம்.

Patel A tough man with a good pious heart என்றே எனக்குத் தோன்றுகிறது

- Inputs from Rajmohan Gandhi’s Patel A Life

12-5-2025

may 16

நார்மல்- நியு நார்மல்

எங்கு எவரொருவர் கடமையுடன் நேரம் காலம் பார்க்காது பணி புரிகிறாரோ அங்கு அவர் பலனை- டிவிடெண்ட் எதிர்பார்ப்பது 'நார்மல்' ஆகவே பார்க்கப்படுகிறது. அங்கு சற்று over claim இருந்தால் கூட , ஓகே நடக்கட்டும், enjoy என நினைத்து நகர்ந்து விடலாம்.

எங்கு எவரொருவர் எந்த உழைப்பையும் செய்யாமல் அங்கும் , ஏன் எங்கும் தன் 'ஸ்டேடஸ்' காட்டி பலன்- டிவிடெண்ட்களை எதிர்பார்ப்பது இக்கால 'நியு நார்மல்' என புரிந்துகொள்ளவேண்டும் போலிருக்கிறது

- தோழன் நமரி

(சிந்தூர் நியுநார்மல் உரைக்கும் இதற்கும் சம்பந்தம் உண்டு என எவராவது நினைத்தால் தோழர் நமரியோ நானோ பொறுப்பல்ல)

16-5-2025

may 17

Com Jagan 94 years- 95th Birthday

தோழர் குப்தா மிகவும் தளர்ந்த நிலையில் NFTE தமிழ்மாநில கட்டிட ஜெகன் இல்ல விழாவிற்கு 2011ல் வந்தார். வரும்போது, பெரும் கட்டாக Memory of Jagan - Marxism and Trade Union (Activities in Telecom Sector என்கிற 56 பக்க அளவிலான ரூ 30 விலைகொண்ட பிரசுரத்தையும் எடுத்து வந்தார்.

It was very unfortunate, that leaflet was not gone deep in various districts. விழா , அந்நூலை அமைதியாக்கி ஓரம் கட்டிவிட்டது.

தோழர் ஜெகன் தொலைத்தொடர்பு இலாகா பணியிலிருந்து ஓய்வுபெற்றபோது, ஜூன்1989 டெலிகாம் இதழில் ஜெகன் குறித்து தோழர் குப்தா 'Comrade Jagan A Crusader for uplifting' என்கிற பொருள்மிக்க கட்டுரையை எழுதியிருந்தார்.

லக்னோ பெடரல்கவுன்சிலின் போது , ஜூலை 1999ல் தோழர் குப்தாவின் எழுத்துக்களிலிருந்து Selected Ideas of OP Gupta என்ற நூலை (பட்டாபி) கொண்டுவந்தேன். அதில் தோழர் குப்தா ஜெகன் பற்றி எழுதிய எழுத்தும் இடம் பெற்றிருந்தது. கட்சித்தோழர்களிடம் உரையாட வந்திருந்த தோழர் ஏ பி பரதன் why not Selected Thoughts of O P Gupta எனக் கேட்டார்.

தமிழகத்தில் ஆர் கே ஜெயபால் முயற்சியால் அக்னி குஞ்சு என்கிற அற்புத நூல் ஒலிக்கதிர் வெளியீடாக வந்து பல தோழர்களிடம் சென்றது. தோழர் தமிழ்மணி தனது அயரா உழைப்பால் ஜெகன் குறித்து கொணர்ந்தார். ஜெகன் எழுதிய ஒலிக்கதிர் எழுத்துக்களை தொகுத்தளித்தார்.

தோழர் ஜெகனின் 50 ஆண்டுகள் பொதுவாழ்க்கையை , ஜெகனையும் பரிமளா ஜெகனையும் அழைத்து தஞ்சை தோழர்கள் கொண்டாடினர். டெலிலேபரில் ஜெகன் குறித்து கட்டுரை வரவேண்டும் என டெல்லியிலிருந்த தோழர் என்.கே (எஸ்டிஆர் தலைவர்) பேசினார். அனுப்பி வைத்தேன்.

டெலிலேபர் மார்ச் 2001 இதழில் தோழர் குப்தாவின் 80 ஆம் ஆண்டையொட்டி என்னால் எழுதப்பட்ட கட்டுரை ஒன்றும், நவம்பர் 2001 டெலிலேபரில் ஜெகனின் பொதுச்சேவை பொன்விழாவையொட்டி Jagan A Mass Leader with Moral Strings என்கிற எனது கட்டுரையையும் வந்தது.

தோழர் முத்தியாலு அவ்வப்போது ஜனசக்தியில் எழுதிய கட்டுரைகள் வெளிவந்தன.

தோழர் பால்சாமி மற்றும் திருச்சி தோழர்கள் பெருமுயற்சி எடுத்து , ஜெகன் குறித்த ஆவணப்படம், அவரது பேட்டியுடன் மிகச் சிறப்பாக கொணர்ந்தனர். தோழர் பால்சாமி அந்த வீடியோ காப்பிகளை செலவு செய்து தோழர்களிடம் கொண்டு சேர்த்தார்.

புகழ்வாய்ந்த எழுத்தாளர் முன்னாள் தொலைத்தொடர்பு ஊழியர் தோழர் ஜெயமோகன் குப்தா- ஜெகன் குறித்து எழுதியதும் ஏராள வாசகர் பரப்பை எட்டியது.

டெலிகாம் இயக்கத்தின் மூத்த தலைவர் ஆர்கே, மற்றும் சென்னை தொழிற்சங்கத் தலைவர் பாஸ்கர் ஜெகன் குறித்த சிறந்த சொற்பொழிவுகளை நிகழ்த்தியுள்ளனர்.

திருவாரூர் தோழர்கள் பாரதியார் , திருவிக, பாரதிதாசன்,ஜீவா ஆகியோருக்கு ஆண்டுதோறும் கூடி புகழ் பரப்பி வருகின்றனர். ஜெகன் சொன்னார் என்பதால் 30 ஆண்டுகளாக செய்துவருகின்றனர். தோழர் ஆர் ஆர் ஜெகன் நாளில் பல ஆண்டுகளாக முதியோர் இல்லங்களில் உணவு வழங்கி வருகிறார். குடந்தை தோழர்கள் அனாதை மற்றும் முதியோர் இல்லங்களுக்கு ஏராளம் செய்தனர். தோழர் ஆர் கே தனிப்பட்ட முயற்சியில் ஏராள குழந்தைகளை பராமரித்து வருகிறார். நான் அறியாமல் இன்னும் பல நடந்து வரலாம்.

ஆயிரக்கணக்கான தோழர்கள் நன்கொடையுடன் தான் முன்னர் இருந்த சங்கக் கட்டிடம் , புதிய ஜெகன் இல்லமாக எழுந்தது.

ஜெகனுடன் அன்றாடம் பழகிய நூற்றுக்கணக்கான தோழர்கள் தலைவர்கள் சமூக வலைதளங்களில் , மிகுந்த நேயத்துடன் , அவரது பெருமைகளை ஆளுமையை பண்புகளை போர்க்குணத்தை, மனிதநேயத்தை தொட்டுக்காட்டி எழுதிவருகின்றனர். இன்னும் நான் அறிந்திராமல் பலர் ஜெகன் பற்றி ஏராளம் ஏதாவது சொல்லிக்கொண்டிருக்கலாம் . இரத்ததான முகாம்கள் நடந்தன. ஜெகன் இலக்கிய கிடங்கு என corpus உருவாகும் அளவிற்கு தொழிற்சங்க தோழர்களின் இதயங்களில் தன் புன்னகையுடன் ஜெகன்…

9 hrs 17-5-2025

may 18

படேல் 150 - பதிவு 3

படேல் 150 ஆம் ஆண்டையொற்றி ஏப்ரல் 23 மற்றும் மே 12 நாட்களில் இரு பதிவுகளை செய்திருந்தேன்.

அக்டோபர் 31 சர்தார் பிறந்த நாளாக அவர் வைத்துக்கொண்ட தேதி. காந்தியிடம் சர்தார் பிறந்த நாள் என்கின்றனர். காந்தி பிறந்த நாள் செய்தியை எப்படி அனுப்புகிறார் பாருங்கள்

Bhai Vallabhai, I hear it is your birthday…Remember we are not to go until we have attained Swaraj.

1935 இந்திய சட்டப்படி, 1937 தேர்தலில் மாகாணங்களில் ஆட்சிக்கு வந்த காங்கிரஸ் செயல்பாடுகளை மிக கவனத்துடன் படேல் 'மானிட்டர் ' செய்கிறார் என்பதை உணரும் வகையில் படேல் அவ்வப்போது தன் நல்லுரைகளை வழங்கி வந்தார். காங்கிரசின் மாவட்ட அளவு கேடர்கள் கூட, தங்களின் சொந்த நிதி- உடல்நலம் உள்ளிட்ட பிரச்சனைகளில் கவனம் செலுத்தக்கூடியவர் படேல் என்பதை உணர்ந்தவர்களாக இருந்தனர்.

பம்பாயில் படேல் இருக்கும் போதெல்லாம், விடியற்காலை நடைப்பயிற்சி நண்பர்கள் பலர் சேர்வர். வால்சந்த், பிர்லா போன்றவரும், நாட்டு பிரச்சனைகளை படேலுடன் கூட சென்று விவாதிப்பர். பர்தோலிக்கு காந்தி வரும்போதெல்லாம், படேல் அனுப்பும் செய்தியால் வால்சந்த் வேண்டிய உதவிகளை செய்து வந்தார். ஒரு முறை காந்தி இருந்தபோது , வால்சந்த் உள்ளிட்ட வேறு சிலரும் பர்தோலி வந்தனர். படேல் அனைவரையும் நன்றாக உபசரிக்கும் ஏற்பாட்டை உத்தம்சந்த் ஷாவிடம் கொடுத்திருந்தார்.

காந்திக்கு வழக்கம் போல் அவர் ஏற்கக்கூடிய ஏற்பாடுதான் . மற்றவர்க்கு விதவித உணவு ஏற்பாடுகள் இருந்ததை பார்த்த காந்தி, ஷா என்ன 'ரெஸ்டாரண்ட்டா' என்றார். அருகில் வந்து ஷா, பாபுஜி இங்கு நீங்கள் விருந்தாளி- உங்களை கவனிப்பது போல் வந்துள்ள மற்ற விருந்தாளிகளை கவனிக்க வேண்டும் என்று 'மானேஜராகிய' என்னிடம் சர்தார் சொல்லியுள்ளார். சரி என காந்தி சிரித்துக்கொண்டே அந்த பேச்சை விட்டுவிட்டாராம்.

இரண்டாம் உலகப்போரில், இந்தியர் எவரையும் கேட்காமல் இந்தியாவும் போரில் என்று வைஸ்ராய் அறிவித்தது காங்கிரஸ் தலைவர்களிடம் கோபத்தை கிளறியது. 1940 ஏப்ரலில் 'திரள் சத்தியாகிரகம்' என நேரு கோரியதை, காந்தி சற்று பொறு எனச்

சொல்லி நிதானப்படுத்தினார். காந்திக்கு இந்து முஸ்லீம் பிரச்சனை என்பதை தவிர்த்து, எதையும் சிந்திக்கக் கூடாது என்கிற எண்ணமிருந்தது. படேல் மாறுபட்டார். பிகார் முஸ்லீம் தலைவர்களோ, ஜின்னாவோ காங்கிரஸ் அரசாங்கங்கள் மீது வைத்த முஸ்லீம் விரோத குற்றச்சாட்டுகளில் உண்மையில்லை என படேல், தன் தரப்பு தகவல்களில் பதில் அளித்தார். நேரு சொன்ன mass satyagraha முடியாது என்பதை படேல் ஏற்றாலும், disciplined disobedience by carefully chosen individuals என்கிற முன்மொழிவை படேல் வைத்தார். பின்னர் வினோபாஜி வைத்து காந்தி தொடங்கியதை பார்த்தோம்.

ராஜாஜியிடம் நடைமுறை யதார்த்தம் சார்ந்த கருத்து வலுவாக இருந்தது. பிரிட்டிஷாருடன் 'யுத்த அணியாக' தோழமை உறவை காங்கிரஸ் ஏற்படுத்திக்கொண்டு, போருக்கு பின் விடுதலை என்ற உத்தரவாதத்தை பெற முயற்சிப்போம் என ராஜாஜி வற்புறுத்தி வந்தார். காந்தியின் அகிம்சை இதற்கு இடம் கொடுக்கவில்லை. படேலை ராஜாஜி ஏற்கச் செய்துவிட்டார். சோசலிஸ்ட்கள் கடுமையாக எதிர்த்தனர். 1940 ஜூன் காங்கிரஸ் செயற்குழுவில் , இது பெரும் விவாதமானது.

படேல் , காந்தியிடம் இந்த மாதிரி போர் விஷயங்களில் நாம் அகிம்சையை சொல்லிக்கொண்டிருக்க முடியாதென்றார். உத்தரவு என்றால், வாயை செயற்குழுவில் மூடிக்கொள்கிறேன் எனவும் படேல் தெரிவித்தார். காந்தி எதையும் மனதை பொய்யாக்கி செய்வது கூடாது என நினைப்பவர். தங்களுக்கு சரி எனப்பட்டதை செய்யுங்கள் எனச் சொல்லிவிட்டார்.

ராஜாஜியின் சாதுர்யத்தில் முதலில் சாய்ந்தவர் ஆசாத், அடுத்து தான் படேல். ராஜாஜி ஆலோசனையை எதிர்த்து நேரு, கிருபளானி, காபர்கான் போன்றவர் வாக்களித்தனர். ஆனாலும் ஸ்தாபனம் என வந்தால், அது படேல் முகத்தையே பார்க்கும். பின்னர் நடந்த AICCயில் நேரு, புதிய யுத்த நிலைமைகளை உற்றுக் கவனித்து ஆதரித்து வாக்களிக்கவும் செய்தார்.

படேலுக்கோ, காந்திக்கு எதிராக போய் பகிரங்கமாக நின்று விட்டோமே என்கிற பெரும் பாரம் தொந்தரவானது. காந்திக்கும், ராஜாஜி ஆசாத்தை கொண்டு சென்றதைவிட - படேலை சாய்த்தது ஆச்சர்யமானது.காந்தி உதிர்த்த வாக்கியம் Sardar was his greatest prize. மகாதேவிடம் மட்டும் அடிக்கடி கூப்பிட்டு, அந்தக் கிழம் என்ன சொல்லுது என உரிமையுடன் படேல் கேட்டு வந்தார். கருத்து

வேறுபாட்டால், இதயங்கள் பிரியாது. படேல் உணர்வர், என்னிடம் வருவார் எனச் சொன்னதாக மகாதேவ் சொன்னது படேலுக்கு ஆறுதல்.

காந்தியுடன் வேறுபாடா என்கிற கேள்வி வந்தபோது, பூசி மொழுக கற்காத படேல், ஆமாம் என்றே சொன்னார். நான் நினைப்பது தவறு என உணரும் சூழல் வந்தால் , மிக மகிழ்ச்சி அடைவேன் எனவும் பதில் சொன்னார். காந்தி சொல்வதை பாருங்கள்.. எவ்வளவு அழகான கண்ணியமான மதிப்பீட்டை காந்தி தருகிறார்

All honour to the Sardar for holding fast to his convictions. Sardar is no man of words. He is a man of action. He does not look around or about himself when he has decided upon a course of action. He simply goes ahead . May he be always thus.

காந்தி நினைத்தது போலவே, வைஸ்ராயோ பிரிட்டிஷோ எந்த தாரள வாக்குறுதியையும் தரத்தயாராக இல்லை. வைஸ்ராய் குழு உறுப்பினர்களை அதிகப்படுத்தலாம்- அது கூட காங்- லீக்- சம்ஸ்தானங்கள் உடன்பட்டு ஒன்றாக நின்றால் என பொடி வைத்து பேசினர். படேல் நிலைமையை உணர்ந்தார். ராஜாஜி கூட உணரவேண்டியதானது. தன் முதுகில் தொங்கும் பெரும் பாரம் போனதாக படேல் கருதினார். நெக்குருக காந்தியிடம்

It shall never happen in our life time எனச் சொன்னார். அதாவது நம்மிடம் இனி வேறுபாடு எப்போதும் இருக்காது என்ற பொருளில்…

1941ல் தனிநபர் சத்தியாகிரகத்தை படேல் சூசகமாக எனது ‘கணேச பூஜை’ அகமாபாதில் நவம்பர் 18 என அறிவித்தார். ஆனால் நவம்பர் 17 அன்றே அவர் மீண்டு எரவாடா சிறைக்கு அனுப்பப்பட்டார். இம்முறை 9 மாத சிறைக்காலத்தில் 20 பவுண்ட் குறைந்து பெரும் உடல் உபாதைகளுக்கும் உள்ளானார். புலாபாய், கேர், மொரார்ஜி, மாவ்லங்கர், முன்ஷி போன்றோருக்கும், வேறு கைதிகளுக்கும் தேநீர் தயாரித்து படேல் கொடுத்ததை , அத்தோழர்கள் நன்றியுடன் தெரிவித்துள்ளனர்.

முன்ஷி படுத்த படுக்கையாக சிறையிலிருந்து சிகிட்சைக்கு தூக்கி செல்லப்படோது, படேல் கண்களின் கசிவைப் பார்த்து, இந்த வைராக்கிய மனமா இப்படி மென்மையை வெளிப்படுத்தியது என முன்ஷி தன் பதிவில் சொல்லியுள்ளார்.

படேலுக்கு மிக நெருக்கமான சபர்மதி முஸ்லீம் நண்பர் குலாம் ரசூல் குரேஷிக்கு தன் உடல் நலம் குறித்து கவலை கொள்ளாதே- ஈஸ்வரும்

அல்லாவும் நம் முடிக்க வேண்டிய செயல்கள்வரை துணை நிற்பார்கள் என படேல் எழுதினார்.

படேலுக்கு சற்று ஆறுதல் என்னவெனில், புனே ஒப்பந்தம் போது காந்தி படுத்திருந்த அதே கட்டில் கிடைத்ததும், அதே மாமரத்தடியில் அவரால் அக்கட்டிலில் படுத்து வானவெளியை, வாழ்க்கை ஓட்டங்களை, காந்தியுடன் அங்கு இருந்த கணங்களை நினைத்து பார்ப்பதாகவும் அமைந்ததுதான். இந்த 'புனித இடத்திற்கே' அனுப்பியதற்கு கடவுளுக்கு நன்றி என படேல் சொல்லலானார்.

காந்தி படேலிடம் உருது கற்றுக்கொள் என்றார். படேலுக்கு வயது 66. படேல் காந்தி குறும்புகள் பல. படேல் பதிலைப் பாருங்கள். காந்தி நீங்க உருது கற்றதால் என்ன நடந்துவிட்டது..அதிகம் கற்க கற்க உருது பேச அவர்கள் உங்களிடமிருந்து ஓடுகிறார்கள். நீங்க சொல்லிட்டீங்க, நான் முயற்சிக்கிறேன். ஆனால் 66வயது உடம்பு கிறீச் சத்தம் அதிகம் போடுகிறது. இன்னும் இந்த உடம்பான earthen vesselல் அள்ள முடியுமா எனப் பார்க்கிறேன் என்றார்.. எவ்வளவு அழகாக நொந்த விஷயங்களையும் அவர்கள் பேசிக்கொள்கிறார்கள்.

குடும்பத்தில் மகள் மனிபென் தனியாக சிறையில். மகனின் மனைவி இறந்து , தயாபாய் அடுத்த திருமணம். பேரக்குழந்தைகளின் உடல்நிலை போராட்டங்கள், படேலால் உடன் இருந்து ஏதும் செய்யமுடியா சூழல்.

மனிபென் எப்போதும் படேலுடன் இருந்து தன் வாழ்க்கையை தந்தையின் சேவைக்காக அர்ப்பணிக்கத் தொடங்கினார். நேரத்தை,உடைகளை, உணவை அவர்தான் கவனித்து பார்த்தார். படேல் உடல்நலத்திற்கு உகந்த சூழலுக்காக மனிபென் தனித்து போராடினார். சற்று கறாராக நடந்து கொள்கிறார் என்கிற அவப்பெயர்கூட சில நேரங்களில் பெற்றார். காந்திக்கு மகாதேவ் அளவிற்கு, பியாரிலால்கூட வரமுடியவில்லை. படேலுக்கு மகாதேவ், பியாரிலால் சாயலில் கொஞ்சம் மனிபென் இருந்தார் எனச் சொல்ல முடியும்.

சோசலிஸ்ட் எழுத்தாளர் பீட் ரிஸ் வெப் , நேரு மிகவும் வசீகரமானவர். அந்த அளவிற்கு ஆற்றல் மிக்கவராக, ஆழமிக்கவராக என்னால் உணரமுடியவில்லை என 1938ல் சொல்லியிருந்தார். நேருவுடன் உரையாடிய பின் பெண்மணி வெப் அவர்களுக்கு ஏற்பட்ட மதிப்பீடு

I doubt whether he has the hard stuff of a revolutionary.

படேலோ சிறிய அளவு கூட வசீகரம் இல்லாதவர். குஜராத்தின் விவசாயி உடல் முக அமைப்பு. ஆனால் அவரின் ஆற்றலோ மிக அதிகம் - force rather than charm என அவரை அவர் காலத்தவர் உணர்ந்தனர்.

ஜனவரி 15, 1942 காந்தி ஓர் அறிவிப்பை காங்கிரஸ் மாநாட்டில் செய்தார். எனக்கும் நேருவிற்கும் கருத்து வேறுபாடுகள் நாங்கள் பார்த்தா நாளிலிருந்தே உண்டு. இருந்தாலும் நேரு தான் என் வாரிசு, ராஜாஜி அல்ல, சர்தார் படேல் அல்ல. தண்ணீரை தடிகொண்டு தாக்கி பிரித்துவிட முடியாது. எங்களை பிரிப்பது மிகவும் கடினம். நான் மறைந்த பின்னர், எனது மொழியை அவர் பேசுவார்.

'படேல் அல்ல வாரிசு' என்கிற வரியை காந்தி உதிக்கும்போது, படேலுக்கு நிச்சயம் சில நொடிகளாவது வலித்திருக்கலாம்.ஆனால் அப்படி காந்தி சொல்லிவிட்டாரே என அவர் மனதை சிந்தையை அழுக்காக்கிக் கொள்ளவில்லை. தொடர்ந்து தான் எடுத்துக்கொண்ட, அல்லது தரப்பட்ட பணிகளில் கவனம் செலுத்தினார். இதற்கு பெரும் பக்குவப்பட்ட மனம் வேண்டும்.

எவ்வளவோ அமைப்புகளில் தனக்கு தகுதியிருந்தும் தன் பெயரை ஏன் சொல்லவில்லை என மனதை புண்ணாக்கி, வஞ்சினம்கொள்வோர்கள் ஏராளம். அவமரியாதை செய்வோரும் உண்டு. படேலோ அதை உள்வாங்கி சமாளித்துக்கொண்டார். இது குறித்து மனிபென் ஏதும் ஏனோ பேசவில்லை.

ராஜ்மோகன் காந்தி ஏன் நேருவை வாரிசு என காந்தி சொன்னார் என்று தன் ஊகங்களை வைக்கிறார்.

காந்தி வாரிசு பற்றி பேசியபோது படேலுக்கு வயது 66. நேரு 52ல்.

இளைஞர்களின் வசீகர நாயகன் நேரு

உலக நாடுகளின் கவனத்தை, பிரிட்டிஷ் ஆட்சியாளர்களின் கவனத்தை ஈர்த்தவர் நேரு

படேல் ஆரோக்கியம் நன்றாக இல்லை. நேரு உடல் ஆரோக்கியத்துடன் இருப்பவர்

நேருவை முன் வைப்பது அதிக பலனைத்தரும். நேருவுடன் ஆலோசகர்களாக படேல், ராஜாஜி, ஆசாத், பிரசாத், ஜேபி போன்றவர் நிற்பது பலத்தைத் தரும்.

ராஜ்மோகன் வரியில் Gandhi knew that Patel was there to supply corrective to Jawahar who would be primus inter pares not the sole guide.

இங்கு ஒன்றை நினைவிற்கு கொண்டுவரலாம். காந்தி 1937 லேயே படேல் குறித்து இவ்வாறு நரிமனுக்கு எழுதியிருந்தார்.

The Sardar has no parliamentary ambition. He has no ambition for leadership either. Nature has endowed him certain qualities and he uses them. You won’t find him complaining if he loses hold on the populace.

எவ்வளவு அற்புதமான கச்சிதமாக படேலை காந்தி படம் பிடித்து தந்துள்ளார். வியக்காமல் இருக்க முடியவில்லை.

அழுத்தமான, மன சுத்தம் கொண்ட, வெளிப்படையான அதே நேரத்தில் எவரே ஆனாலும் தாட்சண்யம் பார்க்கா பெரிய மனிதர் படேல் என உணரலாம்

-Inputs Patel A Life Rajmohan Gandhi

18-5-2025

may 18

மார்க்சும் புத்தகங்களும்

மார்க்ஸின் நூலகத்தில் 2000 நூல்கள் இருந்ததாம். மிக அதிக அளவில் ஜெர்மனி, ஆங்கில (1/3 1/3) நூல்கள் இருந்தன. அதற்கு சற்றுக் குறைவாக பிரஞ்சு நூல்களும், சில சிரில்லிக் எழுத்து வகை ரஷ்ய நூல்களும் இருந்தனவாம். அரசியல் கோட்பாடு, வரலாற்று ஆய்வுகள், தத்துவ நூல்கள், இயற்கை அறிவியல் என பல வகைப்பட்ட நூல்கள் இருந்தனவாம்.

1878ல் அவரது படிப்பறையை பார்த்த சிக்காகோ ட்ரிப்யூன் நிருபர் இவ்வாறு எழுதியுள்ளார்

“ ஒரு மனிதரை அவர் படிக்கும் புத்தகங்களைக்கொண்டு பொதுவாக மதிப்பிட முடியும். எனது மேலோட்டமான பார்வைக்கு ஷேக்ஸ்பியர், டிக்கன்ஸ், தாக்கரே, கெதே, வால்டைர், பெய்ன் ஆகியோரின் நூல்கள் தென்பட்டன. ஆங்கில, அமெரிக்க, பிரஞ்சு நூல்கள், புளூ புக்ஸ்- (நீலப் புத்தக ஆவணங்கள்) , ரஷிய, ஜெர்மன், ஸ்பானிய, இத்தாலிய இன்னும் பல மொழிகளில் எழுதப்பட்ட அரசியல், தத்துவ நூல்கள் காணப்பட்டன ”

லபார்க் அவர்கள் மார்க்சிற்கும் புத்தகங்களுக்குமான உறவை இவ்வாறு வெளிப்படுத்தியுள்ளார்

“ புத்தகங்கள் அவரது சிந்தனைக்கான கருவிகளேயன்றி, ஆடம்பர பொருட்கள் அல்ல. அவை என் அடிமைகள், நான் விரும்பும் அளவிற்கு அவை எனக்கு சேவை புரியவேண்டும் என மார்க்ஸ் சொல்வார். அவர் புத்தகப் பக்க முனைகளை மடித்து வைப்பார். பக்க ஓரங்களில் பென்சிலால் கோடிட்டு சம்பந்தப்பட்ட வரிகளை குறித்து வைப்பார். சில வரிகள் முழுமைக்கும் அடிக்கோடு இடுவார். புத்தகங்களில் அவர் எதையும் எழுத மாட்டார். சம்பந்தப்பட்ட நூலின் ஆசிரியர் தாம் சொல்ல வந்த விஷயத்தில் மட்டுமீறிப் போய்விட்டதைக் கண்டால் அந்த இடத்தில் கேள்விக்குறியையோ ஆச்சரியக்குறியையோ இடாமல் அவரால் இருக்க முடியாது. அடிக்கோடிடும் முறையை அவர் கையாண்டதால் , எந்த நூலிலும் தமக்கு தேவையான பகுதியை அவரால் எளிதாக கண்டறிய முடிந்தது ”

மார்க்ஸ் லபார்க்கிற்கு எழுதிய ஏப் 11, 1868 விளக்கம் ஒன்றில் இவ்வாறு தன்னைப் பற்றி சொல்கிறார்

“ புத்தகங்களை விழுங்கி, பின்னர் மாற்றப்பட்ட வடிவத்தில் அவற்றை வரலாற்றின் குப்பை மேட்டில் தூக்கியெறிகின்ற இயந்திரமாக இருக்கும்படி நான் விதிக்கப்பட்டுள்ளேன் ”

மார்க்ஸின் படிப்பறையில் சோபா ஒன்றிருந்தது. அவ்வப்போது அதில் அவர் ஓய்வு எடுப்பார். ஓய்விற்கு மற்றொரு முறை அறையில் நடந்து கொண்டிருப்பது. திடிரென வந்த சிந்தனையை எழுத அமர்வார்.

லபார்க் எழுதுகிறார்- மார்க்சும் அவரது படிப்பறையும் ஒன்று பட்டிருந்தன. அதிலிருந்த புத்தகங்களும் காகிதங்களும் அவரது கைகால்களைப் போலவே அவரது கட்டுப்பாட்டுக்குள் அடங்கியிருந்தன

inputs Marcello Musto

may 19

My world has gone

Yours Dawn

Dust in my Drawings

Lost its fixings and holders

Your sketches visible

Desire to reign

May be the same world

Perceptions differ

Beyond right or wrong

Dictionary is old

Add or subtract

Makes no difference

Touches may feel its smile

Adieu to all mine

Wishes to all yours

- com Namari

19-5-2025

may 22

இந்திய இடதுசாரிகள் தொடர்ந்து இந்திய நக்சல் இயக்க மாவோயிஸ்ட் தோழர்களுடன் சித்தாந்த மற்றும் அரசியல் விவாதங்களை கூர்மைப்படுத்த வேண்டிய அவசியம் அதிகரித்துள்ளது.

ஆரம்ப நாட்களில் தோழர்கள் மொகித்சென், பிரகாஷ் காரத் போன்றவர்கள் ஓரளவு இந்த விவாத கிடங்கிற்கு உதவினர். தோழர் வினோத் மிஸ்ரா தொடங்கி, இன்று திபங்கர் பட்டாசார்யா போன்றவர் CPI- CPM உடன் CPML தோழர்களும் அரசியல் திசையை முன்னெடுக்க முடியும் எனக் காட்டி வருகின்றனர். லிபரேஷன் தோழர்கள் முடிந்த அளவு , மற்ற குழுக்களுடன் விவாத பரப்பை முன் எடுத்தனர்.

அரசாங்க தாக்குதல் தீவிரப்படுத்தப்பட்டுள்ள நிலையில், பொறுப்பான பல தோழர்களின் உயிர்ப்பலிகள் கவலையளிக்கின்றன. எவ்வளவு உயர்வான வேலையை, புனிதக் கடமையை அத்தோழர்கள் செய்வதாக நினைத்து சகல தியாகங்களுக்கும் தங்களை முன் நிறுத்திக்கொண்டாலும், ஆயுத வழி- வன்முறை தாக்குதலுக்கு, இந்தியா போன்ற நாட்டில் கோடானு கோடி மக்களின் ஆதரவை பெறமுடியாது என்றே தோன்றுகிறது.

ஆயுத வழி விடுதலைப் போராக - சோசலிச யுத்தமாக அவர்கள் ஆங்காங்கே சிறு குழுக்களாக- பிரதேச அல்லது பகுதிவாரி மக்கள் ஆதரவை பெற்றதாகக் கருதினாலும், அவ்வழி நீடித்த நிலைத்த போர்- annihilation பெரும் பாதிப்புக்களையே இதுவரை தந்துள்ளதாகத் தோன்றுகிறது.

நக்சல் இயக்கம் பிறந்து 50 ஆண்டுகளுக்கு மேலான அதன் முன்னோடிகளின் சாரு- கனு சன்யால்- நாகி - கொண்டப்பள்ளி போன்ற பலரின் தியாக வாழ்க்கை, அவ்வியக்கத்தின் பாதைதனை மறுபரிசீலனை செய்ய வேண்டிய தருணம் அதிகரித்து வருகிறது என்றே தோன்றுகிறது.

காடு மலைகளில் , இந்திய மக்களின் பெருங்கனவை சுமந்துகொண்டு, சொந்த வாழ்க்கைக்கான சுகங்களை முற்றிலும் தியாகம் செய்து, ஆயுத வழியே என்கிற பாதையை அவர்கள் தேர்ந்தெடுத்ததை, சௌகரியமாக உட்கார்ந்துகொண்டு என் போன்றவர் விமர்சிக்க முடியாது என நான் உணர்கிறேன்.

கொஞ்சம் மார்க்சிய இலக்கியங்களை, இயக்கங்களை கவனித்து வருபவன் என்கிற வகையில், இந்தியாவில் 56 ஆண்டுகள் நக்சல் இயக்கம் என்பது நீண்ட காதைதான்…ஆனாலும் ஏராள இளைஞர்களை காவு கொடுத்த பாதையாக இருக்கிறதே என்கிற அரசியல் கவலைகள், சொல்ல வேண்டியுள்ளது.

அரசாங்கமும் அவர்களை அழித்தொழிப்பது என்பதை பிரதானப்படுத்தாமல், சில முக்கிய குழுக்களுடனாவது , கோரிக்கைகள்- தீர்வுகள் என வெளிப்படையாக பேச்சு வார்த்தை நடத்துவது நல்லது. அரசாங்கத்தால் உணரமுடியா, மக்களின் வேதனையை, மொழியை இத்தோழர்கள் ஆங்காங்கே வெளிப்படுத்தி வருகின்றனர் என்கிற புரிதல் அரசாங்கத்திற்கும்- அதிகார வர்க்கத்திற்கும், போலீசாருக்கும் இருப்பது நலம் பயக்கும்.

போராடக்கூடியவர்களும் அந்நிய நாட்டவர் அல்லர். பாதை சரியில்லை என அரசாங்கம் கருதினாலும், அவர்களுடன் தொடர்புகொண்ட அறிவுஜீவிகள்- அரசியல் தலைவர்கள் ஆளுமை கொண்டவர்களை மீடியேட்டர்களாகக் கொண்டு பேச்சுவார்த்தை நடத்துவது நல்லது. அர்பன் நக்சல் என்ற விமர்சனங்களை சுமப்பவர்களே இதற்கு உதவக்கூடியவர்களாக இருப்பர்.

இடது சாரிகள் தொடர்ந்து ideological debate யையும் மேற்கொள்வதும் அவசியமாக தோன்றுகிறது.

22-5-2025

may 23

NJCM SC 63rd Meeting dated Ap 23, 2025

The Standing Committee of NJCM held on Ap 23, 2025, admitting an item regarding BSNL absorbed pensioners is really a welcome step.

we have to thank the leaders of NJCM com Shiv Gopal Mishra and com C. SriKumar for not only making it an item admitted, also for bringing a good discussion on that item and getting the reply for that item.

"Item no. 18/SC/63/25 Revision of Pension for BSNL pensioners (DOT)

on the insistence of the staff side that the Department of Telecom may reconsider the matter since the affected persons are pensioners in the age of 70 plus and 80 plus etc. Department of Telecom explained that at present the matter is sub judice. it was decided to wait for the outcome of the case."

I do not know the entire discussion on that issue verbatim between staff side and Official side, I find no negativity in the given minutes. Though 70 plus or 80 plus may not be the main qualification for one to get pension revision, it reflects the tendency of expressing the felt urgency to find some solution. So the advise to DOT to reconsider the matter.

This minutes is issued by the DOPT, the department which advises all the ministries regarding the court cases and what to do when the judgment goes against the existing policy of the Government. That DOPT is telling DOT to reconsider the matter. One can also see some other nodal ministries like DOPPW and DOE officials were also participated with DOT DDG.

DOT DDG did her role, playing her part by telling the wage revision role in pension revision and the existing court case at Delhi HC and so the minutes also reflected that sub judice matter.

The positive side is no one objected that why BSNL PSU retirees matter is taken in NJCM item.

Though the minutes does not speak explicitly about the mode of pension revision, the discussion was on the background of CAT and CCS Pension rules (Inputs from com SriKumar)

one has to appreciate the grand efforts that the leadership of AIBSNLPWA, its team of GS and com R S N Murthy, staying at Delhi meeting secretary DOPT, Secretary DOPPW and other higher officials. Their efforts were also there in meeting FM at Visak . At Delhi they met NJCM staff side Secretary com Shiv Gopal also . All these efforts helped to bring the item to NJCM. Thanks to all leaders for their good work .

I do not want to stretch the minutes beyond factual inputs, as if things are settled in favour of CPC route. As the minutes reports, one has to wait for the outcome of the Delhi HC case.

If DOT is also in a position to reconsider the matter of pension revision taking the minutes in all its spirit, then hurdles would be less to realise the demand of pension revision.

Post 2016/ Post 2017 is the connecting issue that still stands on the question of pension revision as per CPC/ PRC. The pay matrix/ Pay scales are still a matter standing on this issue.

Life is nothing but hope only. Let us hope, the efforts of all the leaders , striving pension revision of BSNL absorbed bear fruit .

11 hrs 23-5-2025 R. Pattabiraman

may 23

மார்க்ஸ் மார்க்சியர் தொடர்பான எனது 7வது நூல் . அவ்வப்போது எழுதி உள்ளுறைந்த உழைப்பை சேகரித்து மின் நூலாக்கி கொடுத்துள்ளேன். 40 க்கும் மேற்பட்ட கட்டுரைகள் இதில் இடம் பெற்றுள்ளன. பெரிதாக ஒன்றும் இல்லையெனினும். மார்க்ஸ் மார்க்சியர் குறித்து வாசிக்க விரும்புவர்க்கு உரையாடலை பெருக்கும் செய்திகள் கிடைக்கும் என நம்புகிறேன். எவருக்காவது பயன் எனில் , அதுவே உழைப்பிற்கான சன்மானம். ஆர்வம் உள்ளவர் இணைப்பில் நூலை தரவிறக்கம் செய்யலாம்.

அட்டைப்படம் சாட்ஜிபிடி உபயம். ஏ அய்யால் தமிழ் எழுத்துக்களில் தரமுடியவில்லை போலும்..

முன்னுரையை தந்துள்ளேன்

முன்னுரை அல்லது மார்க்ஸ் வாசிப்பு

கார்ல் மார்க்ஸ் உடன் கடந்த 45 ஆண்டுகளாக ஏதோ ஒருவகையில் எனது பயணம் நடந்திருக்கிறது. புத்தகங்கள், சர்வதேச இதழ்கள், இந்திய இதழ்கள், மாநில பத்திரிகைகள், மார்க்சியர் உரைகள் என இந்தப் பயணம் என்னை அழைத்துச் சென்றுள்ளது.

இடைவெளியே இல்லாமல் இது நடந்துவிட்டது எனச் சொல்லமுடியாது. அவ்வப்போது இடைவெளிகள்..ஆனால் அவை சில நாட்கள், சில வாரங்கள் என்ற அளவிலேயே இருந்திருக்கும். மாதக்கணக்கில் மார்க்சிடம் செல்லவில்லை என்ற நிலை இருந்திருக்காது. ஏதோ ஒரு article என்றாவது தொடர்பு இருந்திருக்கும்.

ஏராள பக்கங்கள் (Marx corpus எனப்பார்க்கும்போது இது மிகக்குறைவானதே) அவ்வப்போது இந்த ஆண்டுகளில் என் கண் வழி மிதந்திருக்கும். புரிந்தும் புரியாமலும் வரிகளை விழிகள் நகர்த்திருக்கும். சில நேரங்களில் உச்ச concentration உடனும் பல நேரங்களில் எண்ண அலை பாய்தல் கணங்களாகவும் அவை கடந்து போயிருக்கும். படித்தவை பல நினைவில் நீங்காமல் அமரவில்லை. சில புத்தகங்கள் திரும்ப படிக்கலாம் என்ற எண்ணத்தை உருவாக்கியிருக்கும். படிக்கவும் வாய்ப்பு இருந்திருக்கும்.

கீழ்கண்ட சில புத்தகங்கள் மார்க்ஸ் குறித்த கம்யூனிஸ்ட் கட்சிகளின் மதிப்பீட்டிற்கு அப்பாற்பட்டு, ஆய்வாளர்களின் ஆய்வுப்புரிதலில் வந்தவையாக எனக்குத் தோன்றும். அங்கு வெறும் ஆராதனைகள் எனும் hagiography முறை இருக்காது. மார்க்சின் பெருமிதங்கள் ,

சிந்தனை உயர்வு குறித்த மதிப்பிடல்கள் நடத்தப்பட்டிருக்கும். அந்த அந்த ஆசிரியர் உணரும் குறைகள் சில சொல்லப்பட்டிருக்கும். கேலி பேச்சுக்கள் இருக்காது. அப்படியான நான் வாசித்த சில புத்தகங்களை இங்கு தந்துள்ளேன்.

மார்க்சை முன்முடிவின்றி நேர்மையாக புரிந்துகொள்ள விழையும் எவருக்கும் இக்குறிப்புகள் உதவக்கூடும் எனக் கருதுகிறேன். நான் வாசித்த சில புத்தகங்கள் கடந்த 110 ஆண்டுகள் இடைவெளியில் வந்தவை. புதிய புதிய தகவல்களுடன் பெரும் உழைப்பை நல்கி வந்தவையாக எனக்குப்படுகின்ற புத்தகங்கள் இவை. தமிழிலும் சில புத்தகங்கள் உள்ளன. சாமிநாத சர்மாவின் மார்க்ஸ் இன்றும் சிறப்பான நூலாகவே இருக்கிறது.

Frans Mehring - The story of Karl Marx (1914ல் எழுதப்பட்டது)

Otto Rhule - Karl Marx his life and works

David Riazanov- Marx Engels An Introduction

Isaiah Berlin - Karl Marx

Max Beer- Karl Marx

Peter Worsely- Marx and Marxism (பிரமிள் மொழிபெயர்ப்பில் தமிழில் வந்துள்ளது)

Peter Singer- Marx A very short introduction

Harold Laski - Karl Marx an essay

David McClellan- Karl Marx His Life

Francis Wheen - Karl Marx

Gregory claeys- Marx and Marxism

Jonathan Spencer- Karl Marx A Nineteenth century life

Meghnad Desai- Marx’s Revenge

Gareth Stedman Jones- Karl Marx Greatness and Illusion (2017ல் வந்தது)

சாமிநாத சர்மா - கார்ல் மார்க்ஸ் (பெர்லின் மற்றும் ஹரால்ட் லாஸ்கி தழுவல் எனலாம்)

மார்க்ஸ் பிறந்தார் ஹென்றி வோல்காவ்

அப்பாத்துரையாரின் மார்க்ஸ்

சாமி சிதம்பரனாரின் மார்க்ஸ்

மார்க்ஸ் எங்கெல்ஸ் குறித்த நினைவுகள்

கடந்த சில மாதங்களில்/ ஆண்டுகளில் அவ்வப்போது முகநூலில் எழுதியவற்றில் மீட்க முடிந்த சில இடுகைகளை/ குறிப்புகளை இங்கு தொகுத்து தந்துள்ளேன். மேலே குறிப்பிட்ட நூல்கள் அல்லாத வேறு நூல்கள், மார்க்சியர் பற்றிய சில குறிப்புகள் இந்த தொகுப்பில் காணப்படும்.

முகநூலிலிருந்து மீட்க முடிந்தவற்றை மட்டும் இங்கு கொடுத்துள்ளேன். முகநூல் பதிவுகளை காலவரிசைப்படி அடுக்காமல், வாசகருக்கு சற்று உதவக்கூடிய வகையில் அடுக்கியுள்ளேன். முகநூலில் எழுதியவற்றை பெரும்பாலும் மாற்றவில்லை. படிக்க இன்னும் இலகுவாக செய்ய முடிந்ததை செய்துள்ளேன்..

மார்க்ஸ் – லெனின், டிராட்ஸ்கி, மாவோ, ஹோசிமின் மற்றும் சில முக்கிய மார்க்சியர் குறித்தும் இப்பதிவுகள் செல்லும்

’ மார்க்ஸ்- மார்க்சியர்- இந்திய தாக்கம்’ என்கிற வரிசையில் எனது ஏழாவது நூல் இது. ரோசா லுக்சம்பர்க், மார்க்சிய தடங்கள் இரண்டும் வந்து 25 ஆண்டுகள் ஆகப்போகின்றன. என்சிபிஎச் கொணர்ந்தனர். ’ஹெகல் துவங்கி’ என்கிற நூலில் ஹெகல், மார்க்ஸ், எங்கெல்ஸ், பகுனின் குறித்து எழுதியிருந்தேன். அந்நூல் நிர்மல்ராம் உதவியால் கிண்டிலில் வெளியானது.

லெனின் குறித்த 4 கட்டுரைகளை தொகுத்து நூலாக்கம் செய்திருந்தேன். மாக்சிம் கார்க்கியின் அரசியல் பயணம் பற்றிய நூல் ஒன்று.. இந்தியாவின் முன்னோடி கம்யூனிசத் தலைவர்கள் பற்றி மற்றொரு நூல். இந்த இரண்டையும் நாற்கரம் நல்லு வெளியிட்டிருந்தார். எனது இந்த நூல்கள் அனைத்துமே இணையத்தில் கிடைக்கக்கூடியவையே. ரோசா, மார்ச்கிய தடங்கள் நீங்கலாக அனைத்து நூல்களையும் மின் நூல்களாக காரைக்குடி லெனின் அவர்கள் வலையேற்றம் செய்துள்ளார். மேற்கண்ட 6 நூல்களுடன் , இந்நூலையும் இணைத்து வாசிப்பவர்க்கு ஏராள செய்திகள் கிடைக்கும், புரிதலும் கூடலாம்.

முன்னர் வெளியான 6 நூல்களுக்கும் நான் செலுத்திய உழைப்பிற்கு சற்றும் குறைவில்லாத உழைப்பை இத்தொகுப்பும் காட்டும். என் இடுகைகள்- என் புரிதல் மற்றும் ரசனைக்கேற்ப இருக்கும். இங்கு

குறிப்பிடப்படும் மூல நூல்களை வாசிப்பவர்க்கு அப்பிரதிகள் வேறு அனுபவங்களையும் தரக்கூடும்.

மார்க்ஸ் குறித்து ஓரளவு வாசிப்புள்ளவர்க்கு, மேலும் ஆர்வத்தை தூண்ட, இப்பதிவுகள் உதவும் என்றால் பெரும் மகிழ்ச்சி

12-05-2025 - ஆர். பட்டாபிராமன்

may 24

படேல் 150 - 4

ராஜ்மோகன் காந்தி முக்கிய தகவல் ஒன்றை எழுதியுள்ளார். இடைக்கால அரசாங்கம் அமைந்த பின்னர், நவகாளி- கல்கத்தா- பீகார் இந்து முஸ்லீம் கலவரங்கள்- லீக் உடன் அமைச்சரவையில் கடும் சோதனைகள்- என்ற சூழலில், 1946 நவம்பரில் படேல் முக்கிய கோரிக்கை ஒன்றை பிரிட்டிஷாரிடம் எழுப்புகிறார். லண்டன் எப்போது இந்தியாவை விட்டு முழுமையாக வெளியேறுகிறது என்று நாள் ஒன்றை வெளிப்படையாக அறிவிக்க வேண்டும், அந்த நாள் ஜனவரி 1, 1948 ஆக இருக்கலாம் என படேல் அறிவிப்பை செய்கிறார். படேல் தான் 'வெளியேறும் நாளை சொல்' என்பதை எழுப்பினார் என்பது ராஜ்மோகன் தரும் முக்கிய தகவல்.

உடனடியாக அட்லி அரசாங்கமோ, வைஸ்ராய் வேவலோ பதில் அளிக்கவில்லை. ஆனால் இதை கணக்கில் கொண்டிருக்கலாம். பிப்ரவரி 20, 1947ல் அட்லி, ஜூன் 1948க்குள் ஆட்சியை ஒப்படைத்து விட்டு வெளியேறுவோம். இந்திய மக்கள் ஒற்றுமையாக நின்று எவர் பெறுவது என முடிவெடுக்காவிட்டால், பிரிட்டனாக பார்த்து ஒப்படைத்துவிட்டு செல்லும் என்கிற எச்சரிக்கையையும் அட்லி செய்தார்.

பெதிக் லாரன்ஸ் தூதுக்குழு படி குரூப்களா அல்லது இந்தியா- பாகிஸ்தான் டொமீனியன்களா, அல்லது 'பால்கனிசேஷன் ஆப் இந்தியாவா' என்கிற விவாதங்கள் அனல் பறக்க ஆங்காங்கே நடக்கலாயின.

காபினட் மிஷன் வந்ததிலிருந்தே காங்கிரஸ் தலைமைக்குள்ளும், காங்கிரஸ் லீக் வேறுபாடுகளும் அதிகரிக்கலாயின. படேல் காந்தி, படேல் நேரு, படேல் ஆசாத் வேறுபாடுகளும் அதிகமாகத் தெரியலாயின. ஆசாத் நேருவிடம் தான் மாற்றிக்கொடுத்த காங்கிரஸ் தலைவர் பதவி திரும்ப எனக்கே தரப்படவேண்டும் என்றார். 6 ஆண்டுகள் தொடர்ந்து அவர் இருந்துவிட்டார், கிருபளானி வரலாம் என்றார் படேல். கிருபளானி தன்னைவிட நேருவிற்கே நெருக்கம் என தெரிந்தும், ஆசாத் வராமல் படேல் பார்த்துக்கொண்டார். ஆசாத் claim கூடுதலாக இருக்கும் என்பது படேலின் மதிப்பீடு. கிருபளானி தலைவரானார். அவருக்கும் நேருவும் படேலும் தன்னை மதித்து எதுவும் கலந்தாலோசிப்பதில்லை என்கிற வருத்தம் நாளடைவில் கூடியது.

படேல் காங்கிரஸ் செயற்குழுவில் எப்போதும் சிடு சிடுவென இருக்கிறார் என்ற புகார்கள் காந்தியிடம் சென்றன. லீக் தொந்தரவு, கம்யூனல் கலவரங்கள், பிரிட்டிஷ் முழு ஒத்துழைப்பின்மை போன்றவற்றில் அவ்வப்போது பொறுமை இழந்த நேரு, காங்கிரஸ் அமைச்சரவை எப்போது வேண்டுமானாலும் பதவி விலகும் என அறிவிக்கலானார். ஒருமுறைக்கு மேல் , தோன்றும் போதெல்லாம், எவரையும் கலந்து பேசாமல் இப்படி நேரு சொல்வதை படேல் ஏற்காமல், அவரும் பொதுவெளியில் காங்கிரஸ் அமைச்சரவை பதவி விலகும் என்கிற பேச்சிற்கே இடமில்லை. எவர் விலகினாலும், படேல் இருப்பவர்களுடன், நிலைமைகளை சமாளிப்பான் எனப் பேசலானார்.

எல்லா பஞ்சாயத்தும் காந்தியிடம் சென்றன. நவகாளி சென்று நேருவும் கிருபளானியும் காந்தியை பார்த்து வந்தனர். இக்கால காந்தி படேல் கடிதங்கள் வேறுபாட்டை நமக்குக் காட்டக்கூடியவையாக இருக்கின்றன.

காந்தி சகோதர படேல் என எழுதுவதிலிருந்து மற்றவர்களை சொல்வது போல் சிரஞ்சீவி படேல் என எழுதலானார். ஏன் கடுப்புடன் கூட்டங்களில் இருக்கிறாய், உன் பாதை சரி என்றால் அப்படியே செயல்படு, அமைச்சரவை நீடிக்கும் என்றெல்லாம் ஏன் கசப்பை அதிகப்படுத்துகிறாய் , வாள் என்றால் பதிலுக்கு வாளே பேசும் என்கிறாய் - போன்றவைகளை சுட்டிக்காட்டி காந்தி கடிதம் இருந்தது.

எனக்கு ஏது தனிப்பாதை, சிலர் உங்களிடம் போட்டுக்கொடுப்பதையே தொழிலாக வைத்துள்ளனர். நான் முகத்திற்கு நேரே வெளிப்படையாக பேசுவது எவருக்கும் பிடிக்கவில்லை. நேரு அதிகமாக அடிக்கடி வாயடிப்பதை நான் கேள்விக்கு உள்ளாக்குகிறேன். அது சிலருக்கு பிடிக்கவில்லை. உங்கள் பாதை தவிர எனக்கு வேறு பாதையில்லை என்கிற பொருளில் படேல் காந்திக்கு பதில் தந்தார். மகாதேவ் இருந்திருந்தால், இப்படி வேறுபாடுகள் வராமல் காந்திக்கு புரிய வைத்திருப்பார் என பியாரிலாலுக்கும் படேல் எழுதினார்.

வேவல் போய் மவுண்ட்பாட்டன் வைஸ்ராய் பொறுப்பேற்றார். அவர் ஆகஸ்ட் 15 , 1947 என விடுதலை நாளை (டொமீனியன்கள்) விரைவு படுத்தினார். முதலில் 10 தனி துண்டுகளாக்கப்பட்ட இந்தியா என்கிற திட்டம், அட்லி காபினட் ஒப்புதலுக்கு சென்றது. எதேச்சையாக மவுண்ட்பாட்டன் நேருவிடம் அதை பகிர்ந்துகொள்ள, நேரு ஆவேச தாண்டவம் ஆடிவிட்டார். நிலைமையை உணர்ந்த மவுண்ட்பாட்டன் லண்டனுக்கு ‘நிறுத்துக புதிய திட்டம் வருகிறது’ என தந்தி

அனுப்பினார். நேரு பெரும் விபத்தை- நாடு பல துண்டுகளாக்கப்படவிருந்த திட்டத்தை தடுத்தார். பெரும் செயலது.

மவுண்ட்பாட்டன் நேரு படேலை கலந்து ஒரே இரவில் எனக்கு திட்டம் வேண்டும் என வி பி மேனனை பணித்தார். படேலை ஏற்க வைத்துவிட்டால், சிக்கல் அதிகம் இருக்காது என விரைந்து வி பி மேனல் செயலாற்றினார். படேல் நேரு இருவர் ஏற்புடன் இந்தியா பாகிஸ்தான் இரு டொமீனியன்கள் திட்டம் லண்டன் ஒப்புதலுக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

படேலை மேனன் எவற்றையெல்லாம் சொல்லி இரு டொமீனியன்கள் என்பதை மேனன் ஏற்க வைத்தார் என விரிவாக ராஜ்மோகன் பதிவு செய்துள்ளார்.

-இந்து முஸ்லீம் என சிவில் யுத்தம் ஓய வாய்ப்பு

-இரு டொமீனியன்கள் என ஏற்றால் பிரிட்டிஷ் முழுமையாக காங்கிரஸ் பக்கம் நின்று சமஸ்தானங்கள் சேர துணையாக இருப்பர்

-கொஞ்ச காலம் இராணுவ பலத்தையும் தந்து நிற்பர்

-பாகிஸ்தான் பிரிந்து விட்டால் வலுவான மத்திய அரசை இந்தியா ஏற்படுத்திக்கொள்ள முடியும். அதிகாரம் மிக்கதாகவும் அது அமையும்.
-Residuary powers எடுத்துக்கொள்ள முடியும்.

-பாகிஸ்தான் பிரிந்து போனதற்கு பிறகு இந்திய பகுதிகளில் லீக் ஆதிக்கம் குறையும்

மேனன் சொன்ன அம்சங்களை, தனது அனுபவங்களுடன் ஒத்துப் பார்த்தே படேல் இணங்கினார் என ராஜ்மோகன் சொல்கிறார்.

வேவல் பிரியாவிடையில் தாரளமாக பாராட்டி நேரு ஆசாத் ராஜாஜி வழியனுப்பினர். படேல் தாராளம் ஏதும் காட்டவில்லை. படேல் குறித்து சந்தேகத்துடனேயே வேவல் இருந்தார் எனினும் படேல் ஆலோசனை மிக அவசியம் என்பதை அவர் உணராமல் இல்லை.

பார்க்கலாம் ராஜ்மோகன் படேலை எப்படி மேலும் வடிவமைத்துள்ளார் என்பதை…

24-5-2025

may 25

wastage of energy for a secondary issue

I happened to see a news reporting in the name of SNPWA about the decision of SNPWA, AIBSNLPWA and RTWOA - filing Writ Petition in the Hon SC to challenge the Finance Act 2025 regarding its validation portion.

No one can question their wisdom if they decide and get the approval of their organisation.

But according to my perception, it is utter wastage of their valuable energy and accountable money of the pensioners. I do not claim that I have the monopoly of truth or bag full of facts, but my inner voice and reading of that ACT is telling me, that going to SC by BSNL Retirees have no substantial basis.

Organisation should not dissipate their energy and money for no issue directly involved them, though apprehension of affecting us involved may be there in some section. Money need not be spent just to satisfy the ego or subjectivity of those who lead the organisation. Solidarity demonstrations is different , but direct involving is wastage of energy without waiting what and how the major CG associations are acting.

One can appreciate , the leaders pursuing continuously to place the BSNL absorbed combined service IDA pensioners in the map of CG Pensioners. I understand it as their primary task. Also, one can understand their 'Focus' on that, though it has its own hurdles . But it is difficult to understand, spending money to the dare devil advocates demanding lakhs for a sitting, that also for an issue, not directly connected to BSNL combined pensioners, though getting pension as per CCS pension rules.

BSNL combined IDA pensioners retiring from the PSU is not coming within the ambit of the definition of 'Pensioners', as stated in the Finance Act. When already BSNL pensioners were / are differently treated through insertion of an amendment namely 37 A rules in the CCS Rules, that is distinction made comparing CG pensioners , where is the new applicability of distinction as per this ACT? On that particular date 1-10-2000, Govt already made their distinction between CG pensioners and the future BSNL absorbed combined service IDA pensioners. This distinction was objected by none of the CG pensioners Associations on that date.

One can understand the apprehension of CG pensioners on Finance Act 2025 , their worry about complete parity, but in what way the BSNL absorbed pensioners are being affected..BSNL IDA pensioners are getting pension as per 2nd PRC scales. What is the grievance of pre 2007 with post 2007 when orders for pension revision issued during March 2011. Most of the court cases raised were by pointing out the GOI OM 12-5-2017 only , which one is applicable to CG pensioners having pay matrix of 7th CPC. S 30 case is the main cause and that triggered Finance ACT to have that validation and power to distinguish the pensioners retiring from Government service.

Due to this Finance Bill the S 30 pensioners - high profile pensioners affected, so the CG pensioners affected and so heavily the BSNL absorbed pensioners affected is the

main argument placed before us. It sounds neither good nor qualified to file WP to SC on behalf of BSNL IDA pensioners.

If at all one is serious to go to SC and wish to spend money, then it is better to seek amendment in the definition of Pensioners in the ACT, covering bsnl absorbed pensioners also. Creating fear psychosis like pre CG pensioners would not get pension revision is to the core absurd one

Think twice before spending lakhs of rupees to the high profile gifted tongued advocates. I am nothing in any of these organisation, just a member of PWA, but however feeble my voice may be , I should echo what I feel right. It does not mean I alone right.

25-5-2025 8.30 hrs R. Pattabiraman

may 26

டிஸ்மிசல் பென்ஷன் உரிமை இனி இல்லை..

பி எஸ் என் எல் பொதுத்துறைக்கு உள்ளே வந்தபோது 4 லட்சம் ஊழியர்களுக்கான பென்ஷன் பாதுகாப்பு விதிகளில் தோழர் குப்தா தனித்த கவனம் செலுத்தி , போராட்டம்- உடன்பாடு மூலம் 37 ஏ விதி திருத்தம் பல்வேறு உபவிதிகளுடன் வந்தது. இதற்கு உதவியாக வள்ளிநாயகம் போன்ற தோழர்கள் நின்றனர்.

மத்திய அரசு ஊழியர்களுக்கு இல்லாத , உபவிதிகளில் மிக முக்கிய பாதுகாப்பு ஒன்றை 24 சி மூலம் தோழர் குப்தா நிலைநாட்டினார். மத்திய அரசு பணியாளர் ஒருவர் தவறு செய்து டிஸ்மிஸ் செய்யப்பட்டால் அவர் பென்ஷன் பலன்களை முற்றிலுமாக இழந்து விடுவார் என்ற நிலையில், அதையே அரசாங்க அதிகாரிகள் இங்கே கொணர நினைத்தனர். மத்திய அரசு பணியில் தவறு செய்தால் டிஸ்மிஸ் ஆனால் சரி, ஆனால் அங்கு சேவையில் தவறு ஏதும் செய்யாமல் , பொதுத்துறைக்கு வருகிற ஒருவரை எப்படி இங்கு தவறு செய்தார்- டிஸ்மிஸ் ஆனார் என பென்ஷனை நிறுத்த முடியும் என்கிற வலுவான வாதத்தை தோழர் குப்தா வைத்தார். 2009ல் DOT தன் விளக்கத்தை கொடுத்து பாதுகாப்பை சேர்க்க வைத்தார்.

24 c

The dismissal or removal from service of PSU of any employee after his absorption for any subsequent misconduct shall not amount to forfeiture of the retirement benefits for the service rendered under Government….

என்பதை பெற்றவுடன் , NFTE சங்கம் இந்தியா முழுவதும் டிஸ்மிசலில் இருந்து , நாம் அறிய வந்த 47 தோழர்களுக்கான வாழ்வாதாரம் பெற நடவடிக்கை எடுத்து தீர்த்தது. தமிழகம் அன்று முன்கை எடுத்தது. இங்கு CGM , PGM, DGM ஆக இருந்த திரு வரதராஜன், சண்முகசுந்தரம், தமிழ்மணி (பின் இருவரும் CGM ஆக உயர்ந்து ஓய்வுபெற்றனர்) ஆகியோர் பாதிக்கப்பட்ட தோழர்களின் நல்வாழ்விற்கு நிர்வாகரீதியாக உதவியாக நின்றனர்.

இப்போது இந்த பாதுகாப்பு விதி இல்லாமல் போயுள்ளது. உச்சநீதிமன்ற தீர்ப்பு ஒன்றால், இவ்விதி இனி இல்லாமல் போகலாம் என்கிற பதிவை மார்ச் 6 , 2025ல் செய்திருந்தேன். தற்போது, மே 23, 2025 அன்று DOPPw அரசிதழ் அறிவிப்பு மூலம் திருத்தத்தை வெளியிட்டுள்ளது.

புதிய விதி CCS PR 2021 - 37 - 29 c இனி இவ்வாறே அமையும்

The dismissal or removal from service of the PSU of any employee after his absorption for any subsequent misconduct shall lead to forfeiture of the retirement benefits for the service rendered under the Government also…

இந்த விதிப்படி முன்னர் கொடுக்கப்பட்ட பாதுகாப்பு நீக்கப்பட்டுள்ளது. இருக்கிற தோழர்களில் எவரும் டிஸ்மிஸ் ஆகிற அளவிலான தவறு ஏதும் செய்யாமல் தங்களை கவனமாக காத்துக்கொள்ள வேண்டும். Dismissal case ஏதும் இருக்காது, இனி வராது என நம்புவோம்..

26-5-2025

may 27

Finding solution is always an issue for any issue. When we are interested in bickerings and satisfied exhibiting hatred of fire, then we miss the road of solution. When you take weapons then it becomes more complicated.

Exposing undesirable activities is not an end itself. Stopping with Pointing fingers and glorifying that action may satisfy oneself but ..

When we talk on mere assumptions or on our perceptions, without efforts to find and fill our arguments with facts, we normally satisfy with our fire tongue .

Facts only lead us to the road of solution, not mere assumptions or stamping others, who we feel them as 'the others'.

For any civilised dialogue and solution, either one should have facts to speak or allowing to take note of the other side's argument. Slanders without putting facts in the public domain will lead us nowhere.

The rulers or rebels should focus more on dialogues to find solution, than intending to annihilate one other.

The court of One's mind is the best judge for him or her only than judging others and so trail of others with our mindset may lead to misjudgments. One's own trail by their mind space is the best trail, in the case of others the trail should be possible only when you have hard facts with you.

Bhaktas or Saints may expect miracles, but not rulers or rebels. They should stand for the best solutions with least expenditure of energy. No one is the holder of monopoly of truth. Everyone is having his or her sense of doing things. One should aim to find solution even in all dust and storm.

Solution to any issue should have a small road map atleast. Those who want to bring solution, should have the forethought of what is their primary issue and how to substantiate that with all available facts and what should be the road map for reaching the real destination. For that one should stop roaming on the mind of imaginations or mere desires.

The only civilised way in any democratic society is dialogue with dignity. Hatred begets hatred only. Militancy does not mean impoliteness.

Either the ruler the Government or the rebels like Naxals, both have their arguments or counter arguments since the last 50 years. Each has their methods of weapons to deal and claims of rights in the name of people.

Dialogue with all dignity is the only way to the solution of any so called extremism.

Let us hope better sense prevail..

may 28

உயர்நீதிமன்ற நீதிபதிகள் ஒரே வர்க்கத்தினர் - OROP தீர்ப்பு

உச்சநீதிமன்ற மற்றும் உயர்நீதிமன்ற நீதிபதிகளுக்கு சம்பளம் அலவன்ஸ் பென்சன் போன்றவற்றிற்கு 1958 சட்டம், 1954 சட்டம் இருக்கிறது. ஊதியக்குழு முடிவுகள் வந்தபின்னர் கமிட்டி ஒன்றை நீதிமன்றம் அமைத்து அறிக்கையை மத்திய அரசிற்கு நாடாளுமன்ற ஒப்புதலுக்கு அனுப்பி, புதிய ஊதியம் அலவன்ஸ், ஓய்வு பலன்கள் கொடுக்கப்பட்டு வருகின்றன. ஓய்வூதியத்தை மத்திய அரசிடமிருந்து- consolidated Fund லிருந்து அந்த நீதிபதிகள் பெற்று வருகின்றனர்.

உயர்நீதி மன்ற நீதிபதிகள் சார்ந்த ஏராள பென்சன் வழக்குகள் அவ்வப்போது வந்துள்ளன. தற்போது மே19 அன்று உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி திருமிகு பி ஆர் கவாய் உள்ளிட்ட மூன்று நீதிபதிகள் முக்கிய தீர்ப்பு ஒன்றை உயர்நீதிமன்ற நீதிபதிகளின் ஓய்வூதியம் தொடர்பாக தந்துள்ளனர்.

உயர்நீதிமன்ற நீதிபதிகள் constitutional service படி as a class- அரசமைப்பு சமத்துவ விதி 14 படி அவர்களை வேறுபடுத்தி பார்க்கக்கூடாது. உயர்நீதிமன்ற நீதிபதி எவரானாலும் one rank one pension படி முழு ஓய்வூதியம் பெற தகுதி உடையவர்கள். தலைமை நீதிபதி எனில் முழு பென்சன் ஆண்டிற்கு 15 லட்சம், நீதிபதி எனில் முழு பென்சன் ஆண்டிற்கு 13.5 லட்சம் என மத்திய அரசாங்கம் பென்சன் வழங்கிட வேண்டும் என பணித்துள்ளது உச்சநீதிமன்றம்.

அவர்கள் மாவட்டத்திலிருந்து வந்தார்களா, பார் கவுன்சில் வழி வந்தார்களா, அடிஷனல் நீதிபதியாக இருந்தார்களா, மாவட்ட பதவிக்கும் உயர் நீதிமன்ற நீதிபதி ஆவதற்கும் இடையில் பிரேக் இருந்ததா என எதையும் பார்க்காமல், உயர் நீதிமன்ற நீதிபதிகளுக்கு ரூ 13.5 லட்சம் ஆண்டிற்கு , தலைமை நீதிபதி எனில் ரூ 15 லட்சம் ஆண்டிற்கு என தீர்ப்பு எழுதியுள்ளனர்.

இதைவிட இத்தீர்ப்பில் சிறப்பு என்னவெனில், அவர் NPS திட்டப்படி மாவட்ட மட்டத்தில் நுழைந்தாலும், உயர் நீதிமன்ற நீதிபதியாகிவிட்டார் எனில் அவரையும் பிரித்து பார்க்காமல், அவரும் அந்த ஒரேவர்க்க பிராக்கட்டில் வைக்கப்பட்டு one rank one pensionல் வருகிறார். அவருக்கு சொல்லப்பட்ட முழு பென்சனை மத்திய அரசாங்கம் தரவேண்டும்.

அது மட்டுமல்ல அவர்களால் செலுத்தப்பட்ட என்பிஎஸ் பென்சனுக்கான contribution எவ்வளவு சேர்ந்துள்ளதோ அதை டிவிடண்ட்

இருந்தால் அத்துடன் சேர்த்து அந்த நீதிபதி ஓய்வு பெறும்போது கொடுத்துவிடவேண்டும் எனவும் தீர்ப்பு எழுதியுள்ளனர்.

இத்தீர்ப்பில் குறிப்பிடத் தகுந்த மற்றொரு பாரா

We direct that Union of India shall follow the principle of 'one rank one pension' to all the retired Judges of HC irrespective of their source of entry ..and irrespective of number of years that they have served as a District Judge or a HC Judge and all of them shall be paid full pension as aforesaid.

குடும்ப ஓய்வூதிய குறித்தும் தீர்ப்பிலே சொல்லியுள்ளனர்.

No discrimination amongst HC judges - doing Constitutional service on the issue of fixation of pension - that is as a class eligible for OROP என்பதை இத்தீர்ப்பு பேசுகிறது.

Retired HC Judges as pensioners are not coming within the ambit Finance Act 2025 defined pensioners என்பது கவனிக்கப்பட வேண்டிய மிக முக்கிய அம்சம். எனவே 63 பக்க இத்தீர்ப்பு பல்வேறு காரணங்களால்..அதாவது

Break in service, period of service, NPS , additional judge only not permanent one போன்றவற்றால் நிலவிய வேறுபாடுகளை அகற்றி, உயர்நீதிமன்ற நீதிபதியாக ஓய்வு பெறுகிறாரா , அவ்வாறெனில் அவருக்கு முழு பென்சன் என்கிற தீர்ப்பை கொடுத்துள்ளனர்.

நம் பிஎஸ் என் எல் நிறுவனத்திலிருந்து ஓய்வு பெற்ற ஆயிரக்கணக்கானவர்க்கு இன்னும் மத்திய அரசாங்க குறைந்தபட்ச பென்சன் ரூ 9000 அதாவது வருடத்திற்கு ரூ லட்சத்து எட்டாயிரம் என்பதையே நம்மால் பெறமுடியவில்லை. கடந்த 18 ஆண்டுகளாக ரூ 3500 குறைந்த பட்ச ஊதிய நிலை என்பதை மாற்றாமல் வைத்துள்ளனர். IDAவை காரணமாக்கி இந்த பாரபட்சம் தொடர்கிறது. பென்சன் மாற்றம் வந்தால் மாறிவிடும் என்கிற ஆறுதல் சொல்லப்பட்டு வருகிறது.

இத்தீர்ப்பு பற்றி நான் சொல்ல வந்த காரணம், நீதிமன்றம் finance act 2025 இருந்தாலும், அச்சட்ட வரம்பிற்குள் வராதவர்க்கு OROP - full pension என்கிற தீர்ப்பை தரமுடிகிறது என்பதை சுட்டிக்காட்டத்தான்…

14 hrs 28-5-2025

may 30

படேல் 150- 5

பாகிஸ்தான் தனி டொமீனியன், இரு பக்க அகதிகள் லட்சக்கணக்கில் அவதி, இந்து முஸ்லீம் கலவரங்கள், சமஸ்தானங்களை ஆங்காங்கே இணைப்பது போன்ற கடும் வேலைகளில் முன்னணி தலைவர்களாக நேருவும் படேலும் கவனம் குவிக்க வேண்டியிருந்தது. அணுகுமுறைகளில் வேறுபாடுகள் வராமல் இருக்குமா? வந்தது.

அவ்வப்போது ஆசாத்துடன் வேறு படேலுக்கு முரண்கள் எழுந்தன.

சமஸ்தானங்களுக்கான அமைச்சராகவும், உள்துறை பொறுப்பிலும் படேல் இருந்தார். நேருவைவிட 14 வயது மூத்தவர் படேல். உடல் கோளாறுகள் அதிகம். வாழ்வில் 'இந்தியா- விடுதலை- காந்தி' என்பதைத் தாண்டி தனக்கான ரம்மியங்கள், விருப்பங்கள், பிடிமானங்கள் என ஏதும் வைத்துக்கொள்ளாதவர் படேல். நேருவிற்கு அவருக்கான ரம்மியங்கள், ரசனைகள் என எப்போதும் எந்த சூழலிலும் இருந்தது.

வேறுபாடுகள் வெளித்தெரிய ஆரம்பித்தன. பத்திரிகைகள் சொல்லலாயின. காஷ்மீர் மீது தனியாப் பற்று நேருவிற்கு. ஷேக் அப்துல்லாவைக் கொண்டு ஜனநாயக வேட்கைகளை தீவிரப்படுத்த அவரால் முடிந்தது. படேல் அமைச்சரகத்திற்கு தெரிவிக்காமல் நேரு நேரிடையாக செயலர் அய்யங்கார் மூலம் , அப்துல்லாவை வைத்து செயல்படுகிறார் என்கிற குறை படேலுக்கு. தன்னிடம் ஏதும் தெரிவிக்காமல் காஷ்மீர் சென்று வந்து படேல் பேட்டி கொடுக்கிறார் என்கிற குறை நேருவிற்கு.

வழக்கம் போல் பஞ்சாயத்து காந்தியிடம் சென்றது. நேரு காந்தியிடம்

..many decisions have been taken by the States Ministry without reference to the Cabinet. For my part I agree with those decisions; but it seems to me a wrong procedure for these decisions to be taken without reference to the Cabinet or PM

1947 டிசம்பர் இறுதியில் படேலிடம் காந்தி

Either you should run things or Jawaharlal should என சற்று மூஞ்சி காட்டுகிறார். தன்னை 'காந்தி பலவீனத்தை' பயன்படுத்தி சிலர் போட்டுக்கொடுக்கின்றனர் என்ற உணர்வு படேலுக்கு வரலானது. படேல் காந்தியிடம் மேலும் வாக்குவாதத்தை வளர்த்த வேண்டாத பதிலைத் தெரிவித்தார்.

I do not have the physical strength. He is younger. Let him run the show. I will assist him to the extent possible from outside.

காந்தி திரும்ப பதில் ஏதும் தராமல் அமைதியானார்.

டெல்லி அன்றாட விஷயங்களில் உள்துறைக்கு தலைவலியைத் தருகிறார் ஆசாத், நேருவோ தான் பிரதமர் , தனக்கு அனைத்தும் ரிபோர்ட் ஆகவேண்டும் என அடிக்கடி குறைபட்டுக்கொள்கிறார் என்ற சூழலில் தன் ராஜினா கடிதத்தை படேல் அனுப்பி வைக்கிறார்.

1948 ஜனவரி 6ல் நேரு காந்திக்கு

If the PM's function is not appreciated, then the only alternative left is for either of me or Sardar Patel to leave the cabinet

படேல் தன் பதிலாக ஜனவரி 12ல்

If anybody has to go , it should be myself. I have long passed the age of active service. The PM is the acknowledged leader of the country and comparatively young. I have no doubt that the choice between him and myself should be resolved in his favour. There is therefore no question of quitting his office.

படேல் இங்கு படேலா நேருவா என்றால் நேருவே சரி என்கிற உறுதியான வாக்குமூலத்தை தந்துவிடுகிறார். பின்னர் காந்தி இருவரும் காபினட்டில் அவசியம் இருக்கவேண்டும் என்ற முடிவிற்கு வந்தார்.

1948 ஜனவரி முதல் வாரத்தில் பாகிஸ்தானுக்கு இந்தியா தருவதாக சொன்ன ரூ 55 கோடிக்கான நிர்ப்பந்தம் ஏற்பட்டது. அதை நிறுத்தி வைக்க வேண்டிய அவசியத்தை காபினட் கூட்டத்தில் படேல் வற்புறுத்தினார். ஒவ்வொரு பைசாவையும் இந்தியாவிற்கு எதிரான புல்லட்டுகளாக மற்றும் மனநிலை பாகிஸ்தானில் இருக்கிற தன் உள்துறை சார் செய்திகளை அவர் பகிர்ந்துகொண்டார். காபினட் படேல் சொன்னதை ஏற்று முடிவாக்கிக்கொண்டது. அம்பேத்கர் போன்றவர் முழுமையாக காபினட்டில் ஆதரித்தனர்.

காந்தியை படேல் ஜனவரி 12, 1948ல் சந்தித்தபோது, ரூ 55 கோடி பற்றி காந்தி கேட்டார். பாகிஸ்தானுக்கு கொடுக்காவிட்டால் அது நெறியற்ற செயல் என்றார். கொடுக்கப்போவதில்லை என எவர் உங்களுக்கு சொன்னார் என படேல் கேட்க, மவுண்ட்பாட்டன் தான் என்கிறார். என்ன சொன்னார் இது படேல்.

Unstatesmanlike unwise- India's first dishonourable act என்று மவுண்ட்பாட்டன் கருதுகிறார் என படேலிடம் தெரிவிக்கப்பட்டது.

படேல் மவுண்ட்பாட்டனிடம் கடுமையாக தன் வருத்தத்தை பதிவு செய்தார். கவர்னர் ஜெனரலாக இருக்கும் நீங்கள் காபினட் முடிவு பற்றி இப்படித்தான் சொல்வீர்களா என படேல் கேட்க, dishonourable act என்பதை தான் திரும்ப பெறுவதாக மவுண்ட்பாட்டன் கூறினார். உண்மையில் அவர் காந்தியிடம் நேரு- படேல் இருவரும் மிக முக்கியமானவர்கள் என்பதை வலியுறுத்தியும் வந்தார்.

காந்தி ஜனவரி 12 மாலை தன் உண்ணாவிரதம் அறிவிக்கிறார். 55 கோடிக்காக என்கிற செய்தி ஜோடிக்கப்பட்டு பரவுகிறது. படேல் மிகவும் நொந்து போனார். ஜனவரி 14 அன்று நேரு, படேல், சண்முகம் செட்டி போன்றவர் காந்தியை சந்தித்து விவாதித்தனர். காபினட் கூடி 55 கோடியை தருவது என முடிவெடுத்தது. காந்தி உண்ணாநிலை தொடர்ந்தது. முஸ்லீம்களுக்கு எதிரான பேச்சு, வகுப்பு ஒற்றுமை குறித்தும் காந்தி கவலை தொடர்ந்தது. பிரசாத், ஆசாத் முன் முயற்சியால் ஏராளமான டெல்லிவாசிகள், தலைவர்கள் உறுதிமொழிக்கு பின்னர் காந்தி உண்ணாநிலை ஜனவரி 17 அன்று முடித்துக்கொள்ளப்பட்டது.

வருத்தம் தோய்ந்த படேல் கீழ்கண்ட வரிகளை காந்தியிடம் சொல்ல நேர்ந்தது.

It will perhaps be good for me and the country if you now let me go. I can act only in my way. And if thereby I become burdensome to my lifelong colleagues and a source of distress to you, and still I stick to office, it would mean that I allowed the lust for power to blind my eyes…

I earnestly beseech you to give up your fast and get this question settled..

படேல் பற்றி பலரும் தவறாக புகார்களை தன்னிடம் தருகிறார்கள் , உண்ணா நோன்பு படேல் எதிர்த்து என்பது பரப்பப்பட்ட நிலையில் தன் புரிதலை சொல்ல காந்தி விழைந்தார்.

The Sardar had a bluntness of speech which sometimes unintentionally hurt, though his heart was expansive enough to accommodate all. I wonder if with a knowledge of this background anybody would dare call my fast a condemnation of the policy of the Home Ministry. If there is any such person is , I can tell him that he would degrade and hurt himself, never the Sardar or me

காந்தி படுகொலைக்கு பின்னர் இணைந்து பணியாற்ற வேண்டிய தேவையை நேரு படேல் இருவரும் உணர்ந்தனர். படேல் பதவி விலகவேண்டும் என்கிற கோரிக்கையை சோசலிஸ்ட்கள் தீவிரப்படுத்தினர். காந்தி படுகொலைக்கு நேரு அரசாங்கத்தையோ

படேலையோ பொறுப்பாக்குவதை ராஜாஜி கடுமையாக விமர்சித்தார். காந்தி படுகொலையைத் தொடர்ந்து நேரு படேல் பிரசாத் ராஜாஜி என சில காலமாவது ஒத்துழைப்பு தொடர்ந்தது. வரலாற்றின் திசை நேர்க்கோடாகவா இருக்கிறது..இல்லையே

நட்பும் கோபமும் எப்போது எவரிடத்தில் எதனால் மாறுகிறது..யார்தான் தீர்மானிக்க முடியும்…அவரவர் மனசாட்சியே அவரவர்க்கான சிறந்த நீதிபதி..

30-5-2025

may 31

Again on Finance Act 2025

I found some misconceptions even in the wisest places where dedication and experiences reside. I understand the anger and desire to fight out the provisions empowering the Govt to distinguish the pensioners

There is a strong feeling amongst CG pensioners Associations that GOI has taken a serious offence against them by inserting Part IV provisions in that act.

The subject matter has two parts namely

-Validation of the CCS Pension Rules

-Principles for Expenditure on Pension Liabilities from the Consolidated Fund of India

One should understand that this ‘principles’ becomes a serious and contentious issue now.

One should not miss that these validation and principles are applicable to those pensioners defined by 148 a b of this act. Pensioner here is retired government servant and Pension rules are CCS pension rules. If one feels the attack then It is direct to CG Retired pensioners only as on date.

The contentious issue is 149 , 150 paras

-without prejudice to the provisions of pension rules, the Central Govt shall have the authority to establish distinctions among pensioners as a general principle

- distinction may be made or maintained which may emanate from the accepted recommendations of CPC

- and distinction may be made on the basis of date of retirement or the date of operationalisation of an accepted recommendation

- Norms and method of pension revision as per accepted recommendations of CPC shall be effective from such a date as may be determined by the CG and the benefit of such accepted recommendation shall not be given effect to from an earlier date

- It is clarified that the CG has the authority and shall always has the authority, to classify its pensioners…

So in this act, GOI defined who the pensioners are and mentioned what are CCS pension rules.

Mention of CPC , its recommendations, acceptance , pension revision are all there but authority to distinguish the pensioners empowering GOI through an act is the new one.

All along we find CCS pension rules only and now Validation of CCS rules becomes part of this act. There is no amendment in any part of CCS Rules as on date. No provision is made as per this act in the CCS pension Rules to empower the Govt to discriminate the past and future pensioners as understood by some unions or associations. The act does not touch any portion of the existing CCS pension rules, instead did validation only.

The second misconception is all about denial of pension revision to the past pensioners after this act. No such denial is found in the provisions of that act. The only provision is the Govt authority to distinguish pensioners as per the date of appointment or date of acceptance of the CPC recommendations. Distinction does not mean denial.

One can understand the worry or concern of complete parity as given by 7 th CPc vide its 12th May 2017 between past and future pensioners after the arrival of act. This was the recommendation of 7 th CPC only. The earlier CPCs recommendations were not on complete parity basis , only on modified parity and distinction was there between past pensioners and future pensioners on that dates, as they were employees also. Even the 7th CPC om dated 4-8-2016 maintained that modified parity only , not complete parity . Some pensioners felt complete parity as per 12-5-2017 was not advantageous to them and accepted modified parity as per 4-8-2016 , the one advantageous to them. Even 7 th CPC made both the illustrations 'with distinction and without distinction'.

What happened thro this act is - distinctions made by earlier CPCs and orders as per OMs are now validated retrospectively and power to distinguish pensioners in future also obtained - also principles ensured to distinguish for pension liabilities if any CPC recommendation.

This act did not stand as a bar in the case High Court Judges pension case judgement which came after this act , though they also get pension from consolidated Fund of India. Distinction is also there, though High Court judges as a class, they are not part of Supreme Court judges who have a separate act . All judges are not of a same class. District courts , high courts, supreme courts classification is there.

In sum and substance ,

There have been distinctions all along between post and pre pensioners , this act validated the same by empowering GOI to do such distinction retrospectively and in future also. The future pensioners are not only pensioners on the date of recommendation or date of OMs but employees on a particular cut of date. So they were, in future they are eligible to pay revision as per the new pay scales.

The may12, 2017 om extended this pay matrix based fixation to the pre pensioners also like that of pay revision of post pensioners. This complete parity started haunting and so litigations in galore. The lack of authority of govt thro some act to distinguish pensioners was triggered by S 30 case and that led to the arrival of this act.

The apprehension that 8th CPC would not give any pension revision to pre 2026 pensioners and only give to post 2026 is not based on any factual evidence. One has to wait for the terms of reference to be issued for the 8 th CPC.

All I understand is the associations are demanding pay revision to pre pensioners also as that of post pensioners as per pay matrix given by 7th CPc, in the name of complete parity in the future also. The litigations based on may 12 2017 Om for complete parity , equality of law as per 14 of constitution have served favour to pensioners till the enactment of this law. One has to wait and see , how the courts are going to decide the fate of the provisions of Finance Act 2025 . If they say the provisions are against constitutional spirit, then that day is victorious to the associations.

11 hrs 31-5-2025 R. Pattabiraman

FB Posts of June 2025

June 1

தெரிந்துகொள்வதை புரிந்துகொண்ட வகையில் பகிர்ந்து கொள்ளும் மாணவன் என்கிற சுய மதிப்பீட்டையே என்னைப்பற்றி நான் வைத்துக்கொண்டுள்ளேன்.

அமைப்புகளின் தலைமைக்கு நீ பாடம் எடுக்காதே என்ற குரல் ஒன்றை சமீபத்தில் பார்க்க நேர்ந்தது. அமைப்பில் அன்றாடம் தீவிரமாக பணியாற்றி, பலரின் அங்கீகாரத்தைப் பெற்று பெரிய பதவி அல்லது பொறுப்புகளில் உள்ளவர்க்கு ஏற்படும் இவ்வாறான அமைப்பு உளவியல் இயல்பான ஒன்றே. நமக்கு தெரியாததா…இவன் எல்லாம் வந்துட்டான் சொல்ல என அவர்கள் கருதுவதிலும் தவறு ஏதுமில்லை. அது அவர்களுக்கு அமைப்பு அங்கீகார ஏற்பு உருவாக்கும் உளவியல் என நான் புரிந்துகொள்கிறேன்.

15 ஆண்டுகளுக்கு முன்னரே, அமைப்பு சிக்கல் விவாதம் அனுபவம் வழியே, கோவைத் தலைவர் தோழர் எஸ் எஸ் ஜி யும் நானும் ஒன்றை பேசிக்கொண்டோம். எவரையும் திருத்த நாம் பிறக்கவில்லை. இயற்கையோ/ கடவுளோ, இந்திய அரசியல் அமைப்போ/ அல்லது அமைப்பு விதிகளோ அப்படி எதையும் நமக்குத் தரவும் இல்லை. சரி எனப் படுகின்றவற்றை சொல்வது, ஏற்பதும் நிராகரிப்பதும் பிறர் உரிமை என்கிற பாடத்தை எடுத்துக்கொண்டோம். எந்த வற்புறுத்தலையும் செய்வதில்லை.

கூடுதலாக வேறுபட்ட கருத்துக்களை முன் வைக்கும்போது தனி நபர் தாக்குதலோ, அவர்களை மரியாதை குறைவாகவோ எழுதக்கூடாது என்கிற ஒன்றை கூடுமானவரை பயிற்சிக்கவும் செய்தேன்.

எந்த எழுத்தின் நோக்கமும் ஜனநாயக விவாதக் கதவை சற்று அகல திறப்பதாக இருத்தல் நலம். கௌரவத்திற்கு பங்கமில்லாமல், எவரையும் சிறுமைப்படுத்தாமல், dignified discussion இருப்பது நலம் என என் மாணவ மனம் என்னிடம் எப்போதும் உரையாடிக்கொண்டேயிருக்கிறது.

ஒன்றைப் பற்றி என் புரிதல் எப்படி இருக்கிறது, சற்றாவது மேம்படுத்திக்கொள்ள முடிகிறதா எனப் பார்த்துக்கொள்ளத்தான்

எழுதுகிறேன். தெரிந்ததை பகிர்ந்து கொள்வது என்கிற நகர்வையும் அதில் வைத்துக்கொள்கிறேன்.

பிறரை காயப்படுத்த எழுதுகிறோமா அல்லது ஜனநாயக விவாதத்தை வலுப்படுத்த வளப்படுத்த எழுதுகிறோமா என்கிற புரிதலைப் பொறுத்துதான் நம் மொழியை நாம் கட்டமுடியும். Strengthening enriching democratic dialogue என்பது பிரதான நோக்கம் என்றால் அங்கே நாம் வசவு சொற்களை அலங்கரிக்கமாட்டோம்.

புரட்சிக்காரன், தலைவன், ஆசான் என அவ்வப்போது ஏற்பட்ட மயக்க விஷயங்களை மிகவும் கஷ்டப்பட்டு மெதுவாக uncoil செய்ய படாதபாடு படவேண்டியிருந்தது. இப்போது உடல் மயக்கம்தான் சற்று கூடியுள்ளது. அந்த மயக்கங்கள் சற்று மட்டுப்பட்டுள்ளன.

வரலாற்றில் பெயர் நிலைக்க என எந்த காரியத்தையும் இப்போது செய்யத்தோன்றவில்லை. வருகிற எதிர்படுகிற விஷயங்களில் கருத்து தோன்றினால் அதை வைப்பது- கொஞ்சம் கவனித்து பார்த்தால் உதவக்கூடும் (இல்லாமலும் போகலாம்) என்கிற வகையில் கருத்து தெரிவிப்பது என்பதுடன் நின்று போகிறேன். சாதனை நெறி வெறி என்பதெல்லாம் என்னை ஆட்டிப்படைக்கவில்லை. துருத்திக்கொண்டு முகம் காட்டும் ஆர்வமும் மட்டுப்பட்டுள்ளது.

அந்த மரியாதைக்குரிய குரலுக்கு நான் சொல்ல வருவது, எவருக்கும் பாடம் எடுக்க நான் பிறக்கவில்லை என்பதை புரிந்துகொள்கிறேன். நினைவூட்டி திரும்ப என் லிமிட்டேஷனை உணர வைத்தமைக்கும் அக்குரலுக்கு நன்றி.

இரு முக்கிய வாக்கியங்கள் அவசியமாகப் படுகிறது.

Educators must be Educated- Marx

I understand my limitations- Gandhi

முதல் வாக்கியத்தை அமைப்புத் தலைவர்கள் பரிசீலிக்கலாம். நம் ஒவ்வொருக்கும் கூட அது அவசியமானதுதான்.

இரண்டாவது வாக்கியம் எனக்கு கண்டிப்பாக தேவைப்படுகிற ஒன்று.

என்ன SSG, நாம யாரையாவது திருத்தவா பிறந்திருக்கோம்? நம்மை திருத்திக்கொள்வதே பெரும்பாடாக இல்லையா?

1-6-2025

June 1

Naxalbari a frontier anthology

புரட்சிகர சிபிஎம்எல் - நக்சல்பாரி இயக்கத்தின் கட்டுமான காலம் குறித்து- பத்தாண்டு காலத்திற்கான தொகுப்பு ஒன்றை பிராண்டியர் வார இதழ் வெளியிட்டிருந்தது. சமர்சென் மற்றும் தோழர்கள் உழைப்பால் Naxalbari And After- a frontier anthology என்கிற இரண்டு வால்யூம்களை - ஏறத்தாழ 330 + 448 பக்கங்களில் அவர்கள் கொணர்ந்தனர்.

1967 புரட்சிகர ஒருங்கிணைப்புக்குழு- 1968 சிபிஎம் பர்துவான் பிளீனம், 1969ல் எம் எல் கட்சி உதயம்- சீனத்தொடர்புகள் - தொடர்ந்து கட்சியால்- வேறுபட்ட மாவோயிச நம்பிக்கை குழுக்களால் வெளியிடப்பட்ட சில முக்கிய அடிப்படை ஆவணங்களை இந்த anthology பேசுகின்றன.

முதல் வால்யூம் முழுக்க முழுக்க நக்சல்பாரிகளின் அன்றாட ஆபத்து நிறைந்த வேலைகள்- போலீஸ் தாக்குதல்கள்- சிறைக்கொடுமை மரணங்கள்- அரசு நிலைப்பாடுகள்- நக்சல்கள் செய்த பதில் தாக்குதல்கள்- அழித்தொழிப்பு வேலைகள்- வர்க்க எதிரியை ஒழித்தல்- முதலாளித்துவ நிலபிரபுத்துவ காலனிய கலாச்சார ஸ்தாபனங்களை அழித்தல்- பள்ளிக்கூடங்களைக் கூட எரித்தல்- கிரிஜன் ஹரிஜன் பகுதிகளில் ஆயுத மக்கள் குழுக்களை உருவாக்குதல் , துரோகிகளை கொல்லுதல் போன்ற பல்வேறு அம்சங்களை விரிவாக விவரிக்கும் பிராண்டியர் கட்டுரைகளின் பத்தாண்டு தொகுப்பாக அந்த வால்யூம்களைக் கொணர்ந்தனர். Turbulent decade என அவர்கள் அழைத்த அடிப்படை foundational years ஆக இதை நாம் பாவிக்கலாம்.

சிறை சித்திரவதைக் கொடுமைகள் குறித்த விரிவான பலபக்க கட்டுரைகள் மனதை பிசையும்- அச்சத்தில் நம்மை உறைய வைக்கும். ஏராள தோழர்கள், பெண்கள் உட்பட இப்படியான வதைகளில் தங்களை தியாகம் செய்துள்ளனர். அதேபோல் ஆயுதம் இருந்ததால் வர்க்க எதிரிகள் என தான் உறுதிபடுத்தியவர்களின் உயிர்களை எடுத்திருக்கும் காட்சிகளும் இந்த தொகுப்பில் இருக்கும்.

1944ன் , மாவோவின் நியு டெமாக்ரசியை எடுத்து - இந்தியாவில் 1948ல் உயர்த்தி பிடித்த தோழர்கள் ஆந்திரா கம்யூனிஸ்ட்கள் தான். மார்க்ஸ்- எங்கெல்ஸ்- லெனின் ஸ்டாலின் தந்த பாதைதான் மார்க்சிசம்- லெனினிசம், மாவோ டிட்டோ எல்லாம் விலகல்தான் என எதிர்த்து முதல் குரலை தந்தவர் பி டி ரணதிவே தான். 1948ல் ஜோஷியை கீழ் இறக்கி அதி வாய் வீச்சை அவர் இரண்டாம் காங்கிரசில் வைத்தார்.

சிபிஅய்க்குள் தொடர் விவாதங்கள் 1964ல் சிபிஎம் உருவாக்கம் என்கிற பிளவை நோக்கி சென்றது. சிபிஎம் க்குள் மாவோ- சீனா விவாதங்கள் எம் எல் உருவாக்கத்தை தந்தது

மீண்டும் 1967ல் மாவோவின் பாதை - சீனப்பாதை பேச்சு வந்தது. 1969ல் எம் எல் கட்சி உருவானது. அவர்கள் தங்கள் வாசிப்பில், கள அனுபவத்தில் எழுதிக்கொண்ட ஆவணங்கள்- குழு விவாதங்கள்- போன்ற எழுத்துக்களை இரண்டாவது வால்யூம் விரிவாகச் சொல்கிறது.

சாரு மஜூம்தாரின் 8 ஆவணங்கள் என்பதை அடிப்படை என்றனர். இன்னும் சில தோழர்கள் சேர்மன் சாரு- மாவோவிற்கு இணை என்றளவு ஏற்றவும் செய்தனர். இந்த 'சேர்மன்' பதம் ஏதோவொருவகையில் அதிகார கிறக்கத்தை கம்யூனிஸ்ட் வட்டாரங்களில் தந்ததை உணரமுடியும். இங்கு கூட சேர்மன் டாங்கே என்கிற பேச்சு இருந்தது.

கனு சன்யால், நாகிரெட்டி, சந்திரபுல்ல ரெட்டி, நாகபூஷன் பட்நாயக், சத்திய நாராயண என்கிற பெயர்கள் ஓரளவிற்கு செல்வாக்கு பெற்றன. தேசபிராதி, லிபரேஷன் போன்ற பத்திரிகைகள் வெளிவந்தன.

once Naxalite - ever Naxalite

Rebellion is our birth right

chairman Mao- Chinese path

Armed revolution- annihilation of class enemies - liquidation - people's war

comprador capitalism

soviet imperialism

போன்ற பதங்கள் புழக்கத்தில் வரலாயின.

இரண்டாம் வால்யூமில் மாவோயிசம்- இரு பார்வைகள் என்கிற மல்லிகார்ஜூன ராவின் கட்டுரை ஆரம்பகால சிந்தனைகளை வெளிப்படுத்தும் முக்கிய கட்டுரை.

புரட்சிகர செயல்பாடுகளின் வழியே கட்சி கட்டுவதா, கட்சி அமைத்து புரட்சிகர செயல்பாடுகளா என்ற விவாதம் ஆரம்பத்திலேயே ஆந்திரா தோழர்களுடன் துவங்கிவிட்டது.

revolution cannot be victorious without a revolutionary party

you can build party only in the course of revolutionary struggle என்கிற விவாதம் இருந்தது. இதை குட்டி முதலாளித்துவ கற்பனாவாதம் என கனு சன்யால் நிராகரித்தார்.

சுத்த சுயம்பிரகாச புரட்சிகர கட்சி-தவறே இல்லாத கட்சி ஒன்றைக் கட்டுவது fantasy என்றனர் - revolutionary party revolutionary discipline இல்லாமல் உயர் ஆயுத போராட்டங்கள் இல்லை என்ற புரிதலில் 1969ல் கட்சியை அவர்கள் உருவாக்கி மே 1 அன்று ஊர்வலம் -கூட்டம் நடத்தினர்.

ஆரம்ப நாட்களிலேயே 4 கேள்விகள் அவர்களிடம் விவாதங்களாயின

On principal Contradiction

guerilla warfare the only struggle form

what about mass organisation and democratic struggle

Maoist party means secret organisation

கடந்த 50 ஆண்டுகளாக இந்த கேள்விகளும் விவாதங்களும் நின்றதுபோல் தெரியவில்லை.

இந்தியாவை அமெரிக்கா சோவியத் போன்ற ஏகாதிபத்தியங்களின் new colony என்று பேசிக்கொண்டனர்.

சிபிஎம் எல் - சிபிஎம் போலவே மக்கள் ஜனநாயகம் என்றே சொன்னது. தனது காங்கிரசை 8வது காங்கிரஸ் என்றே சொன்னது. ஆனால் ஆந்திரா தோழர்கள் புதிய ஜனநாயகம் என்றனர். தங்கள் கடமையென அவர்கள் எழுதிக்கொண்டது

the task of the new democratic revolution is to destroy imperialism, feudalism, compradar bourgeoisie and the bureaucratic capitalism- big bourgeosie and then to establish a new democratic state

CPIML தோழர்கள், செகுவாரா கொரில்லா மாடல் வேண்டாம் எனவும் பேசிக்கொண்டனர். விவசாயிகள் ஏழைகள் சுரண்டப்படுவோர் மத்தியில் ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றும் அரசியல் போதனை அவசியம் எனவும் கருதினர்.

The party unit can fulfil this task only by organising guerilla war by poor and landless peasants..Guerilla war is the only tactic of the peasants' revolutionary struggle. this cannot be achieved by any mass organisation through open struggle

ஆந்திரா தோழர்கள் mass revolutionary rallies- mass armed struggle அவசியம் எனக் கருதினர்.

தொழிலாளிவர்க்கம் பொருளாதாரவாதத்தால் பீடிக்கப்பட்டுள்ள நிலையை மாற்றவே, ஊரகப்பகுதிகளில் ஆயுத போராட்டம் தேவை

என அவர்கள் கருதினர். The principal form is armed struggle என்பதை அழுத்தமாக இத்தோழர்கள் நம்பினர்.

முதல் வால்யூமில் மே வ, ஆந்திரா, கேரளா, பீகார்- சட்டிஸ்கர், மகாராஷ்ட்ரா, ஒரிஸ்ஸா போன்ற பல பகுதிகளில் நடந்த பல்வேறு எழுச்சிகளை சொல்லியுள்ளனர். இந்திரா அரசாங்கமானாலும், காங்கிரஸ் மாநில அரசாங்கங்களானாலும் எப்படி தாக்குதல்களை தந்தன என எழுதியிருப்பர். அதேபோல் இஎம்எஸ் அரசின், அச்சுதானந்தன் கால தாக்குதலும் சொல்லப்பட்டிருக்கிறது. இ எம் எஸ் எங்களை உள்ளே தள்ளியபோது, மே வ அமைச்சராக ஜோதிபாசு எங்களை விடுவிக்கவும் செய்தார் என்கிற பதிவும் இருக்கிறது. ஆனாலும் இவர்கள் அனைவரும் இந்திய புரட்சியை விட்டுக்கொடுத்தவர்கள் என்ற உணர்வும் அத்தோழர்களிடம். அமெரிக்கா போலவே சோவியத்தும் இந்தியாவை சுரண்டும் சமூக ஏகாதிபத்தியம் என வரையறுத்தனர்.

நக்சல்பாரி இயக்க அனுபவங்கள் குறித்து நேர்மறை- எதிர் மதிப்பீடுகளுடன் நூல்கள் இருக்கின்றன. அரசாங்க அறிக்கைகள் இருக்கின்றன.

ஏராள உயிர் தியாகங்களை செய்துகொண்டு, ஏராள உயிர்பலிகளை எடுத்துக்கொண்டும் , பல்வேறு ஒடுக்குதல்களை சந்தித்தும் முற்றிலும் வீழாமல் ஆங்காங்கே புதிய புதிய இளம் வீரர்களை உருவாக்கும் பெரும் ஆயுத குழுக்களாக இவ்வியக்கம் 55 ஆண்டுகளாக இருந்து வருகிறது. பொது இடதுசாரி நீரோட்டத்திற்கு வந்த லிபரேஷன் போன்ற இயக்கங்களும் உண்டு.

விடுதலை இந்தியாவில் மார்க்சிய இடதுசாரி இயக்க வரலாற்றில் நக்சல்பாரிகளின் வரலாறும் முக்கிய இடத்தைப் பிடித்துள்ளது. ஆயுத வழியை விடுத்து, பொது நீரோட்ட மக்கள் திரள் ஜனநாயக பாதைக்கு வரக்கூடாதா என்ற விவாதங்கள் அவர்களுடன் நடக்காமல் இல்லை. எங்கள் சூழலில்- நாங்கள் போராடும் பகுதிவாழ் மக்கள் சூழலில் கொஞ்சம் இருந்து பாருங்கள் என்ற பதிலை அவர்கள் தந்துள்ளனர். அரசாங்கம் போலிசாருக்கு ஆயுதம் கொடுக்காமல் இருக்குமா- அதனால் புரட்சியாளர்களுக்கு ஆயுதம் கொடுக்க வேண்டியுள்ளது என்ற பதிலும் அவர்களிடம் இருக்கிறது. தங்கள் ஆயுத மக்கள் யுத்த பாதையில்தான் இந்திய மக்களை சுபிட்சம் நோக்கி அழைத்துச் செல்ல முடியும் என அவர்கள், எவ்வளவு சிறு குழுக்களாக- திட்டுக்களாக இருந்தாலும் நினைக்கின்றனர்.

விடுதலை இந்தியாவின் அரசாங்கங்கள் நக்சல் விஷயத்தில் அநேகமாக ஒரே மாதிரியே இன்றுவரை நடந்துகொண்டு வருவதையும் காணமுடியும். இப்போது ஆப்பரேஷன் ககர் போய்க்கொண்டிருக்கிறது.

ஆயுதம் என்பது அதன் வேலைக்கு உயிர்பலியை கேட்டுக்கொண்டே இருக்கும். அதற்கு வர்க்கம் இசம் என்பதெல்லாம் தெரியுமா .. கையில் வைத்திருப்பவர் தன் நம்பிக்கையில் எடுக்கின்ற முடிவைப் பொறுத்து பிறர் உயிர் தரிக்க முடியுமா இல்லையா என்பது அமையும்.

இந்த frontier anthology 750 பக்கங்களில் இவ்வியக்கத்தின் ஆரம்ப கொதிகால சூழல்களை சொல்லக்கூடிய வால்யூம்களாக இருக்கின்றன.

31-5-2025

June 2

படேல் 150 -6

ராஜ்மோகன் காந்தி எழுதிய ‘படேல் வாழ்க்கை’ அற்புதமான தேர்ந்த நெய்வு. ஒரே நூலில் அடர்த்தியாக படேல் காட்சிகள் உவப்பு காழ்ப்புக்கு அப்பாற்பட்டு நமக்கு கிடைக்கும் வகையில், அபாரமாக கண்ணில் ஒற்றிக்கொள்ளக்கூடிய உழைப்பை ராஜ்மோகன் தந்திருப்பார். 550 பக்க உயரமான நூல். வாய்ப்புள்ளவர் பார்க்கலாம்.

காந்தி படுகொலை சூழலில் , நேரு, படேல், பிரசாத், ராஜாஜி, ஆசாத் ஆகிய பெருந்தலைவர்கள் சேர்ந்திசை செய்யவேண்டிய கடமையை உணர்ந்தனர். சூழலும் அதற்கு வினையாற்றும் உளப்பாங்கும் எப்போதும் சேர்ந்திசையை தந்துவிடுமா.. இது நம் வாழ்க்கையிலும் நடப்பவைதானே..

அனைவரும் காந்தி என்கிற புலத்தில் ஒன்றாக நின்றவர்கள். காந்தியிடம் வேறுபாடு வந்தாலும் காந்தப்புலன் ஈர்ப்பு தாண்டி செல்லாமல் இருந்தவர்கள். ஒவ்வொருவரும் தனித்த பங்களிப்பு செய்த செல்வாக்கு கொண்ட ஆளுமைகள். நிலைமைகளின் சூழல் அறிந்து நேருவை லீடர் என வெளிப்படையாக ஏற்று அறிவிக்கலானார் படேல். காந்தி தன் வாரிசு எனச் சொல்லி சென்றதை நாம் மதித்து செயல்படவேண்டும் என நேரு குறித்து மன வருத்தம் கொள்பவர்களிடம் சொல்லலானார். இதன் பொருள் படேலுக்கு நேரு மேலோ, நேருவிற்கு படேல் மேலோ வருத்தமே இல்லை என்பதல்ல.

சமஸ்தானங்கள் இணைப்பில் மேனன் உதவியுடன் இராப்பகல், உடல்நிலை பொருட்படுத்தாது அரும்பணியாற்றினார் படேல். காஷ்மீர் நேருவின் தனிக்கவனமாக இருந்தது. இன்றுள்ள IAS முறைமையை , அவர்களின் நிர்வாக தனித்தன்மையை உறுதி செய்தல் என்பதற்கான அடிப்படைகளை சமைத்தவர் படேல். அரசியல் அமைப்பு அசெம்பிளியில் பெரும் பங்களிப்பை, முடிவு எடுப்பதில் தன் ஆற்றலை செலவழித்தவர் படேல். தனி வாக்களர் தொகுதி இனி கிடையாது என்கிற முடிவை எட்டுவதிலும், எஸ் சி எஸ் டி பிரிவினர்க்கு இட ஒதுக்கீடு என்பதிலும் பிரதான பங்காற்றியவர் படேல். அடிப்படை உரிமைகள் விவாதத்தில் தேர்ந்த பங்களிப்பை செய்தவர்.

மவுண்ட்பாட்டனுக்கு பின்னர் 1948 மத்தியில் கவர்னர் ஜெனரல் எவர் என்பதில் நேரு படேல் உடன்பட்டு நின்றனர். இருவரும் ராஜாஜியை எடுத்துக்கொள்ள வேண்டினர். ராஜாஜிக்கோ தயக்கம். நேரு உலகம் முழுக்க அறியப்பட்டவர் , அவர் கவர்னர் ஜெனரலாகவும்- இந்திய

மக்கள் அறிந்த காங்கிரஸ் ஸ்தாபனத்தில் பெரும் செல்வாக்கு கொண்ட படேல் பிரதமராகவும் ஆவது உசிதம் என்கிற கருத்தை ராஜாஜி தெரிவித்தார். நேரு நீங்கள்தான் கவர்னர் ஜெனரல் என உறுதிபட பேசிய பின்னர் ராஜாஜி ஏற்றுக்கொண்டார்.

இந்திய அரசியல் அமைப்பு சட்டம் நிறைவேற்றப்பட்ட சூழலில், குடியரசு என்கிற நடைமுறையில் குடியரசு தலைவராக யாரைக் கொணர்வது என்பதில் கடுமையான வேறுபாடு ஏற்பட்டது. நேருவிற்கு , கவர்னர் ஜெனரல் அனுபவத்தில் உள்ள ராஜாஜி அப்படியே குடியரசு தலைவர் ஆவது நல்லது என்கிற கருத்து மேலோங்கியிருந்தது. இந்திய அரசியல் அமைப்பு அவையை தலைவராக சிறப்பாக நடத்திய ராஜேந்திர பிரசாத் எடுத்துக்கொள்வதே நல்லது என்கிற கருத்து படேலிடம். பிரசாத் காங் தலைவராகவோ அல்லது திட்டக்குழு தலைமை பொறுப்பையோ ஏற்கலாம் என நேரு சொன்னதை காங்கிரஸ் அமைப்பினர் ஏற்கவில்லை. ராஜாஜியின் 1942 நிலை கடுமையான விமர்சனத்திற்கு வந்தது. ஏதும் செய்யமுடியா நிலையில், நான் ராஜினாமா செய்யவேண்டியதுதான் என நேரு சொன்னதும் எடுபடவில்லை. அப்படி நேரு சொல்வார், செய்யமாட்டார் என்கிற அனுபவத்தைச் சொல்லி பிரசாத் என்பதை ஏற்கவைத்தார் படேல்.

ராஜாஜியும் மனதில் வருத்தம் சற்று இருந்தாலும், எவ்வித மல்லு கட்டலும் நடத்தாமல் பிரசாத்தை ஏற்று சென்னை திரும்பிவிட்டார். சில மாதங்களில் ராஜாஜியும் டெல்லியில் இருந்து அமைச்சரவை சகாவென இருப்பது நல்லது என நேரு படேல் இருவரும் உணர்ந்தனர். நேரு வைத்துக்கொண்டிருந்த வெளியுறவை ராஜாஜிக்கு தருவது பயனளிக்கும் என படேல் தெரிவித்தார். நேரு உடன்படவில்லை. இலாக இல்லா அமைச்சராக்கினார் ராஜாஜியை நேரு.

புருசோத்தம்தாஸ் டாண்டன் மீது நேருவிற்கு மரியாதையும் உண்டு, சந்தேகமும் இருந்தது. அவரை காங்கிரஸ் தலைவராக்கினால் தொந்தரவு என நேரு கருதினார். படேலோ டாண்டனுக்கு காங்கிரஸ் ஏற்பு இருப்பதால் அதுதான் ஜனநாயக வெளிப்பாடாக இருக்கும் எனக் கருதினார். டாண்டனின் இந்தி வெறி, இந்து முதலிடம் போன்ற கொள்கைகள் காங்கிரசையும் அரசையும் பாதிக்கும் என நேரு கருதினார். அதுவரை தன்னை கடுமையாக விமர்சித்து வந்த கிருபளானியே டாண்டனுக்கு மேல் என தன் ஆதரவை மறைமுகமாக நேரு வெளிப்படுத்தலானார். படேல் நேருவால் பொது வேட்பாளர் ஒருவரை காணமுடியா சூழல் உருவானது. படேல் நேருவிடம் எவர் காங்கிரஸ் தலைவர் ஆனாலும் கொள்கை மாற்றம் ஏதுமிருக்காது என

அறிக்கையை சேர்ந்து விடலாம் என சமரசம் ஒன்றை சொன்னார். அது பெரிதாக பலனளிக்காது என நேரு கருதினார். தேர்தல் நடந்து டாண்டன் வெற்றி பெற்றார். கிருபளானி 200 க்கும் மேற்பட்ட வாக்குகள் அமைப்பில் குறைவாகப் பெற்றார்.

இந்த எல்லா நாடகங்களும், பிரதமர் நேருதான், ஆனால் அவர் ஏக சக்கரவர்த்தியல்ல, லிமிடேஷன் கொண்டவர் என்பதை நிறுவுவதாகவே அமைந்தன. Posts - position என்றால் படேல்தான் என்பதையும் அவை சேர்த்தே தெரிவித்தன. Issues ideas என்றால் நேரு என்கிற பாதையை அனைவரும் வணங்கி ஏற்காமல் இல்லை.

ஒருமுறை படேல் ஜெய்ப்பூர் செல்ல விமான பயணம் மேற்கொண்டார். மனிபென், அதிகாரிகள், ஜெய்ப்பூர் மகராஜா உடன் சென்றனர். விமானம் கோளாறு- என்னவாகுமோ மோதி நொறுங்குமா எனத் தெரியா நிலை உருவானது. படேலிடம் நிலைமையை சொல்லிவிட்டனர். அப்படியே எங்கேயாவது சாமர்த்தியமாக தரையிறக்கினாலும், கதவு நசுங்கி திறக்காமலும் போகலாம் என அனைத்து அம்சங்களும் தெரிவிக்கப்பட்டது. விமானி எப்படியோ ஆற்றுப்படுகை அருகே இறக்கிவிட்டார். எல்லோரும் வெளிவரலாம் என்ற நிலையில் படேல் ஜோக் அடித்தார். மகாராஜா பெரிய உருவம். அவர் முதலில் போனால் கதவில் மாட்டிக்கொண்டு எவரும் இறங்க முடியாதென்றார். சோகத்திலும் அனைவரும் சிரித்தனர். கிராம மனிதர் ஒரே ஒருவர் கண்ணில்பட்டார். அரைமணி நடந்தால் கட்டை வண்டி கிடைக்கலாம் என்றார். நடந்தனர். கட்டை வண்டியில் ஏறினர். எப்படியோ நேருவிற்கு தகவல் போய், AIR Van ஒன்று படேல் நிகழ்வை எடுப்பதற்காக இருப்பதையறிந்து அதை அனுப்பி படேலை ஜெய்ப்பூர் சேர்த்தனர்.

படேல் நோய்வாய்ப்பட்டு படுத்த படுக்கையில் இருந்தார். தலைவர்கள் பலரும் பார்த்துச் சென்றனர். நேரு படேலிடம் கவலைப்படாதீர்கள், சிறு சிறு வேறுபாடுகளை நாம் பேசிக்கொள்ளலாம். உடல்நிலை தேறி வாருங்கள் என கையைப்பற்றி ஆறுதல் சொன்னார். படேல் தன்னைப் பார்க்க வந்தவர்களிடம், நேருவை விட்டுவிடாதீர்கள், இந்த தேசத்திற்கு சிறந்த வழிகாட்டி அவர் என சொல்லத்தவறவில்லை.

நேரு வெளிநாட்டு பயணங்களின் போதெல்லாம் acting PM ஆக படேல் இருந்தவர். ஒரு போதும் அந்த இடத்திற்கு நேருவை வெளியேற்றிவிட்டு வர நினைத்தவராக அவர் இல்லை. நேரு மிகப் பொருத்தமானவர் என்றே படேல் கருதினார். ஆனால் மனிதர்கள் தங்களுக்கு ‘லிமிடேஷன்

’ உண்டு எனக் கருதாத போக்கை அவர் ஏற்க மறுத்தார். அதை உணரவைக்க முயற்சித்தார்.

பேட்டிகளிலும், நாடாளுமன்ற விவாதங்களிலும் சுருக்கமாக, தைப்பதுபோல் அவரது நாக்கின் பலம் இருந்தது. ஒருமுறை shortly என்பதை define செய்வீர்களா எனக் கேட்ட உறுப்பினரிடம், அது வெப்ஸ்டர் அகராதியில் already defined என நறுக்கென பதிலைத் தந்தார். இப்படி சுவையை கூட்டக்கூடிய உறுதியான மனிதர் படேல்.

விடுதலைப் போராட்ட மரபில், நவீன இந்திய கட்டுமானத்தில் மனித மனங்கள் அவருக்கும் கொஞ்சம் இடம் கொடுக்கும் தாராளத்தைக் காட்டட்டும்…

2-6-2025

June 4

ராஜ்மோகன் காந்தி 90 யை நோக்கி நகர்ந்து கொண்டிருப்பவர். தேவதாஸ்- லஷ்மியின் மகன்களில் ஒருவர். காந்திக்கும் ராஜாஜிக்கும் பேரன். ஏராள நூல்களின் ஆசிரியர்.

ராஜாஜி, படேல், காந்தி, எல்லை காந்தி என பல தலைவர்களின் வாழ்க்கை வரலாற்றை ஏராள செய்திகளுடன், நல்ல ஆய்வுப் பாங்கில் தந்தவர்.

நேரு, படேல், கிருபளானி, சாஸ்திரி, இந்திரா, மொரார்ஜி, ஜெகஜீவன், ராஜிவ், வி பி சிங், சந்திரசேகர், பெர்னாண்டஸ், ராம்நாத் கோயாங்கா என பலருடன் இளம் வயதிலேயே பழக, உரையாட வாய்ப்பு பெற்றவர்.

காந்தி படுகொலையின் போது 12 வயது பள்ளி மாணவனாக, பள்ளிக்கு செய்தி வந்து, அப்பா தேவதாசின் நண்பர் ஒருவருடன் கொலையுண்ட காந்தியை, தன் தாத்தாவை அவர் பார்க்க நேர்ந்தது. எவன் கொன்றான் என்கிற பழி எண்ணம் ஏதுமில்லாமல், பார்க்கும் போதெல்லாம் முதுகில் தட்டிக்கொடுக்கும் தாத்தாயின்மையின் சோகம் கவ்விய சூழலில் தான் இருந்ததாக அவர் நினைவு கூர்ந்துள்ளார்.

அப்பா தேவதாஸ் 1957ல் இறக்கும்போதும் அவர் அமெரிக்க படிப்பு சூழலில் இருந்தார். அக்காலத்தில் மூன்று நிமிடம் எப்போதாவது அப்பாவிடம் வெளிநாட்டு டிரங்கால் பேசும் போது கிடைக்கும் உற்சாகத்தையும் அவர் சொல்லியுள்ளார். தட்டுதடுமாறி, அப்பாவின் முகத்தை இறுதியாக பார்க்க வந்தவர்க்கு சாம்பலும் எலும்பும் காட்டப்பட்ட சோகமும் ஏற்பட்டது. அம்மா லஷ்மி பற்றி ராஜ்மோகனோ, கோபாலகிருஷ்ண காந்தியோ கொஞ்சம் விவரமாக எழுதக்கூடாதா என எனக்குத் தோன்றும்.

அப்பா ஹிந்துஸ்தான் டைம்ஸ் அலுவலகமும் வீடும்- மேலும் கீழும் இருந்த இளமைக்காலம். ஏராள நண்பர்கள் வந்து போவது, விடுதலை இந்தியா குறித்த உயரிய விவாதங்கள் காலில் விழும் நல்ல சூழல்.

ராம்நாத் கோயாங்கா இந்தியன் எக்ஸ்பிரஸ் எடிட்டர் வேலையை இரண்டு ஆண்டுகள் ராஜ்மோகனுக்கு கொடுத்திருந்தார். புத்தகம் எழுதுதல், ஆய்வுலக ஆர்வத்தால் ராஜ்மோகன் அதைவிட்டு வெளியேறினார்.

அப்பா தேவதாசோ , மாஸ்கோவின் தூதராக போ என நேருவால் 1949ல் சொல்லப்பட்டும், இல்லை சுதந்திரமான பத்திரிகைப்பணி என்கிற பெரும் தாகத்தை இழக்க விரும்பவில்லை என்றவர். அப்பா அம்மா

குழந்தைகளை வெளிநாட்டிற்கு அழைத்துச் செல்தல், தொடர்புகளை உருவாக்குதல், முடிந்த அளவு படிக்க வைத்தல் என்பதில் கருத்தாக இருந்தனர். தன்னிடம் இருக்கு சேமிப்பெல்லாம் குழந்தைகள் படிக்கவே என தன் சொந்த ஆரோக்கியத்தைக் கூட சற்று தள்ளி வைத்து தேவதாஸ் வாழ்ந்து மறைந்தார்.

ராஜ்மோகன் , இந்திராவின் எமர்ஜென்சிக்கு எதிராக தன் மனைவி உஷா அவர்களுடன் சேர்ந்து போராடினார். வி பி சிங் நட்பால், அமேதியில் ராஜிவ் காந்திக்கு எதிராக நிறுத்தப்பட்ட தோல்வியைக் கண்டார். பின் ராஜ்யசபா உறுப்பினரானார். அவரிடத்தும் கவர்னர் ஆகிறீரா என வி பி சிங் காலத்தில் கேட்கப்பட்ட தகவலை அறியமுடிகிறது. ஆம் ஆத்மி வந்தபோது அதில் சேர்ந்து டெல்லி தொகுதி ஒன்றில் போட்டியிட்டு தோற்றார் ராஜ்மோகன்.

அவரின் எழுத்துக்களை ரசித்து படிக்கக்கூடிய வாசகன் என்ற வகையில் இந்த இரண்டு தேர்தல் சோதனைகளையும் அவர் செய்யாமல் இருந்திருக்கக்கூடாதா என எனக்கு தோன்றுகிறது.

ராஜ்மோகன் காந்தியின் ஏராள நூல்களுள் ஒன்று 2022ல் வந்த

India After 1947- Reflections and Recollections. மேற்கூறிய குடும்ப செய்திகளை இதில் அவர் நினைவு கூர்ந்துள்ளார். அளவில் மிகச் சிறிய ஆனால் அடர்த்தியான நூல்தான். அய்ந்தே இயல்கள்தான்..

Yes there is Ram, Partition and Akhand Bharat, India after 1947, Gandhi is safe, Where do we go from here. ஒவ்வொன்றும் 20-25 பக்க essay எனலாம்.

சுதந்திரம் , சமத்துவம், சகோதரத்துவ தாகம் அனைத்திலும் வெளிப்படும். ராமர் என்கிற இறைஉணர்வு அல்லது இதிகாச கதை மரபு எப்படி தங்கள் வீட்டில், இந்நாட்டின் ஆரம்ப அடித்தளமிட்ட தலைவர்கள் மத்தியில் இருந்ததை அவர் சொல்கிறார். ராமஜென்ம பூமி கடந்த 40 ஆண்டுகளில் எப்படி பெரும் அரசியலாக்கப்பட்டது என்பதையும் சுருக்கமாக வைக்கிறார். எந்த இந்தியா நமக்கு கிடைத்தது என்றால்

In India it seemed that religion would not decide your nationality or determine your status as a citizen…democracy in governance and equality in rights as norms

இன்று எங்கும் ‘நீ வெளியாள்’ என்கிற குரல்..infectious toxic

ஆனாலும் இதை எழுதிய 87 வயதிலும் அவர் நம்பிக்கை கொள்கிறார். However , though dizzied by power , you are still a human being carrying a spark of truth somewhere inside of you

இன்றுள்ள சமுக ஊடகங்கள் 'vehicles to create instant hate' என ராஜ்மோகன் எழுதியுள்ளார். இதை அன்றாடம் நான் உணர்கிறேன். எவரையாவது திட்டாமல், குத்தி காயப்படுத்தாமல் தங்கள் ஆன்மா சாந்தியடையாது என செயல்படுபவர்களிடத்தில் சொல்ல என்ன மிஞ்சும்.. விவாதம் என்பது வெறும் வசவுகளான சூழல்..

காந்தி எங்கும் தென்படுகிறார். பெயரால், ரூபாயால், சிலையால், படங்களில்..ஓ அதனால் அவரை படிக்க வேண்டும் என்கிற அவசியமில்லா இந்தியாவாகிவிட்டதே என்கிற கவலையில் , இனியும் அவரை பிறாண்டாதீர் என்கிற வேண்டுகோளை காட்டும் கட்டுரை இதில் இருக்கிறது. ராஜ்மோகன் எழுதியுள்ளார்

If we still want to solve our problems , or to blame him when they are not solved, we are only belittling ourselves. Not that we can injure him..he is safe where he is

அவரின் வருத்தத்தை இதில் நாம் உணரமுடியும்.எது குறித்தும் கொஞ்ச உழைப்பை கூட செய்யாமல், சண்ட பிரசண்டனாக , மனம் போன போக்கில் வெறுப்பை உமிழும் உலகை என்னவென சொல்வது..

பக் 65ல் கலைஞர் கருணாநிதி பற்றிஅவர் சொல்லும் தகவலில் பிழையிருப்பதாக நினைக்கிறேன். ராஜ்மோகன் கலைஞரை சந்திக்கிறார். அவர் குடும்ப உறுப்பினர்களை அறிமுகப்படுத்துகிறார். இங்கு ராஜ்மோகன் எழுதியிருப்பது

I had a decent equation with Karunanidhi too. Once Rajaji introduced me Karunanidhi in the latter's home , Karunanidhi had me meet his family too, including his wife Jayathi Amal- She is Harijan , Karunanidhi proudly said while introducing me to her.

நினைவு பிசகு என்றால் எவராவது அவருக்கு சுட்டிக்காட்டியிருக்கவேண்டும்.

சென்னை கல்கி தோட்டம் வாழ்க்கை, கிருபளானிக்கு ராஜ்மோகனும் அவரது துணைவியாரும் பணிவிடைகள் செய்தது போன்ற பல நினைவுகளை ராஜ்மோகன் இந்நூலில் பகிர்ந்துகொண்டார். கொஞ்சம் அரசியல் அலசல்கள் - கொஞ்சம் நினைவுகள் என இந்நூல் செல்கிறது

4-6-2025

#RajmohanGandhi

June 8

நட்வர் சிங் எழுத்துக்களில் பல பெரும் ஆளுமைகள் குறித்த கசிவு செய்திகள், துண்டு துக்காணி செய்திகள் கிடைக்கும்.

நட்வர் சுயசரிதை உட்பட ஏராள நூல்களை எழுதியவர். 30 ஆண்டுகளுக்கு மேலாக அயல் உறவுத்துறை- தூதரக பணிகளின் அனுபவத்தை பெற்றவர். அமைச்சராகவும் இருந்தவர். இந்திரா குடும்பத்திற்கு அணுக்கமானவர். இதனாலேயே மொரார்ஜியால் சந்தேகத்துடன் பார்க்கப்பட்டவர். கடும் வசவுகளுக்கும் உள்ளானவர். வசவுகளையும் செய்தவர். பாட்டியாலா சமஸ்தான மாப்பிள்ளை. பாட்டியாலா மகாராஜா 1947 விடுதலையின்போது, எந்த பிரச்சனையும் இல்லாமல் இந்தியாவுடன் இணைய சம்மதித்தவர். மாமியார் மகாராணி ஆரம்பத்தில் இந்திராவிற்கு நெருக்கமாக இருந்தவர். பின்னர் மொரார்ஜியுடன் நின்றவர்.

நட்வரின் walking with Lions மிகவும் சுவாரஸ்யமான, உயர் அரசியலில் நிலவும் சில வம்பு பேச்சுக்களை நம் போன்ற வாசகர்களுக்கு கடத்துகின்ற நூல். ஏராள வம்பு துணுக்குகளை படிக்கும் வாசகரால் உணரமுடியும். அந்த குறுகுறுப்பு யாரிடம் தான் இருக்காது..

நேரு , இந்திரா , எல்லை காந்தி போன்றோர் குறித்து சற்று மேம்பட்ட மதிப்பீடுகள் இருக்கும். நேருவின் சகோதரிகளான விஜயலட்சுமி, கிருஷ்ணா உறவுகளின் சிக்கல்கள் சற்று காட்டப்பட்டிருக்கும்.

நட்வர் மெயில் டுடேவில் எழுதிய 50 கட்டுரைகளின் தொகுப்பாக இந்நூல் 2013ல் வந்தது.

பிரதமராக வந்த மொரார்ஜியை சந்தேகம் பிடித்த, காந்தியவாதியாக நடிக்கும் ill tempered Pm என நட்வர் திட்டுவதை பார்க்க முடியும். இந்திரா , தூதர் நட்வர் வழியே ஏராள பணங்களை அனுப்பி விளையாடுகிறார் எனமொரார்ஜிக்கு சந்தேகம். அதிகாரபூர்வமான நடைமுறையான diplomatic bag குறித்து பிரதமருக்கு என்னவென கூட தெரியவில்லை எனக் கிண்டல் செய்திருந்தார் நட்வர்.

பிரதமர் எவர் வெளியே பயணம் வந்தாலும் , அவர்கள் உணவு பட்டியல் வருவது வழக்கம். மொரார்ஜியின் உணவு பட்டியலை எழுதிவிட்டு நட்வர் சொல்கிறார்

His favourite drink was not mentioned. Everyone knew what it was. Some Gandhian diet for a pseudo Gandhian என்று. மொரார்ஜி குறித்து நட்வர் எப்படி கிண்டல் செய்துள்ளார். நேரு, இந்திரா, ராஜிவ்க்கு கூட இருந்த ஆப்ரிக்கா மற்றும் உலகம் குறித்த பார்வை மொரார்ஜிக்கு இல்லை என்கிறார்.

ராஜாஜி குறித்தும் உயர் மதிப்பீட்டை நட்வரிடம் பார்க்க முடிகிறது. A progressive conservative என்கிற மதிப்பீடு கொடுக்கப்பட்டுள்ளது. 1927ல் காந்தியால் ‘ I do say Rajaji is the only possible successor’ என அவர் சொன்னதை பார்க்கிறோம். பின்னர் காந்தி , ராஜாஜியல்ல - நேருதான் வாரிசு என்று அறிவித்தார்.

நேருவும் , கவர்னர் ஜெனரலாக இருக்கும் ராஜாஜி குடியரசுத் தலைவர் ஆகட்டும் என்றார். படேலும் , காங்கிரசில் பெரும்பான்மையும் பிரசாத் வரவேண்டும் என நினைத்ததால் ராஜாஜி வரமுடியாமல் போனது. பிரசாத்துக்கும் நேருவிற்கும் பிரச்சனைகள் இருந்தன. பொது இடத்தில் கூட குடியரசுத்தலைவர் பற்றி பேசுகிறோம் - கமெண்ட் செய்கிறோம் என நினைக்காமல், ஏதோ தனது ஒரு பழைய சகாவை சொல்வதுபோல் பேசிவிடும் பழக்கம் நேருவிடம் இருந்தது. படேல் போன்ற மற்ற சகாக்களிடமும் பிரதமர் எனப் பாராமல் ‘கமெண்ட்’ செய்யும் பழக்கம் இருந்துள்ளது. Gossiping மனித இயல்பு போலும்.

1962ல் காந்தி அமைதி நிலையம் சார்பில் உலக நாடுகள் அணுஅயுத தடைகோரி ராஜாஜி தலைமையில் காந்தியர் திவாகர், அரசியலமைப்பு அறிஞர் சிவராவ் சென்றனர். நேரு ராஜாஜியுடன் வேறுபட்டு இருந்த நிலையிலும் ராஜாஜி பயணம் தங்கும் ஏற்பாட்டில் கவனமாக இருந்தார்.

அமெரிக்க அதிபர் கென்னடியை பார்க்க stretcher cases வந்துள்ளனர். மூவர் வயதைக் கூட்டினால் 223 ஆண்டுகள் என நட்வர் கிண்டலாக சொன்னார். நட்வர் வீட்டில் ராஜாஜி தங்கியிருந்தார். இளைஞரும் முதியவரும் உரையாடினர்.

நட்வர் : நீங்கள் ஏன் வாழ்க்கை வரலாறு எழுதக்கூடாது?

ராஜாஜி: நம்மிடம் வரலாற்று உணர்வுண்டா? எனக்கு ஏகப்பட்ட வேலை இருக்கு

நட்வர்: காந்தி நேரு எழுதலையா , இப்படி ஒவ்வொருவரும் நினைத்தால் வரலாறு என ஏதாவது கிடைத்திருக்குமா?

நீங்கள் கவர்னர் ஜெனரலாக இருந்தபோதே செய்திருக்கலாம்

ராஜாஜி: ஏதுப்பா நேரம். பிரதமருக்கும் துணைபிரதமருக்குமான பஞ்சாயத்தை தீர்க்கவே நேரம் போனது

நேரு தான் பின்னரும் டெல்லியில் இருங்கள் என்றார். நேரம் சரியா போய்விட்டது.

நட்வர்: பெதிக் லாரன்ஸ் 1953 ல் சொன்னார், என்னை மிகவும் கவர்ந்த தலைவர் ராஜாஜி என்று

ராஜாஜி: அப்படியா சொன்னார். மகிழ்ச்சி. ஏன் திரும்ப கல்யாணம் செய்யவேண்டியதாச்சு என்று எனக்கு விளக்கமாக கடிதம் எழுதியவர்ப்பா அவர்.

நட்வர், இந்த கொலம்பியா மாணவர்கள் பற்றி பிரமித்துப் போனேன். நம்மூர் தர்மா, கர்மா பற்றியெல்லாம் என்னிடம் கேள்விகள் எழுப்பினார்கள் என்றார் ராஜாஜி

திரும்ப 13 ஆண்டுகள் கழித்து பார்த்தபோது, இந்திராவின் தோழமையை ராஜாஜி நன்றியுடன் நினைவு கூர்ந்தார் என்கிறார் நட்வர். தேவதாஸ் இறந்த துக்கத்தில் லஷ்மி. லஷ்மியை வந்து சகோதரி போல அணைத்து காரில் கூட்டிக்கொண்டு துக்கத்தை தணிக்க தன்னால் ஆனதை இந்திரா செய்தார். நேரு இதன் பின்புலமாக இருந்தார் என்பதும் பெரும் உண்மை.

ஒருமுறை இந்திராவுடன் ஆப்கான் சுற்றுப் பயணத்தில் நட்வரும் இருந்தார். கொஞ்சம் 'டிரைவ் ' போய் பார்க்கலாம் என இந்திரா நினைத்ததால் காரில் சென்றனர். காபூலில் வழியில் காடுபோலிடம் ஒன்றை கடக்கும்போது, பாபர் நல்லடக்கம் செய்யப்பட்ட இடமிது என்றனர். இந்திரா அதை பார்க்க வேண்டும் என்றார். பராமரிப்பின்றி உள்ள இடம். உங்களை முறையாக வரவேற்க எந்த ஏற்படும் இல்லை என்றனர். நடந்து போகவேண்டும் என்றனர்.வாங்க நடப்போம் என மோசமான பாதையில் சென்று , resting place of emperor Babur என தேடி கண்டுபிடித்தனர். கொஞ்ச நேரம் மவுனமாக அங்கு இந்திரா அம்மையார் நின்றார்.வரலாறு நட்வர் என்றார்.ஆமாம் இரு வரலாறு, நீங்கள் இங்கு வந்ததால் என்றார் நட்வர். இந்திராவின் வரலாற்றுணர்வு அபாரமான ஒன்று என்பதை இந்நிகழ்வு காட்டுகிறது.

அடுத்த பத்தாண்டுகளிலேயே பாபர்- ராமர் பெரும் புயலாக எழுந்த அரசியலை நினைத்தால், இந்திரா எவ்வளவு கம்பீரமாக உயர்ந்துநிற்கிறார் என எண்ணமுடியும்.

1969 குடியரசு தலைவர் தேர்தல் போட்டியானது.கிரி , சஞ்சீவி என்ற போட்டி நிலை. சிண்டிகேட் சஞ்சீவிதான் என பிரயத்தனப்பட்டனர். இந்திரா வெளிச்சொல்லாமல் கிரிக்காக நின்றார். கிரி வென்றார். அடுத்த குடியரசு தலைவரை வரவேற்று உரை நல்க முன்கூட்டியே இரு உரைகளை இந்திரா தயார் செய்யச் சொன்னார்.ஒன்று கிரி வென்றால்

அதற்கேற்ப, தோற்றால் அதற்கேற்ப…என்ன செய்வது இதெல்லாம் பெரிய இடத்து ராஜாங்க விவகாரங்கள்..

ஒருமுறை 'சோவியத் எம்பசி' லண்டன் அலுவலகத்தில் விழா நடந்தபோது, மவுண்ட்பாட்டன் நட்வரிடம் கடுமையாக குறைபட்டுக்கொண்டார். என்னப்பா நானும் என் மனைவியும் இருக்கிற போட்டோவை ராஷ்டிரபதி பவன் ' பேஸ்மெண்டில்' கொண்டு போய் போட்டிட்டிங்க.. நட்வர் நிச்சயம் அப்படியிருக்காது, கேட்டுவிட்டு சொல்கிறேன் என பதில் அளித்தார்.

அடுத்து 1975ல் நேபாள் செல்லும் வழியில் பிரின்ஸ் சார்லஸ் உடன் அவரது மாமாதாத்தா மவுண்ட்பாட்டனும் டெல்லி விடியற்காலை 2.30க்கு வந்தனர். அழைத்து உபசரிக்க போனவர்களுள் நட்வரும் ஒருவர். அந்த நேரத்தில் கூட மவுண்ட் என்ன பேஸ்மெண்ட்டில்தானே, நான் சொன்னது சரியா எனக் கேட்டார்.

நட்வர் இல்லை இல்லை , முக்கியமாக கண்ணில் படும் இடத்தில் தான் இருக்கிறது என்றார். குடியரசு மாளிகை சென்று பார்க்கலாம் என பிறகு அழைத்துச் சென்றார். உள்ளே வந்த மவுண்ட்பாட்டன் , நான் இங்கே தானே எங்கள் போட்டோவை மாட்டி சென்றேன். அந்த இடத்திலிருந்து எடுத்துவிட்டீர்களே என குறைபட்டுக்கொண்டார். பேஸ்மெண்டில் என அவருக்கு போன தகவல் தப்பு என்பதைவிட, இடம் மாறி வைத்துவிட்டீர்கள் என்ற குறையை அவர் காட்டினார். இப்படியெல்லாம் obsession இருந்தால்தான் மனிதர்களோ..

குடியரசு தலைவராக உயர்ந்த ஆர் வெங்கட் ராமனை the gentleman politician, calm self assurance கொண்டவர் என நட்வர் எழுதுகிறார். ஜெயில்சிங் ராஜிவ் விவகாரத்தில் ஆர் வி அற்புதமாக பணியாற்றி நிலைமைகளை தீவிரமாகமல் கட்டுக்குள் கொணர்ந்தார் என்கிறார் நட்வர்.

ராஜிவ் படுகொலைக்கு பின்னர் பல நாட்டு தலைவர்கள் சோனியாவை சந்தித்து ஆறுதல் தெரிவித்தனர். பெனாசிரும் வந்திருந்தார். ஆறுதல் சொல்லிவிட்டு, அரசியல் பக்கம் போகாமல் உன் குழந்தைகளை வளர்க்க காலத்தை செலவிடு என உரிமையுடன் பெனாசிர் பேசினார். பிள்ளைகளான ராகுலும் பிரியங்காவும் இப்போ எதுக்கு இந்த பேச்சு என முணுமுணுத்தனர். நிலைமையை அறிந்த நட்வர், பெனாசிர் உங்க அப்பா இறந்தபோது நீங்கள் அதை செய்யவில்லையே, நேரு குடும்பத்தார் இந்தியா குறித்து நன்கு அறிவர் என்றார். பெனாசிர்

விடாமல் இப்படி உசிப்பேத்தி அக்குடும்பத்தை நாசம் செய்யாதீர் என்றார். எவரும் ரசிக்கவில்லை என நட்வர் பதிவு செல்கிறது.

யார் பிரதமர் என்ற கேள்விக்கான ஆலோசனை ஹக்சரிடம் சென்றது. அர்ஜுன் சிங், திவாரி, பவார் எல்லாம் அவரவர் முயற்சியில் இருந்தனர். ஹக்சர் சங்கர் தயாள் பெயரைச் சொன்னார். நட்வர் அருணா ஆசப் அலியுடன் சென்று துணை ஜனாதிபதி சங்கர் தயாளிடம் சொல்லினர். எந்த ஆசைக்கும் வீழந்து விடாமல், இல்லை என் வயதிற்கு அப்பதவி நியாயமில்லை. வேறு பொருத்தமானவரை பாருங்கள் என பிரதமர் பதவியையே நிராகரித்துவிட்டார். ஹக்சர் அடுத்து நரசிம்மராவ் எனச் சொல்லி , சோனியா ஏற்புடன் அவர் பிரதமரானார்

நரசிம்மராவும் பேரறிஞர். நேரு மேற்கு கல்வியில் சிந்திக்க நேர்ந்ததால் அவருக்கு discovery of India தேவைப்பட்டிருக்கலாம். ஆனால் பிவிஎன் அவர்களோ என , நட்வர் எழுதிய வரிகள்

A man of learning, scholar, linguist and a thinker of the first order. His roots were deep in the spiritual and religious soli of India. He did not need to discover India.

இந்த வரிகளை நேருவை கொண்டாடுவர்களால் ரசிக்கமுடியாமல் போகலாம்.

நட்வரின் வாழ்க்கை காங்கிரசிலிருந்து வெளியேற்றம் என்கிற காட்சியை காணாமல் போகவில்லை.

நட்வர் எழுத்துக்கள் இப்படி பெரிய மனிதர்கள் குறித்து கசியவிடப்படும் தன்மையிலான ஒன்றாக அமைந்துள்ளது

8-6-2025

June 11

சவீதா அம்பேத்கர் அவர்கள் எழுதிய அம்பேத்கர் (My Life with Dr Ambedkar) படித்தவுடன் சில பதிவுகளை செய்திருந்தேன். அந்த நூல் ஓரளவு பேசப்பட்ட நூல். டெல்தும்டே உட்பட ஆய்வாளர்கள் கூட சில இடங்களில் reference ஆக எடுத்துக்கொண்ட நூல் கூட.

அதை மனதில் வைத்துக்கொண்டு , பேரா பி வி சுகதேவ் எழுதிய நூலான Great Sacrifice of Maisaheb Ambedkar நூலை வாசிக்கையில் பெரும் ஏமாற்றமே கிடைத்தது. நூலில் சற்று வம்புகள் இருக்கலாம். மேம்பட்ட வாத பிரதிவாதங்கள் கட்டப்படலாம். நூல் முழுவதுமே ‘அந்த ஆள் எழுதியது, இந்த ஆள் எழுதியது பொய்- அவதூறு- மோசம்’ என 230க்கும் மேற்பட்ட பக்கங்கள் வரிகள் சென்றால், அந்நூலை என்னவென எழுதுவது எனத் தெரியவில்லை.

அம்பேத்கர் மறைவிற்கு பின்னர், அவருடன் ஏதோவொருவகையில் நெருக்கமாக இருந்தவர்கள், அன்றாடம் சில ஆண்டுகளாவது அருகில் இருந்து பார்த்து எழுதக்கூடியவர்கள் எனச் சிலர், ஒருவருக்கு ஒருவர் மோசம் என எழுதி முடித்துவிட்டால் வாசகருக்கோ, அம்பேத்கர் குறித்து அறுபடா செய்திகளை புரிந்து கொள்ள விழையும் மாணவருக்கோ என்ன கிடைக்கும்?

டாக்டர் சவீதா குறித்த விசாரணை போல், ஒவ்வொருவரும் அவரை எப்படி கூண்டில் ஏற்றப்பார்த்தார்கள், அவ்வளவு பேரும் பொய்யர்கள் எனச் சொல்வதற்காக இந்நூலை இந்த ஆசிரியர் எழுதியிருப்பதைக் காணமுடிகிறது. மிக அற்பமானவை, குழந்தைத்தனமானவை எனக் கருத முடிந்த அம்சங்கள் கூட trigger செய்யப்பட்டு ஒருவருக்கு ஒருவர் காயப்படுத்திக்கொள்ள முடியும் என்பதற்கு இந்நூலும் ஒரு சாட்சி.

இந்த நூலை டாக்டர் சவீதா அவர்களின் வாழ்க்கை வரலாறாக இருக்குமோ என நினைத்து வாங்கி ஏமாந்தேன். அதைத் தேடி செய்திருந்தால் நன்றாகக் கூட இருந்திருக்கும். ஆய்வுலகு சற்றும் பொருட்படுத்த முடியா பரஸ்பர முத்திரை குத்தி கீழே தள்ளுவதின் தொகுப்பு போல இந்நூல் எனக்குப் பட்டது. இந்திராணி ஜெகஜீவன் ராமின் நூல் சிறப்பு எனலாம். டாக்டர் சவீதாவும் தன் நோக்கில் அம்பேத்கரை காட்டியிருந்தார் எனலாம்.

இந்நூலில் முதல் இயல், டாக்டர் சவீதா எழுதிய அம்பேத்கர் நூலை 50 பக்கங்களுக்கு summarise செய்யப்பட்ட ஒன்று. அடுத்த இயல் Gang of Four என சுகதேவால் சித்தரிக்கப்பட்டுள்ளவர்களின் எழுத்துக்கள் குறித்த

விளாசல். இந்த நால்வர் நானக்சந்த்சட்டு, கயர்மோட், சோகன்லால் சாஸ்திரி, சங்கரானந் சாஸ்திரி.

இவர்கள் அம்பேத்கர் மரணத்தை கொலையாக, சவீதா - அம்பேத்கர் திருமணத்தை சதியாக பார்த்து எழுதியுள்ளவற்றை சுகதேவ மறுக்கும் பக்கங்கள். அந்த லேடி, she என அவர்கள் எழுதினால் கூட பேரா சுகதேவிற்கு கோபம் வருகிறது. அம்பேத்கர் god எனில் Maisaheb Goddess எனச் சொல்லும் அளவிற்கு சில இடங்களில் வரிகள் .. அவர்கள் இருவரின் உறவும் சூரியன்- பூமி போன்றது எனும் வரிகள்.

இந்நூல் ஒரு விஷயத்தை மய்யமாக வைத்து சுற்றுகிறது. ரட்டு, சாஸ்திரி - சாஸ்திரி, கயர்மோட் போன்றவர்கள் அம்பேத்கர் குறித்து மிக உயர்வான பதிவுகளை செய்யும்போது, அவரது துணைவியாரான சவிதா குறித்து ஏன் அவதூறுகளை எழுத வேண்டும்… வேறுபாடுகள் வளப்படுத்துவதற்கு உதவினால் சரி..ஆனால் சந்தேகங்களை அள்ளித் தெளித்து எதையும் நிருபிக்க வேண்டிய பொறுப்பின்றி எழுதுவது சரியா இந்நூல் கேள்வி எழுப்புவதாக வைத்துக்கொள்ளலாம். ரட்டுவோ, சாஸ்திரிகளோ, சுகதேவோ அப்படியே தங்களிடம் ஆவணங்கள்- original letters என ஏதாவது வைத்திருந்து அப்படியே அதை வெளியிட்டு விட்டால், வாசகன் பார்த்துக்கொள்வான்.

டாக்டர் சவீதா குறித்த சர்ச்சைகளில் சிக்கி பரஸ்பரம் குற்றச் சாட்டுகளை அடுக்கிக்கொள்ளாமல், அவரவர் வசம் இருக்கிறவற்றை தங்கள் நூல்களில் சேர்த்து தருவது நலமாக பயன்பட்டிருக்கும். அம்பேத்கர் இலக்கிய கிடங்கு இன்னும் மிக அதிகமாக நிரம்ப வேண்டியிருக்கலாம். அவர் குறித்த பிரமிப்பூட்டும், விமர்சனவாயிலை திறக்கும் எழுத்துக்கள் மேலும் மேலும் வரவேண்டிய அவசியம் இருக்கலாம். வெறும் புகழ்பாடலாக இல்லாமல், நம்முடன் வாழ்ந்த சக மனிதரின் பல்வேறு குணாதிசயங்களை ஆதாரங்களுடன் வெளிப்படுத்தக்கூடிய எழுத்துக்களாக அவை மேலும் மேலும் வரவேண்டிய அவசியம் இருக்கிறது.ஆய்வுலகில் அரசியல் சாய்வு,வேறு சாய்வுகள் இருக்கலாம். ஆனால் முழுமையாக bias ஆக ஆய்வாளர்கள் இருக்க முடியாது. இருக்கவும் கூடாது.

வாங்கி ஏமாந்த நூல்களில் இதுவும் ஒன்று

11-6-2025

June 12

Challenging the FA 2025 as Unconstitutional

The S 30 pensioners have successfully made their WP listed in the SC on 23-5-2025. One can understand the felt urgency of other CG pensioners' Associations joining the court rooms with S30, but fail to understand the interests shown by BSNL absorbed combined pensioners joining this chorus. BSNL pensioners are not at all in the ambit of the provisions of this Act which clearly defines who are the pensioners, for whom the act is framed. So their spending at this juncture is sheer wastage of money.

The prayer of S 30 is on three aspects . They want their Delhi judgement upheld by SC dated 4-10-2024 must be implemented with arrears , also with 12 % interest for the delayed period. The other aspect is praying an appropriate writ or order declaring

" validation of CCS pension rules and principles for Expenditure on pension liabilities from the consolidated fund of India " as inserted by the Finance Act as unconstitutional, ultra wires, and illegal. This only becomes a hurdle for them to get their Delhi judgement implemented.

The point missed by many is, this validating act validated the complete parity OM 12-5-2017 also without any prejudice, and the benefits obtained by the past pensioners as on 1-1-2016 untouched.

When one accepts CCS Pension Rules which have been in operation since 1972 and subsequently 2021, then how the validation of the same becomes illegal , ultra wires and unconstitutional .

One can understand ' questioning the govt' on the issue of distinction, because there was an option to seek complete parity as per pay matrix like that of existing pensioners to the past pensioners given vide its om may 12, 2017. But one should also understand, it was the recommendation of 7 th CPC only, implemented by this same government. Upto 7th CPC, and even in the 7th CPC , the distinction between existing pensioners and past pensioners as per the cut off date was also there vide OM 4-8-2016. The distinction was, while existing pensioners got their change of pension through pay revision, the past pensioners got pension revision as per the recommendation.

What is the issue or main contention?

Treatment of existing and past pensioners- right to impose distinctions

Govt's felt 'Necessity to deal with the interpretation of the courts' and to address the issue relating to pensioners of the Central Government and expedient to retain the relevance of having such distinction by a validation legislation, dealing with pension rules and instructions issued from time to time in this regard.

How distinctions emanate?

May be as per recommendations of CPC, one as Pay revision to the existing pensioners and the other pension revision to the past pensioners on a particular cut off date.

So the distinction emanates - On the date of retirement or the date of operationalisation of an accepted recommendation of a CPC

The central govt checked the distinctions prevailed all along as per various CPCs and OMs issued and validated the same through this Act.

Though the Act has its power brought to CG retrospectively back from 1972, previous court cases or the benefits accrued and implemented as per the directions on or after 1972 till the date of enactment of this act viz 29-3-2025 were untouched by this Act. But citing them in the future cases becomes questionable by this act.

To validate means

- to make officially acceptable or approved, especially after examining it

-To state or show that something is legal or official

-To prove or confirm that it is true or correct

- to put mark on to show that it has been checked and is official

- Validate implies establishing validity by authoritative affirmation or by factual proof

This act only defines who is a pensioner vide its para 148 a , b.- and as per this definition BSNL combined service Retirees getting pension as per CCS pension rules are not covered in this act. Spending money for an ACT which is not directly involving is not a prudent act.

BSNL absorbed pensioners were already a distinct pensioners since 1-10-2000, comparing the CG Retirees pensioners. No new distinction is found amongst them. There was also distinction maintained amongst bsnl combined service pensioners on 1-1-2007 between the existing and past pensioners on that date. So distinctions were there . The Govt is validating the distinctions amongst CG pensioners thro this act , challenging the court cases that smashed distinctions. Even after Nagara case, the distinction between existing and past pensioners were there till 7 th CPC OM dated 12-5-2017.

Govt has power to legislate and bring an ACT. Court may challenge that as per their wisdom of the constitution . Govt may set the gaps filled and enact a new one. This one is cyclic in any democratic republic. Associations can exercise their democratic right to challenge the govt or lower courts. Relevance of doing is debatable in any organisation…

As usual I understand my limitations, that does not also mean that I am undermining the worth of my views.

08 hrs 12-6-2025   R. Pattabiraman

June 13

தி ஜ ர என்கிற திங்களூர் ரங்கநாதன் குறித்து 20 ஆண்டுகளுக்கு முன்னர் பழ அதியமான் எழுதிய சாகித்திய அகாதெமி நூல் வந்துள்ளது.

தி ஜ ரா நூல் (சிறுகதை தொகுப்பு) ஒன்றை திருவாரூர் வ சோ ஆண்கள் மேல்நிலைப்பள்ளி நூலகத்திலிருந்து எழுத்தாளர் புலவர் அ பா பாலையன் அவர்கள் எடுத்து, வேறு சில நூல்களுடன் கொடுத்தார். 1980களின் ஆரம்பமாக அது இருக்கலாம். தி ஜ ரா எழுதிய வேறு சில நூல்களும் சிறிது கண்ணில் பட்டு (கதைகள் அல்ல) படித்த நினைவு.

பழ அதியமான் முடிந்தவரை தி ஜ ர பற்றிய செய்திகளைத் தேடி 140 பக்க அளவில் , இந்நூலை எழுதியுள்ளார். தி ஜ ர எழுத்து வாழ்க்கை குறித்த சித்திரம் இந்நூலில் கிடைக்கும். அவரது நூல்கள் குறித்த குறிப்புகளும் கிடைக்கும்.

தமிழ் டிஜிட்டல் லைப்ரரியிலோஅல்லது ஆர்கைவ் இணைய தளத்திலோ தி ஜ ராவின் நூல்களை முழுமையாக இடம் பெற செய்யாமல் வைத்துள்ளனர். அவரின் கட்டுரை தொகுப்புக்களைத் தேடிப் போகிற என் போன்றவர்க்கு அங்கு ஏமாற்றம் கிடைத்தது.

Just relax என்கிற வகைப்பட்டு தி ஜ ராவிடம் போகலாம்

June 14

‘இந்திய இலக்கியம்’ என க நா சு எழுதிய கட்டுரை தொகுப்பு, கலைஞன் பதிப்பகம் வெளியிட்ட நூல் - வந்து 40 ஆண்டுகள் ஆகிவிட்டது.

க நா சு அதில் பரிந்துரைத்த உடனடி கடமைகள் ஏற்கப்பட்டு தொடங்கப்பெற்று இருந்தால், அவை பொக்கிஷமாக இருந்திருக்கலாம். இந்தியாவின் பல்வேறு மொழிகளின் சிறந்த , அவர் பேசிய , உணர்ந்த தரத்தில் - ஒரே மொழியில் , ஆங்கிலத்திலாவது A library of Indian Literature வந்திருக்க முடியும். எனக்குத் தெரியவில்லை. இந்திய மற்றும் உலக இலக்கியத்தில் தோய்ந்தவர்கள் அதைச் சொல்ல முடியும்.

அடுத்து அவர் எதிர்பார்த்த ஒன்று, தமிழர்களுக்கான எஸ்ரா பவுண்ட் எழுதிய The ABC of Reading மாதிரியான நூல்வகைகள். பல வால்யூம்களில் தமிழ் anthologies.

க நா சு வாசிப்பில் சங்க இலக்கியங்களில் அவர் பார்வையில் தேறக்கூடிய 5000-6000 வரிகள், திருக்குறளில் தேறும் 200 குறள்கள், பதினெண் கீழ்க் கணக்கில் 2000 வரிகள், இப்படி சிலப்பதிகாரம் , கம்பன் தொடங்கி ராமலிங்கம் என சுவை ததும்பும் வரிகளை உலக இலக்கியத்திற்கு ஈடானவை எனக் காட்டிடும் செயல் வேண்டும் என அவர் விழைந்தார்.

இதுவும் நிறைவேறியதா என இலக்கிய ஜாம்பவான்கள் தான் சொல்ல வேண்டும்.

க நா சு வின் இந்த 150 பக்க நூல் இணையத்தில் இருக்கிறது..

14-6-2025

June 15

The Undying Light 1

இலக்கிய வாசிப்பு கொண்டோர் அதை உள்வாங்கி வெளிப்படுத்தும் பலவகை உணர்வுகளையும், அரசியல் வாசிப்பில் உணரமுடியும் என்கிற அனுபவம் கொஞ்சம் எனக்கு உண்டு.

அரசியல் வாசிப்பும் உங்களை அழ வைக்கும். சிரிப்பைத் தூண்டும். திடிரென மேலே செல்லமுடியாமல் அப்படியே திகைத்துக் கூட நிற்கச் செய்யும். வாயடைத்துப் போகும் என்பார்களே அப்படி நிலை ஏற்படும். திடிரென equanimity stage உருவாகக்கூடும். எழுத்து மனித சுபாவங்களின் கூட்டல் பெருக்கல் தானே.

ராஜ்மோகன் காந்தியின் Reflections Recollections சாயலில் இருக்கலாமோ என்றெண்ணித்தான் , கோபாலகிருஷ்ண காந்தியின் நூலான The Undying Light - A personal History of Independent India வை வாங்கினேன். ஏப்ரல் 2025ல் வந்தது என நினைக்கிறேன். நூல் வந்ததை அறிந்தவுடன் பெறவேண்டும் என்கிற உபாதை உந்திதள்ளியது. அவர்கள் குடும்பத்தார்களின் நூல்களை வெளியிடும் அலெப் (ரூபா பதிப்பகத்தார்) வெளியிட்டுள்ளது. அகல உயர பெரிய 600 பக்க நூல். ரூ 1000க்கு அமேசன் கொண்டுவந்து சேர்த்துவிடும்.

கோபாலகிருஷ்ண காந்தி , லட்சுமி- தேவதாசின் மகன்களில் ஒருவர். தாரா, ராஜ்மோகன், ராம் மோகன் கூடப் பிறந்தவர்கள். காந்தி- ராஜாஜியின் பேரப்பிள்ளை. ஆர் வெங்கட் ராமன், ஆர் கே நாராயணன் போன்ற குடியரசு தலைவர்களிடம் செயலராக அனுபவம் பெற்றவர். மே வ கவர்னராக இருந்தவர். எழுத்தாளர். பத்திரிகையிலும் எழுதுபவர்.

காந்தி படுகொலையின் போது அக்கா தாரா , கோபாலகிருஷ்ணனை 3 வயது கூட ஆகாத குழந்தையை தூக்கிக்கொண்டு போய் சோகத்தை காண்பிக்கும் காட்சி..காந்தி தாத்தாவிடம் நேரிடையாக இக்குழந்தை கற்க முடியாமல் போனது. ராஜாஜியைப் பார்த்து கற்க வாழ்க்கை அனுமதித்தது. அப்பா தேவதாசிடம், அதிர்ந்து பேசாத கொஞ்சமாக பேசினாலும் எப்போதும் சரியானதை மிகுந்த வாஞ்சையும் பொறுப்பும் கலந்து பேசும் அம்மாவிடம் கற்கும் குடும்ப சூழல். கூடப்பிறந்த ஒவ்வொருவரும் அவரவர் அளவில் தனித்து சிறந்த மனிதர்களாகிட நடத்திக்கொண்ட சோதனைகளை சக மனிதராக நாம் உணரலாம்.

சுடச் சுட வந்துள்ள கோபாலகிருஷ்ண காந்தியின் இந்த The Undying Light A personal History of Independent India என்கிற ‘அணையா விளக்கு’

படிக்கும் பக்கங்களை கடக்க கடக்க என்ன செய்திகளை நெசவாக்கியுள்ளது என பார்க்க முடியும். என் காதில் ஏதாவது கிசு கிசுக்கிறதா, என் மனதில் எப்படி படிகிறது, என்ன அனுபவங்களை உரசப் போகிறது எனப் பார்க்க முடியும்.

கோபாலகிருஷ்ண காந்தி 1940 களிலிருந்து, இன்று காணும் இந்தியாவரை 8 இயல்களில் - பத்தாண்டு காலச் சூழலாக எடுத்துக்கொண்டு, நிகழ்வுகளை அசைபோட முயற்சிக்கிறார். இதை முழுமையாக personal memoirs என்றோ , அல்லது விடுதலை இந்தியாவின் வரலாறு என்றோ அவர் எடுத்துக்கொள்ள வேண்டியதில்லை என்கிறார். சமகால வரலாற்றை தள்ளி நின்று பார்க்கக்கூடிய வரலாற்று ஆசிரியராக இல்லாமல், தன் நினைவு கிடங்கில் அவை உருவாக்கிய அம்சங்களுடன் கலந்து பேசியதை ராஜ்மோகன் தன் Reflections Recollectionsல் செய்தார். அது அளவில் சிறிய நூல்.

இங்கு கோபாலாகிருஷ்ண காந்தி துணிச்சலுடன் தான் வாழும் ஒவ்வொரு மாமாங்கத்தின்/ தசாப்தத்தின் சமகால நிகழ்வுகளை அடுக்க முன் வந்துள்ளார். தன்னிடம் , வயதாகி நிற்கும் நாட்டின் மற்றும் குடும்பத்தின் பொக்கிஷங்களை ஆங்காங்கே எடுத்து உலாவ விட்டுவிடலாம் என்கிற எண்ணமும் வயதாக ஒருவருக்கு வரலாம். அரிய புகைப்படங்கள் எனச் சொல்லியுள்ளனர்.

தான் ஒன்றும் அவ்வளவு குறிப்பிடத் தகுந்த மனிதன் அல்லேன்- ஆனால் குறிப்பிடத் தகுந்த நிகழ்வுகளை இதில் தந்துள்ளேன் என கோகிகா (கோபாலகிருஷ்ண காந்தி- இப்படியெல்லாம் பெயரை என் சோம்பேறித்தனத்தால் சுருக்குவது மரியாதைக்கு உகந்ததா- அல்லது பிரியத்தின் பாற்பட்டதா தெரியவில்லை) சொல்கிறார். அவரும் remarkable man தான். நாம் வாழும் சூழலில் இப்படி கொஞ்சபேராவது remarkable ஆக இல்லாவிட்டால், எங்கு போய் என் போன்றோர் தெரிந்துகொள்வது. 80 வயதை நெருங்கும் வேளையிலும், தான் உணரும் இந்தியாவை கைமாற்றி தந்துவிட்டு போகவேண்டும் என்கிற தவிப்பை அவரிடம் நான் உணர்கிறேன்.

ஒரே ஒரு முறை அக்களூர் ரவியும் நானும் அவருடன் சேர்ந்து ஒரு நிகழ்வில் சேர்ந்து மாடிப்படிகள் ஏறின நினைவு. இங்கு தானே கூட்டம் என அவர் கேட்டதற்கு பதில் சொன்ன நினைவு. அதற்கு மேல் நேரிடையாக பேசி பார்த்ததில்லை. பெரும் ஆளுமை/ தவிப்பாளர்/

தாகமுடையோர்களுடன் - சிலபேருடனாவது நூல்வழி உரையாடல் என்பதே எனக்கு வாய்த்த வாழ்க்கை.

எங்கள் தொழிற்சங்கம், கொஞ்சம் கம்யூனிஸ்ட் தலைமை ஆளுமைகள் என்பதை தாண்டி நேரடி பழக்கம் நேரா வாழ்க்கைப் பாதை எனக்கு நேர்ந்தது. ஆனாலும் புத்தகங்களின் வழியே சிலருடனாவது நூல் விடாமல் இல்லை.

அட்டையில் The Undying Light பெரிய ‘பாண்ட்டில்’ போட்டுள்ளனர். அதேபோல் எழுத்தாளர் பெயரில் கோபாலகிருஷ்ண என்பதை சிறிதாக்கி ‘காந்தி’ யை பெரிதாக்கிப் போட்டுள்ளனர். அது ஏனோ , எனக்கு வித்தியாசமாக இருந்தது.

இந்தியா என்கிற வளர்ச்சியையும்- ஏழ்மை சூழலையும் மெலிதாக அட்டை காண்பித்துவிடுகிறது.

சரி பார்க்கலாம். விடுதலையை ஒட்டி , பின்னரான ஒவ்வொரு பத்தாண்டையும் கோபாலாகிருஷ்ண காந்தி எப்படி தொடுத்துள்ளார் என…சில நாட்கள் நகரக்கூடிய நூல்..

15-6-2025

#Gopalkrisnagandhi #theundyinglight

June 16

அணையா விளக்கு The Undying Light-2

கோபாலகிருஷ்ண காந்தியின் ‘மெர்க்குரி’ , ‘நான் சாதாரணமானவன் ’ என்கிற இரு ஆங்கில புத்தகங்களுக்கு பின்னர் பெரிய அளவிலான நூலாக ‘அணையா விளக்கு ‘ வந்துள்ளது. முன்னர் இரு நூல்களும் காந்தியின் வாழ்க்கை நிகழ்வுகளை , இந்திய விடுதலைப் போராட்டத்துடன் சேர்த்து தைத்தவைகளாக வந்தன.

அணையா விளக்கு, கோபாலகிருஷ்ண காந்தி குழந்தையாக இருந்ததிலிருந்து மோடி ஆட்சிவரை பேசுகிற நூலாக வந்துள்ளது. விடுதலைக்குப் பின்னர் மாறிவருகிற அரசியல் பின்புலம், பல்வேறு இசங்களின் பின்னணியில் மோதல் களமாக வாக்கு அரசியல் ஆகியவற்றையும் உள்வாங்கிய வெளிப்பாடுகளை இந்நூலாசிரியர் செய்ய வேண்டியுள்ளது.

புத்தகத்திற்குள் 8 புத்தகங்கள் (இயல்கள்) . ஒவ்வொன்றுக்குள்ளும் ஆண்டுவாரியான உள் இயல்கள் என நூல் அடுக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு புத்தகமும் அதாவது இயலும் தசாப்த கட்டை கொண்டு நகர்கிறது. முதல் தசாப்த கட்டு ஏறத்தாழ 70 பக்கத்திற்கு விரிகிறது.

ஏராள செய்திகளின் மடிப்புகளாக இந்த 1940-49 தசாப்தம் நகர்த்தப்பட்டுள்ளது. அரசியல் நிகழ்வுகள் நமக்கு தெரிந்தவையே. ஆசிரியர் தன் மொழியில் தருகிறார் என்கிற சுவையிருக்கிறது. மனதை பிழியும் காட்சிகள்- குடும்ப சுவாரஸ்யங்கள்- கொஞ்சம் காதோர கிசுகிசு என இப்பக்கங்கள் நகர்கின்றன.

ராஜாஜியை டெல்லியில் கொல்ல முயற்சி நடந்துள்ளது. காரில் அவர் இருக்கிறார் என புல்லட் பாய்ந்துள்ளது. அவர் சற்று முன்னர்தான் தன் பெண் லஷ்மி வீட்டில் இறங்கி காரை அனுப்பியிருந்தார். இது 1946 செப்டம்பர் சம்பவம்.

ஆசிய உறவுகள் மாநாடு , நேரு பம்பரமாக வெளிநாட்டு சார்பாளர்களை உபசரிக்கும் காட்சி. ஜூன் 1947 ஆஸ்திரேலியா காலாண்டிதழ் நேருவை , இம்மாநாட்டின் author, genius, architect எனப் படம் பிடித்தது. மாநாட்டிற்கு ஜேபி - பிரபாவதி தம்பதி எளிய காதி உடையில் வந்தனர். விஜயலஷ்மியும் இந்திராவும் நிகழ்விற்குரிய பட்டாடையுடன் (not in coarse spun but in the finest silk) வந்தனர் என மெலிதான ‘வம்பு செய்தியை’ (factual ஆனாலும்) ஆசிரியர்

தருகிறார். காந்தி வந்து உரையாற்றிய மாநாடு. அதேபோல் விஜயலஷ்மி அலகாபத் ஜேர்னலிஸ்ட் (பின்னர் அம்பாசிடர் ஆனவர்) சையத் ஹுசைனுடன் ஓடிப்போய் (இப்படி சொல்வது நியாயமா?) பிறகு வந்து ரஞ்சித் பண்டிட்டை மணமுடித்தார் என்கிற 'வம்பு ' செய்தி ஒன்றையும் (பக் 45) தருகிறார்.

அம்பேத்கர் குறித்து ஆங்காங்கே பெரும் மரியாதைக்குரிய பார்வையை கோபாலகிருஷ்ண காந்தி வைக்கிறார். அவரின் Thoughts on Pakistan தேவதாஸ் வீட்டில் இருந்ததையும் சிறுவனாக அதை அவர் படித்ததையும் சொல்கிறார்.ஏனோ எங்கள் குடும்பம் அவருடன் பழகாமல் போனது என்பதையும் சொல்கிறார்.

There was little, if any, socialising between my parents and Ambedkar. I do not believe he ever visited us, or my parents , him. இவ்வளவிற்கும் இந்துஸ்தான் டைம்ஸ் அலுவலகத்திற்கு கீழ் 'பாலகம்' ஒன்றில் அம்பேத்கர் அமர்ந்து மணிக்கணக்காக வாசித்துக்கொண்டிருப்பாராம். ஆனால் எவரும் வாசிப்பின் போது அவரை தொந்தரவு செய்யமுடியாதாம். இதை தேவதாஸ் செயலர் சந்திர சூடன் சொல்லியுள்ளார் என்கிறார் ஆசிரியர்.

அதேபோல் காந்தி மறைவின்போது, சட்ட அமைச்சராக அஞ்சலி செய்ய வந்த அம்பேத்கரின் அத்தருண போட்டோ ஒன்று கூட இல்லையா என கோபாலகிருஷ்ண காந்தி வருத்தப்படுகிறார். காந்தி இல்லாமல் போனது எதிர்கால இந்தியாவிற்கு நல்லது என்கிற கருத்து அம்பேத்கரிடம் இருந்தது பற்றி கோபாலகிருஷ்ண காந்தி , இந்த முதல் இயலில் மௌனிக்கிறார். ஆனால் இந்திய அரசியல் அமைப்பின் நகல் எழுதிய பி என் ராவ் , அம்பேத்கர் வெளிச்சத்தில் மங்கிப்போனார் என்பதை சொல்கிறார். அடிக்குறிப்பில் ஆசிரியரின் வரிகள்

The defining role of this exceptional civil servant (B N Rau) , jurist and diplomat in the making of India's constitution has been overshadowed by the pre eminence of the chairman of the drafting committee, B R Ambedkar.

ராஜாஜி மே வ கவர்னரான சுவையான செய்தி தரப்பட்டுள்ளது. அங்கு இந்து முஸ்லீம் கலவரம் என்கிற மிகுந்த எச்சரிக்கை உணர்வு கொண்ட நிருவாகி தேவை. படேல் முதலில் கே எம் முன்ஷி பெயரைத்தான் சொல்கிறார். காந்தியிடம் பெயர் தெரிவிக்கப்பட்டது. 'நோ' என்கிறார் காந்தி. முஸ்லீம்கள் அவரை நம்பற்குரியவராக பார்ப்பார்களா என்பது கேள்வியானது. ராஜாஜியிடமே யாரைப் போடலாம் எனக் கேட்டனர். அவர் திறமையான நிருவாகியான என். கோபாலசாமி அய்யங்காரைச்

சொல்கிறார். என் ஜி என்கிற அவரை கேட்கிறார்கள். அவர் தன்னால் இயலாது எனச் சொல்லிவிடுகிறார். நேரு படேல் இருவரும் சேர்ந்து ராஜாஜி போகவேண்டும் என்கிறார்கள். ராஜாஜியின் டைரி ஜூலை 29 (1947) சொல்கிறது

The proposal for WB Governor has not been accepted by Gopalaswami Ayyangar. So they asked me to take up. What do I care what post they want me to take?. So I said Yes. Nobody likes it. But it is the beauty of karma yoga!

என்ன விந்தை..காலம் செய்யும் ஏற்பாடு. இரு தாத்தாக்களும் விடுதலைக்கான மாபெரும் ஆளுமைகள். இருவரும் ஆகஸ்ட் 15 அன்று டெல்லியில் இல்லை. தாத்தா காந்தி மதமோதல் தணித்து அமைதி கொணர கல்கத்தாவில். தாத்தா ராஜாஜி கவர்னராக கல்கத்தாவில். சுதந்திர இந்தியாவில் இந்த தாத்தாக்கள் முதன் முதலில் கல்கத்தாவில் சந்திக்கின்றனர். காந்தி fast , ராஜாஜி comment எனக் காட்சிகள். ஆகஸ்ட் 15க்கான நிகழ்வுகளை ரேடியோவை திருகி டெல்லி வீட்டில் பேரன் ராஜ்மோகன் காந்தி உட்பட்டோர் கேட்டல்.

காந்தி மறைந்த செய்தியை பம்பாய் தேநீர்கடையில் ரேடியோ மூலம் ஹரிலால் (காந்தியின் மூத்த மகன்) அறிகிறார். நேஷனல் ஹரால்ட் அலுவலகத்தில் சாராதா பிரசாத் அமர்ந்து பத்திரிகை பணிகளை பார்த்துக்கொண்டிருக்கிறார். அப்போது வயதான தோற்றத்தில் மெலிந்த ஒருவர் இரவு 10 மணிக்கு வந்து, காந்திக்கு அஞ்சலி எழுதியுள்ளேன் , போடவேண்டும் என்கிறார். ஆயிரக்கணக்கில் வருகிறது என சாராதாபிரசாத். இல்லை நான் பாபு காந்தியின் மகன் என ஹரிலால் சொல்கிறார். எவ்வளவு மனதை உலுக்கும் தருணம்.. மறுநாள் தான் ஹரிலால் சென்று தேவதாஸ் வீட்டில் தங்கினார்.

விடுதலை இந்தியாவில் முதல் தூக்கு தண்டனை பெற்றவர்களாக கோட்ச- ஆப்தே கொலையாளிகள் இருக்கின்றனர். மணிலாலும் ராமதாசும் (காந்தி புதல்வர்கள்) தூக்கு வேண்டாம் என பேசி வந்தனர். மற்றொரு புதல்வர் தேவதாஸ், இந்துஸ்தான் டைம்ஸ் எடிட்டர். பத்திரிகை தர்மப்படி நடக்க வேண்டும். பெர்னார்ட் ஷாவிற்கு கருத்துகேட்டு எழுதுகிறார். ஷா தன் பதிலில் மகனாக நீ கருணைகாட்டு எனலாம். நிர்வாகியாக நேரு உரிய தண்டனையை கொடுக்க வேண்டிய நிலையில். தனிப்பட்ட முறையில் தூக்குதண்டனை வேண்டாம் எனச் சொல்வேன் என எழுதினார். ராஜாஜி இவ்விஷயத்தை அரசாங்க நிர்வாகத்திடம் விட்டுவிடுங்கள் எனச் சொல்லி வந்தார். கவர்னர் ஜெனரல் என்கிற வகையில் ராஜாஜி , கோட்சே ஆப்தே சார்பில் உறவினர்கள் அனுப்பிய

கருணைமனுக்களை தள்ளுபடி செய்தார். இருவரும் நவம்பர் 15, 1949ல் தூக்கில் ஏற்றப்பட்டனர்.அவர்களின் சாம்பல் கூட உறவினர்களிடம் ஒப்படைக்கப்படாத சூழல். இது கொஞ்சம் harsh decision என்கிற எண்ணத்தை கோபாலகிருஷ்ண காந்தி வெளிப்படுத்துகிறார்.

மாஸ்கோவிற்கு தூதராக விஜயலஷ்மி பண்டிட் நியமிக்கப்பட்டார். இது nepotism ஆகுமா- ஆம் இல்லை என்கிற இரு பதிலும் இந்த இயலில் கிடைக்கிறது. பண்டிட்டால் ஒருமுறை கூட ருஷ்ய அதிபர் ஸ்டாலினை பார்க்க முடியவில்லை. விஜயலஷ்மிக்கு அடுத்து யாரைப் போடுவது என்பதற்காக , நேரு தேவதாசை போடலாமா எனக்கேட்டு கடிதம் எழுதுகிறார். அக்கடிதத்தில் தேவதாஸ்க்கு அனுபவம் இல்லை, அவ்வளவு புத்திசாலியும் இல்லை என நேரு குறிப்பிடுகிறார்.

பிப் 1949ல் நேரு

Moscow a headache..we have not yet mentioned to him(Devdaas) . I have no idea about his reaction…he has no experience in diplomacy and he is not brilliant..

விஜயலஷ்மியும் தேவதாஸ் பொருத்தமானவர் இல்லை என்கிறார். இங்கு கோபாலகிருஷ்ண காந்தி எழுப்புவது, டிப்ளமசி அனுபவம் இல்லை என்பது சரி, ஆனால் புத்திசாலி இல்லை என எப்படி?

இந்த இயலில் நேரு மற்றும் அவர் குடும்பத்தார் மீதான subtle இடிப்புகளை கோபாலகிருஷ்ண காந்தி தூவிப்போவதாக நான் உணர்கிறேன்.

தேவதாசிடம் நேருவும் படேலும் மாஸ்கோ போ என்கிறார்கள். லஷ்மி கூட போகலாம் என்றார். ராஜாஜியும் சரி போ என்றார். ஆனால் உறுதியாக வேண்டாம் என தன் மனம் சொன்னபடி தேவதாஸ் சொல்லிவிட்டார்.

ராஜாஜியுடன் மகள் நாமகிரிதான் உடன் இருந்து பார்த்துக்கொண்டார். டிசம்பர் 1949ல் கவர்னர் ஜெனரலாக ராஜாஜி நிஜாமின் ஹைதராபாத்திற்கு சென்றார். நிஜாம் நன்கு வரவேற்று மாளிகையில் தங்க வைத்தார். மகள் நாமகிரிக்கு வைர நெக்லஸ் தோடு ஆகியவற்றை அன்பாக ஒரு டிரேயில் வைத்து அனுப்பினார். அப்பா என்ன செய்யவேண்டும் என நாமகிரி. மிகவும் பணிவுடன் நிஜாம் அவர்களுக்கு ராஜாஜி அதை திருப்பி அனுப்பினார். தப்பிக்க இச்செய்தியை ராஜாஜி அனுப்பினார்

Daughter , a widow not accustomed to wearing armaments of this kind, is unable to accept it.

நாமகிரிக்கு வைரம் தேவையில்லை. ஆனால் ‘விடோ’ அதனால் போடுவதில்லை எனச் சொல்லியிருக்க வேண்டாம் எனத் தோன்றியது. நாங்கள் காந்தியின் சீடர்கள் , விலையுயர்ந்த பொருட்களை வைத்துக்கொள்வதில்லை என்றல்லவா அப்பா ராஜாஜி சொல்லியிருக்க வேண்டும். எவ்வளவு பொருள் பொதிந்த வார்த்தைகளை நாமகிரி அப்பாவிற்கே சொல்லிக்கொடுக்கும் அளவு… அருமையான ஆனால் வெளித்தெரியாமல் போன நல்ல உள்ளங்கள்

இப்படி எத்தனையோ செய்திகளுடன் இந்நூல் செல்கிறது. முதல் இயல்தான் பேசியுள்ளேன். பார்க்கலாம்…

16-6-2025

#Gopalkrisnagandhi

#theundyinglight

June 17

அணையா விளக்கு The Undying Light-3

கோபாலகிருஷ்ண காந்தியின் இந்த ‘A Personal History of Independent India’ என்கிற அணையா விளக்கு நூலின் வாசிப்பில் 20 சதத்தை தொட்டுள்ளேன். அதற்குள்தான் இவ்வளவு ‘அலப்பறை’ . இன்னும் 480 பக்கங்கள் 80 சதம் போகவேண்டும். விடுதலை இந்திய வரலாறு குறித்து இந்நூல் நின்று பேசுவதாக இருக்கும் என எனக்குத் தோன்றுகிறது. A Good Refresher of Independent India with packings of personal memoirs என்று மதிப்பிடுகிறேன்.

முதல் இரண்டு இடுகைகளில் நூல் வந்த செய்தி, முதல் இயல் காலமான 1940-49 குறித்த சில செய்திகளை தொட்டிருந்தேன். இரண்டாவது இயல் 1950-59க்கான காலச் செய்திகள்- ஆண்டுவாரியாக ஆசிரியர் தருகிறார்.

தேவதாஸ்- லஷ்மி குடும்பமும் அதன் உறுப்பினர்களும் இந்த ஆண்டுகளில் இந்திய அரசியல், பத்திரிகை, சினிமா, கலை, இலக்கியம், பெரும் ஆளுமைகள், பயணங்கள், ஆசிரியருக்கு வரும் பெருமிதங்கள்- குறைகள்- ஆஹா இப்படி நடந்திருக்கக்கூடாதா என்கிற ஏக்க மூச்சுகளாக - நூலில் பயணிக்கிறார்கள்.

பக்கத்திற்கு பக்கம் அம்பேத்கர் வருகிறார். ஆசிரியர் மிக positive ஆக அம்பேத்கர் மீதான மரியாதையை நூலில் இதுவரை (பார்த்த 120 பக்கங்களில்) கடத்துகிறார். இந்து கோடு பில் பிரச்சனையில் அம்பேத்கர் அமைச்சராக பதவி விலகல் செய்ததை ஏற்றுக்கொண்டு , சற்று casual (இது என் வார்த்தை ஆசிரியரது அல்ல) ஆக அவரை அனுப்பியிருக்க வேண்டாமோ என ஆசிரியருக்கு தோன்றுகிறது. பாராளுமன்றத்தில் ஏன் விலகுகிறேன் என்கிற உரையை, எந்த நிபந்தனையும் அம்பேத்கருக்கு விதிக்காமல் ஜனநாயக நேரு தலையிட்டு செய்திருக்கலாமோ என்கிற உணர்வை ஆசிரியர் தருகிறார். நேருவிற்கு , குடியரசு தலைவர் பாரத் ரத்னா அறிவித்தபோது, அதை அம்பேத்கருக்கும் சேர்த்து அறிவித்திருக்கலாமோ என்கிற எண்ணமும் ஆசிரியரிடம் வெளிப்படுகிறது. அம்பேத்கர் டெல்லியில் மறைந்தபோது, நேரு, பந்த் போன்றவர் போய் அஞ்சலி செய்தனர். நேருவும் நாடாளுமன்றத்தில் அஞ்சலி உரை நல்கினார். ஆனால் குடியரசு தலைவர் பிரசாத்தும், துணைத்தலைவர் ராதாகிருஷ்ணனும் போகாமல் விட்டனரே என்கிற ஆதங்கம் ஆசிரியருக்கு. பிரசாத்- ராதாகிருஷ்ணனுக்கு இன்றும்

நாட்டில் மரியாதை உண்டு, ஆனால் அம்பேத்கருக்குத்தான் strength இன்று என ஆசிரியர் எழுதுகிறார்.

நேரு அம்பேத்கர் இந்து கோடு பில் பற்றி ஆசிரியர் இவ்வரிகளை தருகிறார்

Nehru was passionate moderniser, Ambedkar, his law minister, an impatient reformer. The two were the co architects, engineers, and masons of the bill. But they had different timelines to work in.

எங்கள் குடும்ப டெல்லி சூழலில் பல்வேறு தரப்பட்ட - வெளிநாட்டு தோழர்கள், கறுப்பின நண்பர்கள், இஸ்லாமியர் , கிறிஸ்துவர் என நட்புவட்டாரம் இருந்தாலும், தலித் சார்ந்த நட்பு வட்டம் ஏனோ இல்லை என அசை போடுகிறார் ஆசிரியர். ஆனால் லிபரல், மானுட விடுதலைக்குரிய ஏராள நூல்கள் எங்கள் வீட்டில் இருந்தது எனவும் சொல்கிறார். இந்நூலில் முதல் இரண்டு இயல்கள் நெடுக அம்பேத்கர் மிக positive ஆளுமையாக ஆசிரியரால் வைக்கப்பட்டுள்ளார்.

Planning Commission ல் , அம்பேத்கர் போலவே புகழ் பெற்றிருக்க வேண்டிய வங்க நாமசூத்ர பிரிவிலிருந்து உயர்ந்த தலித் அறிஞர் அறிவியலாளர் astrophysicist மேகநாத சஹாவை ஏன் நேரு கொணராமல் போனார் என்கிற கேள்வியையும் ஆசிரியர் எழுப்புகிறார். புள்ளியலாளர் மகலோனாபிசை நேரு கொணர்ந்தார் . ராஜாஜியைக் கூட நேரு கேட்டார். அவர் மறுத்துவிட்டார்.

எங்கள் TU தொடர்பான செய்தி ஒன்று இந்நூலில் வருகிறது. ஜேபி ரயில்வே சங்கத்திற்கு மட்டுமல்ல, தபால் தந்தி சங்கத்திலும் தலைவராக இருந்தார். வேலைநிறுத்த அறிவிப்பு நேரு உட்பட பலருக்கும் அதிர்ச்சியையும் கோபத்தையும் தந்தது. ஜேபி க்கு நிலைமைகள் எடுத்துச் சொல்லப்பட்டு நிதானப் படுத்தப்பட்டார். எங்கள் தலைவர் ஓம் பிரகாஷ் குப்தா இளைஞர். வளர்ந்து வரக்கூடிய தலைவர். ஜேபி , நேருவிற்கு அடுத்து எனப் பேசப்பட்ட மிக உயர் சோசலிச லீடர். இன்றும் நாங்கள் ஒன்றை எங்கள் கூட்டங்களில் சொல்வோம். அப்போது நேரு அரசு எதிர்த்து வேலைநிறுத்தம் விலக்கமா எனக் கேட்டபோது, இல்லை நான் ஓம்பிரகாஷ்-ஜெயபிரகாஷ் அல்ல என குப்தா பேசியதை. பின் நாட்களில் அனுபவ முதிர்ச்சி கூடக்கூட குப்தா மிக நிதானமான அற்புத தலைவராக உயர்ந்தார்.

இன்றுள்ள வாக்கு அரசியல் strength கொண்டு கோபாலகிருஷ்ண காந்தி அன்றைய சில நிகழ்வுகளை எடைபோட்டு அளந்து சொல்கிறாரோ என்கிற எண்ணம் எனக்கு உருவாகிறது.

முதல் குடியரசு தலைவராக ராஜாஜியா- பிரசாத்தா என்பதில் நேரு படேல் வேறுபட்டனர். படேலும் காங்கிரசும் பிரசாத் என்ற நிலை எடுப்பதை அறிந்து மிகவும் cool ஆக ராஜாஜி கடந்து போனார். இந்த காட்சியை ராஜாஜி வரலாறு எழுதிய ராஜ்மோகன் காந்தி நேர்த்தியாக தந்திருப்பார்

CR was not a saint. He knew disappointment and dejection..he had philosophy enough to smile both at his entry..exit from .

முதல் பொதுத்தேர்தல் முடிந்தவுடன் மதராஸ் ராஜதானி முதல்வர் பதவியை ராஜாஜி ஏற்றே இருக்கக்கூடாது என்கிற கருத்து என்னிடம் வலுவாக இருக்கிறது. கோபாலகிருஷ்ண காந்தியும் இந்த எண்ணத்தை வெளிப்படுத்துவதாகவே எனக்குப்படுகிறது.

விடுதலை இந்தியா குடியரசானவுடன், பிப் 26 1950ல் The Preventive Detention Act க்கு பிரசாத் ஒப்புதல் கொடுத்தது, பிரதமர்- குடியரசு தலைவர் அதிகார சர்ச்சை- இந்து கோடு பில் நிலைபாடு போன்றவை குறித்தும் இவ்வியலில் ஆசிரியர் விவாதிக்கிறார். கம்யூனிஸ்ட் தலைவர் தோழர் ஏ கே கோபாலன் தான் preventive detention எதிர்த்து போராடி நீதி கேட்டார். சட்டம் செல்லுபடியாகும் என பெரும்பான்மை நீதியரசர் சொன்னாலும், போராடிய பெருமை ஏகேஜிக்கு வரலாறு தருகிறது.

கோபாலகிருஷ்ண காந்தி சொல்லும் PM- President குறித்த வரிகள்

The PM is the mind of the national as a state, the President is the soul of the state as a nation. The PM leads, the President guides…they have provided not an alternative helm but supplemental plinth..the PM takes decisions, the President influences opinion

கிருஷ்ண மேனனுக்குப் பதில் UK High Commissioner ஆக ராஜாஜியை அனுப்புவது நலம் என நேருவிற்கு மவுண்ட்பாட்டன் எழுதினார். அவரது வரிகள்

Krishna Menon ..just like a match stick to light the Cigarette..you know the matchstick into astray without a thought after it has served the purpose.. பெரிய மனிதர்கள் எப்படியெல்லாம் கதைக்கிறார்கள் பாருங்கள்..use and throw அதான் வாழ்க்கை போலும்

காஷ்மீர் ஷேக் அப்துல்லா ஆட்சியில் சியாமா பிரசாத் சிறையில் மறைந்தது உடல் நிலை பாதிப்பால் என just close செய்ததை ஆசிரியர் சரியா எனக் கேட்கிறார். ஜேபி இதற்கு குரல் கொடுத்தார். முறையான் விசாரணை அமைத்திடு என்றார். அதேபோல் மிக நட்புடன் இருந்த ஷேக் ஆட்சியை நீக்கி, பக்சியை அங்கு ஆட்சிக்கு கொணர்ந்ததுடன், அப்துல்லாவை சிறையில் 11 ஆண்டுகள் வைத்ததும் ஆசிரியருக்கு நியாயமாகத் தெரியவில்லை.

எத்திராஜ் கல்லூரி பெண்கள் மத்தியில் ஆக 15, 1953ல் ராஜாஜி பேசிய வரிகள் ஆசிரியருக்கு உவப்பாக இல்லை. ஏன் தாத்தா எனக் கேட்பதாக எனக்குப்பட்டது. ராஜாஜி வரிகள் (1953 ல்)

I wish you good husbands. You cannot choose husbands. If you begin choosing you begin to quarrel one another. One man is good as another. You must be polite and must able to say, whoever comes I will manage with him. That should be your ideal

தேவதாஸ் லஷ்மி , சதாசிவம் எம் எஸ் என நின்ற ராஜாஜியா என ஆசிரியர் appalling என்கிறார். ராஜாஜியின் வயதும் நிதானமும் உலகம் இருக்கும் சூழலும் அவரை இப்படி ideal பெண்கள் என பேச வைத்ததா… தெரியவில்லை.

1931ல் காந்தியை ரோமில் அன்றிருந்த போப் 11 சந்திக்க மறுத்துவிட்டார். 25 ஆண்டுகளுக்கு பின்னர் சென்ற தேவதாஸ் லஷ்மி, தாரா , ராஜ்மோகன், கோபாலகிருஷ்ண காந்தி அனைவரையும் போப் 12 சந்தித்து அருளாசி நல்கினார்.

அணு ஆயுதத்திற்கு எதிராக ராஜாஜி தொடர்ந்து பேசியது, சோவியத் பல்கனினிடம் வேண்டாமே என்று சொன்னது போன்ற செய்திகளும் வருகின்றன. இன்று போரின் பெரும் கோரத்தாண்டவங்களை கண்டு வருகிறோம்.

1956 வரை தொட்டுக் காட்டியுள்ளேன். படிக்க விரும்புவர்க்க்கு தூண்டல் என்ற அளவில் எடுத்துக்கொள்ளலாம். பார்க்கலாம்..

17-6-25

#GopalKrishnaGandhi

#theundyinglight

June 18

யுத்தங்கள் -அனைத்து தர்ம நியாயங்களையும், நியதிகளையும் இழந்துவிட்டன. யுத்தம் என்றாலே தேச கூச்சல்கள் அதிகமாகிவிடும். வெறும் match என்றாலே சவுண்ட் கிளப்பும் மனநிலை, யுத்தக் காலத்தில் தன் ரத்தத்தை மிக அதிகமாக உஷ்ணப்படுத்திக்கொள்ளும்.

ரஷ்யா- உக்ரைன், இஸ்ரேல்- ஹமாஸ், சிரியா, லெபனான், தற்போது இஸ்ரேல்- ஈரான், இந்தியா- பாகிஸ்தான் என போர் ஏதானாலும் வெறும் தேசப்பித்து நிலையும் , அப்பாவி மக்கள் உயிர் பொருள் சேதம் குறித்த மன சாட்சியின்மையும் அம்பலமாயின. என்னதான் உள்ளூர் தொலைக்காட்சிகளும், உலக கார்ப்பரேஷன்கள் தரும் காட்சிகளும் கண்ணிற்கு தெரிந்தாலும், காதிற்கு போதிய உண்மைச் செய்திகள் வந்து சேர்வதில்லை.

இஸ்ரேல்- ஈரான் யுத்த சூழல் இரு நாடுகளின் வலதுசாரி- மதமார்க்க தீவிர அரசியல் காட்டும் அவசரங்களின் வெளிப்பாடுகளாகவே இருக்கின்றன. இதற்குள் உள், வெளி பொருளாதார பலனாளிகள் இருக்கவும் செய்யலாம்.

வெளிச் சொல்லப்படாவிட்டாலும் இஸ்ரேல் பொருளாதாரம் நொறுங்காமல் இல்லை. அமெரிக்க உதவி எவ்வளவு கோடி பில்லியன்களில் வந்தாலும் வீழும் பொருளாதாரம் என்ற நிலைமையை வாழும் ஒரு கோடி மக்கள் இஸ்ரேலில் உணரவே செய்வர். குட்டி நாடு இப்படி ஜியோனிச பெருமித போர்வெறி வாதத்தில் அகப்பட்டு மீளமுடியாமல், அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் foot soldier ஆக அவதிப்படுகிறது.

ஈரானும் ஷா காலத்து மேற்கு மயக்கத்தை, 1979 கொமய்னி புரட்சி காலத்தில் விடுபட்டு மீண்டது எனப் பார்த்தால், இஸ்லாமிய வலது தீவிர குழுக்களின் ஆதிக்கத்தால் அவதியும் படுகிறது. ஹமாஸ், சிரியா, லெபனான் என ஆதரவு நிலை மூலம் இஸ்ரேலை மட்டுப்படுத்தும் அரசியலால்தான் அவ்வட்டார geopolitics ல் தன்னை மேம்பட்டு நிறுத்திக்கொள்ள முடியும் என செயலாற்றியது. தன்னை நியுக்ளியர் சக்தியாக்கவும் அனைத்து முயற்சிகளையும் செய்து வருகிறது.

ஈரானை வீழ்த்தி நிதானப்படுத்தாமல் , தன்னால் நிம்மதியாக இருக்கமுடியாது, இஸ்ரேலுக்கு பெரும் அச்சுறுத்தல் ஈரான் என்கிற செய்தியை இஸ்ரேல் வலது அரசியல் முழுமையாக மக்களிடம்

சேர்த்துவிட்டது. அதேபோல் இஸ்ரேல் குறித்தும் மத்திய கிழக்கு நாடுகள் மக்களிடம் கொண்டு சேர்த்துள்ளனர்.

இஸ்ரேல் இராணுவ செலவு அதன் GDPல் எகிறி 10 சதத்தை தாண்டிவிட்டது என்கின்றனர். நாணய மதிப்பு வீழ்ச்சி, நுகர்பொருள் வீழ்ச்சி, முதலீடுகள் வீழ்ச்சி என்ற நெருக்கடிகளில் அது சிக்கியுள்ளது. வேலையின்மையும், நிதி பற்றாக்குறையும், கடன்களும் என்கிற திசை தீவிரப்பட்டுள்ளது. ஆயிரக்கணக்கான சாதாரண மக்களும் உயிர் உடைமை இழப்புகளுக்கு உள்ளாயினர். காசா போருக்கு மட்டும் தினசரி 250 மில்லியன் டாலர் செலவை இஸ்ரேல் செய்தது என்றனர். ஈரான் யுத்தம் பல பில்லியன் டாலர்கள் செலவை இஸ்ரேலுக்கு வைத்திருக்கும். இஸ்ரேல் யுத்த செலவு ஈரான் மோதலுக்கு முன்பாகவே அதன் மொத்த உற்பத்தியில் 10 சத அளவிற்கு போய்விட்டதாக செய்திகள் வந்தன. 2000க்கும் மேற்பட்ட பெரும் கோடீஸ்வரர்கள் டெல் அவிவ் விட்டு வெளியேறிய தகவலும் வருகிறது. ரியல் எஸ்டேட் படுத்துவிட்டது.

காசா உயிர் இழப்புகள் உலகை உலுக்கின. ஈரானும் பெரும் இழப்புகளை சந்தித்து வருவதைக் காண்கிறோம். ரஷ்ய சீனா ஆதரவு தெரிந்தாலும், அமெரிக்க தொந்தரவில் ஈரான் சிக்கியுள்ளது. மிகப்பெரிய அதன் ஆயில் , வாயு வியாபாரம் சிக்கலாகியுள்ளது. மக்கள் மின்வசதி தட்டுப்பாடு 50 சதமாகிவிட்டது என்கிறார்கள்.பங்கு மார்க்கெட் சிக்கலும் எழுந்துள்ளது.. ஏற்கனவே 27 சத வறுமை வளர்ந்து 50 சதத்தை தொட்டுவிட்டதாக செய்திகளை பார்க்க முடிகிறது. ஊட்டச் சத்து குறைபாடு, மிக அழகான ஈரானியர்களை சோனிகளாக்கி வருகிறது. ரியால் பணம் வீழ்ந்து, பணவீக்கம் அதிகரித்துள்ளது.

ஏன் இப்படி நாட்டை தொந்தரவிற்கு உள்ளாக்கி போருக்கு போகிறார்கள். பலன்கள் யாருக்கு - state actors , non state actors எவர் என அவரவர் எடுக்கும் ஆதரவு நிலைக்கேற்ப எழுதி வருகின்றனர். சாதாரண மக்களை ஏன் கொல்கிறீர்கள் என்கிற நியாய கேள்வி இரு நாடுகளையும் நிர்ப்பந்தப்படுத்தும் கேள்வியாக வேண்டும். அது போதுமான நிர்ப்பந்தமாகவில்லை என்பது பெரும் சோகம். அமெரிக்க, ரஷ்யா, சீனா, இந்தியா , அய்ரோப்பிய நாடுகள் என அவரவர் நலனை பிரதானப்படுத்தும் போக்கில் ‘பாலிடிக்ஸ்’ நடக்கிறது.

நான் முக்கியமாக பார்க்கப்போனது , இரு நாடுகளின் இடதுசாரிகளின் நிலைப்பாட்டையே. Sub nationalism வலுவடையும் போது வளர்க்கப்பட்டு வரும் so called தேசியம் பாதிக்கப்படும். தேசிய கூச்சல் வலுவடைய

வலுவடைய சர்வதேசியம் பேசுவோர் ஓரமாக்கப்படுவர். இரு நாடுகளின் இடதுகள் நிலை இப்படியாகியுள்ளது.

இஸ்ரேலின் Meretz கம்யுனிஸ்ட்கள் , Knesset எனப்படும் நாடாளுமன்றத்தில் நுழையமுடியவில்லை.. லேபர் கட்சியினர் 4 இடம் பெற்றனர். 2022 கட்சி காங்கிரசிற்கு பின்னர் அவர்கள் லீகலாக உரக்க செயல்பட்டார்களா எனத்தெரியவில்லை. போர் வேண்டாம் என்கிற அவர்களின் குரல் ஆங்காங்கே கேட்காமல் இல்லை. நெதன்யாகு உச்ச வலதின் பிரதிநிதியாக இடது குரல் பெரிதாக எழாமல் ஓரமாக்கியுள்ளார். Breaking Silence, Standing together போன்ற சிவில் இயக்கங்களும் கடுமையாக ஒடுக்கப்பட்டுள்ளன. Histadurt போன்ற தொழிற்சங்க இயக்கங்களும் பலவீனப் படுத்தப்பட்டுள்ளன.

இஸ்ரேல்- பாலஸ்தீன் இருநாடு தியரியை இடதுகள் தொடர்ந்து குரல் கம்மிய நிலையிலும் சொல்லிவருகின்றனர்.

ஈரானில் ஒரு காலத்தில் ட்யுடே வலுவான குரல்களை வைத்திருந்தது. Tudeh, Fedayeen, MEK போன்றவை கொமாய்னி அதிகாரத்தில் தொடர்ந்து ஒடுக்கப்பட்டன. கம்யூனிஸ்ட்களின் குரல் வலுவற்று போகும் அளவு, இஸ்லாமிய மதத்தை முன்வைத்த தீவிர வலது அரசியல் எழலானது. இடதுசாரிகள் ஈராக், ஜெர்மனி, இங்கிலாந்து என ஓடும் நிலையும் உருவானது. ஈரானில் இடது முழக்கங்கள் அவ்வப்போது வலுவாக எழும்பினாலும் நிர்ணய சக்தியாக, கொள்கைகளில் மாற்றம் கொணரும் நிலைக்கு குரல் இல்லாமல் இருப்பதைக் காண்கிறோம். shrinking space of left என்கிற கவலையை இருநாட்டு மக்களும் பகிர்ந்து கொள்வார்களா எனத் தெரியவில்லை.

பொருளாதாரத்தை நிர்மூலமாக்கும், மக்களின் அன்றாட வாழ்வை உருகுலைக்கும், ஆயுத வியாபாரிகளை கொழுக்க வைக்கும், தினசரி இராணுவ அரசியல் பதட்டத்தை அதிகரிக்கும் இந்த போர்கள் ஏன்? எவர்களின் மதம் , இனம், தேசவெறி , பொருளாதார பலன் காக்க? இரு நாடுகளும் proxi battle grounds ஆக்கப்பட்டுள்ளன என புரிந்துகொள்கிறேன். எவருக்காகவோ ஏன் இவர்கள் அடித்துக்கொள்கிறார்கள் என்ற கேள்வியை அடித்துக்கொள்பவர் எவரும் கேட்டுக்கொள்வது கூட இல்லை என்பதுதான் மக்களின் அனுபவம்.

அப்பாவி மக்களே உங்களுடன் அப்பாவிகளாக ஏதும் செய்ய திசையற்ற கோடானுகோடி மக்கள். எங்களின் அரசியல் பிரதிநிதிகளை நம்பி ...அவர்களை அந்த அந்த நாட்டில் மக்கள்தான்

கவனித்து அமர்த்திக்கொள்ள வேண்டும்.. ஈரானாவது தனது வளமான எண்ணெய் எரிவாயு பொருளாதாரத்தை மக்கள் வாழ்வை காத்திடும் திசையில் போரிலிருந்து தன்னை மீட்டுக்கொள்ளும் வழி காணுமா? இஸ்ரேலில் மக்களை அச்சத்தில் உறைய வைக்கும் நெதன்யு ஆட்சி வீசப்படுமா? எல்லாம் அம்மக்களிடம்தான்…

போரற்ற உலகம் பெருங்கனவா?

18-6-2025

June 19

அணையா விளக்கு The Undying Light - 4

கோபாலகிருஷ்ண காந்தியின் 2025 ஏப்ரல் மத்தியில் வந்த நூல் குறித்த எனது 4 வது பதிவை இன்று தந்துள்ளேன். நூலில் அரசியல் என்பதுடன் அவரது குடும்பம்- தேவைகள் - அவர்கள் வளர்ந்த கதையும் சேர்ந்தே செல்கிறது.

காங்கிரஸ் 1955 ஆவடியில் சோசலிசம் எனப் பேசியது. சத்தியமூர்த்தி பெண் லஷ்மி இருந்தார்கள். ராஜாஜி கூட அழைக்கப்பட்டு நியுக்ளியர் தளவாடங்களின் ஆபத்து தீர்மானத்தை கொணர்ந்தார். குருஷேவ் இந்திய வருகையை தேவதாஸ் விரிவாக இந்துஸ்தான் டைம்சில் எழுதிக்கொண்டிருந்தார். சென்னையில் பல்கனினை சந்தித்த ராஜாஜி dismantle nuclear weapons என வேண்டிக்கொண்டார். முதலில் மறுத்த பல்கனின், அமெரிக்கா முன்வந்தால் இணங்கலாம் என்றார். பின்னர் ராஜாஜி 1962ல் அமெரிக்கா சென்று கென்னடியைப் பார்த்து வேண்டிய கதையும் இருக்கிறது.

1956 ரயில்வே விபத்துக்கள், குறிப்பாக அரியலூர் விபத்தை தொடர்ந்து சாஸ்திரி பதவி விலகினார். சாஸ்திரி மீது விமர்சனம் வந்தபோது அவர் பேசிய வரிகள்

I am perhaps small in size, soft in tongue, though not physically strong , I am internally not so weak..

துணை அமைச்சராக இருந்த ஒ வி அளகேசன் தானும் ராஜினாமா என்றபோது, நேரு கடுப்பானார். Nonsense, somebody has to run the ministry என்றார்.

ஆசிரியர் நடந்த பொதுத்தேர்தல்கள் முடிவுகள் பற்றியும், அந்த அந்த ஆண்டுகளில் வந்து மக்களின் ஆதரவைப் பெற்ற சினிமாக்களையும் பேசுகிறார்.

தேவதாஸ் - லஷ்மியின் பெண் தாருவிற்கு கல்கத்தா ஜோதிபிரசாத் பட்டாசார்ஜியுடன் திருமணம் 1957ல் நடந்தேறியது. கல்கத்தா வைதீக குடும்பத்தில் வந்தவர் ஜோதி. நேரு பின்னர் வீட்டிற்கு வந்து லஷ்மி கொடுத்த லட்டுக்களை சாப்பிட்டுக்கொண்டே ராஜாஜி மற்றவர்களுடன் உரையாடி மகிழ்ச்சியை தந்து சென்றார்.

வேறு ஒருமுறை சிறுவனாக இருந்த கோபுவை (ஆசிரியர்) பார்த்து, நேரு பள்ளியில் என்ன விளையாடுகிறாய் என்றார். கோபு foot ball எனச் சொல்ல நீயே foot ball மாதிரி இருக்கிறாய் என கொஞ்சி சென்றார்.

வாழ்க்கை திடிரென திசை மாற்றும். சோகத்தைக் கொட்டும். லஷ்மி கோபுவுடன் பம்பாய் சென்ற தேவதாஸ்க்கு இதய தாக்குதல் நேர்ந்தது. வலியால் சிவ சிவ என தேவதாஸ். 57 வயது தான். அவர் இனி பூமியில் இல்லை. அன்று ஆகஸ்ட் 2 ,1957. அஸ்தியுடன் டெல்லி சென்ற லஷ்மியை , இந்திரா அணைத்து வாரித் தழுவி தன் ஆறுதலை தந்து கூடவே வந்தார். நேரு , என் சகோதரன் போன்றவர் தேவதாஸ் என்றார். பின்னர் வீட்டிற்கு வந்தார். துக்கம் விசாரித்து கிளம்பும் போது மதிய உணவு நேரம் . ஒரு வாய் சாப்பிட்டு போலாமே, லஷ்மி. சாப்பிடலாம். டேராடூனிலிருந்து குழந்தைகள் எனக்காக காத்துக்கொண்டிருப்பார்கள். அவசரம் எனச் சென்றார். சிறுவனான கோபு நினைத்துக்கொண்டார், நேரு ஏராள பேரன்களை பார்க்க விரைகிறார் என்று.

தேவதாஸ் சில நாட்களுக்கு முன்னர்தான் கோபுவிடம் சொன்னார். மனிதன் சீக்கிரம் சந்திரனுக்கு போய்விடுவான், நீ பார்ப்பாய் என. அது நடக்கலானது.

பெரோஸ் காந்தி என்றால் இந்திராவின் கணவர் என்பதுடன், நாடாளுமன்றத்தில் முந்த்ரா கேசை நாற அடித்தவர் என்றும் தெரியவரும். டிடிகே தான் மாட்டினார். சில ஆண்டுகளுக்கு பின்னர் லஷ்மியும் கோபுவும் மதராஸ் வந்தபோது, டிடிகே உடல்நிலை கேள்விப்பட்டு பார்க்கச் சென்றனர். கடவுள் பார்த்துப்பார் என லஷ்மி. அம்மா கடவுள் உண்டா, இது டிடிகே. அவர் மறைந்த செய்தி அறிந்த கர்நாடக இசை உலகம் துக்கித்துப் போனது. செம்மங்குடி அய்யோ போச்சே என்றாராம்,

ஏன் இந்திரா குடும்பத்தினர் ‘காந்தி ‘ சேர்த்துப் போடுகிறார்கள் என்ற பேச்சு வீட்டில் வந்தபோது, லஷ்மி எடுத்துச் சொன்னார். பெரோஸ் பார்சி- Ghandy என்பர். அது Gandhi என்றே பெரோஸ் உடன் வந்தது. நாம் குஜராத்தி காந்தியர்கள். வைச்சுக்கட்டமே, நேரு காந்தி குடும்பத்தில் சம்பந்தம் செய்தார் எனக் கூட இருக்கட்டுமே என லஷ்மி சாந்தப்படுத்தியுள்ளார்.

பெரோஸ் செப்8, 1960ல் தானே காரை ஓட்டிக்கொண்டு டாக்டரிடம் சென்றார்- - heart attack ஆல் மரணித்தார். ராஜாஜி சுதந்திரா கட்சியை ஆரம்பித்திருந்தார். நேரு குறித்து விமர்சனம் செய்தார். லஷ்மி தன் மகன் ராமு - இந்து திருமண பத்திரிகையை நேருவிடம் கொடுக்கச் சென்றார். பெரோஸ் மறைந்த சூழலில் , என் மகன் கல்யாணம் என இந்திராவிடம் சொல்ல மிகவும் கஷ்டமாக இருக்கிறது என லஷ்மி மனம்

இளகினார்.எவ்வளவு பேரன்புடன் அவர்கள் வாழ்க்கையை கடந்துள்ளனர்.

ராஜாஜியும் 81 வயதில் சுதந்திரா கட்சி நிகழ்ச்சியால் ,பேரன் கல்யாணத்தில் முழுமையாக இருக்க முடியவில்லை. ராஜேந்திர பிரசாத்திற்கு செய்தி அனுப்புகிறார். தாங்கள் கல்யாணத்தில் தாத்தாவாக officiating செய்ய முடியுமா ..எவ்வளவு பெருங்குண மனிதர்கள்.. குடியரசுத் தலைவர் பிரசாத் , ராஜாஜி சொன்னதை வைத்து- கல்யாணம் - வரவேற்பு இரண்டிலும் தாத்தாவாக இருந்தார்.

கோபு பள்ளிப்பருவம் முடியப்போகிறது. பல நண்பர்கள் குறித்து தொட்டுச் செல்கிறார். ஒரு பையன் வகுப்பிலேயே masterbate செய்கிறான். இங்கு ஆசிரியர் எழுதுகிறார்.

Everyone thought this as funny..not a few encouraged him..I would avert my eyes. அன்றுள்ள டெல்லி சிறுவனின் சிறு விலகல். செக்ஸ் குறுகுறுப்பு.

25 ஆண்டுகளுக்கு முன்னர், ஒருமுறை திருச்சி கூட்டம் முடித்து, முனிசிபல் பொது கழிப்பறையில் வரிசையாக ஆண்கள் மூத்திரத்தை வெளியேற்றிக்கொண்டிருந்தபோது, ஒரு நபர் அதை செய்தது பார்த்து ஏய் என எங்களில் சிலர் மாரல் போலிசானாது நினைவிற்கு வந்தது.

கோபு செயிண்ட் ஸ்டிபன் கல்லூரியில் ஆங்கில இளங்கலை சேர்ந்தபோது, ராஜாஜி பேரனுக்கு 12 ஷேக்ஸ்பியர் புத்தகங்களை அனுப்பி படிக்கச் சொல்கிறார். 83 வயது கிழவருக்கு , பேரன் ஆங்கிலம் குறித்த கவலை போலும். 1962ல் Gandhi Peace Foundation சார்பில் ராஜாஜி நியுக்ளியர் யுத்த முஸ்தீபுகளை அமெரிக்கா கைவிட வேண்டும் என கென்னடியை சந்தித்தார். ராஜாஜியுடன் சென்ற திவாகர், சிவராவ் என அனைவரும் கிழவர்கள் என நட்வர் கிண்டல் அடித்தார். கென்னடி ராஜாஜியை கூர்ந்து செவிமடுத்தார். இடது காது கேட்காது என்பதற்கேற்ப சீட்டிங் செய்யப்பட்டிருந்தது. ராஜாஜி பயணம் அமெரிக்கா சோவியத் ஒப்பந்தம் பின்னர் வர உதவியது என புரிந்து கொள்ளலாம்.

சுதந்திரா ஆரம்பித்த நிலையில் ராஜாஜி டெல்லி வந்தார். முன்னாள் கவர்னர் ஜெனரல் என்ற protocol எதுவும் தரவேண்டியதில்லை. நான் சுதந்திரா வேலைக்காக வருகிறேன் என பிரசாத்திற்கு கடிதம் எழுதும் நேர்மை ராஜாஜியிடம் இருந்தது.

1961ல் எலிசபத் ராணி டெல்லி வந்தார். நேரு, லஷ்மிக்கும் அழைப்பு அனுப்பியிருந்தார். அறிமுகத்திற்காக நிற்கும் வரிசைப் பட்டியலில்

லஷ்மிக்கும் இடம் இருந்தது. அனைவரும் இதை ஆச்சர்யமாகப் பார்த்தனர். ராணியிடம் நேரு, இது யார் தெரியுமா- லஷ்மி புகழ்வாய்ந்த இந்துஸ்தான் டைம்ஸ் எடிட்டரின் மனைவி (தேவதாஸ் மறைவிற்குப் பின்னர்) காந்தியின் மருமகள், ராணி உங்கள் அப்பா மவுண்ட்பாட்டனுக்கு பின்னர் கவர்னர் ஜெனரலாக உத்தரவு போட்ட ராஜாஜியின் பெண் என விரிவாக அறிமுகப்படுத்தினார். ராணியும் சந்தித்ததில் மிக்க மகிழ்ச்சி என முகமன் தெரிவித்தார். என்ன நேருவின் வாஞ்சை, பேரன்பு…

ராஜாஜி அமெரிக்க செல்கையில் வழி அனுப்ப கோபு சென்றார். தாத்தா நீ பெட் ரண்ட் ரசலை பார்ப்பாயா…என்ன எனக் காதை கொணர்ந்து ராஜாஜி திரும்பக் கேட்டார், ஏய் கோபு அவருக்கு ரொம்ப வயசாகிவிட்டதுடா (ரஸ்ஸல் 90ல்). சொன்னது 83 வயது.

அமெரிக்காவிலிருந்து, கோபு - நிறையப் பேரை பார்த்து உரையாடினேன் . கடவுள் புண்ணியத்தில் உடம்பு ஒத்துழைத்தது என எழுதினார் ராஜாஜி.

1962 தேர்தல் , கோவா விடுதலை சூழலில் கிருஷ்ண மேனன் கிருபளானி மோதலாக பம்பாயில் அமைந்தது. நேருவை வலுவாக விமர்சிக்க இருந்திருக்க வேண்டிய கிருபளானி குரல் , மேனனிடம் தோற்றது. சீனப் போர் சூழலில், ராஜாஜி சற்று மென்மையாகவே நேருவைப் பார்த்தார். என்ன செய்வது, நம்பிய சீனா ஏமாற்றிவிட்டது. ஆனால் எதிரி எப்போது ஏமாற்றலாம் என நினைப்பானே என்றார். பாதுகாப்பு அமைச்சர் கிருஷ்ண மேனன் பலியாக வேண்டியிருந்தது.

ஆசிரியர் படித்த புகழ் வாய்ந்த ஸ்டீபன் கல்லூரிக்கு உரையாற்ற ஜேபியை 1962ல் அழைத்திருந்தனர். கோபு தான் காரில் ஜேபியை கல்லூரிக்கு அழைத்து வந்தார். என்ன பேசவேண்டும் கோபு என ஜேபி.. Nationalism In India, Before Independence and After எனத் தலைப்பு சொன்னோமே என்கிறார் இளம் மாணவர் கோபு. ஓ அதற்கு பின்னர் ஜேபி காரில் மௌனமானார். அசை போட ஆரம்பித்திருக்கலாம். கல்லூரியில் அனைவரின் உளம் கவர்ந்த அற்புத உரையை ஜேபி தந்தாராம். ஆசிரியர் எழுதுகிறார்

My God , what a speech! The gods of political science and of history would have stepped down from their towers to hear it…எப்படிப்பட்ட ஆளுமைகள், காந்தி பேரனுக்கு எப்படிப்பட்ட வாய்ப்புகள்…

1963ல் தும்பா உருவாக்க பாடுபட்ட அறிஞர்களை, உழைப்பாளிகளை ஆசிரியர் சொல்கிறார். 1964ல் காந்தி நேருவின் அணுக்கத் தோழமை

கபூர்த்தலா வம்ச ராஜ்குமாரி அம்ரித் கவுர் மறைந்தார். அவர் health minister ஆக இருந்தபோது BCG vaccine mass immunisation திட்டமிட்டு செய்தது இந்தியாவின் வாழ்நாள் ஆண்டுகளை கூட்ட உதவியது எனலாம்.

1964ல்   காஷ்மீர் ஷேக் அப்துல்லா டெல்லி வந்தபோது, அவரை வரவேற்க நேரு இந்திராவை அனுப்பினார். அழைத்து நல்ல உபசரிப்புகளை செய்தார். அப்துல்லாவும் நடந்தவற்றை மறப்போம் என நேருவிடம் தன் அன்பைக் காட்டினார். நேரு மறைந்த செய்தி அனைவரையும் உலுக்கியது. எங்கும் பெருங்கூட்டம். ராஜாஜி வரமுடியவில்லை. அவர் இரங்கல் செய்தி பெருந்தோழமையைக் காட்டியது. ராஜாஜி எழுதியது

" Eleven years younger than I, eleven times more important to the nation, eleven hundred times more beloved of the nation, Sri Nehru suddenly departed from our midst and I remain alive to hear the sad news..The old guardroom is completely empty now. I have been fighting Nehru…but I knew he alone could get them corrected …but fighting apart , a beloved friend is gone, the most civilised person amongst all of us"

இளம் வாஜ்பாய் கூட A dream has been shattered, a song silenced, a flame has vanished in the infinite என அஞ்சலி செய்துள்ளார். அவரின் வாரிசுகள் இன்று இதை அறிவார்களா?

எவ்வளவு பெரிய வேலைகளை செய்தவர்கள், கண்ணியமான ஆளுமைகள்.. இந்திய அரசியல் இப்பண்புகளையெல்லாம் உள்வாங்கி நகராதா?

1964 வரை என் தேர்வில் நிகழ்வுகளை சுட்டிக்காட்டியுள்ளேன். பார்க்கலாம்..

19-6-2025

June 19

The letter addressed to the Cabinet Secretary on behalf of NJCM staff side of CG employees by com Shiv Gopal Mishra is timely. The subject matter is ‘ Requesting circulation of TOR of the 8th CPC’. The letter dated is 18-6-2025.

Though DOPT by its Jan 23, 2025 letter communicated the Govt’s decision to constitute 8th CPC, it is unfortunate no such visible action is found till this date.

This BJP govt headed by Shri Modi is more sound based than doing things as expected by the concerned stakeholders . Govt is not expected to end themselves in mere announcements or pronouncements for obvious other political benefits. The delay is irksome to the CG employees and Pensioners also.

Com Shivgopal in his letter rightly pointed about the apprehension about the delay. He has also correctly derived, though the FA 2025 directly refers not so, that the govt retains discretion over whether or not to extend the benefit of pay fixation under the 8th CPC to pensioners.

In a way , this letter indirectly given a reply to all those spreading rumours that ‘ no pension revision to all those retired to past pensioners’ . Here , in this letter, the clarification sought is ‘whether the same pay fixation is to be extended to the past pensioners - and the demand placed is ‘shall also be extended to the past pensioners’.

Hope the staff side may sit together and send a holistic common memo to CPC, narrating all their common demands.

The apprehension of com ShivGopal Misra is based on found FA Act , whereby Govt is vested with the power to distinguish the past and future pensioners.

The distinction was earlier qualified as there were two types of pensioners.

One ‘past pensioners’ - not employees on that date

The other ‘existing pensioners’, but employees on that date .

Since the existing pensioners were employees on that date, they were also eligible to get ‘pay fixation’ on that date as per the full length of scales and thereby their pension updation as per the om date. But the ‘past pensioners’ on that date were eligible for pension revision, but the minimum pension was linked with the new scales. Upto 6 th CPC they get this modified parity, not full length pay scales except taking the minimum of the corresponding pay scale.

Even the 7 th CPC maintained this distinction vide its om dated 4-8-2016, but it made another option vide OM 12-5-2017 , the past pensioners can also get their pension revision as per the pay matrix- that is full length of the corresponding scale, not

stopped with the minimum as that of 6 th CPC or even as that of 7 th CPC om 4-8-2016

After FA 2025 Validation, this becomes the contentious issue. That is a type of 12-5-2017 option in 8 th CPC also to the past pensioners as on 1-1-2026 or any date recommended by 8th CPC. CPCs are normally taking 10 years course only and so, here I am telling about 1-1-2026 as 'that date '. In short staff side is clear in demanding in 8 th CPC also , a kind of 12-5-2017 type fixation to the past pensioners.

I do not know after retaining power to distinguish past and existing pensioners, how the govt is going to act during 8 th CPC. Distinction does not mean denial, but distinction whether it means pay fixation to past pensioners also as per 8th CPC recommended scales to the CG employees and to the existing pensioners, that is questionable.

The letter in correct sense has gone to the Cabinet secretary. Let us wait and see any reply as well as the TOR of 8 th CPC.

Thanks to Com Shivgopal for writing a fair letter to the GOI

19-6-2025 9 hrs R. Pattabiraman

june 20

அணையா விளக்கு The Undying Light 5

கோபால்கிருஷ்ண காந்தியின் மேற்கூறிய நூலின் இயல் 4 ல் நுழைந்துள்ளேன்.

இயல் மூன்றில் - இந்தியா பாகிஸ்தான் யுத்தம், சாஸ்திரி அயூப் தாஷ்கண்ட் உடன்பாடு, சாஸ்திரி மறைவு, இந்திரா பிரதமராதல் என நிகழ்வுகள் போய்க்கொண்டிருந்தன.

டெல்லி இந்துஸ்தான் டைம்ஸ் அலுவலக வீட்டில், தேவதாஸ் மறைவிற்கு பின்னரும் லஷ்மி கோபுவுடன் இருக்க பிர்லாவால் அனுமதிக்கப்பட்டிருந்தார். எம் ஏ முடித்தவுடன், வீட்டிற்கு கீழேயுள்ள அலுவலகத்தில் எடிட்டரைப் பார்த்து, பழகுனராக சேரவா என கோபு கேட்க, எடிட்டர் மூல்காவோகர் வேலைக்கு சேர். ரூ 500 தான் சம்பளம் என்கிறார். அம்மாவிடம் சொல்ல அவர் ஆனந்தமடைகிறார். தாத்தா ராஜாஜி வேண்டாம் , அவனை IAS ஆகச்சொல்லு என்கிறார். தாத்தா சொல்படி தேர்விலும், நேர்முகத்தேர்விலும் ஆசிரியர் வென்றார். நேர்முகத்தேர்வில் ஆங்கில இலக்கியம் குறித்த கேள்வி ஒன்றிற்கு பதில் தெரியவில்லை. அனுபவத்தை தாத்தா ராஜாஜியிடம் சொல்கிறார். ராஜாஜி அது Sinclair Lewis நாவலில் வருவது எனச் சொல்லி அசத்துகிறார். மூதறிஞர் என்ன சும்மாவா?

1967 பொதுத்தேர்தல் . நேரு இல்லாமல் இந்திரா தலைமையில். டெல்லியில் இவர்கள் பகுதியில் புகழ்வாய்ந்த IFS கேடரான இளம் மனோகர் சோந்தி ஜனசங்கம் சார்பில் காங் எதிர்த்து நிறுத்தப்பட்டார். ராஜாஜி சுதந்திரா கடுமையாக மோதிக்கொண்டிருந்தது. லஷ்மியை ஜனசங் சோந்திக்கு ஓட்டுப்போட கோபு convince செய்தார். சோந்தி புகழ் வாய்ந்த சந்தானம் அவர்களின் மாப்பிள்ளை. அரசியலும் காலமும் எப்படியெல்லாம் ஜாலம் காட்டுகின்றன பாருங்கள்!

எங்கள் தொழிற்சங்கத் தலைவர் குப்தா, கட்சிக் கூட்டம் ஒன்றில், சிபிஐ சிபிஎம் பதிந்தா- ஜலந்தர் முடிவான left democratic alternative விவாதத்தின் போது முக்கிய நடைமுறை கேள்வி ஒன்றை அரசியல் தலைமையிடம் எழுப்பினார். ஜனசங்- காங்கிரஸ் என்கிற இரு கட்சிகள் தான் தொகுதியில் இருக்கும்போது, வாக்களிக்காமல் இருக்க முடியாது. ஜனசங்கிற்கு அளிக்க முடியாது. எனவே காங்கிரசிற்குத்தான் போட வேண்டியுள்ளது என தோழர் குப்தா விளக்கமிருந்தது.

காங்கிரசிற்கு மாற்றாக 9 மாநிலங்களில் எதிர்கட்சிகள் சோதனை நடந்தேறின. ஜனசங்கத்துடன் ஆட்சியில் என்கிற இடது சோதனையும் நடந்தது.

ஆசிரியர் -நக்சல் இயக்கம், வெண்மணி கொடுமை பற்றியெல்லாம் தொட்டுச் செல்கிறார். முன்னர் இ எம் எஸ் ஆட்சி கவிழ்ப்பு பற்றி சொல்லியிருந்தார். ஆனால் 1964ல் சிபிஅய் உடைந்தது பற்றி ஏதும் குறிப்பிடவில்லை.

1968ல் ராஜிவ் சோனியா திருமண நிகழ்வில் லஷ்மியும் கோபுவும் நீண்ட வரிசையில் நின்று வாழ்த்தி வந்தனர். ஆசிரியருக்கு மாவட்ட ஆட்சியருக்கான பயிற்சி தஞ்சாவூர் அருகே தரப்பட்டது. தஞ்சாவூரில் அப்போது புகழ் வாய்ந்த கலெக்டர் T V அந்தோணி. விவசாயத்தின் கிளியோபாத்ரா என முதல்வர் திரு கருணாநிதியால் அழைக்கப்பட்டவர். ஆடுதுறை நெல் ஆராய்ச்சி உருவாக உழைத்தவர். அவரிடம் தான் கோபு ‘ரிபோர்ட்’ செய்தார்.

மொரார்ஜி கோபுவை குஜராத் அனுப்பவே விழைந்தார். தாத்தா ராஜாஜி தமிழ்நாடு என்றதால் கோபு இங்கு posting பெற்றார்.

இந்த கலெக்டர் பற்றி மாணவப்பருவத்தில் என் தாத்தா நடேசன் எங்களிடம் சொல்லியுள்ளார். கலெக்டர் அலுவலகத்திற்கு தாத்தாவுடன், கர்ணம் பழநி, பட்டாமணியம் ஜெய்னுலாதீன் என்பவர்களுடன் போன மாணவ நினைவு எனக்கு. எங்கள் கரந்தை பரசுராமர் தெருவில் ராஜாஜியின் நெருக்க சீடர் டாக்டர் கோபு இருந்தார். நாங்கள் ஆங்கிலத்தை தவறாக படிக்கும்போது கரெக்ட் செய்தவர் அவர். அங்கு சருக்கைக்கு அருகில் ஹரிஜன தெருவிற்கு அந்த டாக்டர் நள்ளிரவு கூடப் போய் காசு வாங்காமல் வைத்தியம் பார்த்து வருவார். இவரின் தம்பி வாரிசுகள் தஞ்சையில் புகழ் வாய்ந்த டாக்டர், ஸ்டேட் வங்கி அதிகாரி, ஐஐஎம் பேராசிரியர் என உயர்ந்தனர்.

கோபு பயிற்சிக்கு வந்தபோது வசதியில்லா வீடு ஒன்றில் , ஸ்டவ் அடுப்பு சமையல் செய்து லஷ்மி போட்டார். தஞ்சாவூர் paintings யை வாங்கி ரசித்தார். கோபுவிற்கு சம்பளம் ரூ 350. ஒரு நாள் பயிற்சிக்கு காரில் கண்டியூர் தாண்டி திருவையாறு அருகே செல்லும்போது, கொடூர காட்சியைக் கண்டார் கோபு. இளம் மனைவியை , சந்தேகம் பெயரில் , தெருவில் அம்மணமாக ஒருவன் இழுத்துச் சென்ற் காட்சி அவரை தாக்கியது. இறங்கி ஏன் என கேட்காமல் வந்தது குறித்து குற்றவுணர்வு இருப்பதாக ஆசிரியர் பதிவு செல்கிறது. இது 1970. புகழ் வாய்ந்த திருவையாறு இப்படி வெட்ககர காட்சியை தந்தது.

1969 மகாத்மா நூற்றாண்டை, தஞ்சாவூரில் அமைதியாக அவரின் மருமகள் லஷ்மியும், பேரன் கோபுவும் பார்த்தனர். எம் எஸ், சதாசிவம் ஆராதனா முடிந்து சிறிய வீட்டில் லஷ்மியுடம் வசதி குறைவை பொருட்படுத்தாமல் தங்கினர்.

பயிற்சி முடிந்து கோபுவிற்கு திண்டிவனம் போட்டனர். செஞ்சி தேர்தல், அங்கு நடந்த கள்ள ஓட்டுகள் போன்றவற்றை ஆசிரியர் எழுதுகிறார். ராஜாஜி போஸ்டராக இருந்தாலும் விதிமீறல் இருந்தால் அவரே முன் நின்று கிழிக்க வைத்தார். திண்டிவனம் பகுதியில் தலித் கிராமம் ஒன்று தீக்கிரையானபோது, தீயணைப்பு வாகனம் கூட போகமுடியா கிராமத்தைக் கண்டார். உயர் சாதியினரின் பாரபட்சம் உணர்ந்தார். சாவுக்கு வழிவிடாத சாதி வெறியையும் நிர்வாகரீதியாக எதிர்கொள்ள வேண்டியிருந்தது.

புகழ் வாய்ந்த கடலூர் பகுதி தலைவர் இளைய பெருமாள் வந்து காந்தியும் அம்பேத்கரும் உழைத்த நாட்டில் இப்படி அநியாயங்களா என கடுமையாக பேசிச் சென்றார்.

கலெக்டர் அந்தோணி கோபு வந்தவுடன் சொன்ன முதல் அறிவுரை. தமிழ்நாட்டில் சாதி உணர்வு மிக அதிகம். உன் தமிழ் பிராமண பாஷையை முதலில் விட்டுவிடு. இங்குள்ள சாதிகள் குறித்து நன்றாக தெரிந்துகொள் என்றார். நீ வடக்கிலிருந்து வந்த நபராக இரு என்றார்.

அம்மா பார்த்த தாராவை கோபு 1971ல் மணந்தார். நம் பலருக்கும் நேர்வது போல்தான் கோபுவிற்கும். சரியான உச்சரிப்பு இல்லாவிட்டால் கணவனை திருத்துவது, பெர்பக்சனிஸ்ட் மனைவி. சீதா கல்யாணம் பாடியது எம் எஸ். திருமணத்திற்கு காமராஜர் வந்தார். எதிர்கட்சி என்பதால், மேலே விழுந்து நான் உன்னைக் கொண்டாடுவது , உனக்கு நல்லதல்ல எனச் சொல்லி வாழ்த்திச் சென்றார்.

முதல்வர் கருணாநிதி மதுவிலக்கு ரத்து செய்தபோது, கள்ளுக்கடை ஏல நிர்வாகத்தை காந்தி ராஜாஜி பேரன் எதிர்கொள்ள வேண்டியிருந்தது. ராஜாஜி கடுமையாக எதிர்த்தார். அறிவுரை சொன்னார். ஆனாலும் உத்தரவு வந்தது. என்ன செய்வது என கோபு ராஜாஜியிடம் கேட்க, நீ கலெக்டர்- கவர்ன்மெண்ட் சொல்வதைச் செய். எனக்கு கொள்கை, நான் போராடிக்கிறேன் என்றார்.

பங்களாதேஷ் உதயம் போன்ற நிகழ்வுகளை கோபு பதிவு செய்கிறார். நேருவிற்குப் பின்னர் இந்திரா ஆட்சி என்பதில் ஆசிரியர்க்கு விமர்சனம் இருக்கிறது. கோபால்கிருஷ்ண காந்தி எழுதுகிறார்

The transition from Nehru's to Indira was a shift from the age of earnest striving to that of fidgety acting, from action to drama, from the person Nehru being billeted to serve India being roped into service of the person , Indira

அதாவது ஒரு வரியில் இதை decode செய்தால், நேரு இந்தியாவிற்காக என்ற நிலை மாறி இந்தியா இந்திராவிற்காக என்பது உருவானது என புரிந்துகொள்ளலாம். ஆசிரியர்க்கு bias dominant ஆக இருக்கிறதா?

சற்று கடும் விமர்சனமாக எனக்குப்படுகிறது….

நூலின் மூன்றில் ஒரு பகுதியை இதுவரை தொட்டுக் காட்டியுள்ளேன்..பார்க்கலாம்

20-6-2025

#theundyinglight

#Gopalkrishnagandhi

june 21

ஈரான் உலகின் 18 வது பெரிய நாடு. 16 லட்சத்திற்கு மேலான சதுர கிமீ பரப்பளவு உள்ள பிரதேசம். கிட்டத்தட்ட 9 கோடி மக்கள் தங்கள் பழம் பாரம்பரிய பெருமிதத்துடன் வாழக்கூடியவர்கள்.

ஈரான் ஓர் இஸ்லாமிய குடியரசு நாடு. ஒற்றை ஆட்சி முறையுடைய நாடு. நிர்வாக வசதிக்காக 31 பிரதேசங்களாக- அதை ostan என வைத்துள்ளனர். நமக்கு முதல்வர் என்பது போல், அங்கு கவர்னர் ஜெனரல் ஆட்சியாளர். அவர் மத்திய உள்துறையின் பிரதிநிதி. மாகாண பிரதேசங்களின் உட்பிரிவுகளை கவுண்டிஸ்- அவர்கள் Farmandar என்கின்றனர். இப்படி 450 நிர்வாக பிரிவுகளை வைத்துள்ளனர். கவுண்டிகளில் மாவட்டமோ, மாவட்டங்களோ வைத்துள்ளனர்.மாவட்டம் என்பதை Bakhsh எனச் சொல்கின்றனர்.

ஊரக மாவட்டங்களை dehestan என்றும், முனிசிபாலிட்டிகளை shahr என்றும் அழைக்கின்றனர். இங்கு நம்மூர் போல கவுன்சில், மேயர் தேர்தல் உண்டு.

ஷாவின் முடியாட்சியை தூக்கி எறிந்து 1979ல் இஸ்லாமிய குடியரசை மக்கள் ஏற்றனர். இஸ்லாமிய மத அதிகாரத்திற்குள்ளான தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்க ஆட்சிமுறை என்பதை அவர்கள் சோதித்து வருகின்றனர். மதமும் அரசியலும் பின்னிப் பிணைந்தவை.

தேர்ந்தெடுக்கப்படும் குடியரசு தலைவருக்கும் மேலான உயர்ந்த ஆகப்பெரும் அதிகாரத்தை சுப்ரீம் லீடர் பெற்றிருக்கிறார். இப்போதுள்ள அலி கமீனி 1989லிருந்து சுப்ரீம் லீடராக இருந்து வருகிறார். அவரை Rahbar என்கின்றனர். அனைத்தின் அதிகாரமும் அவரிடம்தான். நிபுணர்களின் அசெம்பிளியை அவர் அமைக்க முடியும்.

குடியரசு தலைவர் (president) தேர்ந்தெடுக்கப்படுபவர். அவர் அரசாங்கத்தின் தலைவர். 4 ஆண்டுகள் பதவி. இருமுறை மட்டுமே இருக்க முடியும். நாடாளுமன்றத்தை அவர்கள் Majles e Shura ye Eslami என்கின்றனர்.

கார்டியன் கவுன்சில்- பாதுகாப்போர் குழு என 12 பேரை சுப்ரீம் லீடர் நியமிக்கிறார். நிபுணர்கள் என நியமிக்கப்படும் 88 இஸ்லாமிய அறிஞர்கள் 8 ஆண்டுகளுக்கு பதவி வகிப்பார்களாம்.

Chief Justice of Iran என்கிற உச்சநீதிமன்ற தலைமையை சுப்ரீம் லீடர் நியமிப்பார். சட்டம் Shia Islamic law. தீவிரமானவை , நாட்டின் பாதுகாப்பு எனக் கருதப்படும் கேஸ்கள், புரட்சிகர நீதிமன்றங்களுக்கு செல்லும்.

பல நாடுகளில் உள்ளது போன்ற இராணுவத்தை தவிர, அரசியல்- சமூக- பொருளாதார அம்சங்களில் தலையிடக்கூடிய அதிகாரமிக்க IRGC Islamic Revolutionary Guard Corps என வைத்துள்ளனர். இத்துடன் ஆங்காங்கே உள்ளூர் தன்னார்வலர் அமைப்புகள் சேர்ந்து இயங்குகின்றன. அதை Basji என்கின்றனர்.

நம்மூர், அல்லது தேர்தல் நாடுகள் போல பலகட்சி பதிவுகளோ, செயல்பாடுகளோ அனுமதிக்கப்படுவதில்லை- not having multi party system. Factions ஆக செயல்படுகின்றனர். இஸ்லாமிய புரட்சியை பாதுகாக்கும் payadari, seminary society, combatant clergy போன்ற குழுக்களாக அவை இருந்து வருகின்றன. IRGCக்கு ஆதரவான, சுப்ரீம் லீடருக்கு கட்டுப்படக்கூடியவர்களே நாடாளுமன்றம் மற்றும் அரசாங்க பொறுப்பிற்கு வரமுடியும்.

சீர்திருத்த லிபரல் குரல்கள் இல்லாமல் இல்லை. அவை நகர்ப்புற இளம் வட்டத்தினராக உள்ளனர். ஆனால் இவர்கள் சற்று குரலை உயர்த்தினால் கண்காணிக்கப்பட்டு தகுதி நீக்கத்திற்கு உள்ளாவர். ட் யுடே, எம் இ கே போன்ற இடதுசாரிகள் ஒடுக்கப்பட்டுள்ளனர். பெண்களுக்கு வாக்குரிமை உண்டு. நாடாளுமன்றம் செல்லமுடியும். ஆனால் பிரசிடெண்ட் ஆக முடியாது. மாரல் போலிஸ் கண்காணிப்புகள் உண்டு. ஹிஜாப் எதிர்த்து இயக்கங்கள் நடக்காமல் இல்லை. பெண் உரிமைப் போராளிகளுக்கு சிறையே இடம்.

இன்று மக்கள் மனதில் ஆழமாக சென்றடையும் கோட்பாடுகள்- இஸ்லாமியக் கொள்கைகள், மதச் சட்டங்கள், மேற்கு மீதான விமர்சனம்.

ஈரானின் நகர்ப்புற மக்கள் 70 சதத்திற்கு மேலாக இருந்தும், மதப் பிடிமான ஆட்சியே அங்கு. இன்னும் பொது அமைப்புகளில் பெண்கள் பங்கேற்பு 30 சதமே இருப்பதாக சொல்கின்றனர்.

ஈரான் இறையான்மை மக்களிடம் அளிக்கப்படவில்லை. இஸ்லாமிய நாடுகளின் நம்பிக்கைப்படி இறைவனிடம் இறையாண்மை- Sovereignty belongs to God exercised by the people under religious law.

ஈரான் மக்கள் அவர்கள் நம்பும் இறையாண்மைப்படி, அவர்கள் ஆட்சி முறையை நடத்திட உரிமை பெற்றவர்கள். தங்கள் ஆட்சியாளர்

குறைகளை எதிர்த்து போராடி விரும்பிய மாற்றங்களை கொணரவும் அவர்களுக்கு உரிமை இருக்கவேண்டும். அதை அமெரிக்காவோ, இஸ்ரேலோ செய்யக்கூடாது. இதே போன்ற உரிமை இஸ்ரேல் மக்களுக்கும் இருக்க வேண்டும்.

இஸ்ரேல் விரும்புவதால் ஈரானோ, ஈரான் விரும்புவதால் இஸ்ரேலோ அழிய வேண்டியதில்லை. பாலஸ்தீன மக்களுக்கான உரிமையை அவர்கள் இனியாவது பெறட்டும். அவரவர் முன்னேற்றத்தை , மற்றவரின் அச்சுறுத்தல் தலையீடு இல்லாமல் பார்த்துக்கொள்ள முடிந்தால், ஆயுத வியாபாரிகளின் மரணம் நிச்சயம். ஆயுத வியாபாரிகளின் கொழுக்கும் இலாபத்திற்கு உலகில் எந்நாட்டு மக்களும் பலியாக வேண்டா உலகம் உருவாகட்டும். ஆங்காங்கே மக்கள் எண்ணிக்கை ஆதரவை நம்பாமல், ஆயுத எண்ணிக்கையை நம்பும் State , non state actors மற்றும் இரகசிய ஆயுத குழுக்கள் ஆதரவற்று நிராகரிக்கப்படும் சூழல் உருவாகட்டும். ஆழ்ந்த காந்தியம் இதற்கு துணை செய்யும்.

போர் நின்று, அமைதியான மக்கள் வாழ்வு உத்தரவாதமாக மானுட மனமே துணை நில்··· அமெரிக்க மக்களே , உலகின் பெருங்கனவு தேச மக்களே , உங்கள் அதிபரை வழிக்கு கொணர்வீர் என்கிற நம்பிக்கையை எங்களுக்கு தாருங்கள்!

21-6-2025

june 22

அணையா விளக்கு - The Undying Light 6

கோபால்கிருஷ்ண காந்தியின் இந்நூல் வந்து இரண்டு மாதங்கள்தான் ஆகிறது. இனித்தான் மதிப்புரைகள் வரவேண்டியிருக்கலாம் . எனக்கு , விடுதலை இந்தியா குறித்த நல்ல refresher. போனஸ் என்னவெனில் அவர்கள் குடும்பம் குறித்த சில தகவல்கள். தேவதாஸ்- லஷ்மி குறித்து பொதுவாக மிகக் குறைந்த தகவல்களே பொதுவெளியில். குறிப்பாக லஷ்மி ஏன் காந்தி- ராஜாஜி- தேவதாஸ் குறித்து ஏதும் சொல்லாமல் எழுதாமல், குடும்ப உறவுகளுக்குள் நின்று, கல்யாணம் - துக்கம் என நின்று போனார் என்கிற கேள்வி அல்லது ஆவல் எனக்குள்..எந்த sensational emotional அம்சங்களுக்கும் பொது வெளி தீனி போடாமல் சென்றவர் லஷ்மி..

சரி இனி நூலின் பக்கங்களுக்குள்..

1972ல் ராஜாஜி மறைந்தவுடன் அவருக்கு ராஜாஜி ஹாலில் (அதற்கு பின்னர் வந்த பெயர்) பொது அஞ்சலி ஏற்பாட்டை முதல்வர் கலைஞரும் காமராஜரும் செய்தனர். பூதவுடலுடன் சென்ற நாமகிரியிடம் லஷ்மி இனி நாம் beggars என்கிற சோகத்தை காட்டினாராம். என்ன மனதில் தோன்றியதோ தெரியவில்லை. ராஜாஜி மறைவதற்கு சில மணிக்கு முன்னர் ஏறத்தாழ சம வயது தோழர் பெரியார் பார்க்க வந்தார். நரசிம்மா பழம் கொடு என ராஜாஜி பேச்சுவராமல் சொல்ல, பெரியார் பணிந்து அதை ஏற்றாராம். என்ன தோழமை…

1974 கால நிலையில் இந்திரா ஆட்சி, சஞ்சய் தலையீடு குறித்து ஆசிரியர்க்கு விமர்சனம் இருக்கிறது. கோபாலகிருஷ்ண காந்தி எழுதுகிறார்

Huge misgovernance..corruption unemployment, children undernourished even unschooled, high inflation.. இந்திராவிற்கு தேர்தல் உத்திகள் இருந்தது. மக்களிடம் நம்பவைக்கும் வசீகரம் கூட இருந்தது. ஆனால் பேசிய ஏதும் நடைபெறாமலும் இருந்தது என்கிறார் கோபு.

ஜேபி தன் துணைவி பிரபாவதி மரணத்திற்குப் பின் சோர்ந்தார். கோபுவிற்கு எழுதிய கடிதத்தில் there is nothing to console me. I have lost interest in life and whatever I do is only as a duty performed. ஜேபிக்கு வரலாறு அப்படி ஒரு கடமைக்கான காலத்தைக் கொடுத்தது.

இந்திரா தேர்தல் மீதான வழக்கு தீர்ப்பு எமர்ஜென்சி அறிவிப்பு, பாட்னாவிலிருந்து ஜேபி போராட்டங்கள்- மொரார்ஜி, ஜேபி என பெரிய

தலைவர் அனைவரும் கைது போன்ற பல நிகழ்வுகளை கோபு தருகிறார். தேர்தல் , இந்திராவின் தோல்வி, ஜனதா ஆட்சி மொரார்ஜி பிரதமர், ஜேபி லோக்நாயக் புகழ் என காட்சிகளை வரலாறு இட்டு நிரப்பிக்கொள்கிறது.

ஆசிரியர் கோபு எக்மோர் தமிழ்நாடு ஆவண காப்பகத்தில் புதுக்கோட்டை பற்றி தேடிக்கொண்டிருக்கும் நேரத்தில் தான், ஜூன் 26, 1975ல் எமர்ஜென்சி அறிவிக்கப்படுகிறது. இந்த 2025 ஜூனில் அதன் 50 ஆம் ஆண்டு நிறைவு. பெரும் ஜனநாயக படுகொலையாக இன்றளவும் அது பார்க்கப்படுகிறது. காங் குடும்பத்திற்கு , நேரு பாரம்பரியத்திற்கு பெரும் களங்கமாகிப் போனது.

காமராஜர் சென்னையில் லஷ்மியை பார்க்க வந்தார். உடன் ராஜ்மோகன் இருந்தார். சுவையான சாம்பாருடன் நல்ல சாப்பாடு என காமராஜர் அளவளாவி சென்றார். ஜேபி ஊழலை எதிர்த்து போராடுவது சரிதானே என்றார். நேரு படேல், யார் பக்கம் நீங்கள் என ராஜ்மோகன் கேட்க, நேரு பக்கம்தான் என உடன் பதிலைத் தந்தார் காமராஜர்.

எமர்ஜென்சி கால அக்டோபர் 2. ராஜ்காட்டில் அதிகாரபூர்வமானவர் அஞ்சலி. மற்றவர்க்கு அனுமதி உண்டா என்ற சந்தேக நிலை. வெளியே இருந்த வயதான கிருபளானி, சுசிலா நய்யார், ராஜ்மோகன், ராமு ஆகியோர் அஞ்சலி செல்ல சிலருடன் செல்கின்றனர். அனுமதி உண்டு ஆனால் பேசக்கூடாது என்கின்றனர். கிருபளானி காந்தி பற்றி பேச ஆரம்பித்தவுடன் போலீசார் தடுக்கின்றனர். சுசிலா உடனே போலீசாரிடம்

I am a doctor, I am telling you Kripalaniji is an elderly person, you should not touch him. போலிசார் ராஜ்மோகன், ராமு காந்தி பேரன்களை , ராஜ்காட்டிலிருந்து அப்புறப்படுத்தி கைது செய்கின்றனர்.

கிருபளானி சிந்து வழக்கொன்றை சொன்னார். ஊருக்கு வருகிற கொடுமைக்காரன் , ஒரு வீடையாவது விட்டுச் செல்வானாம்..மறுபடியும் வரவேண்டும் என்பதற்காக. அது போல என்னைவிட்டுச் செல்கிறார்கள். மறுபடியும் வேட்டையாட வரலாம்.

தேவதாஸ் உறவுக்காரர் எம் பியாக இருந்த சுமித்ரா குல்கர்னி தலையிட்டு ராஜ்மோகனும், ராமுவும் விடுவிக்கப்பட்டனர். சென்னையில் இதை கேள்விப்பட்ட காமராஜர் துயரம் அதிகரித்தது. அவர் அன்று இறந்தும் போனார். நாமகிரி, லஷ்மி, கோபு சென்று அஞ்சலி செலுத்தினர்.

திமுக ஆட்சி கலைக்கப்பட்டு, கவர்னர் ஆட்சி வந்தது. மிசா கொடுமைகள் நடந்தன. ஜேபி சிறையில் அவதி, பின்னர் டயலிசிசஸ் சிகிட்சை என நாட்கள் நகர்ந்து, 1977 ஜன 30 ல் ஜனதா உருவானது. தேர்தலில் அக்கட்சி வென்று ஆட்சிக்கும் வந்தது.

லஷ்மி தன் டிரான்சிஸ்டரில் கோபு மனைவி தாராவுடன் தேர்தல் முடிவுகளை கேட்டுக்கொண்டிருந்தார். தமிழ்நாட்டில் இந்திரா வெற்றி செய்திகள் வந்தன. லஷ்மி இந்தியில் கடவுளே என அழைத்தார். ராமா சோதனை ஏன் , தவறு செய்தவர்களை சரி செய்ய மாட்டாயா என்றார். அவருக்கு ராமன் மகிழ்ச்சியை தந்துவிட்டார் போலும்..ஜனதா வென்றது.

வேறு ஒரு சுவாரஸ்யமான நிகழ்வையும் கோபு சொல்கிறார். கோபுவிற்கு கொஞ்சம் ஆர்வமும் அவசரமும் போலும். இந்திரா வீட்டை காலி செய்திருப்பார், மொரார்ஜி வந்திருப்பார் என்கிற நம்பிக்கையில், போன் அடிக்கிறார். எடுப்பவர்களிடம் சொல்லி மொரார்ஜியுடன் பேசலாம் என்கிற எண்ணம். தொலைபேசியை எடுத்த பெண்மணியிடம் பிரதமர் வீடா, கேட்டது கோபு. Nahin galat number என severe toneல் பதில் வந்தது. அது இந்திரா அம்மையாரின் குரல். எமர்ஜென்சி கொடுமை தனி, தோற்றவுடன் தான் பிரதமர் இல்லை என்கிற நினைவின் வெளிச்சத்தில் தானே போனை எடுத்து இது பிரதமர் எண் அல்ல wrong number எனச் சொல்லி வைக்கும் தன்மையும் சேர்த்து பார்க்க வேண்டிய உளவியல்.

விஜயலஷ்மி பண்டிட் எமர்ஜென்சி தவறு என விமர்சித்தவர். ஆனாலும் தன் அன்புக்குரிய அண்ணன் மகள் ரேபரலியில் தோற்றது அவர் கண்கலங்க வைத்தது என நயன் தாரா எழுதுகிறார். பார்த்தபோது இந்திராவை தழுவி , நீ ஏதும் பேசவேண்டாம் விடு என்றாராம்.

தமிழ்நாட்டில் எம் ஜி ஆர் ஆட்சி ஏற்பட்டது. இந்திய அரசியலில் சினிமா உலகத்திலிருந்து முதல்வராக வந்த முதலாமவர் என்ற வரலாற்றை எம் ஜி ஆர் உருவாக்கினார். கோபு IAS அதிகாரியாக துறைசார்ந்து சொல்லும்போது, முதுகை தட்டிக்கொடுத்து செய்யலாம் double action என்பாராம் எம் ஜி ஆர். நிதிச் செயலர் அறியாமல் கூட இது நடந்துவிடுமாம். எக்மோர் தில்லையாடி வள்ளியம்மை திறக்கும்போது, அப்படி பெயரிடுவதே நல்லது எனச் சொன்னதே எம் ஜி ஆர் தானாம். கைத்தறி துறையில் கோபு, காந்தி புகழ்ந்த தியாகப்பெண் பெயரை சூடல் என்கிற பொருத்தம் நேர்ந்தது.

கோபு மனைவி தாராவிற்கு அக்டோபர் 2 அன்று குழந்தை பிறக்கும் வகையில் சிசேரியன் செய்யலாமா என டாக்டர் ஆர்வக் கோளாறில் கேட்டபோது, சரியாக ‘ நோ ‘ சொன்னார் தாரா. இயற்கையாக அன்று பிறந்தால் சரி , இல்லையெனில் எப்போ பிறந்தாலும் சரியே என்றார். அக்டோபர் 1 அன்று குழந்தை பிறந்ததாம்.

1978ல் கோபு குடும்பத்திற்கு இரு மகிழ்ச்சி செய்திகள். தாராவிற்கு பிரியமான புகழ் வாய்ந்த ornithologist Salim Ali வீட்டிற்கு வந்தது. தாரா பின்னர் அவர் தொடர்பான நூல்களைக் கொணர்ந்தார். அடுத்து இலங்கை kandy அலுவலக வேலை..

பிரதமர் மொரார்ஜி கண்டி வந்தபோது, கோபுவின் குழந்தை கைப்பிடித்து ‘அ’ போடவைத்தது, கோபுவை மருத்துவ மனையில் பார்த்தது போன்ற அன்பு நிகழ்வுகள் நடந்தன. மொரார்ஜி அன்பு தொடர்ந்து அவர் மறையும்வரை கிடைத்தது.

ஜனதா தோல்வி, மீண்டும் இந்திரா ஆட்சி- சஞ்சயின் அதிகாரம், பிந்தரன் வாலா பொற்கோயில் - இந்திரா படுகொலை, சீக்கியர்கள் வேட்டையாடப்படுதல், ராஜிவ் பிரதமராதல்- ஷா பானு வழக்கு, போபர்ஸ் , அயோத்தி பூட்டு திறப்பு, இலங்கை தமிழர் பிரச்சனை , கியானி ஜெயில் சிங் மோதல் என நிகழ்வுகள் நடந்தேறின.

திரவியம் தமிழ்நாட்டில் காபினட் செயலராக இருந்தபோது, மதராசி எனப் பேசுவோரை வெறுப்பேற்ற வேட்டியிலேயே டெல்லி செல்வாராம். கோபு அவர்களுக்கு கவர்னர் மாளிகையில் பொறுப்பு, பின்னர் துணை ஜனாதிபதி ஆர் வெங்கட் ராமனின் செயலர் என வாய்ப்புகள் வந்தன.

ஆர்வி யுடன் சீன தூதரக நிகழ்ச்சி ஒன்றில் ஈ எம் எஸ் பார்க்க வாய்ப்பு கோபுவிற்கு கிட்டியது. ‘புரோடகால்’ படி தோழர் ஓரமாக சற்று தனியே அமர்ந்திருந்தார். கோபு போய் துணை ஜனாதிபதி அருகே போகலாமா எனக் கேட்க ஈ எம் எஸ் உடன் வந்து உரையாடினர். ஆர்வி ஈ எம் எஸ்ஸை மிகுந்த மரியாதையுடன் பார்த்து உரையாடியதை கோபு சொல்கிறார். திரும்பி வருகையில் ஈ எம் எஸ் பற்றி வெங்கட் ராமன் சொன்ன வரிகள் பற்றி கோபு

What are we before this giant man! He had inherited a big tharavad estate but gave up everything for his cause, everything, stressing the v impact-fully

ஆர் வியும் அற்புதமான மிக நிதானமான மனிதர், அறிஞர் என கோபு சொல்கிறார். இலங்கை சமாதான முயற்சி, தாக்குதலிருந்து தப்பி வந்த ராஜிவ்வை, ‘புரோடகால்’ மீறி விமான நிலையம் சென்று வரவேற்று

பாராட்டி வாழ்த்தியவர் ஆர்வி. அதேபோல் எம்ஜிஆர் மறைந்தபோது, அற்புத மனிதர் போகவேண்டும் எனச் சொல்லி புரோடகால் பார்க்காமல் வந்தவர் ஆர்வி. அதேபோல் ஆர்வியா விஆரா என குடியரசு தலைவர் தேர்தலின் போது , கிருஷ்ண அய்யர் போன்ற சிறந்தவர்களை எதிர்த்து நாடு முழுக்கச் சென்று ஆதரவு தேடக்கூடாது என முடிவெடுத்து, மிக உச்ச நாகரீகம் பார்த்தவர் ஆர்வி. அவர் சொன்ன வரிகள்

When the country is plagued by so many divisions, what is the point of a future Rashtrapati going about dividing the presidential vote? அவர் பெரும் வெற்றி பெற்றார் என்பது வரலாறு.

ஏறத்தாழ நூலின் நடுப்பகுதிக்கு வந்துள்ளேன். எனக்கு தோன்றியவற்றை இந்த 6 பதிவுகளில் சொல்லியுள்ளேன். அவரவர் வாசிக்கும்போது சுவை மாறலாம்…

பார்க்கலாம்..

22-6-2025

#theundyinglight

#Gopalkrishnagandhi

june 23

அணையா விளக்கு The Undying Light - 7

மேற்கூறிய நூல் 600 பக்கங்களில் தன் ஞாபக அடுக்குகளின் உள் மடிப்புகளை கொண்ட ஒன்று. விடுதலை இந்திய அரசியல் சாலையின் high ways ஒன்றில் போவது போன்ற உணர்வை வாசகருக்கு கொடுக்கலாம்.

இந்திரா அம்மையாரின் படுகொலை துயரக் காட்சிகளை கடந்து போகவேண்டும். காலை 9.40 எங்கள் சிறிய தொலைபேசி அலுவலகத்தில் ஸ்விட்ச் போர்டில் சக பணியாளர்களுடன் இருந்தபோது, பக்கத்து தேநீர் கடை ரேடியோ பிபிசி , வாய்ஸ் ஆப் அமெரிக்கா இந்திரா சுடப்பட்டதை சொல்கிறது எனச் செய்தி வந்தது. இந்திய வானொலி ஏதும் சொல்லாமல் இருந்த நேரமது. நான் எப்போதும் கவலைப்படாமல் அழைப்புகளை செய்யக்கூடிய இளங்கன்று அப்போது. எம்பசிகளைக் கூட அழைப்பது நடந்துள்ளது. காங் அலுவலகம்.. எனக்கு ஊர்ஜிதமில்லா நினைவு..கமலாபதி திரிபாதியா வேறு எவரா..ஏனோ உள்ளுணர்வால் துண்டித்துவிட்டேன்.

1977 சிபிஅய்யின் பதிந்தா, 1978 சிபிஎம்மின் ஜலந்தர் கட்சி தீர்மானங்களின் செல்வாக்கும், இந்திரா அம்மையார் மீதான தொடர் விமர்சனக் கட்டுரைகளின் தாக்கமும் எங்களிடம் இருந்த நேரம். அரசியலில் முக்கியமானவர் , சவாலுக்கு உரிய தலைவர் அகற்றப்பட்டுவிட்டார் என்ற எண்ணம், கேவலமாக என்னிடம் எழுந்தது. எனக்கு அப்போது வயது 28. அருகில் இருந்த சில பெண் ஊழியர்கள் சோகத்தில் சொற்களை வெளிப்படுத்தினர். அவர்களில் எவரும் கட்சி சார்ந்தவர் அல்லர். Common sense human sense கொண்டவர்களாகவும், நான் ஏனோ political biased sense கொண்டவனாகவும் இருந்த நாளை திரும்ப பார்த்துக்கொள்கிறேன். வெட்கப்படுகிறேன்..

இதேபோல ராஜிவ் ஸ்ரீபெரும்பதூர் கொலை நாளிலும் வேறு அனுபவம் எங்களுக்கு. 1991 தேர்தல் பிரச்சாரத்தில் தோழர் ஜெகன் தலைமையில் குடவாசல் பகுதியில் முப்பதுக்கும் மேற்பட்டவர்கள் இருந்தோம். எங்களைத்தாண்டி பார்த்துக்கொண்டே மணிசங்கர் அய்யர் தன் காங் சகாக்களுடன் எதிரே பிரச்சாரத்தில் சென்றுகொண்டிருந்தார். இரவு 11 மணியளவில் கும்பகோணம் வந்தோம். ஊரே எங்கும் நிசப்தம் . போலீஸ்காரர்கள் எங்களை எவரும் நிற்காதீர்கள், ராஜிவ் படுகொலை, உங்கள் இடத்திற்கு போங்கள் என விரட்டலானார்.

மறைந்த குடந்தை ஜெயபால் எங்கள் அனைவருக்கும் உணவு தேடி அலைந்தார். இறுதியில் கல்யாண மண்டபம் ஒன்றிற்கு சென்று இரவு 12 மணிக்கு மேல் உப்புமா கிளறி போடப்பட்டது. எவரும் ஊர் திரும்ப பஸ், ரயில் இல்லை. அடுத்த நாள் மாலை ரயில் வாய்ப்புள்ளவரை ஏற்றி சென்னை உள்ளிட்ட ஊர்களுக்கு அனுப்பினோம். அனைவரும் சென்ற பின்னர், குடந்தை தோழர்களுடன் நான் . பஸ் இல்லை. ஆனாலும் வந்த அனைவரையும் ஜாக்கிரதையாக ஊர் அனுப்பி வைத்தோமே என்கிற ஆறுதல். வங்கித் தலைவர் கோவிந்தன் சைக்கிளில் ஊர் போகிறாயா எனக் கேட்டார். தொழிற்சங்கத் தலைவர் கணேசன் குடவாசல் வரை சைக்கிளில் கூட வருவார் என துணை சேர்த்து , சைக்கிள் கொடுத்து அனுப்பினர். குடந்தை- திருவாரூர் 40 கிமீ இருக்கலாம்.

வழியெங்கும் ராஜிவ் படம் மாலைகள். திமுக கொடிக்கம்பங்கள் தெருவில் சாய்க்கப்பட்ட காட்சிகள். கார் வண்டி எதையும் ஆங்காங்கே ஊர் இளைஞர்கள் கூடி விடவில்லை. சைக்கிளில் சென்ற நானும் விளக்கம் கேட்கப்பட்டே வழிவிடப்பட்டேன். குடவாசல் தாண்டிய பின்னர் தனித்து 22 கிமீ வீடுவரை ...ஏதோவொரு வேகம். சைக்கிளும் காலும் கையும் கண்களும் தோழமை பூண்டன . கோவிந்தன் சைக்கிள் இன்றும் அவருடன் நினைவில்.. வழக்கம்போல் காலுக்கு துணவியாரின் பரிவு சிகிட்சை.

நூலுக்குள் வந்துவிடுகிறேன். காட்சிகள் சொந்த அனுபவங்களை கொஞ்சம் பேச வைத்துவிட்டது.

ராஜிவ் பெரும்பான்மை பெறமுடியா சூழலில் விபி சிங்கை பிரதமராக அழைத்தார் குடியரசுத்தலைவர் ஆர்வி. முன்னதாக அமேதியில் ராஜிவ் எதிர்த்து போட்டியிட ராஜ்மோகன் காந்தியை விபி சிங் convince செய்தார். Real Gandhi vs fake Gandhi என்கிற ஆரோக்கியமற்ற பிரச்சாரத்தில் ராஜ்மோகன் போன்ற தெளிவான அறிஞர் சிக்கியிருக்கக்கூடாது . சிக்கினார் என்ன செய்வது. ராஜிவிடம் தோற்றார். பூத் பல குண்டர்களின் கையில் என்கிற செய்தியும் வந்தது. காந்தியின் பேத்தி தாராவை காங்கிரஸ் அணுகியபோது ‘நோ’ என அவர் தெளிவாக இருந்தார்.

விபி சிங் பிரதமராகும் போது அதுவரை இந்தியா பார்த்திராத உள்துறை பொறுப்பை காஷ்மீர் சார்ந்த முப்டி முகம்மது சையத் அவர்களிடம்,முதல் முறையாக இஸ்லாமியர் ஒருவருக்கு வழங்கினார். அவர் ஆட்சி மண்டல்- மந்திர் பிரச்சனை என வரலாறாக நீண்டு

அடங்கியது. இடதும் வலதும் சேர்ந்து ஆட்சியை தாங்கி நின்ற காட்சியை இந்தியா கண்டது

இலங்கை தமிழர் பிரச்சனை ராஜிவ் பலியை வாங்கிக்கொண்டது. காபந்து சர்க்கார் சந்திரசேகர் பொறுப்பில். ராஜிவ் கொலை செய்தி ஆர்விக்கு எட்டி, சேஷன், சந்திரசேகர், நரேஷ் சந்திரா, கோபு போன்றோர் நள்ளிரவில் நாட்டில் அமைதி நிலவ ஆலோசித்தனர்.

Bureaucrats என்றால் எப்படி என்பதை காபினட் செயலர் நரேஷ் சந்திராவின் கூற்று காட்டியது. அவர் ஆர்வியிடம்

Sir..the tragedy is unimaginably great, but let me assure you..no need for any panic, no need to pause election process. The borders are being watched. If I may say Sir…The person killed was a young charismatic leader with long years of service ahead of him. But he was former PM,not the PM. The PM Chandrasekarji is PM in every sense and heading the govt…

தேர்தல் முடிவிற்கு பின்னர் ராவ் தலைமையில் காங் ஆட்சி அமைந்தது. நிதிக்கு ஐ ஜி படேல் அல்லது மன்மோகன் என அலெக்சாண்டர் ராவிற்கு சொன்னார். ஆர்வியும் அவர்கள் சரியானவர்களே என அறிவுரை சொன்னார். ஐஜி படேல் முடியாது எனச் சொன்ன சூழலில் மன்மோகன் வந்தார். LPG புதிய பொருளாதார கொள்கைகளுக்கான உறுதியான அடித்தளம் அமைந்தது.

ராவ் நேரு குடும்பம் அல்லாத படேல், ஆசாத் , நேதாஜி போன்றவர்க்கு பாரத் ரத்னா வழங்கி பாத்தியதை என்றால் மற்றவரும் உண்டு எனக் காட்டினார். ராஜிவ்க்கு தந்துதான் இதைச் சாதுர்யமாக செய்தார். மொரார்ஜிக்கு கொடுப்பதில் ஆர்வி க்கு ஆர்வமில்லை. மொரார்ஜி வரமுடியா வயது சூழலில் தான் போய் கொடுக்க விரும்பாமல், அஞ்சலில் அனுப்புங்கள் என ஆர்வி சொன்னது சரியாகப் படவில்லை. அத்வானி இதை a graceless act என விமர்சித்தார்.

நேதாஜி குடும்பத்தினர் எதற்கு வேண்டவே வேண்டாம் என மறுத்தனர். ஆசாத் வாரிசுகளும் பெரிதாக ஆர்வம் காட்டவில்லை. படேல் பேரன் வந்து வாங்கிக்கொண்டார்.

ஆர்வியுடன் நெருக்கமாக அருகில் இருந்து 7 ஆண்டுகள் பயணிக்கும் வாய்ப்பு கோபுவிற்கு. தொடர்ந்து ஜனாதிபதி அலுவலில் அவருக்கு பின் இருக்க விரும்பவில்லை. தமிழ்நாட்டிற்கு வந்தால் ஜெயலலிதா அம்மையாருடன் ஒத்துப்போகுமா என்கிற தயக்கம். லண்டனில் நேரு மய்யம் ஒன்றிற்கு டைரக்டர் வாய்ப்பு வந்து லண்டன் வாழ்க்கைக்கு சென்றார் கோபு. அங்கு பல scholarகளுடன் பயணம்.

ஜோதிபாசு ஒருமுறை வந்து உரையாற்றினார். அற்புதவுரை என லண்டன் அரங்கில் இருந்தோர் பாராட்டினர். பாசு மிக நேர்மையாக , இதை எழுதிக்கொடுத்தது உத்சா பட்நாயக் (திருமதி பிரபாத் பட்நாயக்) என்றார்.

1992ல் பாபர்மசூதி இடிப்பு என்கிற அரசியல் சர்ச்சை தன் வரலாற்று சாலையை உருவாக்கிக்கொண்டது.

பார்க்கலாம் கோபு எப்படி மேலும் தொடுத்துள்ளார் என…

23-6-2025

#theundyinglight

#Gopalkrisnagandhi

june 24

My passiveness -their activeness

I have had the experiences of getting acceptance sometimes and rejection many other times in my active organisational life.

In my passive, having non attendance organisational phase of these days, it is natural-organisationally natural to get rejection only and no question of acceptance . No need for anyone to take the views of mine to the height of unbiased discussion stages, as discipline in any organisation is always a co traveller . If any one wants to stand and grow to the heights of its hierarchical positions, they have no other go except to stand with the decisions of the organisation they want to rely upon or work. Even if they don't want positions but attention of active organisational life, they also cannot go on beyond the Laxman Rekha, they felt or the dominant leadership felt.

The psychology that operates amongst the activists in any organisation is, that they are with people and doing the challengeable 'field work'. In my active days, the field work that I experienced is the bundle of - taking the issues with the management, sleepless touring, going and assembling meetings, speaking to the audience with half knowledge or with some knowledge-to bind them with some emotions successfully or unsuccessfully, slogan raising- demonstration- procession- strikes, facing occasional arrests , facing local thugs , fund raising for conferences, factional clashes etc.

In the case of fund raising even the much appreciable Gandhian (now hundred years) Smt Krishnammal , then in the presence of Shri Jagannathan in their Kilvelur residence, near Tiruvarur, was not spared. Senior leader Ramadurai and myself gone to her with our staff to get the donation of RS 5000 in that period of late 1980s. When reviewing today, I feel it was unfair on my part insisting her so much money, and unfair on her part to get convinced to release that money through her co workers of LAFTI.

In my passing passive days , I am not experiencing the above said field works, but active in viewing the issues that confront and writing doubly for understanding the issues.

One such issue is pension revision to my fraternal bsnl community. I have aired my views on various occasions, of course in my non attendant passive role only.

Even this write up is also a kind of my reaction (Though I am not a revolutionary, I am not reactionary also in Marxian phraseology) , on hearing a video clip announcing the decisions of CWC of AIBSNLPWA.

The decision is unanimous, that is good for any organisation

The decision is going with NCCPA for the legal battle to challenge the FA 2025 by giving the apportioned 4 lakhs, but no donation from members.

Unfortunately the circular , I happened to see , issued by the NCCPA shown me their misconception, also taken the right of distinguishing the pensioners associations as NCCPA and NOn NCCPA and unequal apportion of fund for court case some in the range of thousands and some in lakhs. They can tell reasons for their right of making distinctions amongst organisations , when they gird up their loins to fight distinctions . I have every right to keep the distinctions that I feel fair because I am elected in my body, but you cannot have that right , though your electoral sanction may be big , because you are always unfair- is the argument

The decision is taken after a clear explanation beyond any doubt by a very senior leader from Kerala in the CWC.

The explanation, as I understand from the clip is- whether the FA 2025 affects or not the bsnl pensioners today or even tomorrow, we have to challenge because the amendment of CCS pension rules. So a battle on pure perception or speculation without any substantiated proof . Spending organisational money for no immediate cause , and no prayer is answerable for any perception without any concrete evidence in the pavilions of law. When it is not affecting you where is your locus standi ..

As per my understanding, this explanation that CCS rules amended is not based on any fact , so most unfair, and fooling the bsnl fraternity and so the decision of spending money for an issue not affecting us as on date is also unfair. This explanation asserts that there is amendment to the CCS rules, but taking no responsibility of telling pensioners like me , on which article of CCS rules amended or newly inserted. No leader is guiding me for this question. In fact, no amendment to any CCS rules is found as these leaders are telling.

Already S30 pensioners found their cause to challenge the FA 2025 and gone to the legal battle. If CG pensioners challenge, one can understand, they want also pay scales based revision as that of employees as rightly raised by com Shivgopal of NJCM.

Already BSNL pensioners a distinct category , and the govt made their distinction on 1-10-2000 itself and the distinction is still continuing, no CG pensioners felt that a distinction.

What happened to the all along demand of 7 th CPC fitment that is similar to 2.57 of om 4-8-2016 , an OM distinguishing past and existing pensioners. It seems that now the demand is changed by the association for pension revision on the basis of complete pay scales . The association once said , no pay is needed just multiple my pension that is enough.

For no cause of bsnl absorbed pensioners, the CWC democratic exercise is done to shut the mouth of a small minority voices. Organisation is organisation. It regulates and wants its authoritarian stamp in the name of democracy. It does not mean, the dissenters does not have that tendency.

The association may think the Sun glows even the dog barks.. but dog also has a small life…

Any power seeking through asserting positions, strength, money, even through ideas have that trend .. watching ourselves is sometimes a great fun…

24-6-2025 7.30hrs R. Pattabiraman

june 25

The Undying Light -8

இன்னும் பதிவுகள் இந்நூல் குறித்து வேண்டுமா எனக் கூட தோன்றியது. குறைத்துக்கொள் என மனக்குரலும் அதிகாரமானது. சரி பார்க்கிறேன் எஜமான் எனச் சொல்லிவிட்டு, நான் செய்யவேண்டியதை ஆரம்பித்தேன். ஆசைக்கு அளவேது. எழுதுவதும் அப்படி ஆசையா , இல்லை மன அவஸ்தையா..தெரியலை.

இந்நூல் குறித்து ஏற்கனவே 7 பதிவுகள் எழுதிப் பார்த்துள்ளேன். உயர் இடங்களின் ஆட்டம் பாட்டம் சில நேரம் உன்னத மானுட மேன்மைக் காட்சிகள் என உணர்ந்த சிலவற்றை பதிவு செய்தேன்.

பிரதமர்கள், குடியரசு தலைவர்கள், தூதர்கள் என பலரும் எப்படி வருகிறார்கள், என்ன ஆகிறார்கள்….மேலும் புகழ் கூட அல்லது சரிய நடந்தைவைகளுடன் அவர்கள் வரலாறாகின்றனர். சிலருக்கு தொடர் வெளிச்சம். சிலருக்கு ஒருமுறை போடப்படும் பல்ப் உடன் சரி. அது எரியவில்லை எனில் அத்துடன் அவர்களும் இருளுடன் இருளாக…கேட்க புகழ் சுமக்க ஆளின்றி..

அமைப்புகளின் சிஸ்டத்தின் சாமர்த்தியமது. தான் தொடர அது முடிந்த பலரை அடித்தள்ளி பீடமாக்கி நிற்கப் பார்க்கும்.

கோபால்கிருஷ்ண காந்தி லண்டன் நேரு மய்யம், பின்னர் தென்னாப்பிரிக்கா தூதரக பணி எனச் செல்கிறார். அங்கு அதிபர் மண்டேலாவுடனான பழக்கம், தாத்தா வாழ்ந்த போராடிய இடங்கள், பெரியப்பா மகள் இலாகாந்தி பற்றிச் சொல்கிறார். தூதரக பணி கடிதத்தை வாங்கிய மண்டேலா கோபுவிடம் சொன்ன வரிகள்

I am very happy to welcome you, the descendant of a man who introduced the first organised and disciplined political struggle in our country..காந்தியால் பேரனுக்கு கிடைக்கும் நல்வாய்ப்பு போலும். நம்மூர்ல காந்தியை ‘பாபு’ எனச் சொன்னது போல், மண்டேலாவை அவர்கள் ‘மடிபா’ தந்தை என்றனர்.

குஜ்ரால் அவர்கள் கோபுவிற்கு appointment order sign செய்வதற்கு முன்னர் ராஜ்மோகனுக்கு போன் செய்தார். நீ போறியா பெயரை மாற்றிவிடுகிறேன் எனக் கேட்டார். என் சகோதரனே போகட்டும் என அவர் சொன்னதும் செய்தி. நல்ல சகோதரர்கள் போலும்…

அடுத்து கே ஆர் நாரயணன் குடியரசுத் தலைவர் ஆனபோது அவருக்கு செயலராகும் நல்வாய்ப்பு கோபுவிற்கு அமைந்தது. அவர் இவரை கேட்டு வாங்கிக்கொண்டார். கேஆர் என் தேர்ந்த நேருவிய அறிஞர்.

தேவ கெளடா , குஜ்ரால் சோதனைகள் முடிந்து வாஜ்பாயின் 13 நாட்கள், பின்னர் மாதங்கள் என சோதனைகளை பாஜக நடத்த துவங்கியது. வாஜ்பாய் மார்ச் 1998ல் பதவியேற்ற நாளில் தோழர் இ எம் எஸ் மறைந்தார். நாரயணன் நேரில் கட்சி அலுவலகம் சென்று அஞ்சலி செய்தார். குடியரசு தலைவர் கட்சி அலுவலகம் சென்று அஞ்சலி செய்வது புரோட்டகாலுக்கு அப்பாற்பட்ட ஒன்று. இ எம் எஸ் அவ்வளவு மரியாதையை தன் சேவை உழைப்பால் பெற்றிருந்தார். நாராயணன் வரிகள்

EMS a social theorist of the highest order and originality and an educator of people as well as their leader…என்ன சத்தான வரிகள்

பொக்ரான் அணுசோதனையை, இந்திராவிற்கு பின்னர் வாஜ்பாய் நடத்திக் காட்டினார். பாகிஸ்தான் உறவுச்சோதனைகள் எல்லா பிரதமருக்கும் தலைவலியே. ஜெயலலிதா அம்மையாரின் ஆதரவு விலகிய நிலையில் வாஜ்பாய் அரசு நீடிக்க முடியாமல் மீண்டும் தேர்தலை நாடு சந்திக்கும் நிலை உருவாக்கப்பட்டது. ஒரே வாக்கில் அவர் கவிழ்க்கப்பட்டார்.

வாஜ்பாய் அரசில் எவர் மந்திரிகளாக வேண்டும் என்கிற லிஸ்டில் ஆர் எஸ் எஸ் தலையீடு வெளிப்படையாக இருந்தது. மாறி மாறி தரப்பட்ட லிஸ்டை பொறுமையாக இருந்து கேஆர் என் அங்கீகரித்தார். வாஜ்பாய் காலத்தில் அரசமைப்பை திருத்த கமிட்டி என ஒரு டிராப்ட் நாராயணனிடம் வந்தது.அவர் பெரும் அறிஞர். மிக எச்சரிக்கையாக அதை வாஜ்பாய் போன்றோர் புரிந்து ஏற்கும் வகையில் திருத்தி சாரப்படுத்தினார். Basic structure யை பாதுகாத்து அதற்கு பாதகமில்லாமல் பரிசீலனை செய்வது என்கிற சாரத்தைக் கொணர்ந்தார். அரசமைப்பு சட்ட மேன்மையை இவ்வாறு வெளிப்படுத்தினார்

The constitution , which India adopted 50 years ago , has served us well. It has been a reliable guarantor of parliamentary democracy , secularism and fundamental rights, which all of us cherish. It has also inspired the spread of democratic consciousness in our society, empowering dalits, adivasis, bcs and women and making our system of governance more participative and progressive

எவ்வளவு மேம்பட்ட புரிதலைக் அவரது வரிகள் காட்டுகின்றன. சீன அதிபர் ஜியாங் கேஆரென் அவர்களை வரவேற்றபோது

An engineer in mechanics and dynamics, an expert in State and diplomatic affairs என்றார். நாரயாணன் தான் மெக்கானிக்கல் பொறியாளர் மட்டுமல்ல,

social political engineer எனச் சரியாக தன்னை நிறுவிக்கொண்டார். அவரது எழுத்துக்கள் உரைகள் காங்கிரஸ் சார்பு நிலை காரணமாக போதுமான வெளிச்சம் பெறவில்லை. சமூக மாற்ற சிந்தனைகள் கொண்டவை அவை.

அடுத்து கோபுவிற்கு இலங்கை ஹை கமிஷனர் பதவி என வாஜ்பாய் அரசாங்கம் முடிவிற்கு வந்தது. ஈழ விடுதலைபோர்ர் உக்கிரமாகிக்கொண்டிருந்த சூழல். போவதா வேண்டாமா பெரும் போராட்டம். பல பெரிய ஆளுமைகளை சந்தித்து கோபு அறிவுரை பெறுகிறார். வெளியுறவுத்துறை தகவலில் பிரபாகரன் பற்றிய மதிப்பீடு

For him a solution is not a solution..he cannot compromise without inviting revenge..he has to keep the conflict going inorder to survive..

கோபுவிற்கு தான் பாதி தமிழன் (தாத்தா அம்மா வழி) என்பது வரமா சாபமா என்கிற கேள்விக்கு ஒவ்வொருவரும் வெவ்வேறு பதிலைத் தந்தனர்.

90 வயது ஆர் வெங்கட் ராமன் இலங்கை அரசியலின் இண்டு இடுக்குகளை கவனமாக கையாள வேண்டியதைச் சொல்லித்தந்தார். அவர் துணவியார் மகனிடம் செலுத்தும் வாஞ்சையைக் காட்டி வாழ்த்தினார்.

எம் எஸ் அம்மா கடவுள் உன்னோடு இருப்பார். ஆனாலும் நீ எங்க குழந்தை..கவலையிருக்கும் ..ஜாக்கிரதையாக இரு . சரியாத்தான் இருப்பே கடிதாசு போடு என தாயன்பை காட்டினார்.

சோனியா கிளம்பப் போறீங்க ..வாழ்த்துகள்..என்ன என்ன உடன்பாடுகள் இருக்கு எப்படி மேம்படுத்தப் போகிறாய் எனக் கேட்டு தெரிந்துகொண்டார்.தன் கணவன் இழப்பு குறித்த சோகம் எதையும் காட்டாமல் graceful ஆக வாழ்த்தினார்.

பிரதமர் வாஜ்பாயி வாங்க தூதரே என வரவேற்று அன்பு காட்டினார். எப்ப போறீங்க வசதி என்ன .. உங்களிடம் நிறைய எதிர்பார்க்கிறேன் என வாழ்த்தினார்.

பெர்ணாண்டஸ் பாதுகாப்பு மந்திரி சொன்ன வரிகள்

We are committed to territorial integrity of Sri Lanka..in late 1980s LTTE cadres met me. I told them so. They were not pleased. (At the same time) we have to encourage the SL govt to concede maximum. அவர் அரசின் நிலைப்பாட்டை தெளிவாக சொன்னார்.

சந்திரசேகர், முதல்வராக இருந்த கருணாநிதிக்கு சொல்லப்பட்ட சிலவற்றை அவர் கேட்காமல், புலிகள் ஆதரவு நிலை எடுத்தது போல் ஆதாரமில்லா செய்தியை சொன்னதாக கோபு சொல்கிறார்.

நரசிம்ம ராவ் எதிர்மறையாக, நீ தோற்பதற்காக அங்கே போகிறாயா எனக் கேட்டார். உன் தமிழ் அங்கு தவறாகவே புரிந்துகொள்ளப்படும் என்றார். நான் வெளிப்படையா பேசுவதை தப்பா எடுத்துக்காதே. கவனமாக இரு. சரியாக இருப்பாய் என அறிவேன். யார் கண்டா உன் தமிழே உனக்கு உதவவும் கூடும் என வாழ்த்தினார்.

மன்மோகன்சிங் , வழக்கம் போல் அமைதியாக சில கேள்விகளுடன் கடவுள் அருள்வார் என வாழ்த்தினார்.

வைகோவிடம் இலங்கை அரசியல் சூழல் மேம்பட உதவ வேண்டும் என கோபு கேட்டுக்கொண்டார். முரசொலி மாறன் வெளிப்படையாக இருந்தார். மாறன் சொன்ன வரிகள்

Nobody knows Pirabakaran’s mind. Nobody is in touch with him.

கோபு அவர் தன்னை யாசர் அராபத் என நினைக்கிறரா என்றார். மாறன் பதிலில் அவர் நம் கோடம்பாக்கத்தில் அலைந்த இளைஞர்தானே என்றார்.

குஜ்ரால் ,பிரபாகரன் தான் பார்த்த இரத்தத்திற்கு ஈழம் தான் பதில் என பேசிக்கொண்டிருப்பவர். No point talking to LTTE ..peace will have to found minus Pirabakaran. ..Chandrika is the best bet for Sri Lanka and an asset to us என்றார்.

கலைஞர் வருத்த முகம் காட்டினார். இங்கு கோபு கருணாநிதி கருத்தாக எழுதியவை P will never have a change of heart. ஜாக்கிரதையாக இருங்கள்..

இப்படி பிரபாகரன் குறித்த பல மதிப்பீடுகள், இலங்கை நிலைமைச் சொல்லி கோபுவை அனுப்பி வைத்தனர்

பார்க்கலாம்…

25-6-2025

#theundyinglight

june 25

அக்களூர் இரவி இரு வாரங்களுக்கு முன்னர் இந்தியாவில் புதிய எழுச்சி நூலை தந்து சென்றார். நூல் குறித்து கோமதி விரிவாக

பேசியுள்ளார். வேறு மதிப்புரைகளும் வந்திருக்கக்கூடும். இங்கு ஹேமா வாசித்த பின்னர் தோன்றிய மதிப்புரை ஒன்றை பதிவு செய்துள்ளார். ரவிக்கு எங்கள் நன்றி. ஹேமாவின் ரிவ்யூ..

இந்தியாவில் புதிய எழுச்சி- H.W.Nevinson

அக்களூர் ரவி மொழிபெயர்ப்பில்

-எஸ். ஹேமலதா

திரு. ரவியின் மொழிபெயர்ப்பில் அடுத்தடுத்து புத்தகங்கள் வந்து கொண்டிருக்கின்றன. கனவில் தொலைந்தவன் என்ற நாவல் சுமார் 1000 பக்கத்தில் அவரின் நேர்த்தியான உழைப்பில் வெளி வந்தது.

கனவு நகரம் காஞ்சீபுரம் - காஞ்சீபுரத்தின் அருமை பெருமைகளை சொல்லும். இரண்டையும் வாசித்ததால், அவரின் மொழிநடை எனக்கு சற்றே பரிச்சயமான ஒன்றாக இருக்கிறது.

H.W.Nevinson னுடைய The New Spirit of India வை இந்தியாவில் புதிய எழுச்சி என 350 பக்கங்களில் நமக்கு தந்துள்ளார். மொழிபெயர்ப்பு என நம்மை உணர வைக்காத நடை அவருடையது.

நெவின்சன் 1907-8 ஆம் ஆண்டுகளில் மான்செஸ்டர் கார்டியன் மற்றும் வேறு பத்திரிக்கைகளுக்கும் நிருபராக இந்தியா வந்தபோது மேற்கொண்ட பயணங்கள், சந்தித்த மனிதர்கள், ஆங்கிலேயரின் அப்போதய குணநலன்கள் என அனைத்து செய்திகளையும் சுவாரசியமாக சொல்லிச் செல்கிறார்.

இந்தியாவின் சேவகராக முதல் அத்தியாயத்தில் கோகலே பற்றியும் அவரின் சர்வெண்ட்ஸ் ஆப் சொசைட்டி பற்றியும் விளக்குகிறார்.

அடுத்து இந்தியாவில் பல்லாயிரம் உயிரை பலிவாங்கிய பிளேக் பற்றி கூறும் போது, "நமது அரசாங்கம் நடந்து கொண்ட முறை, வேறு எவருடைய முட்டைகள் மீது அமர்ந்து குஞ்சு பொரிக்க நினைக்கும் யானையின் குணம்" என்று உவமைப் படுத்தியிருப்பார்.

சட்டென இந்த உவமை மனதில் நெருட தேடிப் பார்த்ததில் Horten Hatches the egg என்ற Dr Sruss ன் உவமையை ஆங்கிலேய அரசாங்கத்திற்கு பொருத்திப் பார்த்திருப்பது புரியும். பரிவு மிக்க செயல் முனைப்பும் கடுமையான நடவடிக்கைகளும், அவசரம்,பரபரப்பும்,மற்றவரின் பார்வையை புரிந்து கொள்ள முடியாத இயலாமை கொண்ட ஆங்கிலேய அரசாங்கத்தை இப்படி வர்ணிக்கிறார்.

ஒரு பைசாவுக்கு ஒரு எலி என்ற அரசின் நடவடிக்கையை இப்போது வாசிக்கும் போது சிரிக்காமல் இருக்க முடியவில்லை. ஆனாலும் தடுப்பூசி போட்டுக் கொள்ள மக்களை ஏற்கச் செய்வது சவாலான காரியம் தான்.

தீவிரவாதி என்று திலகரைப் பற்றிய அத்தியாயம் அப்போது காங்கிரஸின் முழக்கமான காலனி சுய ஆட்சி பற்றியும் அவரின் விடுதலை பற்றிய கனவையும் ஆசிரியர் சொல்கிறார்.

அக்கால விவசாயிகளின் பாட்டை விவசாயிகளின் சுமை என்ற பகுதி விளக்கும். ஏராள புள்ளி விவரங்கள். குத்தகை சட்டங்கள், வரி, விளைச்சல் பொய்த்துப் போவது, மிருகங்களால் அவர்கள் சந்திக்கும் இடர்கள் அவற்றிற்கு அதிகாரிகளின் முன்னெடுப்புகள் என பிரச்சினைகளின் நடுவிலும் பூனாவின் அருகமைந்த சில கிராமங்களில் மாதம் 8 ஷில்லிங் சம்பளத்திற்கு ஆசிரியர் நியமிக்கப்பட்டு பள்ளி நடந்திருக்கிறது என்ற தகவலும் கிடைக்கிறது.

மதராஸ், ஒரிஸா பற்றிய அத்தியாயங்களில் அந்தந்த மக்களின் மத சம்பிரதாயங்களை விலாவாரியாக விவரிக்கிறார்.

ஆசிரியர் வங்கப் பிரிவினை பற்றியும், அதன் மூலமாக இந்தியாவில் ஏற்பட்ட எழுச்சி, ஆங்கில அரசின் மீது மக்களுக்கு ஏற்பட்ட கோபம், அதில் இருந்த நியாயம் என இந்திய மக்களுடன் உடன்பட்டு ஆங்கில அரசாங்கத்தை கடுமையாக சாடியிருக்கிறார்.

வங்கப் பிரிவினையின் காரணமாக சாதாரண மக்கள் அனுபவித்த கொடுமைகள், டாக்கா நவாப் உடனான சந்திப்பு அவரின் போதாமை என எழுதிச் செல்லும் ஆசிரியர் அரசாங்கம் தன்னை உளவு பார்த்ததையும் நகைச்சுவையுடன் விவரிக்கிறார்.

நாம் நம் நாட்டில் போற்றும் சுதந்திரம் இந்தியர்களுக்கு மறுக்கப்பட வேண்டியதில்லை என கருத்து கொண்டிருந்தார் நெவின்சன்.

ஆங்கிலேயர்கள் வங்கப் பிரிவினையை எதிர்த்த இந்தியர்களை கேலி செய்த போது, ஒரு இங்கிலாந்து பிரதமர் துர்சோவிலிருந்து டம்ஃரைஸ் (Thurso to Dumfries) வரையிலும் ஆங்காங்கே கோடு வரைந்து, இனிமேல் இரண்டு தனித்தனி மாகாணங்களைக் கொண்டதாக ஸ்காட்லாந்து இருக்கும்; ஒரு அரசாங்கம் எடின்பரோவிலும் மற்றொன்று கிளாஸ்கோவிலும் இயங்கும்; அவற்றிற்கிடையில் எவ்வித தொடர்பும் இருக்காது என்று அறிவித்தால் ஸ்காட்லாந்து கோபத்தில் கொழுந்து விட்டு எரியும். அதே விதமான உணர்வு தான் இதுவும் என

பிரச்சினையை ஆழமாக புரிந்து கொண்டு எதிர் வினையாற்றி இருக்கிறார்.

அதே போல நம் கைத்தறி நெசவுத் தொழில் முடக்கப்பட்டு, வங்கப் பிரிவினை காரணமாக அந்நியத் துணி பகிஷ்கரிப்பு தீவிரமாக இருந்ததையும் நியாயப்படுத்துகிறார்.

'ஒரு வேளை நான் இந்தியனாக இருந்தால் மக்களின் குறைகள் நிவர்த்தி செய்யப்படும் வரை நாட்டு மக்கள் எந்த வெளிநாட்டுப் பொருட்கள் வாங்காமல் இருப்பதை உறுதி செய்ய என்னால் முடிந்த அனைத்தையும் செய்திருப்பேன்' என்கிறார்.

வங்கப்பிரிவினையே இந்திய சுதேசி இயக்கத்தின் தாய் என ஆசிரியர் மதிப்பிட்டுள்ளார். கிழக்கு வங்கப் பகுதியில் தாய்க்கும் குழந்தைக்குமான சுவையான உரையாடல் ஒன்றை 1907 மே மாதம் டைமஸ் வெளியிட்டிருந்தது. தாயாரிடம் குழந்தை கேட்கும்- இது இங்கிலாந்து கொசுவா அல்லது சுதேசியா. அம்மா சுதேசி என்றாள். அப்ப அடிக்கமாட்டேன் என குழந்தை தன் சுதேசியத்தை உணர்த்தியதாம்.

மூன்று வங்காளிகளும் பத்திரிகைகளும் என்ற அத்தியாயத்தில் அந்நாளைய கல்கத்தா நம்கண்முன் விரிகிறது. காளி கட்டம், கோவில், ஆற்றங்கரை, சைவ, வைணவம் ஏற்ற மக்கள் என வழக்கமான விவரங்களுடன் அக்காலத்தே வெளிவந்த பத்திரிகைகளை விவரமாக பட்டியலிட்டுள்ளார்.

அம்ரித் பஜார் பத்திரிகா, வந்தே மாதரம், யுகாந்தர், சந்தியா, பாரிசாலின் ஹிதாஷி (நண்பன்) ஆங்கிலோ இந்திய வார இதழ் ஏசியானி, அலகாபாத்தில் இருந்து பயோனிர், ஸடேட்ஸ்மேன், இந்தியன் டெய்லி நியூஸ், கேபிடல், லாகூரின் சிவில் மற்றும் மிலிட்டரி கெஸட் என அனைத்து பத்திரிகைகளையும் அவை பின்பற்றிய தர்மத்தையும் விளக்குகிறார்.

இந்தியர் நடத்தியவை, ஆங்கிலோ இந்தியர் நடத்தியவை, ஆங்கிலேயரால் நடத்தப்பட்டவை இடையே பாரபட்சம் அரசாங்கத்தால் காட்டப்பட்டதை நெவின்சன் உணர்த்துகிறார். கேசரியும், மராட்டாவும் எப்படி பத்தாயிரக்கணக்கில் போயின என ஆச்சரியப்பட வேண்டியுள்ளது. அவ்வளவு கல்வியறிவும் தேசபக்த உணர்வுமா?

புகழ் பெற்ற சூரத் காங்கிரஸைப் பற்றிய விவரங்களும் விடுபடவில்லை. அம்மாநாட்டில் கலந்து கொண்டு ட்ரான்ஸ்வால் இந்தியர்களின் துயரங்களை பகிர்ந்து கொள்ள 600 சார்பாளர்கள் தென்னாப்பிரிக்காவிலிருந்து வந்ததாக குறிப்பிடுகிறார். அதில் ஏறத்தாழ 500 பேர் ஏதோ ஒரு வகையில் தீவிரவாதிகள் எனக் கூறலாம் என்கிறார். இக் குறிப்பின் விவரங்கள் சரிபார்க்கப்பட வேண்டியவையாக இருக்கலாம்.

அது காந்தி தென்னாப்பிரிக்காவில் போராடிக்கொண்டிருந்த காலம் .. காந்தியைப் பற்றிய எந்தக் குறிப்பும் இப்புத்தகத்தில் இல்லை. அவ்வளவு வெளிச்சத்திலும் காந்தி அப்போது இந்தியாவில் இல்லை.

ஆரிய சமாஜம் பற்றிய விரிவான பதிவுகள், காசி, கல்கத்தா நகரங்களின் காட்சி, மக்கள், அவர்களின் மத உணர்வுகள் என இந்தியா முழுவதும் பயணம் செய்து அவற்றை ஒரு ஆவணமாக்கி இருக்கிறார் திரு நெவின்சன்.

1908 ல் நெவின்சனின் புத்தகம் வெளிவந்திருக்கிறது. 117 ஆண்டுகளுக்குப் பிறகு அதன் தமிழ் மொழிபெயர்ப்பை தன் உழைப்பின் முலம் தமிழ் மக்களுக்கு கிடைக்கச் செய்திருக்கிறார் திரு. ரவி. வாழ்த்துகள் ரவி !

25-6-2025

june 26

Win win position

The apt idiom lest we forget is ‘ Missing the wood for the trees’. Here ‘we’ is those who wish to fight legally and organisationally the power of GOI through the FA 2025 of 29-3-2025.

I have written many a number of articles on that and those are not mere social media barking. It sounds some wisdom that the concerned need to take. But dialogue means no pressing of one’s view and it has many sides .

The confrontation is due to the apprehension of Govt pensioners on hearing FM about the purpose FA 2025. Smt Nirmala Seetharaman mentioned in the parliament about 6th CPC and thereby hinting that only modified parity would be available in future , instead of the complete parity given by 7 th CPC. It is my discerning of her statement.

How to come out from the tangles, if felt so, on the advent of FA 2025.

One is as decided by NCCPA and its other supporting non affliates- seeing that as a challenge and deciding to contest its constitutional validity in the Court , simultaneously holding organisational usual courses. It is their wisdom, those differ should bear them.

The second is seeking GOI’s clarification and demanding Pay scales applied pension revision as that of 7 th CPC first option, viz OM 12-5-2017. Com Shivgopal of NJCM has taken correctly this route by writing a letter to the cabinet secretary.

Another senior leader Shri Maheswari of BPS, has correctly sent his appeal to the concerned to wait till 8 th CPC TOR before taking any route of confrontation.

As per my understanding, the NCCPA may be a ginger organisation, feeling proud to settle things through confrontation, instead of taking the route of negotiations. I understand their limitation of going to the table of negotiations. So they choose the methods and manners exerting their maximum energy within their limits.

But Shivgopal and Maheswari having high stakes and regards , have to show their mettle and wisdom , have the practices to believe negotiations to settle things, if confrontation is avoidable one. It is possible for them to set the table of negotiation.

The CG pensioners movement may think of the win win position by pressing and demanding

‘Two formulations for Revision of pension’ for pre 2026 in the 8 th CPC on the analogy of 7 th CPC .

7 th CPC recommended two formulations and GOI accepted both of them one through OM 4-8-2016 - 2.57 formula for fixing new pension for pre 2016 pensioners as that of

6 th CPC modified parity. That is the route of distinction amongst past pre 2016 and existing pensioners on the date of 4-8-2017, the employees on 1-1-2016.

The other formulation is complete parity route of applying pay scales of pay matrix as that of employees to pre 2016 pensioners vide their OM 12-5-2017. This wiped out the felt distinction between 'the pensioners' and 'employees subsequent pensioners'.

Both the formulations were presented before the pensioners , and pensioners availed whichever is beneficial to them.Some felt distinction route of 4-8-2016 alone was beneficial.

So this two formulations concept of 7 th CPC is again pressed in the common memo to 8 th CPC, GoI may have their 'distinction route formulation' and pensioners have their 'no distinction complete parity route formulation'. This may be a via media solution in today's FA act context.

Both the distinction route of 4-8-2016 and the other as that of 12-5-2017 pay scales route would benefit all the pensioners and the GOI may also satisfy that their vested power is found at least in one of the formulations. The felt Govt difficulty of court cases citing 12-5-2017 by various pensioners , may get the attention of 8 th CPC to provide suitable recommendations and riders .

I hope pressing 'two formulations' may help to situate us - both Govt and the worried pensioners in win win position.

9.30 hrs 26-6-2025 R. Pattabiraman

june 27

The Undying Light - 9

கோபால்கிருஷ்ண காந்தியின் நூல் குறித்த 9வது பதிவு. என் வாசிப்பில் பட்ட சுவாரஸ்ய அம்சங்களை, அரசியல் முக்கியத்துவமா இல்லையா என்கிற எடைக்குள் மட்டும் நிறுக்காது தரப் பார்த்துள்ளேன். ஒரு புத்தகம் குறித்து இவ்வளவு நீள் அறிமுகம் தேவையா என்பதும் கேள்விக்குரிய ஒன்றே.

கோபு 21ஆம் நூற்றாண்டின் ஆண்டுகளுக்கு அழைத்துச் செல்கிறார். இந்நூலில் 8 இயல்கள். 7 ஆம் இயலுக்குள் சற்று அழைத்துப்போகிறேன். 8 ஆம் இயல் சிறிய அளவிலானது தான். தக்கபடி என் பதிவுகள் அமையவேண்டும்.

இலங்கை தூதரகப் பணிக்காலம் ஈழ விடுதலை தீவிரப்பட்ட காலம். முக்கிய தலைவர்களான ஸ்ரீமாவோ பண்டாரநாயக, சந்திரிகா, ரணில் உள்ளிட்ட பலருடன் கோபுவிற்கு உரையாட வாய்ப்பு கிடைக்கிறது. யாழ்ப்பாணம் உள்ளிட்ட தமிழர் பகுதிகள் குறித்த நேரடி பார்வை அனுபவம் கிட்டுகிறது. நார்வே நாடு தான் இலங்கை இனச் சிக்கலுக்கான சமாதான நடவடிக்கைகளில் ஈடுபட்டுக்கொண்டிருந்தது.

டெல்லியில் சந்திரிகா, பிரதமர் வாஜ்பாய், அத்வானியை சந்தித்தார். என்னாச்சு குஜராத்திற்கு என எதிர்பாரா கேள்வியை எழுப்பினார் சந்திரிகா. வாஜ்பாய் அத்வானியை கை காண்பித்தார். அத்வானி இப்ப அவ்வளவு மோசமாக இல்லை, நன்றாகிவிட்டது என்கிறார். கோத்ரா சம்பவம்- முஸ்லீம்கள் அழித்தொழிப்பைப் பற்றித்தான் சந்திரிகா கேட்டார். வாய்பாய் சொன்ன பொருள் பொதிந்த இரு வார்த்தைகள் ‘ காந்தி தேசமது’ …பாவிகளே இப்படி செய்தீட்டீங்களே என வாஜ்பாய் சொல்லாமல் சொன்னாரோ..

2002ல் இலங்கையிலிருந்து உன்னை லண்டன் அனுப்புகிறோம் என்கிற செய்தி கோபுவிற்கு தரப்பட்டது. மூட்டை முடிச்சு தயாரான நிலையில், கடைசி நேர மாற்றமாக நார்வே ஆஸ்லோ செல் என்றனர். அறிஞர் ரோனன் சென் லண்டன் சென்றார். ஆர் வி இதை அறிந்து, என்னிடம் சொல்லியிருந்தால் வாஜ்பாயிடம் சொல்லி லண்டனே போடச் சொல்லியிருப்பேன் என்றார்.

கேஆர் நாரயணனுக்கு அடுத்து குடியரசு தலைவர் யார் கேள்வியானது. பி சி அலெக்சாண்டர் பெயர் அடிபட்டது. மறுபடியும் மலையாளியா,

இல்லை கிருஷ்ண காந்த் என சந்திரபாபு நாயுடு கொடி உயர்த்தினார். வாஜ்பாயும் ஏற்றுக்கொண்டார். ஆனால் கடைசி நேரம் என ஒன்று இருக்கிறதே. அது ஏ பி ஜே அப்துல் கலாம் என திசைகாட்டியது. அவரும் ஏற்றார்.

கோபுவிற்கும் கலாமிற்கும் நடந்த தொலைபேசி உரையாடல் கூட சுவாரஸ்யமானதே. கோபு என் மரியாதை வாழ்த்துக்கள் என்றார். எனக்கு உங்கள் வாழ்த்து இருக்கிறதா (ஆம் தமிழில்தான்) கலாம். பரிபூர்ணமாக - கோபு

சரி ராஷ்டிரபதி பவன் பற்றி உங்களுடன் பேசவேண்டும். எப்ப இந்தியா வருவீர்கள். ஆகஸ்ட்டில்தான். போனின் பேசலாமா. - கலாம்

ஆமாம் இது தான் நம்பர்.- கோபு

பாகிஸ்தான் முஷாரப் இந்தியா வந்தார். டெல்லியின் ' தீஸ் ஜனவரி மார்க்' வழியே செல்லும்போது ஏன் இந்த பகுதிக்கு இப்படி பெயர் எனக் கேட்டார். காந்தி படுகொலை நாள் பெயரானது என்கிற செய்தி சொல்லப்பட்டது. ஆமாம் காந்தியை சுட்டாங்களா, கத்தியால் குத்தி கொன்றார்களா…எவ்வளவு இந்தியா குறித்த அறிவு பாருங்கள் முஷாரபிற்கு என கோபு சொல்கிறார். இப்படி அபத்தங்களையும் சற்று அப்பிக்கொண்ட பெரிய மனிதர்கள்தான் கோடிக்கணக்கான மக்கள் வாழ்வை நிர்ணயிக்கிறார்கள்..பரிதாப உலகம்

கோபுவிற்கு ஆஸ்லோ வாழ்க்கை அறிவார்ந்த சூழல். அங்கு நோபல் பரிசு கமிட்டி அலுவலகம் சென்றபோது, காந்திக்கு நோபல் தரமுடியாமை குறித்து பல உயர் பொறுப்பாளர் வருந்தினர். இல்லை, காந்திக்கு அது ஒன்றும் தனித்த ஒளி தந்துவிடாது என இந்திய தரப்பு வாதம். ஆஸ்லோவினர் இல்லை இல்லை, அப்பரிசுக்குத்தான் குறை எனச் சொல்லினர்.

ஆஸ்லோவிற்கு வந்த இந்தியர்களில் கோபு சிறப்பித்து பேசியது தோழர் சுர்ஜித் வருகையைத்தான். சுர்ஜித்திற்கு அப்போது வயது 88. நேரான நடை. தேநீர் கோப்பைக்கு கை ஆடவில்லை. அரசியல் தீர்க்கம். பேரறிவு கொண்ட அரசியல் விஞ்ஞான பேராசிரியராக அவர் தெரிந்தார் என கோபு சொல்கிறார்.

சுர்ஜித் சொன்ன சில கருத்துக்கள். இந்தியாவின் தலையாய அரசியல் செக்யூலரிசம் vs ஹிந்துத்துவா- என ஆகியுள்ளது. சோனியாவிடம் பிற கட்சிகளை அரவணைத்த அரசியல் எனச் சொல்லியுள்ளோம். ஜெயலலிதாவை கணிக்கமுடியாது. முலாயமை கொண்டுவரலாம்.

சரத்பவர் சுகர் வியாபாரத்திற்காக கொஞ்சம் பேசலாம். சோனியா அந்நியர் என்பது எடுபடாது. இலங்கையில் எல் டி டி இ unreliable. Bad for SriLanka and Bad for us.

அடுத்து சத்ருக்கன் சின்ஹா அமைச்சர் பொறுப்பில் ஆஸ்லோ வந்தார். மிகவும் ஜாலியான மனிதர். வெளிப்படையாக துறை சார்ந்த விஷயங்களில் ‘ நான் பேனர்- செயலர் தான் பிலிம்’ என்றார்.

ஆஸ்லோவில் இருக்கும்போது நட்வர்சிங் போன் வந்தது. என்ன ‘வாஜ்பாய்- முஷாரப்பிற்கு’ நோபல் எனப் பேச்சா…ஆமாம் அப்படி பேச்சு ஒன்று போகிறது. அய்யோ கூடாது. காந்தி நேருவிற்கே இல்லாதது எப்படிய்யா …பார்த்துக்க… நல்லவேளை பரிசு கென்யாவின் வாங்கரிக்கு போனது

வாஜ்பாய் அரசாங்கம் போய் மன்மோகன் அரசாங்கம் வந்தது. சோனியா தான் எடுக்கப்போவதில்லை என அறிவித்த நிலையில் மன்மோகன். கோபு எழுதுகிறார்

A better man, more decent, intelligent and honest, not to be found in Indian politics

இடதுசாரிகள் 60க்கும் மேற்பட்டவர் துணையில் மத்தியில் காங்கிரஸ் ஆட்சி.

மேற்கு வங்கத்தில் புத்ததேவ் முதல்வர் ஆகிறார். அங்கு கவர்னர் யாரைப் போடலாம் என்ற கேள்வி. வி கே ராமச்சந்திரன், யெச்சூரி போன்றவர் கோபாலகிருஷ்ண காந்தி என பரிந்துரைக்க மன்மோகன் சோனியா ஒப்புதலும் கிடைக்கிறது.

ஆஸ்லோவிலிருந்து கல்கத்தா. கோபுவின் துணவியார் தாராவிற்கோ , ‘என்ன துப்பாக்கி காவலர்கள் சூழ வாழ்க்கை. நான் இயற்கை, பறவை என்றும் நீங்கள் எழுதிக்கொண்டும் இனி இருக்கலாமே என்கிற எண்ணம்’ .

சோனியா , நான் உங்களை நேரு மய்யம் போன்ற அறிவார்ந்த இடத்தில் போட விரும்பினேன். நீங்கள் கவர்னர் என்றீர்களாம் என்றார். கோபுவிற்கோ நான் எங்கே சொன்னேன் எவர் காலை பிடித்தேன் என மன அசைவு.

கவர்னர் உறுதிமொழியை வங்கத்தில் எடுக்க ‘டெக்ஸ்ட்’ கேட்க, அதிகாரபூர்வமாக ஏதும் அப்படியில்லை எனச் சொல்லிவிட்டனர். நந்திகிராம் பிரச்னை வரும்வரை புத்த தேவ் உடன் கவர்னராக கோபுவிற்கு நல்லுறவே இருந்தது.

ஆர்வி உன் தாத்தா ராஜாஜி போலவே நீயும் அங்கு கவர்னரானாய் என வாழ்த்தினார். திருமதி ஜானகி வாங்க கவர்னர் அய்யா எனச் சொல்லிவிட்டு, நீ எப்போதும் எங்க மகன் தான் என வாஞ்சை காட்டினார்.

நாராயணன் மிக முக்கிய ஒன்றைச் சொன்னார். மேவ tricky state. If Congress had let Jyoti Babu become prime minister in 1998, the congress cpm relations would have matured. என்ன அருமையான கவலையுடன் இந்திய அரசியல் சென்றிருக்க வேண்டிய திசையை அவர் வெளிப்படுத்தினார் பாருங்கள்..

மன்மோகன் அவர்கள் காங்கிரஸ் நண்பர்கள் பலர் உதவி கேட்டு வரலாம். சிபிஎம் ' It has a certain way of doing things..even rigging elections..பார்த்து நடந்து கொள்ளுங்கள்

எங்களிடம் ஒருமுறை ரயில் பயணத்தில் கல்கத்தா சார்ந்த தமிழ் நண்பர்கள் சொன்னது நினைவிற்கு வருகிறது. சிபிஎம் அங்கு red dmk தான். துர்கா பூஜை போதெல்லாம் தெருவிற்கு தெரு கட்டாய அதிரடி வசூல் அட்டூழியம் நடக்கும் என்றனர். இது 1980களில் சொல்லப்பட்ட ஒன்று.

கவர்னர் அனுபவம், மோடி காலம் என கொஞ்சம் பேசிவிட்டால் இந்நூல் குறித்த பதிவுகளை நான் நிறுத்திவிடலாம்

பார்க்கலாம்..

27-6-2025

#theundyinglight

june 28

இலக்கிய வாசனை

நட்வர்சிங், ராஜ்மோகன், கோபால் எனச் சென்ற ஜூன் மாதத்தை கொஞ்சம் light reading மாதமாக்கத் தோன்றியது. மேற்சொன்ன ஆங்கில புத்தகங்கள் conceptually heavy ஆனவையல்ல. ஏதோ தோன்றியது.

வங்கித் தலைவர் ரகுபதி அருகில் இருந்தபோது, இலக்கிய வாசனையை அவ்வப்போது எனக்கு காட்டுவார். தொழிற்சங்க மொழியை, அரசியல் வரலாற்று உரையாடல்களை மொழி அழகு ஏதுமின்றி raw ஆக நான் தந்து கொண்டிருந்த பிராயமது. இப்போதும் மொழியழகு ஏதுமில்லை. தோழர் நீலகண்டன் மொழியாக்கம் அழகுபடுத்துவதாக இருக்கிறது.

ரகுதான், கடற்புரம் தொடங்கி அந்நியன், காண்டாமிருகம், தேம்பி அழாதே வரை - மேலும் ஆப்ரிக்க லத்தீன் அமெரிக்க எழுத்தாளர் சிலரை கண்ணில் காட்டியவர். இலக்கியம் பக்கம் எப்போதாவது எட்டிப்பார்க்கக்கூடியவன். பயிற்சி , உயர் ரசனை என ஏதுமே இல்லை.

ஒருமுறை ரவி (அக்களூர்) வீட்டு விருந்தொன்றில், இலக்கிய கவி ஜாம்பவான் ஒருவர் அறிமுகப்படுத்திக்கொண்டு, என்னிடம் எதில் ஆர்வம் எனக் கேட்டார். அரசியல், வரலாறு, கொஞ்சம் தத்துவம் எனச் சொன்னவுடன், ஏதோ கிரிமினலை பார்த்தது போல அய்யோ ஆளைவிடுங்க என நகர்ந்தார். எங்க ஊரில் இதை அய்யம்பேட்டை மதகடி வம்பு என்போம். ஓ , இலக்கியம் எனச் சொல்லவில்லையெனில் அவர்கள் ராஜ்யத்தில் குடிமகன் அந்தஸ்து இருக்காது போலும் எனத் தோன்றியது.

இலக்கிய எழுத்தாளர்களுக்கு அவர்களின் மேதை பிரக்ஞை, ஞானம் மொழி சுழட்டல் குறித்த பெருமிதங்கள் இருப்பது நியாயமே . ஆனால் உலகமே அவர் பின் சுழலும் தலை என நினைப்பது சரியா எனத்தெரியவில்லை. எனக்கு ஏன் சிலையில்லை, நான் வந்தால் பிரதமர் உட்பட அனைவரும் எழுந்து நிற்கவேண்டும் என்றெல்லாம் கதைப்பது சற்று ஓவராக எனக்குப் படுகிறது. உங்களால் ஓட்டு வரும் எனில், மேலும் சமூகம் உங்கள் விழிப்புணர்வில் நடந்து போகும்போது சிலை வரலாம். நீங்கள் ‘மொழி உழவர்கள்’ என்கிற வணக்கத்தை அதன் உளவியல் பயனாளிகள் உங்களுக்கு, வயல்பாட்டு உழவர்களை விட கூடத் தரலாம். ஓகே அவர்களை விட்டு விடுகிறேன். அவர்கள் பற்றி மதிப்பிட்டு பேசும் அ ஆ தகுதி எனக்கு இல்லை.

ஜூன் மாத எளிய பாமர வாசிப்பு குறித்து சொல்ல வந்தேன்.

தி ஜானகிராமன் கட்டுரைகள் (கட்டுரை இலக்கியமா எனக்கேட்டால் எனக்குத் தெரியாது)

இந்திய இலக்கியம் க நா சு

குடும்பம் சிதைகிறது பைரப்பா

வாஸவேச்சரம் கிருத்திகா

இந்த நான்கையும் படிக்கும்போது இதமாகத்தான் சென்றன. ஜானகிராமன் சிலாகித்து சொன்னதால் கிருத்திகா படித்தேன். அன்றைய அக்கிரஹார மொழி refresher . Feminism சாயல்கள் கொண்டதாகச் சொல்வர். மீறல் என்கிற உள்ளத் தவிப்பு தான் எந்த விடுதலைக்குமான வேர். அவர்கள் அடைந்தார்களா முரணால் அழிந்தார்களா- மார்க்ஸ் அப்படித்தான் பேசினார். புதிய சமூகத்தை பிறப்பிக்க போராடினார்கள் என்ற அளவில் என் புரிதல் நின்றது.

பைரப்பா கதைக்காக மொழியை ஆண்டவர் போல் பட்டது. அப்படி ஒரு ஸ்நேகம் நூல் முழுதும். மொழி கதைக்கான பக்க வாத்தியம்போல் வந்துள்ளது. கதையை அமுக்கி கீழே தள்ளாமல் கதையின் கரையாக நீள எழுத்துச் சென்ற அந்நியோன்யம் பைரப்பாவிடம் தெரிந்தது.

தமிழில் சினிஸ்டார் ரஜினி, கமல் போல் உயர் அந்தஸ்து எழுத்தாளர்களின் ஓரிரு நூல்களை வாசிக்கும் போது என்ன அவர்கள் ‘வார்த்தை வாய்க்கால்’ வெட்டுகிறார்கள் என்று தோன்றியது. அதாவது வாய்க்கால் முழுக்க வார்த்தைகள் பாய்வது போன்ற உணர்வு. திடிரென கதையம்சத்திற்கு ‘லாங் லீவ்’ கொடுத்துவிட்டு எழுத்து தனி ஆவர்த்தனம் செய்வது போல் இருந்தது. இலக்கியத்தில் உயர் ஸ்தானம் என்றால் மொழி தனி ஆவர்த்தனம் வேண்டுமோ , நான் என்னத்த கண்டேன். லீனியர் எழுத்து என வந்து விடக்கூடாது அச்சம் போலும்..

அப்புறம்

கி வ ஜாவின் பேசாத பேச்சு

பழ அதியமானின் தி ஜ ரங்கநாதன்

ஜெயகாந்தனின் ஓர் இலக்கியவாதியின் கலையுலக அனுபவங்கள்

மூன்றும் ஓகே வாக இருந்தது. ஆஹா அற்புதம் என மனதில் ஜெர்க் இல்லை.

ஜெயகாந்தன் வேறு வழியில் பீடம் கேட்பவர். எழுத்தாளன் நானு, மானஸ்தான் பேறு, எங்கிட்ட மோதாதே என பளிங் சடுகுடு விளயாடியது போன்ற உணர்வு எனக்கு கிட்டியது.

பாலசுப்பிரமணியம் எழுதிய கண்ணதாசன்…சுவைபடவில்லை

இதெல்லாம் என் பாமர மனசு உணர்ந்தபடி சொல்லக்கூடியவை..சிலாகித்து பேசிய உயராய்வுகள் ஏராளம் இந்நூல்கள் குறித்து வந்திருக்கக்கூடும்…

28-6-2025

june 29

The Undying Light -10

India's light எது. அவரவர் சார்பு நிலையில் இதற்கான பதில் ஒன்றையோ , கட்டாகவோ ஒருவர் பெறலாம். நம்பிக்கையிருக்கும்வரை அதை அவர் போற்றலாம்.

இந்திய விடுதலை மற்றும் நவீன கட்டுமான வாசிப்பில் இப்படி இந்தியாவிற்கான ஒளிரும் விளக்குகள் வரிசையாக இருக்கலாம். அவை எதிரும் புதிருமாகக்கூட ஒளிரலாம். சில டிம் ஆகும்- ப்யூஸ் ஆகும். சில பளிச்சென இருப்பது போல் இருக்கும்.

இந்த ஒளிர் விளக்குகளில் உளச்சான்றுடன் எரியும் ஒரு விளக்கு எனில், என் விரிவான வாசிப்பு புரிதல் கொண்டு சொல்லப்போனால், அது காந்தி எனும் சுடர் விளக்கு . அது ஓரமாக இருக்கலாம். பார்வைக்கு துருத்தி தெரியாமல் , நிரம்ப வெளிச்சத்தை அள்ளி அப்பாமல் இருக்கலாம். ஆனால் ஏந்துவர்க்கு துணைக்கு வரும் சுடரது.

கோபால்கிருஷ்ண காந்தியின் இந்நூலை இப்பதிவுடன் முடித்துக்கொள்கிறேன். அப்பாடா…காந்தியின் பேரப்பிள்ளை என்கிற லேபிள் அவருக்கு பெருமளவு உதவாமல் இல்லை. வாழ்க்கையின் உயர்நிலைகளுக்கு (ஐ ஏ எஸ், தூதரகம், குடியரசு மாளிகைப்பணி, கவர்னர்) செல்ல அவரது திறமையில்லாமல், பேர லேபிள் மட்டும் காரணமில்லை. கடந்த 75 ஆண்டுகால இந்தியாவின் குடியரசு தலைவர்கள், பிரதமர்கள், கட்சித் தலைவர்கள், வெளிநாட்டு தலைவர்கள், ஏராள அறிவுக்குழாமினர் என அவரின் வட்டம் விரிந்த அனுபவ நினைவுகள், நாட்டு உலக நடப்புகள் இந்நூலில் தொட்டுக்காட்டப்பட்டுள்ளன. குடும்பமும் உள்ளீடாக நகர்கிறது.

மேவ கவர்னர் பொறுப்பில் முதல்வர் புத்ததேவ், மூத்தவர் ஜோதிபாசுவுடன் நல்லுறவு இருந்தது. மமதா போராட்டம், சிங்கூர் நந்திகிராம் உறவில் சிக்கலை உருவாக்கின. சிபிஎம் கட்சிக்கு கவர்னர் மீது விமர்சனம் எழுந்தது. முதல்வர் கவர்னர் போனைக்கூட எடுக்காத நாட்களுமிருந்தன. மேவ மின்வெட்டு அக்காலத்தில் பெரும் விமர்சனங்களை சந்தித்தது.

மன்மோகன் ஆட்சி நியுக்கிளியர் உடன்பாடு காரணமாக, சிபிஎம் முன்முயற்சியால் இடதுகளின் ஆதரவை இழந்தது. எடுத்த முடிவு சரியா விவாதம் இன்றும் இருக்கிறது. பிரதமராக வந்த மன்மோகனை முதல்முறையாக சந்தித்த பாசு ஆசி சொல்லி " நம் இரு கட்சிகளும்

பொறுமையாக பொறுப்பாக இருந்தால் நல்லது. வலதின் ஆபத்தை புரிந்து “ என்றார். கே ஆர் நாரயணன் காங்கிரஸ் மட்டும் 1998ல் ஜோதிபாசுவை பிரதமராக வலியுறுத்தி கொண்டு வந்திருந்தால், அரசியல் திசை மாறியிருக்கக்கூடும் என எண்ணினார். வரலாறு ifகளுக்கு இடம் கொடுப்பதில்லையே..

பிரதிபா அவர்கள் சோனியா விருப்பப்படி குடியரசு தலைவர் ஆனபோது, கோபு வாழ்த்தினார். இருவரும் கவர்னர்களாக சமகாலத்தில் இருந்தவர்கள். பிரதிபா அவர்கள் அப்போது சொன்னார், கோபால் நீங்கள்தான் வருவீர்கள் என நினைத்தேன் என்று… பிரதிபாவின் தனிச் சிறப்பு, அவர் ஒருவருக்குக் கூட மரணதண்டனையில் கையெழுத்து இடமாட்டேன் என்றது… ஆயுள்தண்டனை என மாற்றவே அவர் சம்மதித்தார்.

2014ல் ஏற்பட்ட மோடி ஆட்சி, அதன் பத்தாண்டுகள் குறித்த சற்று கவலை தோய்ந்த சன்னமான விமர்சன பதிவை கோபு செய்துள்ளார். லண்டன் காந்தி சிலை திறப்பு நிகழ்வில் அருண் ஜேட்லியுடன் கோபுவும் பங்கேற்றார். கோட்சேவிற்கு சிலை எனக் கொண்டாடக்கூடியவர் உள்ள சூழலில், காந்தி சிலை என கோபு பேசினார். அருண்ஜேட்லி கையைப் பற்றிக்கொண்டு ‘ Gopal, be assured we will never let that happen’ என்றார். ஆனால் அவரை காலம் சீக்கிரம் அழைத்துக்கொண்டுவிட்டது.

சந்திரசூட் சொன்னதை கோபு எழுதுகிறார்

Dissent is a safety valve of democracy. If you don’t allow dissent, the pressure valve of democracy will burst

சோனியா கோபுவை கூப்பிட்டு வெங்கையா நாயுடுவிற்கு எதிராக துணைஜனாதிபதி தேர்தலில் நிற்க வேண்டினார். மேவ பிரச்சனைகளையெல்லாம் மறந்து யெச்சூரியும் வலியுறுத்திட, நிற்கும் நிலை கோபுவிற்கு. தோல்வியடைந்தார். வெங்கையா தன் வெற்றிக்கு பின்னர் கோபுவிடம் வந்து “ Sir, I have long been an admirer of your grandfather, Rajaji..I will call on you in Chennai “ என்கிற நாகரிகம் பாராட்டினார். ஏன் காந்தி பெயரையும் சொல்லவில்லை என என் மனது குற்றம் கண்டது.

கோபு காந்தியின் பேரன்.அவர் நான் காந்தியன் அல்லன் என்கிறார். தன்னைப்பற்றி டைரியில் அவர் ஒருமுறை எழுதிக்கொண்ட வரிகள்

I do not know if I am liberal or conservative, a socialist or a believer in free enterprise. I am not patriotic enough, not learned enough, not earnest though, not knowledgeable or experienced enough. I have lived on the capital of my surname

வேறு சர் நேம்களை கொண்டு பல நேரங்களில் அரைவேக்காடு அரசியல் காட்டும் பலரைக் காணலாம். கோபுவின் டைரி எழுத்தை அவருக்கானதாக மட்டும் நான் எடுத்துக்கொள்ளவில்லை. வாழ்வில் முட்டி மோதி பயணப்படும் ஒவ்வொருவரின் டைரி குறிப்பாகவும் இந்த நிறைவின்மை இருக்கவே செய்யும். உலக வாழ்வு , நம் பேச்சைவிட எழுத்தைவிட எப்போதும் பசுமையாக இன்னும் இன்னும் என மனித தாகத்திற்காக காத்துக்கொண்டேயிருக்கிறது. குவளை நீருடன் ஏதோ தாகம் தணித்துக்கொள்ளும் பிறவிகளாக உலகத் தடாகத்தில் நாம் ஒவ்வொருவரும்…

சுபம்

29-6-2025